
# புதுவைச் சிவம்

## கவிதைகள்



வெளியீடு :

கலை மற்றும் பண்பாட்டுத் துறை

புதுச்சேரி

# புதுவைச் சிவம் கவிதைகள்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

## கவிஞர் புதுவைச்சிவம்


புதுவை அரசு

கலை-பண்பாட்டுத் துறை

புதுச்சேரி

## நூற் குறிப்பு

நூற் பெயர் : புதுவைச்சிவம் கவிதைகள்

இயற்றியவர் : கவிஞர் புதுவைச்சிவம்

வெளியீடு : கலை-பண்பாட்டுத் துறை இயக்ககம்
குபேர் (கடற்கரைச்) சாலை
புதுச்சேரி-605 001.

ஆண்டு : கவிஞர் புதுவைச்சிவம் அவர்களின் 90-ஆவது பிறந்தநாள் விழா வெளியீடு (1-11-97)

பக்கம் : 238+XII

விலை : ரூ.**40.00**

அச்சிட்டோர் : அரசு அச்சகம், புதுச்சேரி.

## உள்ளடக்கம்


| வ. எண் | கவிதை நூல்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பெரியார் பெருந்தொண்டு | 1 |
| 2. | கைம்மை வெறுத்த காரிகை | 33 |
| 3. | மறக்குடி மகளிர் | 43 |
| 4. | தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் | 65 |
| 5. | திராவிடப் பண் | 115 |
| 6. | காதலும் கற்பும் | 117 |
| 7. | மறுமலர்ச்சிக் கவிதைகள் | 127 |
| 8. | தமிழிசைப் பாடல்கள் | 185 |
| 9. | தன்மதிப்புப் பாடல் | 209 |

सत्यमेव जयते

**ஆர்.வி. ஜானகிராமன்**
முதலமைச்சர்

## வாழ்த்துரை

திரு. ச. சிவப்பிரகாசம் அவர்கள் புதுவைக்குப் புகழ் சேர்த்த பெருமக்களில் ஒருவர். பாவேந்தருடன் நீண்ட நாள் நெருங்கிப் பழகியவர். பாவேந்தர் பரம்பரையின் முதல் பாவலர் என்ற பெருமைக்குரிய கவிஞர். புதுவைச் சிவம் என்ற நாடறிந்த பாவலராக சரித்திரத்தில் முத்திரை பதித்தவர். தந்தை பெரியாருடனும், அறிஞர் அண்ணாவுடனும் தொடர்பு கொண்டு புதுவையில் தன்மான இயக்கத்தை உருவாக்கியவர். பிரஞ்சு அரசை எதிர்த்து புரட்சிக் கருத்துக்களை எழுதிச் சிறை சென்றவர். பிரெஞ்சு இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமகனாரின் பெயரை புதுவைச்சிவம் என்று உச்சரிக்கும் போது ஓர் எழுச்சி உணர்வு ஏற்படுவது உணர்வு ஒன்றிய கருத்தாகும். கவிதை, இசைப்பாடல், நாடகம் ஆகிய கலை வடிவங்களில் நூல்கள் பல இயற்றி மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பரப்பியவர் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள். மலேசியா போன்ற அயல் நாடுகளிலும் இவர்தம் நாடகங்கள் நடிக்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

புதுவையின் நகரமன்றத் துணைத் தலைவராகவும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற தி.மு.க. தகையராகவும் (விப்) பணியாற்றிய பெருமைகளுக்கு உரியவர்.

தமிழக அரசினால் "பாரதிதாசன் விருது" அளித்துப் பாராட்டப்பெற்றவர்.

இத்தகைய புகழுக்கும் பெருமைக்கும் உரிய பெருமகனாரின் பிறந்த நாள் விழாவை ஆண்டு தோறும் கொண்டாடுவது என்று நமது கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது. இவ்விழாவிவை ஓர் அரசு விழாவாகக் கொண்டாடுவது அவர் தம் உழைப்பிற்கும் பணிகளுக்கும் நமது புதுவை மாநிலம் தலைவணங்கிச் செய்யும் ஒரு கடமையாகக் கருதுகிறேன். அவரது 90-வது பிறந்த நாள் விழாவில், கிடைத்தற்கரிய அன்னார்தம் நூல்கள் சிலவற்றைத் தொகுத்து வெளியிடும் முயற்சியை மனமாரப் பாராட்டுகிறேன். விழா வெற்றிபெற எனது நல்வாழ்த்துக்கள்.

**ஆர்.வி. ஜானகிராமன்**

# வி.எம்.சி. சிவக்குமார்

பேரவைத் தலைவர்


सत्यमेव जयते

## அணிந்துரை

ஓர் அரசியல்வாதி கவிஞனாக இருப்பதைவிட ஒரு கவிஞன் அரசியல்வாதியாக இருப்பது இயல்பான ஒன்றன்று. அதிலும் ஒரு கவிஞன் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு அதில் வெற்றி பெறுவதும் நடைமுறையில் பெரும்பாலும் இயலக்கூடியதன்று. ஆனால் இதைத்தன் வாழ்நாளில் இயல்பாக நடைமுறைப் படுத்திய சாதனையாளர் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடன் கொண்ட நட்பால் தானும் ஒரு கவிஞனாக மிளிர்ந்து, புதுவையில் சுயமரியாதை இயக்கத்தை இயக்கி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றை உருவாக்கிக், கூடவே இயக்கக் கவிஞராகவும் விளங்கி, தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தை அரியணையில் ஏற்றும் வரை அயராது பணிபுரிந்து, தானும் இந்திய நாடாளுமன்றம் வரை சென்று, தமிழ், தமிழ் மக்களின் அருமை பெருமைகளை அங்கு முழக்கமிட்டுணர்த்திய கவிஞர் புதுவைச் சிவம் அவர்களால் இப்புதுச்சேரியின் பெருமை மேலும் உயர்ந்துள்ளது.

புதுவையின் வரலாறாக இணைந்துவிட்ட அக்கவிஞனுக்குப் புதுவை அரசு விழா எடுப்பதும் அவரது கவிதைகளை நூலாக வெளியிடுவதும் பெருமைக்குரிய செய்திகளாகும்.

*(வி.எம்.சி. சிவக்குமார்)*

எஸ்.பி. சிவக்குமார், பி.ஏ., பி.எல்.,
கல்வி அமைச்சர்

## அணிந்துரை

கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள் தனி மனிதரல்லர். ஓர் இயக்கமாக வாழ்ந்தவர்; புதுவையில் திராவிட இயக்கங்களின் இயக்கு விசையாக இருந்தவர்; சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சாடிய சமூகச்சிற்பி; தமிழுக்காகத் தன்னை ஒப்புவித்துக் கொண்ட தமிழறிஞர்; தமிழ்மக்களின் உரிமைக் குரலாக உருவெடுத்த கவிஞர்.

பாவேந்தர், புதுவைச் சிவம் ஆகியோரின் கவிதைகள் கனவுகள் அல்ல. அவர்கள் கண்ட கனவை நனவாக்குவதே இந்த அரசின் குறிக்கோள். திராவிட இயக்கத்தின் மூத்த தலைமுறைக் கவிஞரான புதுவைச் சிவம் காட்டிய பாதையில் இன்றைய தலைமுறையினர் நடைபோடும் அதே நேரத்தில், அந்தத் தலைமுறைக் கவிஞனுக்குத் தகுந்த மதிப்பைத் தரவும் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில் அவருடைய பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் இந்த நேரத்தில், இதுவரை கிடைக்காமல் இருந்த அவர்தம் கவிதைகளை தமிழுலகம் அறியச் செய்யும் முயற்சியைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

(எஸ்.பி. சிவக்குமார்)

## நா. கேசவன்

அரசு தகையர் (Govt. Whip)


# மதிப்புரை

தந்தைபெரியாரின் தன்மான இயக்கத் தளபதியாகப் பிரெஞ்சிந்தியாவில் பீடுநடை போட்டவர் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள். பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தோளோடு தோள் நின்று இயக்கங் கண்டவர். புதுவைத் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய சிற்பி. கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராளுமன்ற மேலவைக்கு அனுப்பப்பட்டு, பாராளுமன்றத்தில் புதுவையின் குரலை ஒலிக்கச் செய்த முதல் புதுவைக் கவிஞர்.

தனது கவிதை, நாடகம், இசைப்பாடல்களால் உறங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தை தட்டி எழுப்பி, மறுமலர்ச்சி காணப் பாதை அமைத்துத் தந்த கவிஞர் புதுவைச் சிவம் அவர்களுக்குத் தகுந்த கௌரவம் அளிக்கக் கலைஞர் வழிவந்த கழக அரசு கடமைப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக அவருக்கு அரசு சார்பில் விழா நடத்தும் இந்த வேளையில், தமிழ்ச் சமுதாயத்துக்கென அவர் விட்டுச் சென்ற சொத்தான அவரது கவிதைகளைத் திரட்டி வெளியிடுவதை வாழ்த்தி, வரவேற்பதுடன் அதில் பெருமையும் அடைகின்றேன்.

வாழ்க கவிஞர் புதுவைச் சிவம் புகழ்!
வளர்க அவர் ஏற்றிவைத்த தன்மானச் சுடர்!!

(நா. கேசவன்)

सत्यमेव जयते


**ந. இராஜசேகர், இ.ஆ.ப.,**

அரசு செயலர்

(கல்வி மற்றும் கலை, பண்பாட்டுத்துறை)


# அணிந்துரை

புதுவை மண் தமிழ் மணமும் வீரியமும் உள்ள மண் என்பதற்குப் புதுவை தந்த கவிஞர்களே சான்றுகளாக விளங்குகின்றனர். பாரதியைப் பத்தாண்டுக்காலம் தங்க வைத்த மண், பாவேந்தரைத் தந்த மண், கவிஞர் புதுவைச் சிவம் அவர்களையும் தந்திருக்கிறது. பாவேந்தரின் நெருங்கிய தோழராக விளங்கிய கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்து பல்லாயிரம் பேருக்குத் தமிழ்த் தீஞ்சுவை அளித்தவர். புதுவையில் இன்றைய தலைமுறைக் கவிஞர்கள் பலர் உருவாகக் காரணமாக அமைந்தவர்.

சமூகத்தின்பால் ஒரு கவிஞனுக்கு இருக்க வேண்டிய முழு அக்கறையையும் கவிஞர் புதுவைச் சிவம் அவர்களின் பாடல்கள் புலப்படுத்துகின்றன. பகுத்தறிவு, சீர்திருத்தம், பெண்ணுரிமை, தொழிலாளர் நலன், சாதி ஒழிப்பு, சமதர்மம் ஆகிய பொருள்களிலேயே அவருடைய பாடல்கள் முழுமையாக நிலை கொண்டுள்ளன. ஒரு மாபெரும் சமதர்மச் சமுதாயக் கனவு அவரது கண்களுக்கு விரிந்திருக்கிறது. அதைக் கற்பனை கலவாமல் நேரடியாகக் கவிதையாக வடித்திருக்கிறார் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள்.

இப்படிப்பட்ட பாடல்கள் தேவைப்பட்ட அளவில் தமிழர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது வருத்தற்குரிய செய்தியாக இருந்தாலும் அவற்றைத் தேடி எடுத்து இச்சமுதாயத்திற்கு அளிக்கும் பணியை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றிருக்கிறது கலை பண்பாட்டுத் துறை. கவிஞர் புதுவைச் சிவம் கவிதைகளால் சமுதாயம் தக்க பயனடைந்து அவருடைய கனவுகளை நிறைவேற்றும் நாளை நோக்கிச் செல்வதே அக்கவிஞருக்கு நாம் செய்யும் சிறப்பாகும்.

(ந. இராஜசேகர்)

# கவிஞர் ச. சிவப்பிரகாசனார் (புதுவைச் சிவம்)

வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| 1908 | சண்முக வேலாயுதம் - விசாலாட்சி ஆகியோரின் முதல் மகனாக அக்டோபர் 23-ல் பிறப்பு. |
| 1914-1924 | திண்ணைப் பள்ளியிலும் பின்னர் அரசு பாட சாலையிலும் பிரஞ்சும், தமிழும் பயிலல். |
| 1925-1930 | சீர்திருத்த எண்ணங்கள் உதயம் - குடி அரசு பத்திரிக்கையின் தாக்கம் - ஒரு புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெரியாருடன் அறிமுகம்-இயக்கத்திற்கு ஆதரவு-கொள்கைப் பரப்பல்-புதுவையில் ஓர் வைதிகர்கள் மாநாட்டை பார்க்கச் சென்றபோது அங்கு வந்திருந்த ஆசிரியர் கனக-சுப்புரத்தினத்துடன் தொடர்பு - தோழராக, மாணாக்கராக அவரிடமே யாப்பு பயிலல். |
| 1930-1932 | பாரதிதாசன், நோயேல், லாகஷ் ஆகியோருடன் இணைந்து புதுவை முரசு இதழ் நடத்தல் - 1931-ல் புதுவை முரசு பொறுப்பாசிரியராகப் பொறுப்பேற்றல் - புதுவை முரசில் எழுதிய கட்டுரைக்காக 500 பிராங்க் அபராதமும் 6 மாத சிறைத் தண்டனையும் சுமத்தப்பட்டது. புதுவை முரசு நிறுத்தம். புதுவையில் சுயமரியாதை மாநாடு மற்றும் பல “சுயமரியாதை உபநியாசங்கள்” நடத்தல். |
| 1933-1935 | தந்தையார் மறைவுக்குப்பின் முத்தியால்பேட்டையில் சொந்த வீடு ஏலத்தில் போனதால் பாரதிதாசன் வசித்து வந்த இல்லத்தின் ஒரு பகுதிக்குக் குடிபெயர்தல் - ‘பிரவே’ தேர்வு மாணவர்களுக்காக பாரதிதாசனுடன் இணைந்து வகுப்பு நடத்தல் - அதில் தானும் தேர்ச்சி பெறல் - பாரதிதாசன் கவிதைகளைப் படி எடுத்து பல இதழ்களுக்கும் அனுப்புதல்-‘ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்’ இதழில் கவிதை, நிர்வாகப் பணியாற்றல் - சுயமரியாதை இயக்கம் சார்பாக பல பெயர்களில் மன்றங்களை நிறுவல் - பொதுக் கூட்டங்களை நடத்தல். |
| 1935-1939 | இயக்க இதழ்கள் அனைத்திலும் இவரது கவிதைகள் இடம் பெற்றன. பாரதிதாசனின் ‘புரட்சிக் கவி’ - உட்பட பல நூல்களை வெளியிடல். |

| | |
|---|---|
| 1940–1945 | ஞாயிறு நூற் பதிப்பகம் நிறுவல் – தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பாவேந்தர் படைப்புகளை வெளியிடல்– அண்ணாவின் 'தீ பரவட்டும்' நூல் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டபோது அதை பிரஞ்சிந்தியாவான புதுச் சேரியிலிருந்து வெளியிட்டுத் தமிழகம் முழுவதும் பரப்பல்– தனது கவிதை நூல்களான பெரியார் பெருந்தொண்டு கைம்மை வெறுத்த காரிகை, மறக்குடி மகளிர், காதலும் கற்பும், திராவிடப் பண், மறுமலர்ச்சிக் கவிதைகள், தமிழர் தன் மதிப்புப் பாடல்கள் ஆகிய நூல்களை வெளியிடல் – தமிழாசிரியராகத் தனியார் பள்ளியில் பணிபுரிதல். |
| 1945 | புதுச்சேரியில் திராவிடர் கழகம் ஆரம்பித்தல் – திராவிடர் கழகத் தலைவராக சு. பெருமாள் அவுக்காவும், செயலாளராக சிவப்பிரகாசமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடக்க விழா மாநாடு போல் நடைபெற்றுப் பெருங்கலவரத்தில் முடிந்தது. |
| 1945–1949 | பல சீர்திருத்த நாடகங்களை இயற்றி மேடை ஏற்றுதல் – அவை புதுவை தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியாவிலும் நடைபெற்றன. அவற்றில் 'சிதைந்த வாழ்வு' 'கோசில ராணி' போன்ற நாடகங்கள் நூல்களாகவும் வெளிவந்தன. |
| 1949 | தி.க.விலிருந்து அண்ணாவும் ஏனையோரும் பிரிந்தபோது அண்ணாவின் அழைப்பின் பேரில் சென்னை சென்று தி.மு.கழகம் ஆரம்பிப்பது என்ற அண்ணாவின் முடிவை ஏற்று, புதுவையில் தி.மு.கவை நிறுவி, அதன் அமைப் பாளராகப் பணியாற்றல். |
| 1950–1958 | தமிழிசைக்கும் பகுத்தறிவுக்கும் ஏற்றம் தரும் 'தமிழிசைப் பாடல்கள்' பாடல்கள் கவிதை நூல் வெளியீடு – தி.மு.க. பொதுத் தேர்தலில் நிற்பது என்ற முடிவுக்கு மதுரை பொதுக் குழுவில் ஆதரவளித்தல் – மறுமலர்ச்சி மன்றம் நிறுவல்– புதுவை இந்திய யூனியனுடன் இணைய வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளோடு இணைந்து புதுச்சேரி விடுதலை முன்னணி' அமைத்தல் – அதன் போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தல் – சுதந்திரப் புதுவையில் பதிவு பெற்ற தி.மு.க.வை "புதுச்சேரித் தி.மு.க." என்ற பெயரில் நிறுவுதல் – பல தி.மு.க. கிளைகளை ஆரம்பித்து வைத்தல். |

**1959–1964** புதுச்சேரியில் தி.மு.க. மாநாட்டுக் குழுவின் செயலாளராகப் பணியாற்றி மாநாட்டை நடத்தல் – அரசியல் பணிகளில் தீவிர ஈடுபாடு.

**1964–1968** சட்டமன்றத் தேர்தலில் தோல்வி – அரசியல் பணியால் தமிழாசிரியர் பணியிலிருந்து விலக்கம் – தன் வறுமை பொறுத்து இயக்க வறுமை போக்க ஆதரவு திரட்டல் – நகர மன்றப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று புதுவையின் துணை மேயராகப் பதவியேற்றல்.

**1969–1975** நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படல்– நாடாளுமன்றத்தில் முதல் முதலில் தமிழில் பேசிப் பரபரப்பை ஏற்படுத்தல் – புதுவை நிதி வசதி, தனிரெயில் வசதி புதுவைக்கு முழு மாநிலத் தகுதி – பாவேந்தருக்குத் தபால்தலை உட்பட பல்வேறு பொது ப்[illegible] [illegible] கவனத்தை ஈர்த்தல்.

**1975–1980** இயக்க, அரசியல் பணிகள்.

**1980** உடல் நலக் குறைவு – ஆன்றவிந்த சான்றோராக அமைதி கொளல் – தமிழ்ப்பணி மட்டும் தொடரல்.

**1983** தமிழக அரசின் பாவேந்தர் விருதும், பொற்கிழியும், ஓய்வூதியமும் அளிக்கப்பட்டன.

**1989** ஆகஸ்ட் 31–ல் புதுவைப் பொது மருத்துவமனையில் புகழுடம் பெய்தினார்.

# பெரியார் பெருந்தொண்டு

# 1944

# ஆக்கியோன் முன்னுரை

என் ஆசிரியரும், தமிழ்நாட்டின் தனிப்பெருங் கவிஞருமான உயர்திரு. கனக-சுப்புரத்தினம் (பாரதிதாஸன்) அவர்கள், தம் "எதிர்பாராத முத்தம்" என்னும் நூலை எழுதி முடித்தபோது, என்னை நோக்கி, 'நீயும் இதுபோன்ற சிறு நூல்கள் எழுதுவதுதானே' என்றார். நான் என் தகுதியின்மை கருதி, அவர்முன் மவுனம் பூண்டேன் அப்பெ ாழுது. ஆயினும், ஏதேனும் ஓர் நூல் எழுதவேண்டும் என்ற எண்ணம் மட்டும், என் உள்ளத்தை வெகுநாளாகவே உறுத்திவந்தது. ஆசிரியர் பாரதிதாஸன் அவர்களின் அம்மொழி, எனக்கு உற்சாக முட்டியதோடு, தூண்டுகோல் போன்றும் ஆயிற்று. அந்நேரம், தேசியப் போர்வை போர்த்த ஆரியரின் எதேச்சாதிகார ஆட்சி, தமிழ்நாட்டை அலக்கழித்து ஓய்ந்த நேரம்! தமிழர்கள் தம்மொழி காக்கக் கட்டாய இந்தியை எதிர்த்த காரணத்தால் சிறையிலடைக்கப்பட்டு, வெற்றியோடு மீண்டு வெளிவந்த நேரம்! ஆகையால், சரித்திரத்தில் இடம் பெறும் அந்நிகழ்ச்சி பற்றி, யானும் ஒருவாறு எழுதலாமென்று ஆவலோடு முன்வந்தேன். அதன் பயன்தான், ' 'பெரியார் பெருந்தொண்டு" என்னும் இச்சிறு நூலாகும்.

இந்நூல், பெரியாரின் வாழ்க்கை வரலாறு அன்று; அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும் தகுதி, எனக்கில்லை. ஆயினும், அவரது வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியாக இந்நூல் அமைந்துள்ளது. கட்டாய இந்தியை ஒழிப்பதற்காகப் பெரியார் செய்த பெருந்தொண்டினைத், தமிழுலகம் என்றும் மறவாது. அதை விளக்கவந்த யான், அவரது முன் நிகழ்ச்சிகளையும் ஒருவாறு சுருக்கிக் கூறியுள்ளேன்.

பெரியார் பெருந்தொண்டுகள் யாவும் இடம்பெறாத இச்சிறு நூற்குப், 'பெரியார் பெருந்தொண்டு' என்ற பெயர் தந்துள்ளேன். இதனால், பெரியார் அவர்களின் பெருந்தொண்டிற்குப் பேரிழுக்கு விளைவித்து விட்டதை எண்ணும்போதும், பெரியார் அவர்களின் சொற்பொழிவின் கருத்தாகப் பிற்பகுதியில் கூறப்பட்டிருப்பனவற்றில் ஏதேனும் அவர் கருத்துக்கு மாறாக இருக்கின்றனவோ என்பதை எண்ணும்போதும் என் உளநடுக்கம் எல்லை கடக்கிறது. ஆசைபற்றி அறையலுற்ற இச்சிறு நூலால், யான் பெரிதும் அச்சமே பெற்றுள்ளேன். அதனைப், பெரியார் அவர்களும் மற்றும் தோழர்களும், என்னை மன்னிப்பதன் மூலம் போக்குவாராக.

'சுயமரியாதை இயக்கம் என்ன சாதித்துவிட்டது' என்பது, எதிரிகளுள் ஒரு சிலரின் அர்த்தமற்ற கேள்வியாக இருந்து வருகிறது. பகைமைத் திரை அவர்கள் கண்களை மறைத்திருக்கும் வரை, அது சாதித்தவை

அவர்கட்கு எப்படித் தெரிய முடியும்? அல்லாமலும், அழியுஞ் செல்வத்தை அளிப்பதன்று சு.ம. இயக்கம். அது என்றும் அழியாச் செல்வத்தையே, மக்கட்கு அளிப்பதாகும்!

ஒன்றுக்கும் பற்றாத என்னை ஒரு நூல் எழுதும் தகுதிக்கு ஆளாக்கி வைத்ததும், சு.ம. இயக்கத்தின் பயனே என்பதைக் கண்ணியமாக ஒப்புக் கொள்ளுகிறேன். மேலும் அது, தன்னிகரற்ற இருவரை எனக்கு ஆசிரியராகவும் அளித்துள்ளது.

அவர்களுள் ஒருவர், எனக்கு உலகப் பொது அறிவை 'ஒருவாறு உணர்த்தி வருபவர்; மற்றவர், தமிழறிவை வளர்த்தவர். முதல்வர் பெரியார் அவர்களாவர்; இரண்டாமவர், கனக-சுப்புரத்தினம் அவர்களாவர். இவ்விருவரையும் யான் ஆசிரியராக அடைந்தமைக்குப் பெருமை யடைவதோடு, முதலாசிரியரின் தொண்டினைப் பற்றி முதனூலாக எழுதி வெளிவருவது காணவும், பெரு மகிழ்ச்சி யடைகின்றேன். அன்றியும் சிறப்பாக, எனக்குத் தீந்தமிழளித்து, (புலவர்களால் பொருளற்ற புன்கவி என்று புறக்கணிப்படுவதாகிய) எளிய நடையில் கவிதை எழுதும் தகுதிக்கு என்னை ஆளாக்கி வைத்த ஆசிரியர் பாரதிதாசன் அவர்கட்கு, என் நன்றியும் வணக்கமும் என்றென்றும் உரியதாகுக!

வெகு நாளைக்கு முன்பே வெளிவரவேண்டிய இந்நூல், யுத்தகால விளைவுகாணமாக வெளிவர முயாமலே இருந்து வந்தது. எனினும், ஒன்றுக்குப் பன்மடங்காகத் தாளின் விலை உயர்ந்திருக்கும் இந்நி லையிலும், தம் பொருட் செலவையும் கருதாது, இதனை ஆவலோடு வெளியிட முன்வந்த என் தோழர் ப. சுந்தரவேலன் அவர்கட்கு, என் நன்றியுரியதாகுக!

28, அம்பலத்தாடையர் மடத்து வீதி, இங்ஙனம்,
18-3-44.

ச. சிவப்பிரகாசம்,
புதுச்சேரி.

# பெரியார் பெருந்தொண்டு

*(எண்சீர் விருத்தம்)*

"தமிழ்நாடு தமிழருக்கே" என்னும் கோஷம்
சகமதிர் ஒலிப்பதைநாம் இன்று கண்டோம்!
அமிழ்தான தமிழ்மொழியின் வளர்ச்சி எண்ணி
ஆர்வமுடன் உழைக்கின்றார் தமிழர் யாரும்!
இமைமூடிப் பன்னாளாய்த் துயில் கொண் டுள்ள
இசைத்தமிழர் இந்நாளில் எழுச்சி கொண்டே,
"தமிழ் வாழ்க! தமிழர்நலம் ஓங்க! சூழ்ச்சிச்
சதிகாரர் தொலைக" வெனச் சாற்று கின்றார்!

" ஒருவகுப்பார்க் கடிமையுற்றோர்க் குய்வு முண்டாம்;
ஒருசேர இருவகுப்பார்க் கடிமை யுற்றோர்,
ஒருநாளும் முன்னேற்றம் அடைந்ததாக
உலகத்தில் நாமெங்குங் கண்ட தில்லை!
சரியொத்த சமம்வேண்டிக் கூச்சல் போடும்
தழிழர்க்கோ மதியில்லை; கனவில் கூட
உரிமை பெற அன்னவரால் முடியா" தென்றே
உரைத்திட்டார் முன்பெல்லாம் தமிழ்ப்ப கைவர்!

எதிர்பாரா இன்றுள்ள நிலையைக் காண
ஏளனமாய் எண்ணியதை அன்னார் விட்டே,
மதிமயங்க, அடிவயிற்றில் பயம் எழும்ப,
'மறத்தமிழர் விழிப்புற்றால் நமக்கு நேரும்
கதியாதோ?' எனவெண்ணிச் சூழ்ச்சி தேடுங்
கடுந்தொழிலி லீடுபட்டார்! அவற்றை யெல்லாம்
புதியதொரு நல்லுணர்ச்சித் தமிழர் வீழ்த்தப்
போர்தொடுத்தார்; வெற்றியினை நெருங்கலுற்றார்!

இந்நிலைக்குக் காரணராய் இருந்தோர் யாரென்
றியம்பிடிலோ, இருள்உலகுக் கொளியை நல்கிச்
சிந்தையினிற் குடிகொண்ட அச்சம் யாவும்
தீர்த்து நலம் விளைக்கின்ற சுடரே போல்வார்!
சந்ததமும் தமிழ்மக்கள் உயர்வுக் காகச்
சலியாத நற்றொண்டு புரியும் வீரர்!
எந்தலைவர்! தமிழ்நாட்டின் தலைவர்! அன்னார்,
ஈரோடு வாழ்பெரியார் இராமசாமி!

அன்னவரின் தலைமையிலே தமிழர் இந்நாள்
அரியதொரு விழிப்புணர்ச்சி அடைந்து விட்டார்!
'முன்வைத்த காலைஇனிப் பின்னே வைக்க
முடியா'தென் றேயுறுதி கொண்டு விட்டார்!
இன்னலெது வந்தாலும் சகிப்போம்; வெற்றி
இல்லையெனில் உயிர்வாழோம்' எனச்சூள் கொண்டார்
பன்னரிய அப்பெரியார் சேவை தன்னைப்
பகிர்ந்திடுமுன் தமிழ்நாட்டு நிலையுஞ் சொல்வேன்.

## *முற்காலத் தமிழ் நாடும், தமிழர் நிலையும்*

வடக்கினிலே வேங்கடமும் தெற்குப் பாங்கர்
வாய்ந்திட்ட குமரியுமாம் எல்லை கொண்டு,
திடத்துடனே வாழ்ந்திட்டார் தமிழர் அந்நாள்;
சிறுமை யிலை; அடிமை சிறி தேனு மில்லை;
மடத்தனமாம் செயலில்லை; காதல் வாழ்வில்
மாண்புற்றார்! நல்வீரம் மிகவே பெற்றுப்
படைத்தளமுங் கொண்டிருந்தார்; நேர்மை யாட்சி
பார்வியக்க நடத்திட்டார்; அறிவில் தேர்ந்தார்!

சாதியிலை; சாத்திரமாங் குப்பை யில்லை!
சண்டாளர் தீண்டாதார் யாரு மில்லை!
பேதமிலை! பெண்ணடிமை கொண்ட தில்லை!
பிறருழைப்பில் வாழுபவர்க் கிடமுமில்லை!
நீதியினில் கண்ணோட்டம் நிகழ்ந்த தில்லை!
நேர்மையற்ற சூழ்ச்சிக்கே வழியு மில்லை.
ஆதியினில் அன்னவரின் வாழ்வு, மற்ற
அயலவரின் வாழ்விருளுக் கொளியா யிற்றே!

## இன்றைய நிலை

இன்றுள்ள தமிழ்நாடு தமிழர் கொண்ட
ஈனநிலை இயம்புதற்கே நாணங் கொள்ளும்!
முன்புள்ள தமிழ்நாட்டின் எல்லை யான
மொய்ம்புடைய திராவிடமும் சிதறி நிற்க,
அன்புள்ள கன்னடியர் மலையா ளத்தார்
ஆந்திரர்கள் துளுவரெலாம் பிரிந்து நிற்க,
வன்புள்ளார் போல் யாரும் ஒருமை யின்றி
வாழ்வினிலே தாழ்வேற்று வாடுகின்றார்!

## இதற்குக் காரணம்

பாராண்டும் படைவலிமை கொண்டும், நல்ல
பல்வளஞ்சேர் வாழ்வுதனைப் பெற்றும், மிக்க
சீரார்ந்தும், பிறநாட்டார் புகழை ஏற்றும்
திறம்வாய்ந்த அறிவோராய் வாழ்ந்தும் வந்தோர்,
தீராத மிகப்பெரிய இழிவை ஏற்றுத்
தியங்குதற்குக் காரணந்தான் என்ன வென்றே
ஆராயந்தால் புலனாகும் இந்த நாட்டில்
ஆரியர்வந் தடிவைத்துச் செய்த தோஷம்!

## ஆரியர் வருகையும், அவரது சூழ்ச்சியும்

(பஃறொடை வெண்பா)

ஈரா யிரவருடத் திற்குமுன் ஆரியர்தம்
தீரா வறுமையினைத் தீர்த்திடுதற் கெண்ணியே
மாடாடு மேய்த்தும் மனைவி மக்க ளையழைத்தும்
நாடோடி போலக் குடிவந்தார் நம்நாட்டில்!
'ஈனர்க் கிடம் விட்டால் இல்லிடம்பாழ்' என்பதையே
மானத் தமிழர் உணர்ந்திருந்தும், வந்தோர்க்கு
நன்மதிப்புத் தந்து நலன் செய்தார்! நாளாக,
மன்னர் அவைக்களத்தில் மந்திரியாய்த் தாமமர்ந்தும்
தூதாய் அமைந்தும் துரிதமுடன் செல்வாக்குத்
தோதாய் அடைந்தன்பின், சூழ்ச்சியினைக் கையாண்டு
நஞ்சனைய வைதிகத்தை நம்வாழ்விற் சேர்த்துவிட்டார்
வஞ்சநரி யன்னார் வலிந்து!

### அதன் பயன்
(எண்சீர் விருத்தம்)

புலித்தமிழர் சந்ததியில் வந்தோர் பின்னர்ப்
பூனையென அடங்கிவிட்டார் கோழை யாகிச்!
சலிப்பற்ற உள்ளத்தில் சலிப்பை ஏற்றுச்
சந்ததமும் வறுமையினில் மூழ்கி விட்டார்!
வலுக்கொண்டு பிறநாட்டார் ஆண வத்தை
மாய்த்தவர்கள் தம்நாட்டில் அடிமை யுற்றார்!
'கலுக்' கென்று பிறர்சிரிக்கும் வாழ்வை ஏற்றுக்
கதியற்று மதியற்று வாட லுற்றார்!

பேதமற்ற வாழ்வினிலே பேத மேற்றார்!
பிறவியிலே தாழ்வுயர்வு பேச லுற்றார்!
ஏதமற்ற நற்காதல் வாழ்வைத் தள்ளி
இடருற்ற பொய்க்காதல் வாழ்வு பெற்றார்!
தீதற்ற சுகவாழ்வின் முறையை மாற்றித்
தீதுடைய பிறர்சடங்கை – மொழியை – ஏற்றார்!
வாதற்ற இந்நாட்டில் மதத்தை ஏற்று
மக்களுக்குள் ஒருமையின்றி மாய லுற்றார்!

### பிற்காலத் தமிழரின் விழிப்புணர்ச்சி

பலநூறு வருடங்கள் சென்ற பின்பு
பார்மதிக்கும் வள்ளுவனார் தோன்றிக், கீர்த்தி
நலனுடைய தமிழர்களின் வாழ்விற் சேர்ந்த
நஞ்சினையே போக்குதற்கு 'முப்பால்' சொன்னார்!
கொலையுடைய ஆரியரின் சூழ்ச்சிக் கந்தக்
குறட்பாவும் நிலைதிரிந்து சீர்மை குன்றப்,
பலபலபேர் பின்செய்த முயற்சி யாவும்
பலனின்றிப் பாழ்பட்டுப் போன தந்தோ!

### பெரியார் தோற்றம்

தூயதொரு விஞ்ஞானம் உலகை யாண்டு
சுடரொளியை எங்கணுமே வீசு மிந்நாள்,
மாயிருள்சேர் வைதீகம் இந்த நாட்டின்
வாழ்வழித்துச் சீரழிக்கும் கொடுமை தீர,

ஆயிரத்தெண் ணூற்றெழுபத் தொன்ப தான
ஆண்டினிலே, புகழார்ந்த வேங்க டப்ப
நாயகர்க்கு நம்பெரியார் இராம சாமி
நலமுடனே மைந்தனெனத் தோன்ற லானார்!

### பெரியார் சேவை யுணர்வு

சிறுவயதை விளையாட்டில் கல்வி தன்னில்
செலுத்திப் பின் வாணிபத்திற் புகுந்த போழ்தில்,
அறிவுடையோர் இந்நாட்டில் ஒன்று கூடி
அடிமைநிலை மிடிமைநிலை தீர்க்க வெண்ணி
உறுபுகழ்சேர் காங்கிரசைத் தோற்று வித்தே
உற்றபணி யாற்றுவதை யறிந்திந் நாட்டின்
கறைவாழ்வைத் தீர்த்திடுதற் கெண்ணங் கொண்டே
காங்கிரசிற் பெரியாரும் அங்கம் பெற்றார்!

### காங்கிரசில் பெரியார் சேவை

வெள்ளையரை இந்நாட்டி னின்றும் ஓட்ட
வெகுண்டெழுந்தோர் தம்முள்ளே ஒருவ ராகிக்,
கள்ளமிலா உள்ளத்தின் உணர்வால் மிக்க
கடும்பணியே செய்தந்தக் காங்கி ரஸ்கொள்
கொள்கையினை மக்களுக்கு விளங்கும் வண்ணம்
கூறியுணர் வூட்டியதால், தலைவர் என்போர்
உள்ளத்தின் நீங்காமல் இருந்த தன்றி
உயர்பதவி காங்கரசில் வகிக்க லானார்!

### சிறைக் கஞ்சாச் சிங்கம்

கறை வாழ்வை நாட்டினின்றும் போக்கு தற்குக்
காங்கிரசின் கட்டளையைச் சிரமேற் கொண்டு,
சிறைவாழ்வுக் கஞ்சாமல் போர் தொடுத்துச்
சீரியநற் சுகவாழ்வும் கருதி டாமல்,
உறையுமிடம் சிறையிடமாய்க் கொண்டு பன்னாள்
பலமுறையும் சிறைசென்ற உறுதி கண்டே,
'சிறைக்கஞ்சாச் சிங்க' மெனப் பல்லோர் கூறச்
'சிறைப்பறவை' எனப்பலரும் செப்ப லானார்!

### வெள்ளையரைத் திணர வைத்தவர்

மக்கள்நலங் காண்பதற்குப் போர்த்திட் டத்தை
வகுத்திடுங்கால் பெரியார் இல் லாமற் செய்யார்!
தக்க ஒரு தலைவரவர்! தாமே யன்றித்
தம்மனைவி தங்கையரை நாட்டிற்காக
மிக்கபெருந் தொண்டாற்றுந் தகுதிக் காக்கி
வெஞ்சிறைக்கும் அஞ்சாத நிலையைச் செய்து,
புக்குள்ள வெள்ளையரைத் திணர வைத்த
புனிதரெனில் அப்பெரியார் பொய்யென் பாரோ?

### வைக்கம் வீரர்

வைக்கத்தில் ஆதிதிரா விடரை வீதி
வழியினிலே நடக்கவொட்டாக் கொடுமை கண்டு,
குக்கலுளம் படைத்தவரின் ஆண வத்தைக்
குலைத்திடவே சமத்துவப்போர் தொடுத்தா ரங்கே!
அக்கொடியார் பெருஞ்சீற்றச் சிறுசெ யற்கும்
அரசியலார் வெஞ்சிறைக்கு மஞ்சி டாமல்,
மிக்க ஒரு வெற்றிகண்ட தாலே வைக்கம்
வீரரென நாட்டினர்கள் விளம்ப லுற்றார்!

### காங்கிரஸ் ஆரியரின் கபடச்செயல்

வாய்ந்துள்ள இந்நாட்டிற் சாதி பேதம்
மக்களிடை ஒற்றுமையைக் குலைக்கு மென்றே
தேர்ந்துள்ள நம்பெரியார் அவற்றை யெல்லாம்
தீர்ப்பதற்கு முனைந்துழைக்கும் போதில், மிக்குச்
சூழ்ந்துள்ள ஆரியர்கள் எண்ணம் மாறித்
'தொல்லைஇவனால் நமக்கு நேரு' மென்றே
ஆர்ந்தபுகழ்ப் பெரியாரைக் காங்கி ரஸ்விட்
டகற்றிவிடச் சிறுசெயலை மேற்கொண் டார்கள்.

### பெரியார் மனத்தளர்வும், உணர்வும்

(அறுசீர் விருத்தம்)

அந்தவெஞ் சூழ்ச்சி தன்னை அறிந்தநற் பெரியார் தாமும்
சிந்தையும் வருந்த லானார்; சீரிலாச் செயலுங் கண்டார்!

'நிந்தனை எதுவந் தாலும் நேரிய முறையில் நாமே
சந்ததம் மக்க ளுக்குச் சார்ந்தநற் றொண்டு செய்வோம்'

என்றவர் எண்ணங் கொண்டே இங்குளோர் ஒற்று மைக்குப்
புன்செயற் சாதி பேதம் போக்கிட உறுதி கொண்டார்!
அன்றியும், மாமன் றத்தில் ஆரியப் பார்ப்ப னர்செய்
வன்செயற் சூழ்ச்சி யாவும் மக்களுக் குணர்த்தி வந்தார்!

### *குருகுலக் கிளர்ச்சி*

அரியவாம் தேசீ யத்தின் கல்வியை அளிக்க வந்த
குருகுலந் தன்னிற் பேதக் கொடுமையும் விளக்கிக் காட்டி,
'ஒருமையை வேண்டு வோரே உற்ற இப் பேதங் காட்டல்
சரியதோ?' என்று சொல்லித் தக்கதோர் கிளர்ச்சி செய்தார்!

### *ஆவேசப் பார்ப்பனர் அவசரச்சூழ்ச்சி*

அந்தநற் கிளர்ச்சி கண்ட அரசியற் பார்ப்ப னர்கள்
சிந்தையிற் சீற்ற மோங்கத் திகில்மிக வோங்க, "இங்கு
வந்தநாள் முதலாய் நாமும் மதிப்புடன் வாழு கின்றோம்!
இந்தநாள் உயர்வு நீங்கி இழிவினை ஏற்ப துண்டோ?

சாதிக ளழிய லாமோ? சமத்துவம் தகுதி யாமோ?
வாதுமே பேசி நம்மை வம்பினில் இழுக்க லானான்!
தீதினி நேரு முன்னம் சீக்கிரம் சபையின் நீக்கத்
தோதுசெய் திடுவோ" மென்றே சூழ்ச்சியும் தொடங்க லானார்!

### *காங்கிரசை விட்டுப் பெரியார் வெளியேறியமை*

தேசியம் பேசிப் பேசிப் செந்தமிழ் நாட்டார் தம்மை
மோசமாய் நடத்து கின்ற மூர்க்கராம் பார்ப்ப னர்கொள்
ஆசைஆ திக்கங் கண்டே, அருந்துணைத் தோழ ரோடும்
மாசபை தன்னை விட்டு வெளியினிற் பெரியார் வந்தார்!

### *கண்ணிழந்த காங்கிரஸ்*

உண்மையாய் இந்த நாட்டை உயர்வினிற் சேர்ப்ப தற்கும்
கண்ணிய வாழ்வி னுக்கும் கடும்பணி யாற்றி வந்த
வண்மைசேர் பெரியார் நட்பை மாசபை இழந்த தாலே,
கண்களி லொன்றி ழந்த கதியினை யடைந்த தந்தோ!

## சுயமரியாதை இயக்கத் தோற்றம்

காங்கிரஸ் தன்னை விட்டுக் கடுகியே வெளியில் வந்த
ஓங்கிடு புகழ்சால் வீரர் உற்றதம் கடமை எண்ணித்,
தீங்குடைப் பார்ப்பனர்கள் செய்திடும் சூழ்ச்சி யாவும்
நீங்கிட, உரிமை எங்கும் நிலவிட முயல லானார்!

நயமுறும் அம் முயற்சி நம்முடை இழிவை நீக்கும்
சுயமரியாதை என்னும் தூயநல் இயக்க மாகிப்,
பயமுறும் கொள்கை யாவும் பாங்குடன் இனிதே பெற்றுச்
சயமுற விளங்கு கின்ற தன்மையை அடைந்த தம்மா!

## பெரியார் போதனை

“பிறவியில் யாரும் ஒன்றே! பேதமும் இழிவும் இல்லை!
அறஞ்சொலி இதை மறுத்தால் அவ்வறம் அழிய வேண்டும்!
திறனுடத் தமிழர் வாழ்வில் சேர்ந்துள்ள முட்க ளான
மறனுடைச் செயல்கள் யாவும் மாண்டுமே ஒழிய வேண்டும்!

மக்களின் செல்வம் போக்கி மாண்பழித் திழிவை நல்கும்
மிக்குள வழக்க மெல்லாம் வீழ்ச்சியே யடைய வேண்டும்!
சிக்கன வாழ்வு வேண்டும்; தேர்ந்தநல் அறிவு வேண்டும்!
தக்கதோர் மான வாழ்வு தமிழர்கள் அடைய வேண்டும்!

நந்தமிழ் நாட்டு மக்கள் நனிபல சாதி யேற்றுச்
சிந்தையிற் பகைமை கொண்ட சிறுசெயல் மாய வேண்டும்!
இந்த நல் உலகந் தன்னில் எங்குமிக் கொடுமை யில்லை!
விந்தையே இங்கு மட்டும் விளைந்த இப் புன்செயல்கள்!

வெள்ளையர் தம்மை இங்கு விரட்டுமுன் தமிழ ரெல்லாம்
உள்ளமே ஒன்றி நட்பால் ஒளிர்ந்திட வேண்டும். இன்றேல்,
எள்ளிடும் நிலைமை மாறா தென்றுமே அடிமை யாவோம்!
பொள்ளெனச் சுயராஜ் யந்தான் கிடைப்பினும் போற்ற மாட்டோம்!

ஒற்றுமை காண்பீர், எங்கும் ஒட்டுவீர் சாதி பேதம்!
உற்றநம் தன்ம திப்பை ஒளிபெறச் செய்வீர்! பின்பு
வெற்றியே நம்மை நாடி விரைந்திடும்! உண்மை.” என்றே
நற்றமிழ்ப் பெரியார் தாமும் நவின்றனர் நாட்டி லெங்கும்!

## தொண்டர்கள் சேர்ந்தமை

இவ்வகைக் கொள்கை தன்னை இளைஞர்கள் பகுத்து ணர்ந்தே
வெவ்விய பசிநோ யாளன் விரும்பிய உணவு பெற்றால்
எவ்விதம் களிகொள் வானோ எவ்விதம் எழுச்சி கொண்டு,
செவ்விய தொண்டு செய்யச் சேர்ந்தனர் பெரியா ரோடே!

## பார்ப்பனரின் பாதகச் செயல்

ஊரினை ஏய்த்துத் தேகம் உழைத்திடா வாழ்வு கொள்ளும்
ஆரியக் கூட்ட மெல்லாம் அஞ்சியே, பெரியார் கூறும்
சீரிய கொள்கை தன்னைச் சிதைத்திட எண்ணி, எல்லா
ஊரிலும் பகைமை மூட்ட ஓடினார் ஒட்டமாக!

"ஆத்திகம் கடவுள் சொன்னார்! அதை மிகப் பழித்துப் பேசி
நாத்திகம் கூறு கின்றார் நாயக்கர்! இதைச்ச கித்தால்
தீத்திறம் மிகுந்து போமே! தெய்வமும் இகழ லாச்சே!
சாத்திரம் பொய்யே என்று சாற்றினார்! சகிப்ப தாமோ?

பறையனைச் சமமே என்று பகர்ந்தனர் பயமில் லாமல்!
மறையினை மனிதன் சொன்ன வஞ்ச நூல் என்றார்! ஐயோ!
முறையிதோ?" என்று கூவி மூட்டினார் கலக மெங்கும்!
குறைமதிக் கூட்டம் சீறிக் கொக்கரித் தெழுந்த தந்தோ!

## பெரியார் பட்ட துன்பம்

(எண்சீர் விருத்தம்)

கல்லடிக்குக் கணக்குண்டோ? கயவர் செய்த
கண்மூடிச் செயல்களுக்கோர் எல்லை யுண்டோ?
சொல்லடிதான் எவ்வளவு! மதியி லாதார்
துன்புறுத்த எண்ணியதற் களவு முண்டோ?
செல்வாக்குப் பெற்றவர்கள், பதவி கொண்டோர்
செய்திட்ட சூழ்ச்சியினை உரைப்ப துண்டோ?
நல்லாரும் பெரியாரை எரிப்பார் போன்று
நச்சுவிழி காட்டியதை நவில்வ துண்டோ?

பிறர்சொத்தை அபகரிக்க எண்ண வில்லை!
பிறருழைப்பில் வாழ்ந்திடவும் எண்ண வில்லை!
சிறைவாழ்வைக் காட்டி உயர் உத்தி யோகம்
செய்திடவும் வீண்கிளர்ச்சி செய்ய வில்லை!
அறமுணர்த்தி மக்களது மேன்மை வாழ்வுக்
கறிவூட்டி முன்னேற்றம் ஆக்கு விக்கும்
திறலுடைய பெரியார்க்கு நேர்ந்த துன்பம்
செகத்தினிலே வளர்பிறையாய் வளர்ந்த தம்மா!

### *பெரியாரின் விடாமுயற்சி*

இன்னவிதச் சிறுசெயலுக் கஞ்சி டாமல்
ஏழைமக்கள் தொழிலாளர் நலத்தைக் கோரித்,
தன்னலமும் சுகவாழ்வும் துறந்து, மிக்க
சாதிமத சாத்திரங்கள் யாவும் வீழ்த்தி,
மன்னுசுய மரியாதைக் கொள்கை தன்னை
மடமடவென் றேபரப்பி வந்த தாலே,
ஒன்னலரும் அதன் உயர்வைக் கண்டு நாணி
ஒய்ந்திட்டார் முணுமுணுப்பு மட்டுங் கொண்டு!

### *மக்களின் ஆதரவு*

தொழிலாளர் ஆதரித்தார்! நாளும் வாழ்வில்
துயருற்ற ஏழையர்கள் ஆதரித்தார்!
உழவொன்றே கதியாகக் கொண்ட மக்கள்
உளமார ஆதரித்தார்! இந்த நாட்டில்
இழிபிறவி யாய்விளங்கும் தீண்டாதார்கள்,
ஏனையபல் சமுகங்கள் இழிவு தீர,
"வழிகண்டோம்! வாழ்வில் நலங் கொண்டாம்" என்று
வாயார வாழ்த்துரைத்தார் பெரியார்ச் சார்ந்தே!

### *சாதி மத நிலைமை*

அடித்தபந்து மேலெழும்பு மாறு, வாய்த்த
அரும்பெரியார் காங்கிரஸின் உறவு தன்னை
விடுத்திட்டு வெளிவந்து செய்த தொண்டால்
மேன்மை யறி வியக்கத்தின் வளர்ச்சி கண்டு,

படுத்தமதம் எழவில்லை! தொல்லை தந்த
பாழ்ச்சாதி பேதம் வால் நீட்டவில்லை!
மடத்தனமாம் வழக்கங்கள் சாத்தி ரங்கள்
மறைவிடத்தில் மாயுநிலை அடைந்த தந்தோ!

## *பார்ப்பனரின் பதைபதைப்பு*

(கலி வெண்பா)

காட்டுத்தீ எங்கும் கடுகவே சூழ்வதுபோல்,
மூட்டிவிட்ட ஓரெதிர்ப்பால் மூலை முடுக்கெங்கும்
நாடெங்கும் நற்றமிழர் வாழு மிடமெங்கும்
வீடெங்கும் தன்மதிப்புக் கொள்கை விளங்கிடவே,
பார்ப்பனர்கள் கண்டார்; பதைப்புற்றார்! நாம் கொள்ளும்
ஊர்ப்பணமும் போச்சே! உயர்ந்தோரென் றேசொல்லிப்
பன்னெடுநாள் ஏய்த்தோமே! பாழான நாய்க்கன்தான்
இன்று நமக்கெமனாய் எங்கிருந்து வந்தானோ?
சண்டாளர் தம்மைச் சமமென்று சாற்றுகின்றான்!
பண்டுடைய நம்நிலையைப் பாரெங்கும் தூற்றுகின்றான்!
சாத்திரங்கள் காட்டி மதங்காட்டிச் சார்ந்துள்ள
கோத்திரங்கள் காட்டிக் குலங்காட்டித் தெய்வங்கள்
காட்டியும் அஞ்சா தெதிர்க்கின்றான்! கல்வியின்றி
நாட்டினிலே செல்வாக்கை நாட்டி விட்டான்! நாமினியும்
சும்மா விருந்தால் துயருறுவோம்; ஆகையினால்,
நம்மா லியன்றமட்டும் நாட்டில் அவன் வார்த்தை
செல்லாமற் செய்திடுவோம். தெய்வம் மதம் சொன்னால்
செல்லா தவனிடத்தில்! சீர்பெற்ற காங்கிரசின்
ஆதிக்கந் தன்னால் அதிகாரங் கைப்பற்றித்,
தீதில்லாத் தேசியப் பேர்சொல்லிச். செந்தமிழர்
யாவரையும் நம்பக்கம் சேர்த்துக் கொண் டன்னவனைத்
தீவினையால், தந்திரத்தால் சீரழிப்போம்" என்றுறுதி
கொண்டே, யதிற்குவிந்தார் குற்றமுற்ற காங்கிரசின்
சிண்டைத் தம் கையதனிற் சேர்த்து!

## *காங்கிரசின் பதவி ஆசை*
(எண்சீர் விருத்தம்)

பன்னெடுநாள் காங்கரசின் பேரைச் சொல்லிப்
பரிவுடனே சுயராஜ்யப் பேரைச் சொல்லித்,
தன்மதிப்புக் காந்தியினைக் கைக்குள் போட்டுத்
தனிமதிப்புத் தந்துமிக 'மகாத்மா' வாக்கிப்,
பன்னுசத்தி யாக்கிரக நாட கத்தைப்
பதமாக மிகையின்றி நடித்துக் காட்டித்,
தென்னவரை ஏய்த்துவிட்ட செல்வாக் காலே
தேர்தலிலே வெற்றிபெறச் சமயம் பார்த்தார்!

## *பெரியார் முயற்சி*

இதற்குள்ளே நம்பெரியார் செய்த சேவை
எண்ணிலடங் காதவையாம். இந்த நாட்டார்
மதத்தினிடம் கடவுளிடம் மூட பக்தி
வைத்துள்ள மாதிரி, காங் கிரசின் மீதும்
சதிகாரர் கைப்பாவைக் காந்தி மீதும்
தணியாத பக்தி கொண்டோர்; ஆத லாலே,
மதியூட்டி அன்னவரைத் திருப்பி, முற்றும்
மாறாகக் கொணர்ந்திடுதல் முடிவ தொன்றோ?

என்றாலும், நம்பெரியார் முயற்சி யோடே
ஏமாற்றுக் காங்கிரசின் 'குட்டை' எல்லாம்
நன்றாக மக்களுக்குப் புரியும் வண்ணம்
நாடெங்கும் நனிவிளக்கி வந்த தோடு,
'தன்னாட்சி தனைவாங்கித் தருவோ' மென்றே
தமிழ் மக்கள் தமைஏய்த்துத் தேர்தல் தன்னில்
முன்வந்து முனைந்துழைத்துப் பதவி ஏற்க
முயன்றோரின், முயற்சியையும் எதிர்க்க லானார்!

## *பெரியாரும் நீதிக்கட்சியும்*

சீரழிந்து சீரழிந்து பெரியார் செய்யும்
சேவையினால் தலைதூக்கும் நீதிக் கட்சி,
பேரெதிப்புப் பெரியார்க்குத் தொல்லை தந்தும்
பெருந்துயர்கொள் வெஞ்சிறையி லடைத்து வந்தும்,

ஆரியரின் செல்வாக்கை ஒழிக்க வேண்டி
அதற்குழைத்தார் மேலும் நம் பெரியார்! ஆனால்,
வீரமிலாக் காங்கிரசார் உலகை ஏய்த்தே
வெற்றிகண்டார் தேர்தலிலே நேர்மை யின்றி!

### *காங்கிரசும் மந்திரிசபையும்*

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத் தேழாம்
ஆண்டினிலே, காங்கிரசார் வெற்றி பெற்ற
மாயிருசந் தோஷத்தால் ஏழி டத்தில்
மந்த்ரிசபை யமைத்திட்டார். சென்னை தன்னில்,
ஆயுபுதுச் சீர்திருத்த முறையால் ஈரைந்
தமைச்சரிலே ஆச்சாரி இராஜ கோபால்
நேயமுடன் முதல் அமைச்சர் பதவி கொண்டு
நிலவுமந்தச் சபைநடத்த முயல லானார்.

### *ஆச்சாரி மந்திரிசபையின் அலங்கோலம்!*

மந்த்ரிசபை எனச்சொல்லும் நற்பூந் தேரில்
வாய்ந்திட்ட மற்றொன்பான் அமைச்ச ரான
சிந்தையினில் உணர்வற்ற பேச்சு மற்ற
சிரமசைக்கும் குதிரைகளைப் பூட்டி, அந்த
விந்தையுறும் ஆச்சாரிக் குருட்டுக் கண்ணர்
வேகமுடன் சாரத்தியம் செய்யுங்காலை,
அந்தந்தோ வழிதவறித் தேரும் செல்ல
அதிற்சிக்கித் துன்புற்றார் நாட்டு மக்கள்!

### *காங்கிரசும் வரிகுறைப்பும்*

'வரி குறைப்போம்' என்றுசொலி வாக்குப் பெற்றோர்
மந்த்ரிசபை சட்டசபை ஏற்ற பின்பு,
பெருமையுடன் வீற்றிருந்தார் பதவி தன்னில்
பேசாமல் வாய்மூடிப் பொம்மை போல!
வரிகுறைக்கா விட்டாலும் பரவா யில்லை;
வாய்த்த ஜன வரி, பிப்ர வரிகள் நீங்க,
வரியாவும் விதித்தாட்டார்! ஏழை மக்கள்
வணிகரெலாம் குறையிரந்தார்; கேட்க வில்லை!

### காங்கிரசாட்சியில் தொழிலாளர் நிலை

'தொழிலாளர் வறுமையெல்லாம் தீர்ப்போ' மென்று
துடிதுடித்துச் சமதர்மம் பேசி வந்தோர்,
தொழிலாளர் முன்னேற்றம் காணா வண்ணம்
சூதுடைய முதலாளர் பக்கஞ் சேர்ந்தார்!
வழியற்ற சீராளா, மதுரை, சித்த
வலசாமில் தொழிலாளர் நன்மை கோரித்
தொழில்நிறுத்தஞ் செய்கையிலே, அவர்கட் கன்னார்
துப்பாக்கி வேட்டளித்து வறுமை தீர்த்தார்!

### காங்கிரஸ் ஆட்சியின் கண்மூடிதர்பார்

பலவகுப்புத் தமிழர்களைப் பாதா ளத்தில்
ஆழ்த்திவிடப் பாதகங்கள் புரிந்து வந்தார்!
நிலவிவந்த பன்னூறு கல்விச் சாலை
நிரந்தரமாய் மூடிவிட்டார்! தேசத்தின்மேல்
பலகோடி ரூபாய்கள் கடனும் பெற்றார்!
பைந்தமிழர் வாழ்வுதனை அழிக்க எண்ணி,
நலனுடைய தமிழறியாத் தமிழ ருக்கு
நஞ்சனைய இந்தியினை வலிந்து தந்தார்!

### காங்கிரசாரின் இட்லர் ஆட்சி

அக்ரமத்தை ஆளுதற்கும் எல்லை யுண்டு;
காங்கிரசார் ஆட்சியினில் அதுவும் மீறி,
மிக்க ஒரு சர்வாதி கார இட்லர்
வெங்கொடுமை ஆட்சியது நிலவிற் றந்தோ!
மக்களெலாந் துடிதுடித்தார்! 'ஐயோ, இந்த
வஞ்சகர்க்கு வாக்கேனோ தந்தோ' மென்று
துக்கமுற்றார்! ஆனாலும், வெளியே ஒன்றும்
சொல்லாமல் வாய்பொத்திக் கண்ணீர் விட்டார்!

### பெரியாரும் போரும்

மக்களுக்குத் தொண்டென்றால் ஆவ லோடு
மார்தட்டி முற்செல்லும் பெரியார் தாமும்,

இக்கொடுமை தமைக்கண்டு, பார்ப்ப னர்கள்
எண்ணத்தை இனிதறிந்து, கோழை யுள்ளம்
மிக்குவிட்ட தமிழர்களின் நிலையுங் கண்டு
மெய்சோர்ந்தா ரென்றாலும், பாதா ளத்தில்
புக்கழியும் நிலைபெற்ற தமிழர் வாழ்வைப்
பொன்றவிடா மற்செய்யப் போர்மேற் கொண்டார்!

### *ஆச்சாரியாரின் ஏமாற்றுவித்தை*

இதையறிந்த ஆச்சாரி, பெரியார் கொண்ட
எதிர்ப்புக்குச் செல்வாக்கில் லாமற் செய்யச்,
சதியுள்ளத் தால், "இன்னும் ஐம்ப தாண்டில்
தன்னரசாம் சுயராஜ்யம் கிடைக்கும்; அன்று
பொதுமொழி ஒன் றிந்நாட்டில் வேண்டு மன்றோ?
போற்றிடுவீர் இந்தியினை" என மக் கட்குக்
கதைசொல்லி ஏய்த்து வந்தார். தமிழர் சில்லோர்
கண்மூடி ஆதரித்தார் இந்தி தன்னை!

### *இந்தி கொண்டு வந்ததின் உண்மை நோக்கம்*

"தமிழ்நாட்டில் தமிழர்களைப் பன்னா ளாகச்
சமுகத்தில் அடிமை கொண்டு வாழ்ந்திட் டாலும்
தமிழுணர்வால் நம்மை யெலாம் வேறாய் எண்ணிக்
சந்ததமும் எதிர்க்கின்றார்; ஆகை யாலே,
தமிழ்மொழியைத் – தமிழ்க்கலையை ஒழித்து விட்டால்
தமிழரெனும் தனிஉணர்வு மாய்ந்து போகும்!
தமிழரெலாம் ஆரியத்தைத் தமதாய்க் கொள்வர்!
தமிழ்நாட்டில் தனித்தலைவர் நாமே யாவோம்!"

என்றுபல நாளாக முடிவு செய்தே
சந்தர்ப்பம் எதிர்பார்த்த ஆரி யர்கள்,
இன்றுள்ள அதிகாரந் தன்னைக் கொண்டே
இந்தியினை நுழைத்திட்டார் கட்டா யத்தில்!
தொன்மையுறு தமிழறியா மக்கள் இங்கு
நூற்றுக்குத் தொண்ணூற்று மூவர் என்றால்,
என்னவிதம் மனந்துணிந்தே இந்த நாட்டி
இந்தியினைக் கொணர்ந்திடுவார் நேர்மை யாளர்?

### பெரியாரின் போர்க்காலம்

ஆச்சாரி உள்ளத்தின் உள்ளு ணர்வை
அறியுமொரு கருவியுள தென்று சொன்னால்,
பேச்சுவள மிக்கதொரு பெரியார் அந்தப்
பெருங்கருவி யே யாகும்! அதனா லன்றோ,
வாய்ச்சாலம் பேசித்தம் நச்சுக் கொள்கை
வலிந்தூட்டும் அன்னவரின் உள்ளங் கொண்ட
சூழ்ச்சியினைத் தமிழருக்கு விளக்கிக் காட்டித்
தூயதமிழ் காத்திடப் போர் தொடுக்க லானார்!

### வீரர்கள் திரண்டமை

தன்னருமெய்த் தொண்டர்களாம் வீர ருக்கும்,
சகமெதிர்த்து வந்தாலும் தளரா உள்ளத்
தன்னிகரில் தளபதியர் தமக்கும், நல்ல
தாக்கீது விடுத்திட்டார் பெரியார்! அன்னார்,
“என்றுவரும் என்றுவரும் தாக்கீ” தென்றே
எதிர்பார்த்துக் கிடந்ததனால், உவகை யோடே
அன்னதனை ஏற்றுப்பின் முரசந் தன்னை
அதிர்ந்திடவே முழுக்கிப்போர்க் களத்தைச் சேர்ந்தார்!

### இந்திப் போர்

காங்கிரசார் தமிழரது வாழ்வு தன்னைக்
கருவறுக்க விடுத்திட்ட படைக ளான
தீங்குடைய இந்திமுதல் வரிகள் ஈறாய்ச்
சீரழியப் பெரியாரும் தொடுத்த போர்தான்,
ஓங்குநிலை பெறக்கண்ட பார்ப்ப னர்கள்
உளமழிந்தே நடுக்குற்றார்! அதனைக் கண்ட
பாங்கிழந்தார் ஒருசிலரே நீங்க, மற்றோர்
பக்கபல மாய்வந்தார் பெரியா ருக்கே!

### போரின் கடுமை

கைகலந்த கடும்போரில் கோழை யானோன்
கடுந்தொழிலின் ஆயுதத்தை வீசு தல்போல்,
மெய்ந் நடுங்கி அடக்குமுறைச் சட்டந்தன்னை
மென்மேலும் விடுத்திட்டார் ஆட்சி யாளர்!

செய்துயர அடக்குமுறைச் சட்டத்திற்குச்
சீர்த்தமிழர் வீரமோடு பலியா னாலும்,
மெய்சோராப் போர்கொண்டார்! "வெற்றி யின்றேல்,
வீடுதிரும் போம்" என்று சபதஞ் செய்தார்!

### *வீரப்பெண்களின் தீரச்செயல்*

இதற்கிடையே சிறுபான்மைச் சமுகத் தின்மேல்
ஏவிவிட்ட சிறுபடைகள் மாய்ந்து போகச்,
சதிமிக்க பெரும்படை யுள் இந்தி தானும்
தளராமல் அடக்கு முறை துணையாய் நின்றே,
கதிபெற்ற தமிழ்வாழ்வைச் சிதைக்கும் போது
கடும்போரை மேற்கொண்ட தமிழ ருக்கு,
மதிபெற்ற பெண்களெலாம் தாய்மா ரெல்லாம்
வந்திட்டார் துணையாகிப் போர்மு னைக்கே!

### *காங்கிரஸ் ஆட்சியில் பெரியார் சிறைவாசம்*

வெறுத்திடுமோர் அடக்குமுறை கூடா தென்றே
விளம்பிவந்த காங்கரசார், பெரியார் மீதும்
மறக்குடியில் வந்திட்ட தாய்மார் மீதும்
வன்றொண்டர் மீதும் அப் பாணம் போக்கிச்,
சிறைக்கூடஞ் சேர்த்துவிட்டார்! இதனைக் கண்ட
சீர்த்தமிழர் எழுச்சியுற்றே மேலும் மேலும்
சிறைப்பட்டார்! அடக்குமுறை விதித்தோர் தாமும்
திடுக்கிட்டார் தமிழரது போரைக் கண்டே!

### *சிறைப்பெரியார், நீதிக்கட்சித் தலைவர்!*

தஞ்சமெனப் பணிந்தமைச்சர் குழுவை ஏற்றோர்
தளராத போர்முனையைக் கண்டு நைந்தே,
வெஞ்சிறையில் பெரியார்க்கும் தொண்ட ருக்கும்
மிகுதுயரம் விளைத்திட்டார்! அந்த நேரம்
செஞ்சொலுடைத் தமிழரெலாம் நீதிக் கட்சித்
தலைவரெனப் பெரியாரை நியமஞ் செய்தே,
அஞ்சாத போர்கொண்டார்! உலக ஏச்சை
ஆச்சாரி வர்க்கத்தார் அடைந்தார் மேலும்!

### மக்கள் சீற்றமும், மந்திரிமார் ஏக்கமும்

ஆயிரத்தைந் நூற்றுவரைச் சிறையி லிட்டும்
அகச்சீற்றந் தணியாத குருட்டுக் கண்ணர்,
தூயதமிழ் காக்கவந்த தால முத்தைச்
சுகுணநட ராஜனைவெஞ் சிறையிற் றள்ளி,
நேயமிகும் அன்னவரின் மனைவி மக்கள்
நிறையன்புப் பெற்றோர்கள் கதறிச் சோர,
ஆயஉயிர் குடித்துள்ளம் மகிழ்ந்தா ரென்றால்
அந்தோ! அவ் வநியாயம் சகிப்ப துண்டோ?

மூலைமுடுக் கெங்கணும்பேர் எதிர்ப்பு மிக்கு
மூண்டதையும் ஆச்சாரி அறிய லானார்!
காலைவைக்கு மிடமெங்கும் மக்கள் சூழ்ந்து
கருங்கொடிகள் பிடிப்பதையுங் காண லானார்!
"மேலுமினி நாடாள நம்மால் ஒன்றும்
"மேவா" தென் றேமுடிவு கொண்டா ரேனும்,
"காலமெல்லாம் பழிப்பாச்சே பதவி விட்டால்!
கதியாதோ?" என்றெண்ணிக் கலங்க லானார்!

### கதிகலங்கிய காங்கிரஸ் பதவி விட்டோடியது
(அறுசீர் விருத்தம்)

சப்பாணிக் குதிரையது சருக்கியதே சாக்காக வீழு மாப்போல்,
எப்படி நாம் பதவிவிட்டே ஏகுவதென் றெண்ணியவர், மேற்கு நாட்டில்
துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதுமே வெள்ளையரைச் சூழ்ந்து, சூழ்ச்சி
ஒப்பந்தம் பேசியதில் தகராறு காரணமாய் ஓட லானார்!

### பெரியார் மீட்சியும், இந்தி வீழ்ச்சியும்
(எண்சீர் விருத்தம்)

பகையரசன் புறங் கொண்டால் அவனைச் சார்ந்த
படைகளென்ன செய்துவிடும்? அதனைப் போன்றே,
அகங்கொண்ட பகைமந்திரி சபையும் ஓட,
அடக்குமுறை ஆயுதங்கள் மறைந்து போகப்
புகழேற்றுச் சிறைசென்ற பெரியார் மற்றோர்
புகழோடு வெளிவந்தார்! இதனைக் கண்ட
மிகுதுயரைத் தரவந்த படையாம் இந்தி
மெய்ந்நடுக்கங் கொண்டலறி ஓடிற் றந்தோ!

## பெரியார் வெற்றி
(அறுசீர் விருத்தம்)

உண்மையும் அழிவ தாமோ ஓங்கிய பொய்ம்மை கண்டு?
பெண்மையும் அடைவ துண்டோ பேரமர் கண்ட வீரன்?
கண்ணியச் செயல்தீர் சூழ்ச்சிக் காங்கிரஸ் ஆட்சி தன்னை
வண்மைசேர் பெரியார் போரில் மாய்த்துமே வெற்றி கண்டார்!

## தமிழர்க்கு வாய்த்த தனிப்பெருங் கீர்த்தி
(எண்சீர் விருத்தம்)

தூய்தமிழை அழித்துவிட்டுத் தமிழர் தம்மின்
சுதந்திரத்தின் உணர்வுதனை யழித்து விட்டு,
நாய்நிலையில் என்றென்றும் அடிமை யாக்க
நனிமுயன்ற ஆரியரின் சூழ்ச்சி யாவும்,
மாய்ந்திடவே சேர்ந்துசிறை சென்ற தாலே,
தாய்மொழியைக் காப்பதற்குச் சிறைசென் றோரின்
சரித்திரத்தில் முதலிடத்தைத் தமிழர் பெற்றார்!

## மேலும் ஆரிய சூழ்ச்சி

"அருநோக்கம் பாழாச்சே! என்று நைந்தே
ஆரியர்கள் மேலுமதைப் புகுத்த எண்ணிப்
பெருமுயற்சி செய்கின்றார்! தேசீ யத்தின்
பேர் சொல்லி இந்தியினைப் போற்று கின்றார்!
உரம்பெற்ற நற்றமிழர்க் கிதனால் நேரும்
உற்பாதந் தனையறிந்த பெரியார் தாமும்,
புரிநூலார் ஆதிக்கம் இங்கில் லாமல்
போக்கிடவே 'தமிழ்நாடு தமிழர்க்'' கென்றார்.

இந்த ஒரு முடிவதனை ஆரியர்கள்
"எலிவளைகள் எலிகளுக்கே" என்று சொல்லிச்
சிந்தையினில் அகங்கொண்டு கேலி செய்தும்,
"சித்ரவதை செய்வதுவோ தாயை" என்றும்,
விந்தையுரை கூறியதற் காப்புத் தந்தே
விழிப்புணர்ச்சி யைஎங்கும் ஊட்டி விட்ட
நந்தலைவர் பெரியாரின் கருத்தை இங்கு
நவின்றிடுவேன் குறைபொறுத்துக் குணங்கொள்வீரே!

# தமிழ்நாடு தமிழருக்கே!

## *பெரியார் பேச்சின் கருத்து*

(எண்சீர் விருத்தம்)

என்னருமைத் தமிழர்களே, வணக்கம்! நாமே
இந்நாட்டில் இழிநிலைமை ஏற்ற தாலே,
அன்னியரோ மிகவிழித்துக் கூறு கின்றார்!
அனுதாபங் காட்டுகின்றார் ஓநாய் போல!
முன்னுற்ற தமிழர்களின் வீர வாழ்வை
மூச்சுவிடாப் பேச்சினிலே பேசு கின்றோம்!
இன்றுள்ள நம்நிலையை – இழிவைப் போக்க
ஏதொன்றுஞ் செய்யாமல் இருக்கின் றோமே!

## *பார்ப்பனரின் ஏகபோக வாழ்வு*

ஆரியர்கள், தமிழர்தலை எடுக்கா வண்ணம்
அடிமைதனி லாழ்த்திடவே சூழ்ச்சி செய்து,
வீரத்தை – மானத்தை – அறிவை – வாழ்வை
வேதமத சாத்திரத்தின் துணையால் போக்கி,
ஈரமற்று நம்உழைப்பை உறிஞ்சி யுண்டும்
இழிவுரையாம் சூத்திரன் என் றுரைத்தும், இந்தப்
பாரிலுழை யாவண்ணம் சுகபோ கத்தைப்
பன்னாளாய் அனுபவித்தே வருகின் றார்கள்!

## *சூத்திரப் பட்டம்*

சூத்திரன் என்றுரைத்திட்டால், வேசி மைந்தன் –
தோல்வியுற்றோன் – கண்டவற்றைப் புசிப்போன் – மிக்க
தீத்தொழிலைச் செய்திடுவோன் – மானம் விட்டோன் –
சிறுமதியோன் என்றெல்லாம் பொருள்சொல் கின்றார்!
ஆத்திரமோ வருவதிலை இதனைக் கேட்டும்!
அகங்கார ஆரியர்கள் நம்மை நோக்கிச்
'சூத்திரன்' என் றழைத்திட்டால், 'சாமி' என்று
சொல்லுகின்றோம் தன்மதிப்புச் சிறிது மின்றி!

## தன்மதிப் பிழந்தோம்

அன்னவரின் சூழ்ச்சிக்கே அடிமைப் பட்ட
அந்நாள்தொட் டின்றுவரை, சர்க்கஸ் காரன்
சொன்னபடி ஆடுகின்ற மிருகம் போலத்
தூயஉணர் வதையிழந்தும் அறிவி ழந்தும்,
பன்னரிய தன்மதிப்பை மறந்தும், அன்னார்
பகிர்கின்ற மோட்சத்தை நம்பி நம்பி,
இன்னலுறும் வாழ்வதனை ஏற்று விட்டோம்;
இவ்வுலகோர் இகழ்கின்ற ஈனம் பெற்றோம்!

## நமது மூடநம்பிக்கை

சிறந்தொரு வாழ்வின்பம் காண வெண்ணிச்
செய்கின்ற திருமணத்தில் தமிழ்தா னுண்டா?
இறந்தவருக் கிருப்பவர்கள் செய் சடங்கில்
ஏனையபல் சடங்குகளில் பொருள்தா னுண்டோ?
பிறப்பதற்கு முன்பிருந்தும் இறந்த பின்னும்
பேய்க்குணத்துப் பார்ப்பனர்கள் சடங்கின் பேரால்
பறிக்கின்றார் நம்பொருளை! மதப்பேர் சொல்லிப்
பகற்கொள்ளை யடிக்கின்றார்! கேட்பா ரில்லை!

பாவமது தீருமென்ற நம்பிக் கையால்
பார்ப்பனரின் கால்கழுவு நீரை யுண்டும்,
ஆவினது சாணத்தை மூர்த்தி ரத்தை
அருந்தியுமே வருகின்றோம்! அன்றித் தீய
மாவழக்கந் தனைஏற்றும் வாழ்வு தன்னில்
வறுமை, துயர் மிகவளிக்கும் சடங்கை ஏற்றும்
தீவினைக்கே ஆளாகி உழலு கின்றோம்!
சீர்த்தமிழர் என்பதையே மறந்தோம் அந்தோ!

## நமது மோசமான நிலை

மானமற்று வாழ்கின்றோம்; உணர்ச்சி யின்றி
மரக்கட்டை மாதிரியாய் விளங்கு கின்றோம்!
ஈனநிலை தீர்ப்பதற்கோ முயல்வ தில்லை!
யாவுமவன் செயலென்றே கூறு கின்றோம்!

கானிலுறும் மிருகத்தின் கீழே யாகிக்
கடைத்தேறும் வழியினையும் மறந்தோம்! மேன்மை
ஆனசுய ராஜ்ஜியந்தான் கிடைத்தா லும், நம்
அடிமைநிலை மிடிமைநிலை தீர்வ தாமோ!

### *எதற்கும் பார்ப்பனரா?*

மாசுடைய பேதங்கள் போக்கு தற்கும்,
வறுமைநிலை தீர்ப்பதற்கும், அடிமை ஏகத்
தேசத்தை மீட்பதற்கும் தமிழ ரானோர்
திறனற்றா கிடக்கின்றார்? எதற்கும் அந்த
நாசகுணப் பார்ப்பனரை நம்பி நம்பி
நம்கதியை அவர்களிடம் ஒப்படைத்தல்,
ஆசையுடன் உய்வதற்குக் கசாப்புக் காரன்
அருள்நோக்கும் ஆடுகள்போ லாகு மன்றோ?

### *பார்ப்பனர் சுயராஜ்யம் கேட்பது தமிழர்களை அடக்கியாளவே!*

பார்ப்பனர்க்குச் சுயராஜ்யம் எதற்கு வேண்டும்?
படிப்பின்றிப் பதவியின்றி நலிகின் றாரா?
ஊர்மக்கள் தேட்டத்தை உறிஞ்சி யுண்டும்
உயர்பதவி உத்யோகம் மிகவே கொண்டும்,
சீர்பெற்று வாழுகின்றார்! அவர்கள் இன்று
சேர்ந்தொன்றாய்ச் சுயராஜ்யம் கேட்ப தெல்லாம்,
ஆர்ந்தபுகழ்த் தமிழர்களை அடக்கி ஆள
அதிகாரங் கேட்பதன்றி வேறே என்ன?

### *பார்ப்பனரை நம்பியது போதும்*

ஆரியரை இதுநாளாய் நம்பி வந்தோம்;
அவருயர்ந்தார் நம்மையெல்லாம் ஏணி யாக்கி,
சீரிழந்த நம்வாழ்வில், நிலையில், மாற்றம்
சிறிதேனும் நேரவில்லை உழைத்தோம் வீணே!
ஊரறிய நாடறிய உலக மெங்கும்
உள்ளவர்கள் தாமறிய இந்த நாட்டை,
வீரமுடன் சீராட்சி செய்த நாமே
விளங்குகின்றோம் செல்லாத காசாய் இன்றே!

## வெள்ளையரை நம்புவதும் வீண்

இருநூறு வருடமதாய் நம்மை யாளும்
வெள்ளையர்க்கும் நம்மீதில் இரக்க மில்லை!
புரிநூலார் வார்த்தையெனிற் பொன்னே போலப்
போற்றிநலஞ் செய்கின்றார்! மேலும் அன்னார்
இருநூறு வருடத்தின் ஆட்சி, நூற்றுக்
கேழ்வீதம் நம்மவர்க்குப் படிப்பளித்தே
ஒரு நூற்றுக் கொரு நூறும் பார்ப்பார் கற்க
உதவிற்றென்றால் அவர்க்கே யார்மீ தன்பு?

காலமெல்லாம் நன்றிசெய்தோம்; அதனைக் கொன்று
கடுந்துயரில் ஆழ்த்துகின்றார் நம்மை மேலும்!
மேலான நிலைஎண்ணிப் பாடு பட்டால்
மிரளுகின்றார் உயர்பதவி தருவ தில்லை!
ஞாலமெல்லாம் நமைச்சிரிக்க, உயர்வு நீங்கி
நாயினுங்கீழ் நிலையடைந்த நமது வாழ்வை,
மேலுநிலைத் திடவைக்க முயல்வ தன்றி
மீட்சிபெற நமக்குதவி செய்த துண்டா?

செஞ்சொலுடைத் தமிழ்மக்கள் ஏற்றங் கொண்டால்
தீங்காகும் நமக் கென்றே அஞ்சி, அன்னார்,
வஞ்சகராம் ஆரியர்கள் வலிந்து தந்த
மனுதர்ம வாட்சியதன் பலனைக் கண்டே,
நெஞ்சார அவ்வதர்ம ஆட்சி தன்னை
நிலைநிறுத்திக் காக்கின்றார் சமுகந் தன்னில்!
விஞ்சுபுகழ்த் தமிழர்க்கு நேர்ந்த துன்பம்
வெள்ளையரால் தீருமெனில், மோசம் போவோம்!

## நமது ஏமாற்றம்

பார்ப்பனர்க்குச் சமுகத்தில் அடிமை யானோம்!
பாராளும் ஆங்கிலர்க்கும் அடிமைப் பட்டோம்!
தீர்ப்பதெங்கே நாம்கொண்ட அடிமை தன்னை?
தேசபக்தி கொண்டதனால் பயனென் கண்டோம்?

ஏய்க்கின்றார் நம்மையெல்லாம் பகைவ ரானோர்!
இம்மியள வேனுமிதை யுணர்வ தின்றிப்,
பார்க்கின்றீர் சுயராஜ்யம் பூத்துக் காய்த்துப்
பழுத்திங்கே ஓடிவரும் என்று நீங்கள்!

## *தமிழ்நாடு பிரியவேண்டியதன் அவசியம்*

தமிழ்நாடு தமிழர்க்கே யாகா முன்னம்
தன்மதிப்புப் பெறமாட்டோம்; இழிவும் நீங்கா!
தமிழ்நாடு தமிழர்க்கே யாகா விட்டால்,
தன்னரசாற் பயனில்லை! வெளியார் வந்து
தமிழ்நாட்டைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கும்
சக்திபெற மாட்டோம் நாம்! வறுமை மிக்குத்
தமிழ்மக்கள் பிறநாடு செல்வ தையும்
தடுத்திடவே முடியாதே! இதனா லன்றோ,

'தமிழ்நாடு தமிழர்க்கே வேண்டும்' என்றேன்;
தாயைவெட்ட முனைந்து விட்டார் என்று கூறி
தமிழர்க்கும் ஆத்திரத்தை யூட்டும் வண்ணம்
தகுமுயற்சி செய்கின்றார் ஆரி யர்கள்!
அமைந்துள்ள சமஸ்தானம், இலங்கை, பர்மா,
ஆனடச்சுப், பிரஞ்சிந்தியா பிரிந்து நிற்கத்,
தமிழ்நாடு பிரிவதனால் மட்டும் அந்தத்
தாய்வெட்டப் படுவளெனில், பொருள்தா னுண்டா?

## *தமிழ்நாடு என்றும் தனிநாடே*

என்றென்றும் தமிழ்நாடு தனிநா டாக
இருந்ததற்குச் சரித்திரங்கள் சான்று கூறும்!
பின்வந்த வெள்ளையர்கள் வடநாட் டோடு
பிணைத்துவிட்டே ஒருநாடாய் ஆளுகின்றார்.
அன்னதொரு கூட்டுறவால் நமது நாட்டில்
அடிமைநிலை வறுமைநிலை ஓங்கு தென்றால்,
என்னவிதம் முன்னேற்றம் அடைவ தோநாம்?
என்நாட்டுத் தமிழர்களே சிந்திப் பீர்நீர்!

### பிறநாட்டில் தமிழர் நிலை

பிழைப்பதற்கே வழியின்றி நமது மக்கள்
பிறநாடு செல்கின்றார் மறந்திந் நாட்டை!
உழைப்பதனால் உணவருந்து கின்றா ரேனும்,
உரிமையின்றிச் சமத்துவமாய் நடத்த லின்றிப்
பழிப்புக்கே ஆளாகி வாழு கின்றார்!
பழம்பெருமை வாய்ந்தவர்கள் மானம் போகப்
பிழைக்கின்றார் பிறநாட்டில் என்றால், இங்குப்
பெருஞ்செல்வ விளைநிலங்கள் அழிந்தா போச்சு?

### வடநாட்டார் கொள்ளை

வடநாட்டுக் குஜராத்தி முல்தான் மார்கள்
மார்வாடி முதலியவர் இங்கு வந்தே
முடமாக்கி நம்நாட்டு வாணி கத்தை,
முன்னேற்றத் துறையினில் தம் வியாபா ரத்தைத்
திடமாக்கிப், பெரும்பொருளைக் கொள்ளை கொண்டு
செல்கின்றார்! காங்கிரசும் காந்தி யாரும்,
வடநாட்டார் கொள்ளைக்குச் சலுகை தந்தே
வளர்க்கின்றார் நம்நாட்டில் வறுமை தன்னை!

“வெள்ளையர்கள் இந்நாட்டைச் சந்தை யாக்கி
வியாபாரங் காரணமாய்ப் பொருளை யெல்லாம்
கொள்ளைகொண்டு போகின்றார்! ஐயோ இந்தக்
கொடுமைகள்தாம் எங்கடுக்கும்?” என்று சொல்லும்
குள்ளநரிக் கூட்டத்துத் தேசி யத்தார்
குருடாகி விட்டனரோ? தமிழர் நாட்டில்
கொள்ளைகொள்ளும் வடநாட்டார் ஆதிக் கத்தைக்
கூடாதென்றால், தேசத் துரோக மாமோ?

### பிரிவினை எதிர்ப்போர் பேதைமை

முன்னேற்றங் காண்பதற்குத் தமிழ ரெல்லாம்
முனைந்துழைத்தால், பாரதத்தாய் அழுகின் றாளாம்!
பின்னோக்கம் கொண்டிழிவாய் வாழும் போது
பேருவகை கொள்பவர்நம் தாயா வாளோ?

என்னே இச் சிறியமதி! உண்மை என்றே
இதையொத்துக் கொண்டாலும், மைந்தன் என்போன்
பின்வந்த மாற்றாந்தாய் நன்மை எண்ணிப்
பெற்றெடுத்த தாய்மானம் போக்கு வானோ?

### *ஐரோப்பாவைப் பார்க்கட்டும்*

இந்தியநா டியற்கையிலே ஒருநா டாக
இருப்பதனைத் துண்டித்தல் தகுமோ வென்று
சிந்தனையற் றுரைப்பவர்கள் ஐரோப் பாவில்
சிறிதளவு செலுத்தட்டும்! அங்கு வாழ்வோர்,
சொந்தஒரு மதத்தினரா யிருந்துங் கூடச்
சொல்வேறு வர்க்கம்வே றான தாலே,
பந்தமுறும் ஓராட்சி நடத்த லின்றிப்
பல்வேறாய்ப் பிரிந்துயர்ந்து வாழுகின்றார்!

### *இங்கென்ன வாழ்கிறதோ?*

பலவேறு மதங்கொண்டும் மொழிகள் கொண்டும்,
பல்வேறு வர்க்கங்கள் உயர்வு தாழ்வு
பலகொண்டும் இருக்கின்ற இந்தி யாவைப்
பங்கீடு செய்வதனால் குற்ற மென்ன?
"நலனின்றிப் பிளவுபட்டுப் போவார் இந்த
நாட்டினர்கள்" என்றுரைத்தால், இப்போ தென்ன
கலகலென்று வாழ்கிறதோ? பிரிந்தோ ரெல்லாம்
கதியுற்றுக் கீழ்நிலையா பெற்று விட்டார்?

### *தடை செய்வதற்குக் காரணம்*

பிரிந்தவர்கள் முன்னேற்றம் அடைந்தார்; மற்றும்
பிறரஞ்சும் நிலைபெற்றார்! இதனைக் கண்ட,
உரங்கொண்ட தமிழர்களை மதத்தின் பேரால்
உயிருள்ள நடைப்பிணமாய் ஆக்கி வைத்த
கரந்துறையும் அரவன்னார், நமது போக்கைக்
கண்டஞ்சித், 'தமிழ்நாடு பிரிந்து விட்டால்
சிரந்தாழ்ந்து போவோமே! உழையா வாழ்வும்
தீர்ந்திடுமே!' என்றெண்ணித் தடைசெய் கின்றார்!

## நமது கடமை

தன்னரசைத் தமிழ்மக்கள் அடைய வேண்டின்
'தன்கையே தனக்குதவி' என்ப தைப்போல்,
வன்னெஞ்ச ஆரியரின் ஆதிக் கத்தை
மாய்த்திடவே நாம் முதலில் உழைக்க வேண்டும்!
பின்புநமை யாண்டு வரும் வெள்ளையர்கள்
பேசாமல் தன்னாட்சி தந்தே செல்வார்!
இன்னதனை என்நாட்டுத் தமிழ ரேநீர்
இனிதறிந்தே ஒருமுகமாய் உழைக்க வேண்டும்!

பாகத்தைத் தீர்க்காமல் ஒருவன் மட்டும்
பங்காளி சொத்தினது பயனைக் கொண்டால்,
சாகுநிலை வறுமையினால் அடையும் மற்றோர்
சரியென்றே விட்டுக்கொண் டிருப்ப துண்டோ?
ஆகையினால், பகுத்தறிவின் துணையைக் கொண்டே
அவர் கூறும் வார்த்தையினைச் செவிகொளாமல்,
சோகமுறும் நம்துயர வாழ்வு தீரத்
துரிதமுடன் தமிழ்நாட்டின் பிரிவு காண்பீர்!

## தமிழர் எழுச்சி

என்றுரைத்தார் தமிழ்நாட்டின் தலைவ ரான
எம்பெரியார். அந்த உரை தமிழர் கேட்டார்!
நன்றென்றார்! தமிழ்நாடு தமிழர்க் கென்றே
நானிலமும் செவிடுபடக் கூவு கின்றார்!
முன்னேற்றம் விரையுதிதோ! தமிழர் தம்மை
மொய்த்தபகை மாயுதிதோ! மக்க ளெல்லாம்
இன்பமுறும் நல்வாழ்வு காண வேண்டி
எம்பெரியார் செய்தொண்டை இயம்ப லாமோ?

## பெரியார் சிறப்பியல்பு

மக்களிடம் அன்புடையார்; பகைவ ரேனும்,
வன்பின்றி நலன்பேசும் பண்பி னாளர்!
மிக்கஒரு பெருங்குணமும் அறிவும் நல்ல
மேலான அனுபவமும் வாய்க்கப் பெற்றார்!

தக்கவிதம் யோசித்துக் காரி யத்தைச்
சாதிக்கும் தன்மையவர்! செல்வ ரேனும்,
சிக்கனத்தைக் கையாண்டு மக்க ளுக்குச்
சிறந்தவழி காட்டுபவர்! வஞ்ச மில்லார்!

### *பெரியார் சேவைத்திறம்*

தம்மனத்தில் உண்மையெனப் பட்ட தெல்லாம்
தயங்காமல் எடுத்துரைப்பார்! பொய்ம்மை யாயின்,
எம்மதத்தின் கட்டளையா யிருந்த போதும்,
எங்குநிறை கடவுள்வாக் கென்ற போதும்,
செம்மறியாட் டுலகங்கள் எதிர்த்த போதும்
தீவிரமாய் மறுத்துரைப்பார்! மக்கள் வாழ்வு
செம்மை நலம் பெற்றுயர – இன்பம் ஓங்கச்
செய்வதிலே, அஞ்சாமல் தொண்டு செய்வார்!

### *பெரியார் தனிச் சிறப்பு*

உலகினிலே பெரியார்கள் பல்லோர் தோன்றி
ஒவ்வொருநற் றுறையினிலே பாடு பட்டு,
நலம்பலவும் மக்களுக்குச் செய்து வந்தார்!
நம்பெரியார் பகுத்தறிவின் துணையைக் கொண்டே,
உலகத்துப் பெரியாரின் சேவை யாவும்
ஒருமிக்க இந்நாட்டில் தோற்று வித்துச்,
சலியாமல் உடலாவி பொருளைத் தத்தம்
செய்வதனால், தனிச்சிறப்பு மிக்கா ரன்றோ!

### *பெரியார் வாழ்க! அவர் தொண்டு ஓங்குக!*

தமிழ்நாட்டின் மானத்தை மீட்ப தற்குத்
தகுமுயற்சி செய்கின்ற பெரியார் வாழ்க!
தமிழ்நாட்டில் பிறர்கொண்ட ஆதிக் கத்தைக்
தலைகாட்டா தொழிக்கின்ற பெரியார் வாழ்க!
தமிழ்நாட்டை முற்போக்கில் ஆக்கு வித்துச்
சகமதிக்கச் செய்கின்ற பெரியார் வாழ்க!
தமிழ்நாட்டில் சமதர்மம் தழைக்கச் செய்யும்
தனிப்பெரியார் பெருந்தொண்டு நாளும் ஓங்க!

## எனது நண்பர் சிவம்...

விழாவும் நாமும் என்ற தலைப்பில் திருவந்திபுரம் மக்கள் நடத்திய பொங்கல் விழாவில் நான் ஆற்றிய சொற்பொழிவைப் புதுவைச்சிவம் அவர்கள் தமது ஞாயிறு நூற்பதிப்பகத்தின் வாயிலாய் ஒரு புத்தகமாகத் திரட்டி, அதற்கொரு முன்னுரை எழுதும் பணியை எனக்கே பணித்திருக்கிறார்கள்.....

எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் அச்சொற் பொழிவைப் புத்தக உருவாக ஆக்கித்தந்த **எனது நண்பர் சிவம்** அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்குத் தமிழர்கள் நன்றியறிதல் உடையவர்களாக ஆகக்கூடும்.

புதுவைச்சிவம் அவர்கள், இது போலவே பல பெரியோர்களின் முன்னேற்றக் கருத்துக்களையும் அதற்கேற்ற பல விஷயங்களையும் திரட்டித் தமது ஞாயிறு நூற்பதிப்பகத்தின் சார்பில் புத்தக ரூபமாக வெளியிட்டு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

*தந்தை பெரியார்*

*(புதுவைச் சிவம் 1948ல் வெளியிட்ட "விழாவும் நாமும்" என்ற நூலின் சிறப்புரையில்)*

# கைம்மை
# வெறுத்த காரிகை

**1945**

# ஆசிரியர் முன்னுரை

விதவையென்னும் ஓர் கொடுங் கட்டுப்பாடு பழந்தமிழர்களிடையே இருந்ததா என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. ஆனால், சங்க இலக்கியங்களெனக் கருதப்படும் புறநானூறு முதலிய தொகை நூற்களுள், அவ்விதவை நிலை குறிக்கும் செய்யுட்கள் சிலவுள. அவை, பிற்காலப் புலவர்களால் எழுதப்பட்டு, அத் தொகை நூற்களில் இடம் பெற்றன என்பதே அறிஞர் முடிபு.

கணவன் இறந்தபின் மனைவியைக் கைம்மைத் துயரில் ஆழ்த்துவது, ஆரியர் கண்ட முறையாகும். இதை, அவர்தம் நூற்களால் அறியலாம். அவ் ஆரியரின் பழக்க வழக்கங்களைத் தமதாகக்கொண்ட பிற்காலத் தமிழர்கள், அன்புள்ளம் இழந்து, அக் கொடுமையைத் தங்கள் பெண்கள் மீதும் சுமத்திவிட்டனர்.

பூதப்பாண்டியன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு என்பாள், தன் கணவன் இறந்தது கண்டு சகியாது தீப்பாய்ந்தபோது, தடுத்தோர்க் கறிவுறுத்தியதாகவுள்ள புறப்பாட்டான்றின் விளக்கமே இச்சிறு நூல். அப் பாட்டில், கைம்பெண் நிலை கூறப்பட்டிருக்கிறது. அதனை விளக்கிக் காட்டுவதற்காகவே, இதை எழுத முன்வந்தேன்.

இதில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சி, 'உடன் கட்டை ஏற்றுதல்' அல்ல. அது ஆரியரின் மிருகச் செயல். எனினும், உடன்கட்டை ஏறுதலும், அத் தொடர்புபற்றி வந்ததேயாகும். கணவன் இறந்தபின் கைம்மை ஏற்காது, அக்கணவனுடன் இறப்பதே கற்பிற் சிறந்தார்க்கு அழகெனக் கற்பிக்கப் பட்டதன் விளைவாகும்.

காதலால் ஒன்றுபட்டுக் காதல் உரிமையோடு வாழ்பவர்கள், ஒருவரை யிழந்து ஒருவர் வாழ ஒருப்படார் என்பர். ஆனால், இந்த வகையில் கணவனையிழந்த மனைவிமார்களைத்தான் காண முடிகிறதே யன்றி மனைவியை யிழந்த கணவன்மார்களைக் காணமுடிவதில்லை. இதற்குக் காரணம் என்ன? மனைவியை யிழந்த கணவனுக்கு, வைதவ்யக் கட்டுப்பாடு இல்லை. அவன் தன் இஷ்டம்போல வேறொரு பெண்ணை மணந்து, முன்னைய சுகத்தோடு வாழலாம். ஆனால், கணவனை யிழந்த மனைவியோ, சகல சுகங்களையுமிழந்து, தன் ஆயுட்காலம்வரை அவனையே நினைந்து, கைம்மை நோன்பு மேற்கொள்ள வேண்டும். இத் துன்ப வாழ்வின் சொல்லொணா வேதனையே, பெண்களை இத்தகைய தற்கொலைக்கு ஆளாக்கி விடுகின்றது!

எண்ணற்ற பெண்கள் இதுபோன்று எரி நெருப்பில் வெந்து சாம்பராகியும் - பலவகையில் தற்கொலை புரிந்து வந்தும், இவற்றைக் கண்ட ஆண்களின் உள்ளம் சிறிதும் இளகியதில்லை! அவ்விதவைக் கொடுமையைப் போக்க முயன்றதில்லை! அந்த அளவுக்கு, ஆரியம் அவர்களை வன்னஞ்ச முடையவராக - கன்மன முடையவராக ஆக்கிவைத்துவிட்டது! இதனால்தான் அப்பெருங்கோப்பெண்டு, 'கற்றீரேனும் உமக்கு அறிவில்லையே!" எனத், தன்னைத் தடுக்க அப்புலவனை நோக்கிக் கூறியிருக்கிறாள் போலும்!

இவ்விதவைக் கொடுமை நாட்டிலில்லாதிருப்பின்' இத்தகைய துன்ப நிகழ்ச்சிகள் தோன்றுதற் கிடனில்லை. ஆகையால், பெண்கள்மீது இரக்க முள்ளவர்கள் - சீர்திருத்தத்தில் ஆர்வமுடையவர்கள், இக்கொடுங் கட்டுப்பாட்டை உடைத்தெறிய முன் வருவாராக.

இதனை வெளியிட முன்வந்த பூங்கொடிப் பதிப்பகத் தாருக்கு, எனது நன்றி!

புதுவை,
30.5.45

ச. சிவப்பிரகாசம்.

# கைம்மை வெறுத்த காரிகை

பூவுலகில் அறியாமை இருள்சூழ்ந் திட்ட
போழ்தில் தன் அறிவொளியால் பிறநாட்டிற்கே
மேவுகலங் கரைவிளக்கம் போலே வாய்ந்த
மேன்மையுற்ற ஒருதனிநா டிருந்த துண்டு!
மூவரசர் ஆண்டவிடம்; அதுதான் நல்ல
முத்தமிழை வளர்த்தவிடம்! புலமை யார்ந்த
பாவரசர் பலராலும் புகழப் பெற்ற
பல்வளமும் நிறைந்தவிடம்! தமிழர் நாடே!

அந்நாட்டு மூவரசில் ஒருவ ராக
அமைந்தவர்கள் பாண்டியர்கள்! அவர்தம் நாடாம்
எந்நாடும் போற்றுகின்ற பாண்டி நாட்டில்
இனிதான நல்லறங்கள் வளரச் செய்தே,
தந்நலத்தைக் கருதாமல் மக்கள் வாழ்வு
தழைத்தோங்கச் செங்கோல்ந டாத்தி வந்தார்.
செந்தமிழை வளர்த்தவொரு பெருமை யாவும்
சீர்ப் பாண்டி யர்க்கன்றி மற்றோர்க் குண்டோ!

அவ்வழியில் வந்திட்ட மன்னன், நல்ல
அருந்தமிழிற் புலமையுளோன்; உணர்வு மிக்கோன்
தெவ்வரெலாம் அஞ்சுகின்ற வீரம் பெற்றோன்;
சீரியநற் குணமுடையோன்; மக்கள் வாழ்வில்
வெவ்வியதோர் துன்பத்தை வீழ்த்த வந்த
மேன்மையுறு பூதப்பாண் டியனென் பேரோன்
செவ்வியுடன் அவனாண்டான் பாண்டி நாட்டைச்
சீர்த்தமிழும் வளவாழ்வும் ஓங்கும் வண்ணம்!

அம்மன்னன் வாழ்வினுக்குத் துணையாய் வந்தோள்,
அருங்கலையில் தேர்ந்திட்ட புலமை சான்றோள்!
செம்மொழியாம் தனித்தமிழை ஆய்ந்து மக்கள்
செவிப் புலத்திற் கினியதொரு விருந்து செய்வோள்!
அம்புவியிற் காதல்வாழ் விலக்க ணத்திற்
கிலக்கியமா யமைந்திட்டோள்! எழில் மிகுந்த
பைம்பொன்னை நிகர்க்கின்ற மேனி கொண்டோள்!
பகர்பெருங்கோப் பெண்டென்ற பெயரைப் பூண்டோள்!

தன்காதற் கணவனுடன் பெருங்கோப் பெண்டு
தணியாத அன்புடனே வாழ்ந்து வந்தாள்!
மன்பூதப் பாண்டியனும் அன்னாள் மட்டில்
வரையற்ற காதல்கொண் டொழுகி வந்தான்!
பொன்னாரும் உடலுயிரே போலும்—அன்றிற்
புட்போலும் இவ்விருவர் பிரித லின்றி,
ஒன்னாரும் மதிக்கின்ற வாழ்வு பெற்றார்
எனிலவரின் உயர்குணத்தை உரைப்ப துண்டோ?

பாண்டியனின் அவைக்களத்துப் புலவ ரான
பகர்மதுரைப் பேரால வாயார் என்னும்
மாண்புடையார், அரசிளழிற் பெருங்கோப் பெண்டின்
மனநிலையை வகைப்படுத்திக் கூறுங்காலை,
சேண்மிக்க மன்னவனைப் பிரித லாற்றார்!
சிலநிமிடம் பிரிந்திடினும் தனது மேனி
வீண்படுதல் கண்டஞ்சிச் சோர்வார்! என்று
விளம்புவதால் அவள் மேன்மை விளங்குமன்றோ?

ஒருசமயம் போருக்குச் செல்லுங் காலை,
'ஒன்னலரைப் புறங்காணே னாயின், இந்தத்
திருவிழியாள் தனைப்பிரிவேன்' என்று மன்னன்
சீற்றமொடு வஞ்சினமே சொன்னான் என்றால்,
பிரியாத அவருளமும், பிரிந்தால் வாழ்வு
பேணாத அவர் நிலையும் விளங்கு தற்குக்
கரியாகு மன்றோ அச் சொல்தான்? அன்னார்
கருத்தொருமை காணுதற்கு வேறென் வேண்டும்?

சரியொத்த கல்வியும், நல் அறிவும் பெற்றுச்
சந்ததமும் செவிக்கினிய விருந்தை யுண்டு,
வருபுலவர் மகிழ்ந்திடப் பொற் பரிச ளித்து
வளம்பெற்ற தனித்தமிழை வளர்த்து, நல்ல
திருவிளைத்து நாட்டினிலே ஏழ்மை போக்கிச்
சீர்வாழ்வின் இன்பத்தைச் சமமாய்ப் பெற்றே
உரிமையுடன் வாழ்ந்திட்டார் வாழ்வினுக்கே
உயர்வழியைக் காட்டிட முன் வந்த அன்னார்!

இந்தவிதம் இவ்விருவர் வாழுங் காலை
இயல்பறியாக் காலமெனுங் கூற்று வன்தான்,
சிந்தையினிற் பொறாமையுற்றே என்ன வோ அத்
திறல் வாய்ந்த மன்னவனின் ஆவிதன்னை
அந்தமுறும் அவர்மனைவி யறியா வண்ணம்
அநியாய மாய்க்கவர்ந்து சென்று விட்டான்!
வந்தவிருள் தனைவிலக்கும் விளைக்க னையான்
மாண்டதற்கு வருத்தாத மாந்த ருண்டோ?

ஒருபுலவன் தனையிழந்தோம் என்றுசொல்லி
உயர்புலவர் தாமழுதார்! நாட்டு மக்கள்,
திருவிளைத்துச் செங்கோலால் மகிழ்ச்சி தந்த
சீர்மன்னன் தனையிழந்தோம் என்று நொந்தார்!
சரியொத்த துணையரசை இழந்தோ மென்று,
தமிழ்மன்னர் மற்றிருவர் அழுதார்! இந்த
இருநிலத்தில் வாழ்கின்ற மக்க ளெல்லாம்
இணைபிரியார் பிரிவெண்ணி இரங்க லுற்றார்!

வாழ்வினிலே இன்பத்தைப் பகிர்ந்த ளித்தும்
வளம்பெற்ற தனித்தமிழால் விருந்தளித்தும்
சூழ்வுடைய துயரொன்றும் அணுகா வண்ணம்
சுதந்தரத்தை யளித்திட்ட காதல் மன்னன்,
ஆழ்வுற்றான் என அறிந்த பெருங்கோப் பெண்டோ
அங்கமெலாம் நடுநடுங்க உளந்து டிக்க,
வீழ்வுற்றான் மேல்விழுந்தே 'ஐயோ என்னை
விடுத்தாயோ, என்றலறிப் புலம்ப லுற்றாள்!

கண்மலையும் கரைந்துருகும்! கடுவி ஷங்கொள்
    கரும் பாம்பும் நெஞ்சிளகும்! இரக்க மற்ற
வன்னெஞ்சக் கொலையுளமும் இரங்கும் அந்த
    வஞ்சிபெருங் கோப்பெண்டின் அழுகை கண்டு!
நன்மொழியால் இதஞ்செய்து நாளும் வாழ்வில்
    நலன்விளைத்த உயிரனையான் இறந்த போது,
மென்மொழியாள் உளநிலையை உரைப்பப துண்டோ?
    மெய்சோர்ந்தாள்! உணர்வற்றுத் தரைமேல் வீழ்ந்தாள்!

இறந்தார்க்குச் செய்கடனை முடிக்க வெண்ணி
    இதுசமயம் முனைந்துவிட்டார் உறவோர் மற்றோர்!
திறல்வேந்தன் உடலத்தைப் பல்லக் கேற்றிச்
    செய்கின்ற மாரியாதை யாவுஞ் செய்து
புறப்பட்டார் சுடுகாடு நோக்கி! மக்கள்
    புலன்மாற்றும் பிணப்பறைகள் முழக்கஞ் செய்ய
இறந்தாரின் இறுதியிடம் நாடிப் பின்னர்
    ஈமத்தீ மூட்டிவிட்டார் வேந்த னுக்கே!

முடிசூடி உலகாண்ட மன்ன ரேனும்
    முடிவிலொரு பிடிசாம்ப லாவார் என்ற
படியோதும் பழமொழியின் படியே யிங்குப்
    பாண்டியனின் சீருடலும் வேகா நிற்க,
துடிதுடித்துக் கீழ்வீழ்ந்த பெருங்கோப் பெண்டோ
    சுயவுணர்வு வரப்பெற்றுப் புலம்பி யாங்குத்
தடவரைத்தோள் நாதனையே காணா ளாகித்
    தலைமீதும் முகத்தினிலும் அறைந்து கொண்டாள்!

அந்தோ என் மன்னவனே! என்னை நீங்க
    ஆற்றாது வாழ்ந்தனையே! இன்றோ என்றன்
சிந்தைமிகத் துடிதுடிக்க உளம்வ ருந்தச்
    செய்தென்னைப் பிரிந்தனையே! புலமை மிக்க
செந்திருவே உனை என்று காண்பேன்? ஐயோ
    சீர்வாழ்வு சிதைந்ததுவே என்ன செய்வேன்!
வெந்தழலில் உன்தேகம் வேக, இங்கு
    மென்மலர்போல் என்தேகம் விளங்க லாமோ?

தந்தையினை இழந்திடலாம்; தாயை மற்றும்
சகோதரரை யிழந்திடலாம்; வருந்திப் பெற்ற
மைந்தர்களை யிழந்திடலாம்; உறவாய் வந்த
மற்றவரை யிழந்திடலாம்; உவமை யுண்டு!
சொந்தமெனக் கைப்பிடித்த கணவன் தன்னைத்
துறந்திட்டால் மற்றொருவர் தம்மைக் காட்டி
அந்தவிதம் முறைசொல்ல முடிவ துண்டோ?
ஆருயிரே, என்துயர்க்கோர் எல்லை யுண்டோ?

அன்புடையார் தமைப்பிரித்து வாழும் வாழ்வின்
அழல்புகுதல் நன்றென்பர் அறிஞர். மிக்க
துன்புடைய வைதவ்யக் கடலில் வீழ்ந்து
துடித்திடுதல் நான்சகியேன்! என்னை நாளும்
இன்புறுத்தி மகிழ்வித்த ஏந்தால், நின்னை
இழந்ததன்பின் இவ்வுலகம் இனிப்ப துண்டோ?
அன்புடையாய், உனைப்பிரிந்து வாழேன்; வெய்ய
அழற்றீக்கே என்னுடலை அர்ப்ப ணிப்பேன்!

எனச்சொல்லி எழுந்திருந்தாள்; ஆவே சத்தால்
இம்மென்னும் நேரத்தில் ஈமஞ் சென்றாள்!
மனம்வெருண்டார் ஆங்குள்ளோர்; பெருங்கோப் பெண்டின்
மனநிலையை அறிந்துமிகத் துயரி லாழ்ந்தார்!
இனிச்சும்மா இருப்பதுவோ என்றே எண்ணி
எழிற்புலவர் மதுரைப்பே ரால வாயார்,
தனித் தமிழில் உயர்புலமை கொண்ட அந்தத்
தையல்முன் விரைந்தோடிச் சென்று ரைப்பார்.

“அரசரையாம் இழந்ததனாற் கண்ணி ழந்த
அபலையைப்போல் ஆற்றெண்ணாத் துயரி லாழ்ந்தோம்!
சிரமற்ற உடலம்போல் பாண்டி நாடு
சீர்த்தலைமை இழந்திட்ட இந்நே ரத்தில்,
உரம்பெற்ற தமிழனையாய், நீயும் மாள
உறுதிகொளல் சரியாமோ? புலமையாலே
இருள்நீக்கி வாழவைப்போர் யாரே சொல்லாய்?
எம்முறையை மதித்துமனந் தணிக” என்றார்.

அவ்வார்த்தை கேட்டவுடன், பெருங்கோப் பெண்டின்
அங்கமெலாம் கோபத்தீ எழஉ ரைப்பாள்;
வெவ்வியதோர் மொழிபுகன்றீர்! கற்றீரேனும்
வெள்ளறிவைக் காட்டிவிட்டீர்! என்றன் உள்ளச்
செவ்வியறிந் தெனைமேலும் ஊக்கி டாமல்
தீப்புகுதல் தீதென்றீர்! உயிர்பிரிந்த
இவ்வுடலம் இனி எதற்கு? மதியி ழந்தே
இப்படியும் உரைத்திடுதல் புலமை யாமோ?

உலகத்தில் உழல்கின்ற கொடுமை யாவும்
ஒருருவாய்த் திரண்டதெனில், அதுதான் மாதர்
நலனழித்துச் சீரழிக்கும் விதவை யென்னும்
நஞ்சன்றி வேறுண்டோ? அதனை யுண்டோர்,
பலர்பழிக்கும் ஆளாகா திருப்ப துண்டோ?
பல்சுவையூண் உடையுண்டோ? அணிக ளுண்டோ?
தலைசீவி முடிப்பதுண்டோ? திலக முண்டோ?
சாற்றிடுநற் சுகவாழ்வு பெறுவ துண்டோ?

நாளுக்கோர் வேளையெனப் பழஞ்சோற் றோடு
நறுநெய்யு மில்லாமல் வெள்ளெள் சேர்த்த
வேளைக்கீ ரையதனில் புளியை விட்டு
வேகவைத்த வலுவழிக்கும் உணவை யுண்டு,
வாளியைப்போல் தைத்துமிக வருத்து கின்ற
மணற்படுக்கை யின்மீது பாயுமின்றி,
நாளெல்லாம் துயர்க்கடலில் ஆழ்ந்து துஞ்சும்
நங்கையரென் றெனையெண்ணி விட்டீ ரோநீர்?

பெருவிறகை யடுக்கிமிகு தீயை மூட்டும்
பிணப்படுக்கை நுமக்கெல்லாம் அரிதே யாகும்!
திருவனையான் உயிரனையான் மாய்ந்த பின்னர்ச்
சீரிழக்கும் எனக்கோ இவ் வீமத் தீயும்,
அரும்பலர்ந்த தாமரைசேர் குளிர்நீர் கொண்ட
ஆழ்குளமும் ஒன்றாகும்! என்று சொல்லி
எரியோங்கும் ஈமத்திற் பாய்ந்தாள் அந்த
எழிலுருவாய் வந்திட்ட பெருங்கோப் பெண்டு!

திடுக்கிட்டார் ஆங்குள்ளோர் தடுப்ப தற்குள்
தீக்குளித்த அரசியவள் வீரங் கண்டு!
நடுக்குற்றார் அறிவார்ந்த புலவர் தம்மை
நாமிழக்க நேர்ந்ததையோ என்று சொல்லி,
விடுத்திட்டார் கண்ணீரை வெள்ளம் போலே!
வியப்புற்றார் தமிழ்க்காதல் வன்மை எண்ணி!
படப்பிடிப்பாம் அந்நிகழ்ச்சி தனைவி ளக்கும்
பாவதனை ஈங்குரைப்பேன் படித்தோர் வீரே!

❁❁❁

"பல்சான்றீரே! பல்சான்றீரே!
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில் வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டா(து)
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தோடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல! எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென, அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"

புறம்-246. (பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
தீப்பாய்வாள் சொல்லியது.)



# மறக்குடி மகளிர்

**1945**

# ஆசிரியர் முன்னுரை

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தோன்றியதிலிருந்து, தமிழர்க்குத் தம் தாய்மொழியாம், தமிழில் உணர்ச்சி பிறந்தது! அதைக் கற்க வேண்டுமென்பதில் ஆர்வம் எழுந்தது! தமிழிற் கலைக ளென்றால், புராணேதிகாசங்கள் தவிர வேறொன்றுமில்லை என்ற எண்ணம் மிகுதியாக நிலைபெற்றிருந்த இந்நாட்டிலே, பெரியார் தொடுத்த அப்போருக்குப் பின்னர்ச், சங்க இலக்கியங்கள் வெளிவந்துலாவின! அவற்றின் கருத்தை மக்களிடம் வளர்க்கப், பலரும் வேலை செய்தனர். அந்த நோக்கத்தோடு அப்பொழுது எழுதப்பட்டதே, "மறக்குடி மகளிர்" என்னும் இச்சிறு நூலாகும்.

இந்நூல், புலவர்க்கு விருந்தன்று. அதற்கு யான் தகுதியுடையேனுமல்லேன். ஆயினும், புலவர்களால், 'தமிழுக்குரியரல்லாத பாமரமக்கள்' எனக் கருதப்படும் தமிழர்கள், பழைய இலக்கியச் செய்யுட்களின் கருத்துக்களை ஒருவாறு உணர்ந்து கொள்வதற்கு, இதுபோன்ற நூல்கள் உதவியாயிருக்கும் என்று கண்டதனாலேயே இதனை எழுத முன் வந்தேன். இதில் மகளிர் வீரம் பற்றிய மூன்று புறநானூற்றுச் செய்யுட்களை எடுத்து, மூவரசர் நாட்டுப் பெண்களின் வீரமாகக் கதைப்படுத்தி, எளிய நடையில் யாத்துள்ளேன். இச்செய்யுட்கள், உண்மையில் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பனவல்லவாயினும், அக்காலத் தமிழ் மாதரின் வீரப்பண்பு அந்நிலையிலிருந்த தென்பதைமட்டும், யாரும் மறுத்துவிட முடியாது.

இன்றைய தமிழ்நாட்டுப் பெண்களின் வீரம், வியப்பக் குரியது! இது அவர்கள் குற்றமன்று. புராணேதிகாசக் கற்பனைக் கதைகளும், மனுமுதலிய அதர்ம சாத்திரங்களும், அஞ்சாநெஞ்சங் கொண்ட மறக்குடி மகளிர்களை அடுப்பங்கரையில் ஒடுக்கி வைத்துவிட்டன! இக்கொடிய நிலைமாற-சமத்துவ உரிமையோங்க-தமிழர் சமுதாயத்தின் மானம் மீட்சியடைய-இன்றைய தமிழ்ப் பெண்கள் முன்வந்துழைக்க வேண்டும். மறக்குடி மகளிரின் வழிவந்தவர்கள், நாட்டு நிலையில் நாட்டமின்றிருப்பது ஞாயமாகாது. அவர்கள் துணிவுக்கு இச்சிறு நூல் ஓர் வழிகாட்டியாக இருக்குமானால் அதுவே இந்நூற் பயனுமாகும்.

வெளியிட முடியாத விலையுயர்வு மிக்குள்ள இக்காலத்தே, இதனை வெளியிட முன்வந்த 'தொழிலாளர் மித்திரன்' நிர்வாகத்தினருக்கு, எனது நன்றியுரியதாகுக. இதனைத் தமிழர்களும், சிறப்பாகத் தமிழ் மாதரும் ஆதரித்து, இதுபோன்ற பல நூற்கள் வெளிவர ஊக்குவிப்பாராக.

இறுதியாக, என்னை இந்நிலைக்கு ஆளாக்கி வைத்த கவிஞர் கனக-சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்கட்கு, என் உள்மார்ந்த வணக்கம் உரியதாகுக!

17-7-45
புதுச்சேரி

இங்ஙனம்
ச. சிவப்பிரகாசம்.

# மறக்குடி மகளிர்

## I

### படைக்குப் பிந்திய பதரோ என் மகன்?

செந்நெல் விளையும் நிலவளனும் சீர்சால் செங்கோல் வளநலனும்
இந்த உலகின் புகழுரையும் இன்ப வாழ்வும் போட்டியினால்,
முந்திச் செல்லும் இயல்புடைய மும்மைத் தமிழும் போற்றுகின்ற
விந்தைச் சோழ நன்னாட்டில் மேவுங் குடியுள் ஓர்குடியில்,

மீனின் பக்க முள்ளினையும் விளங்குந் தாழை நாரினையும்
மானும் நரைத்த கூந்தலினாள் வாய்ந்த என்புந் தோலுடையாள்
ஆண் மைந்தன் ஒருவனையே அன்றி மற்றே ரில்லாதாள்
மான முடையாள் ஓர் கிழவி வாழ்ந்து வந்தாள். ஓர் நாளில்,

மாற்றார் முரசங் கேட்டிடவே மனங்கொ தித்த சோழமன்னன்
சீற்றமிக்க தன்படையைச் செலுத்தித் தானும் களம்புகுந்தான்!
கூற்றத் தொழிலை மேற்கொண்ட கொடியோர் வரவை மூதாட்டி
ஆற்றா ளாகித் தன்மகனை அடுபோர்க் களத்திற் கனுப்பிவைத்தாள்!

படைக ளன்றி மற்றோரும் படுக ளத்தை நாடிவிட்டார்!
நடுங்க வைக்கும் போர்காண நாட்டின் எல்லை தனைநாடி,
மடவார் முதியோர் சிறுவர்முதல் மற்றும் பலருங் கூடிவிட்டார்.
கொடிய வெம்போர்க் கொடுமையினைக் கூறுதற்கும் முடிவதுண்டோ!

மலையும் மலையும் மோதுவபோல் மலையும் யானைப் படையோர்பால்!
நிலையி னில்லாச் சுழன்றோடி நேரும் எதிரி மனமுறியக்
குலைய வைத்தே வீழ்த்துகின்ற குதிரைப் படையின்போரொருபால்!
சிலைவேற் றானைப் போரொருபால்! தேர்ப்படையின் போரொருபால்!

இன்ன வண்ணம் முறை முறையே எதிர்த்து மோதிப் பொருவதனால்,
வன்னத் தேர்மா யானையுடன் வாய்ந்த வீரப் படையினரும்
சின்னா பின்னப் பட்டுடலம் சிதைந்துங் கிழிந்தும் அறுபட்டும்
மன்னா வாழ்வை வெளிப்படுத்தி மாய்ந்தார் கோடி இருபுறமும்!

எல்லைப் புறத்தில் நின்றிருப்போர் இப்போர்க் கொடுமை கண்டுமிகச்
சொல்ல வொண்ணாத் துயரெய்திச் சோழன் வாழ்க எனவாழ்த்தி,
"நல்ல வீரம் பெற்றிடுக! நம்மைச் சூழ்ந்த பகைவீழ்க!
வெல்க சோழன்!" என்றுரைத்தே மேலும் மேலும் வாழ்த்துரைத்தார்!

அந்த நேரம் ஓர் தூதன் அவரை நாடி ஓடிவந்தான்!
சிந்தை மயங்கி ஆங்குள்ளார் சேதி யறியத் துடிதுடித்தார்!
வந்த தூதன் அன்னவரை வாழ்த்திப் போரின் நிலைசொல்லி,
"இந்த நேரம் உம்முயிரைக் காக்கக் கோட்டை ஏகிடுவீர்!

ஈது மன்னன் ஆணை" என இசைத்த அளவில், ஆங்குள்ளார்
பீதி கொண்டே, புலிகண்ட பிணைக ளென்ன நடுநடுங்கித்
'தீது நமக்கென் நேர்ந்திடுமோ? செய்வ தறியோம் ஐயோ!' வென்
றோதிக் கோட்டை இடம் நாடி ஓடலானார் ஒளிவதற்கே!

## *வேறு*

வீட்டினது வாயிலின்முன் காலை நீட்டி
வீதியிலே வருவோரைப் போர்நி கழ்ச்சி
கேட்டறியும் நோக்கமுடன் அமர்ந்திருந்தாள்
கிழப்பருவம் மேலிட்ட அம்மூ தாட்டி!
பாட்டையிலே, மன நடுங்க உடல்கு லுங்கப்
பருவமுள்ள எழின்மாதர் இருவர் மிக்க
ஓட்டமுடன் ஓடிவரக் கண்ட அன்னாள்
உளமழிய, அவ்விருவர் தம்மை நாடி

"ஏனம்மா இவ்வளவு வேகமாக
இரைத்திடவே ஓடிவரு கின்றீர்? நாட்டின்
சேனைகொண்ட போர்நிலைதான் என்னா யிற்றுச்?
சீக்கிரமா யுரைத்திடுங்கள்!" என்று கேட்டாள்!
"மானமற்ற உன்மைந்தன் போல்வார் சென்றால்,
மன்னனுக்கு வெற்றியுண்டோ? போர்க்க ளத்தில்
ஈனமுடன் புறமுதுகு கொண்டா னென்றே
இயம்புகின்றார்" என்றொருத்தி சொல்ல லானாள்.

"அப்படியா!" என்றுரைத்தாள் அம்மூ தாட்டி;
ஆவேச நிலைகொண்டாள்! பின்னர்ச் சோர்ந்தாள்!
"இப்படியும் என்மைந்தன் மான மின்றி
ஈனநிலை கொண்டானா? கீர்த்தி வாய்ந்த
ஒப்பற்ற என் குடியின் வீரம் இந்நாள்
ஒளியிழந்து குன்றிடவும் ஆச்சா? ஐயோ,
எப்படிநான் உயிர்வாழ்வேன்? இழிசொல் ஏற்க
என்செவியும் இருந்தனவா? தாளே னந்தோ!

முறை முறையாய் என்குடியில் வாழ்ந்து வந்தோர்
மூர்க்கமிகு பகைவரது வலியை வீழ்த்திச்,
சிறப்புடைய அரசர்களால், புலவர் தம்மால்
சீர் சான்ற புகழினையே ஏற்று, நல்ல
மறக்குடியின் மானத்தைக் காத்து வந்தார்!
மைந்தனென என்வயிற்றிற் பிறந்தும் அன்னான்,
இறவாத குலப்புகழை இறக்கச் செய்தான்
எனிலந்த ஈனத்தைச் சகிப்ப துண்டோ?"

என உரைத்தாள் பழிபோக்க உளமே தூண்ட
இல்லிற்குள் விரைந்துசென்றாள்! அதனைக்கண்டே
மனம்வருந்தி இருவரிலே இளையா ளான
வஞ்சி என்பாள் சண்பகமாம் மூத்தாள் நோக்கி,
'நனிகொடிய வார்த்தை சொன்னாய் அக்கா! இந்த
நரைக்கிழவி அதைச்சகியா துள்ளஞ் சோர்ந்து,
மனையகத்தே நுழைந்திட்டாள்! எதற்கோ? என்றன்
மனமிக்க வருந்திடுதே! என்று சொன்னாள்.

'எல்லையினில் வேடிக்கை பார்க்குங் காலை,
இவள் மைந்தன் புறங்கொண்டான் என்றுகேட்ட
சொல்லைத்தான் நான் சொன்னேன்! அதனா லிந்தச்
சுடுகாட்டுப் பிணம்வருந்தும் எனத்தெ ரிந்தால்,
சொல்வேனா அவ்வுரையை? அவளை மிக்க
துயர்க்கடலி லாழ்த்திவிட்டேன் மதியி ழந்தே!
பொல்லாத பாவிநான்!" எனவ ருந்திப்
புகன்றிட்டாள் சண்பகமும். அந்த நேரம்,

சினங்கொண்ட சிங்கம்போல் வாள்கைக் கொண்டு
 தெருவினிலே வந்துநின்றாள் அம்மூ தாட்டி!
மனமருண்டார் அவ்விளையார்! கிழவி தானும்
 மார்புதட்டிக் கூறுகின்றாள்: 'என்றன் மைந்தன்
நனிபேடி செயல்கொண்ட துண்மை யானால்,
 நானவற்குப் பாலூட்டி வளர்த்த இந்தத்
தனந்தன்னை அறுத்தெறிவேன்!' எனச்சூள் சொல்லித்
 தடதடெனப் போர்க்களத்தை நாடிச் சென்றாள்!

இதையறிந்தார் ஆங்குநின்ற இளமான் அன்னார்
 'இக்கிழவி வீரந்தான் என்னோ' என்று,
மதிமருண்டார்! பின்வியந்தார்! அதனா லந்த
 மணமிக்க சண்பகத்தாள், தன்உள் ளத்தில்
புதியதொரு நல்லுணர்வு பூக்கக் கண்டாள்!
 'போதுமடி நம்வீரம்! வஞ்சி, நீதான்
அதிவிரைவாய் வா; நாமும் களத்தைச் சார்ந்தே
 அக்கிழவி நிலை யறிவோம்!' என்ற ழைத்தாள்.

'மன்னனவன் விடுத்திட்ட ஆணை தன்னை
 மறந்தாயோ நீ?' என்றாள் அதற்கவ் வஞ்சி.
'அன்னதனை அறிந்திருந்தும் காடு நோக்கும்
 அக்கிழவி வீரமொடு செல்லும்போது,
மினனுமெழில் இளம்பரும் வாய்ந்த நாமே
 விதிர்விதிர்த்துக் கோழையுளம் பெறுவதுண்டோ?
சொன்ன அந்த மறக்குலத்தில் வந்தோம் என்ற
 துணிவுடனே வருக? என்றாள் சண்ப கந்தான்!

## வேறு

இருவரும் களத்தை நோக்கி ஏகினார் கிழவி பின்னே.
பொருதிடுங் களமஞ் சாது புகுந்தஅந் நரைமூ தாட்டி,
விரைந்துமே கைவாள் தன்னால் வீழ்ந்துள பிணக்கூட் டத்தைப்
புரட்டியே பார்த்து வந்தாள் புதல்வனைக் காணும் நோக்கால்!

முதியவள் செயலைக் கண்ட மொய்புலி யன்னாள் ஓர்வேள்
அதிவிரை வாக வந்தே, 'அம்மணி, ஈதென் செய்கை?
மதிமருள் போர்க்க ளத்தில் வந்ததென்? பகைவர் தம்மால்
சதிவினை நேரக் கூடும் சடுதியிற் செல்வீர்!' என்றான்.

அவ்வுரை கேட்ட அந்த முதியவள், 'அருங்க ளத்தில்
தெவ்வரைக் காண அஞ்சும் சிறுமதி யுடையாள் யானோ?
செவ்விய என்கு டிக்குச் சேய்பழி விளைத்தான் என்ற
வெவ்விய சொல்தா ளாமல் விரைந்துமே வந்தே னிங்கே!

அன்னவன் தன்னைக் கண்டே அலர்மொழி உண்மை யாயின்,
மன்னிய புகழை மாய்த்தோன் வளர்ந்திடக் கோழைப் பாலை
என்முலை தந்து வந்த இழிவினைப் போக்கு தற்கே
மின்னுவேற் களம்பு குந்தேன்' என்றனள் வீரன் சொல்வான்.

'அம்மணி, உங்கள் வீரம் அளவிறந் ததுவாம்! தங்கள்
செம்மணி வயிற்றில் வந்த சேயனார் இருந்த தாலே,
நம்முடை யரசும் வாழ்வும் நாசமா காத வண்ணம்
வெம்மைசேர் கொடிய போரில் வெற்றியை நெருங்க லானோம்!

புறங்கொள வில்லை தங்கள் புதல்வனும்! எதிர் கொண்ட
விறலுடை யானைக் கூட்டம் விலக்கியே யழிக்கும் போழ்தில்,
மறமிகும் ஓர்க ளிற்றால் மகனுடல் கிழிக்கப் பட்டே
இறந்தனன்; இதோஅத் தேகம்!' என்றதைக் காட்டி நின்றான்.

மைந்தனின் உடலங் கண்டாள்! மலர்ந்தது வதனம்! கொண்ட
சிந்தையின் சீற்றம் யாவும் சிதைந்தது! சேயை ஈன்ற
அந்த நற் பொழுதின் மிக்க அளவிலா உவகை கொண்டே,
மைந்தனின் உடலந் தன்னை மார்புறச் சேர்த்துச் சொல்வாள்:

"என் குலக் கொடியே, நீதான் இணையிலா வீரம் பெற்றே
பன்னு நம் மறக்கு டிக்குப் பழுதிலாப் புகழைத் தந்தாய்!
உன்னையான் இழந்த தற்கே உளந்துடிக் கின்றே னேனும்,
மன்னிய புகழை நோக்க மனமுவக் கின்றேன்!" என்றாள்.

வீரன் அவ் வுரையைக் கேட்டே வியந்தனன்! ஆனால் பின்னர்ப்,
“பாரினிற் சோழ நாடு படைத்த நற் பழமைக் கீர்த்தி,
தீரமே மிக்க நல்ல செம்மனப் பெண்டிர் ஊட்டும்
வீரமாம் பாலால் என்றால் வியப்பிதி லுண்டோ?” என்றான்.

அதிர்ந்தன முரசம் அந்த நேரமே! பகைவ ரானோர்
கதியிழந் தேங்கிச் சோழன் காலடி பணிந்தார்! மக்கள்,
குதிகொள்ளும் மகிழ்ச்சி யாலே கூவினார் வெற்றிக் கூச்சல்!
மதி பெறும் சோழ மன்னன் வாழ்கென வாழ்த்துச் சொன்னார்!

அரசவை சென்றார் பின்னர்; அனைவரும் அளவளாவி,
வீரசமே தீர்த்த தற்கு மிகு மகிழ் வெய்த லானார்!
அரியணை மீத மர்ந்தே ஆண்டிடும் வெற்றிச் சோழன்,
பரிசுபட் டங்கள் யாவும் பற்பலர்க் குவந்த ளித்தான்!

புலவர்கள் சோழ மன்னன் புகழினை வளர்த்தார் மேலும்!
நலமிகு வீரம் பெற்ற நரைமுதுக் கிழவி தன்னைக்,
கலைவளர் புலவர்மன்னன்கடுந்திறல் மறவோர் யாரும்
பலபல வாறு போற்றிப் பாங்குடன் வாழ்த்து ரைத்தார்!

கொஞ்சிடு மொழியால் பின்னர்க் குளிர்மதிச் சண்பகந்தான்,
வஞ்சியை நோக்கிச் சொல்வாள், “பாரடி, நமது மன்னன்
விஞ்சிய புகழ்சேர் வெற்றி எய்தினன்! அன்னதற்கே,
வஞ்சியர் வீரப் பாலென் றறிந்தனம்; மறப்பா யோநீ?

அந்த நல் நரைமூ தாட்டி அடைந்திடு வீரம் போலச்
சந்ததம் நாமும் பெற்றுத் தனிப் புக ழெய்த வேண்டும்!
சிந்தையில் அச்சங் கொண்டால் சிறுமையே யடைவோம்! பின்னர்
வெந்துயர் வாழ்வு நேரும்! வீண்பழி நம்மைச் சாரும்!

ஆதலால் நாட்டில் வீரம் அமைந்திட, அறிவில் தேர்ந்தே
தீதிலா வாழ்வு பெற்றுச் சிறந்திட முயல்வோம்! அந்தக்
கோதிலாக் கிழவி வீரம் குறித்திடும் புலவர் பாட்டை,
ஓதுவேன் உனக்கு நானே; உளமதி லிருத்து வாய் நீ!”

என்றவள் சொல்லிக் கொண்டே ஏகினாள் வீடு நோக்கி!
நன்றென வஞ்சி யாளும் நலனுறும் பாட்டைக் கேட்டே,
சென்றனள் உற்சா கத்தால் செண்பகத் தோடே! அந்த
இன்றமிழ்ப் பாடல் சொல்வேன்; இனிதறிந் துயர்வீர் நீரே!

★★★

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற,
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டஎன்
முலையறுத் திடுவென் யான்எனச் சினைஇக்,
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!"

*(புறம் 278. 'காக்கைபாடினியார் நச்செள்ளையார்')*

❄❄❄

## மறக்குடி மகளிர்

## II

*சிங்கமனார் வழிவந்த சிங்கமன்றோ என் சிறுவன்!*

தேனினிய செந்தமிழை மாந்தி மாந்திச்
சீரியநற் கலைவளர்த்தும், மக்கள் வாழ்வு
மேனிலையி லுற்றிடவே அறம்வ ளர்த்தும்
மேலான புகழ்விளைத்தும் வாழ்த்து வந்த
மீனஉருக் கொடியுடைய பாண்டி மன்னர்,
விளங்கியதம் வளநாடாம் பாண்டி நாட்டை
நானிலமும் போற்றிடவே முறைமு றையாய்
நலமுடனே ஆண்டுவந்தார் முற்காலத்தில்!

அவ்வழியில் வந்தவொரு மன்னன் நாட்டில்
அறங்காத்து மக்களது வாழ்வு காத்துச்
செவ்வழியில் செங்கோல்ந டாத்துங் காலைச்
சிறுமதியால் பேராசைப் பகைவ ரானோர்,
வெவ்வியதோர் போர்விளைத்தார்; அதனைக் கண்ட
விறற்பாண்டி வேந்தன்வெஞ் சினமே கொண்டு,
தெவ்வரெலாம் சிதைந்தோடத் தன்ப டையைச்
செலுத்திப்போர்க் களம்புகுந்தான்! அந்த நேரம்,

இருபுறமும் நாற் படையும் அணிவ குத்தே
இணையற்ற வீரமுடன் எதிர்த்துத் தாக்கிப்
பொருகின்ற கொடுந்தொழிலால், வீரர் யானை
புரவியொடு தேரணிகள் சிதைந்தே தத்தம்
உருவழிந்தும், கைகால்கள் துணியப் பெற்றும்,
உடல்பிளந்தும் குடர் வெளியே சரியப் பெற்றும்,
பரிதாபக் கூச்சலுடன் வீழ்ந்து மாயும்
பான்மையினைப் பகர்வதற்கு முடிவ துண்டோ?

இன்னவிதம் முதனாட்போர் பல்லோர் ஆவி
ஏகிடப்பின் இரண்டாநாட் போர்தொ டுத்தார்!
மின்னலுடன் இடிமுழக்கம் போலே வேல்வாள்
வீச்சொளியும் படைமுழக்கும் விளங்க, வெற்றி
மன்னிடவே உயிர்கொடுத்தார் வீரர் பல்லோர்!
மாலையும்போய் மிக்கிருளும் சூழ்ந்த தாலே,
துன்னியஅப் போர்நிறுத்தி மறுநாட் போரின்
சூழ்வெண்ணிப் பாசறையை நாட லுற்றார்!

இவ்விருநாட் போரினிலே மாண்டார் எண்ணி
இரங்கலுற்றார் நாட்டுமக்கள்! அண்ணன் தம்பி
செவ்விமிகு தங்கணவர் தந்தை மற்றும்
சேயுடனே உறவினரை இழந்தோ ரெல்லாம்,
வெவ்வியதோர் துயர்க்கடலி லாழ்ந்தா ரேனும்
வெற்றிஎண்ணி மென்மேலும் ஊக்கங் கொண்டே,
தெவ்வர்களை முறியடிக்க முயன்றார்; அந்தத்
தீரமிக்க ஓர்குடும்ப நிகழ்ச்சி சொல்வேன்.

## வேறு

அஞ்சுகம் என்றோர் நங்கை ஆருயிர்க் கணவ னோடும்,
கொஞ்சிடு மொழிசேர் காதற் குலமக னொருவ னோடும்,
விஞ்சுதம் புகழ்க் குடியில் விளங்குமோர் தமைய னோடும்,
அஞ்சுக வாழ்வு கண்டே அகமிக மகிழ்ந்து வாழ்ந்தாள்!

இவ்விதம் வாழ்ந்த காலை எதிரிகள் பாண்டி நாட்டில்
வெவ்விய போர்தொ டுக்க வேந்தனின் ஆணை யேற்றே,
தெவ்வரை முறிய டிக்கச் சீறியே சென்றார் அந்தக்
கொவ்வைநேர் இதழாள் கொண்ட கொழுநனும் தமைய னுந்தான்!

மிகுத்திடும் வலிமை பெற்றே விளங்கிடும் முதனாட் போரில்,
பகைப்புலம் இரிய யானைப் படைகளைத் தமய னானோன்
தகைத்திடும் போழ்தில் அங்குச் சாந்தனன் என்று கேட்டே,
அகத்துயர் மிகப்பெற் றந்த அஞ்சுகம் துடிக்க லானாள்!

தமயனை யிழந்தே அந்தத் தையலும் வருந்தும் போழ்தில்,
அமைந்ததேள் விடத்தி னோடே அராவிடஞ் சேர்ந்த தொப்பச்,
சமர்பெறும் இரண்டா நாளில் 1 சார்பிலார் கவர்ந்து செல்லும்
2 சுமையுறும் 3 நிரைகாத் தேந்தல் துஞ்சினான் என்னக் கேட்டாள்!

சொல்லுவ துண்டோ அன்னாள் துயரினை வகுத்தே யீங்கு!
நல்லெழில் 4 மஞ்ஞை மீது நலிப்பிடி வேல்பாய்ந் தன்ன,
மெல்லியல் செவியி லந்த வெஞ்சொலும் நுழையா முன்னே
அல்லலுற் றழுங்கி ஆவி சோர்ந்திட அலறி வீழ்ந்தாள்!

காதலாள் உள்ளம் ஒன்றிக் கடிமணம் புரிந்தே இந்நாள்
தீதிலா வாழ்வு தன்னிற் றீஞ்சுவை நுகரும் போழ்தில்,
காதலன் மாய்ந்தா னென்ற கடுவிடச் செய்தி கேட்டால்,
மாதவ ளடையும் துன்பை வழுத்திட முடிவ துண்டோ?

வெற்றியை விளைத்துக் காதல் வீரனும் வருவா னென்றே
நற்றமிழ் அறிந்த அந்த நங்கையும் மகிழ்ந்திருக்க,
உற்ற அப்போரில் நாதன் உயிரிழந் திட்டான் என்றால்
பொற்கொடியாளின் உள்ள நிலையினைப் புகல்வ துண்டோ?

1. பகைவர், 2. தொகுதியான, 3. பசுக்கூட்டம், 4. மயில்.

அலறினாள்! துடித்தாள்! 'என்றன் ஆருயிர் நாதா என்னைக்
கலங்கிட விட்டே நீயும் கடிதினில் மறைந்த தென்னே!
நிலைபெறும் புகழ்க் குடிக்கு நீள்புகழ் விளைக்க எண்ணி
விலையிலா உன்றன் ஆவி விடுத்திடத் துணிந்தாயோநீ?

பலபல எண்ணி இந்தப் பாவியான் மகிழ்ந்தே னையோ!
கலன் நடுக் கடலில் மோதிக் கவிழ்ந்திடும் பான்மை போலக்
குலைவுற என்றன் எண்ணம் கொடுந்துய ரதனில் மூழ்கி
நலனழிந் தேங்கி வாட நங்கையை விடுத்த தென்னே!

வாழ்வினில் இன்பம் வேண்டி மணமது புரிந்தோம்; அந்தோ!
சூழ்ந்திடும் இன்ப வாழ்வில் சுகமது காணும் போது,
வாய்ந்துள பகைவர் சேனை மாய்ந்திட முறிய டித்தே
ஆழ்ந்தனை என்றால் என்றன் ஆருயிர் நிலைப்ப தாமோ?

அகங்களித் திருந்தோம் நல்ல அன்பினில் இன்பங் கண்டோம்!
புகழுடை வாழ்வி லென்றும் புதுமலர் மணமாய் நின்றோம்!
இகழுறும் வாழ்வை நீதான் இன்றெனத் களித்த தென்னே?
சுகமதை யடுத்தே துன்பம் சூழ்வதும் உண்மையாமோ?

அன்றிலின் வாழ்க்கை கண்டோம்; அதன் துணை பிரிந்தாற் போல,
இன்று நான் நாதா உன்னை இழந்துமே தவிக்க லானேன்!
சென்றிடும் உயிரை இன்னும் சுமந்து நான் திரிவ துண்டோ?
அன்புடையாய்! உன் அன்பின் அடிமையை ஏற்றுக் கொள்வாய்!''

எனப் புரண் டழுத நங்கை எழுந்தனள்; உற்றார் மற்றோர்
மனமருண் டுருகி யுள்ளம் மங்கையைத் தேற்று தற்கே
முனைந்தனர்; மேலும் வந்தோர் மொய் குழல் துன்பங் கண்டு,
நனைந்தனர் கண்ணீரால்; பின் நவின்றனர் ஆற்றல் பேச்சு!

பலப்பல சொன்னா ரேனும் பசுங்கிளி யனையாள் துன்பை
விலக்குதல் ஒன்றுங் காணோம்! வெந்துளர் மேலும் ஓங்கிக்
கலக்கிட அவள்ம னத்தைக் கதியிலா நிலையி லுள்ளாள்,
உலைப்படும் அரிசி போல உள்ளமும் வெந்து நொந்தாள்!

வருபவர் வருவார்; வந்து மனத்துயர் உயர்த்திச் செல்வார்!
பெருகிடும் அவள் துன் பத்தைப் பேர்த்திட யாரா லாகும்?
இரவெல்லாம் இன்ன வண்ணம் இருந்தது; பக்கத் தில்லின்
முருகியோ அவள் உள்ளத்தை மாற்றிட முனைந்தாள் மீண்டும்.

"அஞ்சுகம், உன்றன் சோகம் அளவிறந் ததுதான்! ஆனால்,
கொஞ்சமும் உணரா மல்நீ கொடுந்துயர் வழிச்செல் கின்றாய்!
விஞ்சிய புகழ்க்கு டிக்கு விளைந்திடும் கதியை எண்ணித்,
துஞ்சிடா தொழிக!" என்றாள். அஞ்சுகம் அவட்குச் சொல்வாள்.

"அண்ணனை இழந்தேன்; அன்றி ஆருயிர்க் குயிரே யான
திண்ணிய தோளன் தன்னைச் செல்வனை–இழந்த பின்பும்,
மண்ணதில் வாழ்வு கொண்டு வருந்துதல் வீணே யாகும்!
எண்ணிய முடிவல் லாமல் என்துயர் தீர்வ தாமோ?"

என்றனள். முருகி அஞ்சி ஏதுமே உரையா ளாகிப்,
பின் பெரு மூச்சு விட்டே "பிழையிலாப் பாண்டி நாட்டின்
நன்குறும் அமைதி போக்க நாடியே வந்தோன் கொற்றம்
குன்றியே வீழ்த்தி டாதோ!" என்றுமே கூறி நின்றாள்.

அஞ்சுகம் சொல்வாள் அந்த முருகியைப் பார்த்தே "அக்கா,
அஞ்சுகவாழ்வி ழந்தேன்! அகிலமும் பாழ் எனக்கு!
விஞ்சிய இன்ப மெல்லாம் வேம்பென விலகி நிற்கும்!
வெஞ்சொலும் துயரும் ஏற்று வீணிலே வாழேன்!" என்றாள்.

வான்மதி மறையக் கண்டு மனமகிழ் வாரு முண்டு!
பான்மைசேர் ஒழுங்கும் நல்ல பழங்குடி மரபுங் காத்துத்
தேன் றமிழ்ச் சீர்வ ளர்த்துச் சிறப்போடு வாழும் அந்த
மான் விழி மங்கை நல்லாள் மறைவதைச் சகிப்பா ருண்டோ?

ஆதலால் முருகி அந்த அஞ்சுகம் நிலையை நோக்கிக்
கோதிலா அவளை நீங்கக் கொஞ்சமும் ஆற்றா ளாகி,
"மாதரின் மணியே, உன்றன் மனத்துயர் மிகுந்த தாலே,
காதலஞ் சிறுவன் வாழ்வு கருதவு மில்லை போலும்!

பழுதிலா உன்கு டிக்குப் பகருயிர் நாதன், அண்ணன்
அழிவிலாப் புகழைத் தந்தே மாய்ந்தனர்! ஆனால் நீயோ,
முழுமதி கலங்கிற் றென்ன முகத்தினி லறைந்து மோதி
அழுவதா லாவ தென்ன? அருங்குலம் ஒளிர்வதாமோ?

சிறுவனின் நிலையை எண்ணித் தேறுவாய்! உன் கு டும்ப
மறுவிலா மணியின் வாழ்வை மணம்பெறச் செய்வாய்! மிக்க
உறுதுயர் நீக்கி மைந்தன் உயர்வினுக் காக்க மாகி,
அறநெறி வாழ மாற்றார் அகங்கெட முயல்வாய்!" என்றாள்.

அவ்வுரை அஞ்சு கத்தின் முடிவினை அசைத்த தேனும்,
செவ்விய நாதன் எண்ணிச் 'சீரியோய்! உனைப் பிரிந்தே
எவ்விதம் சகிப்பே னந்தோ! இன்னமும் வாழு கின்றேன்!
ஒவ்விடாச் செயலா லென்றன் உளத்துயர் போமோ?'' என்றாள்.

வழுத்திய அஞ்சு கத்தின் வாய்மையை முருகி கண்டே
விழித்தனள்; சிறிதமைதி விளைந்த தங் கந்த நேரம்,
கிழக்குமே வெளுக்கக் கண்ட கெடுமதிப் பகைவ ரானோர்
முழங்கினார் மூன்றா நாளின் போர்க்கென முரசந் தன்னை!

முழக்கெதிர் முழுக்குங் கேட்டாள்; மூண்டது கோபத் தீயும்!
செழித்த இப் பாண்டி நாட்டின் சீர் குலைத் திடுவோர் தம்மை
ஒழித்திடும் எண்ணம் தூண்ட ஒருமகன் அன்றி இல்லோள்,
அழைத்தனள் அவனை! அன்னான் வந்தனன். அவனைப் பார்த்தே,

'என்னருங் கண்ணே, உன்றன் இன்னுயிர்த் தந்தை தன்னை
ஒன்னலர் அழித்தார் போரில்! உன்னொரு கடமை சொல்வேன்.
இன்று நீ போரை நாடி எதிரியின் சேனை மாய
வென்றுமே வருவா' யென்றாள். வேளனான் ஒப்பி நின்றான்!

உடனவன் தலையைச் சீவி உடுத்தினாள் போரின் கோலம்!
“மடமையோ உனக்கிப் போரில் மகன்றனை அனுப்பு கின்றாய்?
படையொடு போரி யற்றும் பருவமும் அவனுக் கில்லை;
விடடி இச் செயலை!'' என்றே முருகியும் வெகுண்டு சொன்னாள்.

“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!”

(புறம்.312)

இதையறியா திருப்பதுவோ அக்கா நீதான்?
ஈனமுறும் பேச்சுரைத்தாய்; நன்றோ? என்றே
பதைபதைத்துக் கேட்டந்த அஞ்சுகந்தான்
பகைவீழ்த்தும் வேல் கொணர்ந்து மகனைப் பார்த்தே,
இதை ஏந்துன் கரத்தினிலே! உன் முன்னோர்கள்
இசைவளரக் காரணமா யிருந்த திவ்வேல்!
எதை மறந்தா யானலும், இதனை மட்டும்
இறுதியிலும் மறவாதே! என்று தந்தாள்.

தாய்வணங்கி வேல் பெற்றான்; அந்த நேரம்
தளபதிபோல் அச் சிறுவன் காட்சி தந்தான்!
பாய்ந்து வரும் உணர்ச்சியினால் தாயைப் பார்த்தே
"படுகளத்தில் தந்தையினை மாய்த்தோர் தம்மை,
மாய்ந்திடவே செய்தந்தப் பழியைப் போக்கி
மறக்குடியின் புகழ்காப்பேன்! இன்றேல், என்றன்
வாய்ந்த உயிர் மானமது கொள்ளும்! நீங்கள்
மனந்தேறித் துயர் விடுவீர்!" என்று சொன்னான்.

இதுகேட்டாள் அஞ்சுகமும்; உவகை பொங்க,
'என் கண்ணே!' எனத் தழுவி முத்த மிட்டாள்.
விதிர்ப்புற்றே முருகி சொல்வாள்: "என்ன டீ, நீ
விளையாட்டுக் காரியெனச் செயல்மேற் கொண்டாய்!
மதிகெட்டுப் போனதுண்டோ? களத்தில் நாதன்
மாண்டதன் பின் உன் துயர்க்கோ எல்லை யில்லை!
கதியற்ற அந் நிலையை மாற்று தற்குக்
காணுமிவன் உறுதுணையா யிருப்பா னன்றோ?

அன்னதனை விட்டு விட்டுப் பதுமை போல
ஆடுகின்றாய் துயர் நிலையை மேலும் ஏற்க!
நன்றாமோ? யோசித்துப் பார்நீ" என்றே,
நற்குணத்துச் சிறுவனையே பார்த்துச் சொல்வாள்:
"மன்னனவன் எப்படியும் வெற்றி யோடு
வந்திடுவான்; நீ யங்குச் செல்ல வேண்டாம்.
அன்னை கொண்ட துயரதனைத் தீர்ப்ப தற்கே
ஆறுதலாய் நீ யேனும் இருப்பாய்!" என்றாள்.

சொன்ன அந்த முருகியது வார்த்தை கேட்டுச்
சோகமுடன் கோபமுமே கலந்து தோன்ற,
"என்ன மொழி கூறுகின்றாய் அக்கா மீண்டும்?
இந்நாட்டைப் பகைவரவர் வெற்றி கொண்டால்,
என்னாகும் நம் நிலைதான்? அடிமை வாழ்வும்
இழிநிலையும் நமைவந்து சூழ்ந்தி டாதோ?
மன்னிய நம் உரிமையெலாம் மாய்ந்த பின்னர்
மானமற்ற வாழ்வெதற்கு? சிந்தித்துப் பார்!

நாட்டிற்கு வந்திட்ட ஆபத் தென்று
நாமெல்லாம் ஒரு சிறிதும் கவலையின்றி,
வீட்டிற்குள் அடைப்பட்டுக் கிடந்து விட்டால்
வெற்றியது கிடைத்திடுமோ? காவல் வாய்ந்த
கோட்டையினைக் காக்கின்ற வீர ரேனும்
கோழையுள மாதர்களால் குலைவ ரன்றோ?
வாட்டுகின்ற பகை வீழ்த்த உதவிடாமல்
வாழுகின்ற மாதர்குலம் இருத்தல் நன்றோ?

சிறுவனிவன் என்றுரைத்தாய்; ஆமாம். அன்னோன்,
சிங்கமனார் வழிவந்த சிங்க மன்றோ?
உறுபகையைக் கண்டஞ்சி நடுங்குந் தன்மை
ஒரு சிறிதும் என் குடும்பம் பெற்ற தில்லை!
அறிந்திடுவாய் இச் சிறுவன் வெற்றியேனும்
ஆறுதலை யளிக்கட்டும்! இன்றேல், என்றன்
மறைவொன்றே ஆறுதலைத் தரும் எனக்கு!
மறுக்காதே!" என்றுரைத்தாள் அஞ்சுகந்தான்.

பகைப்புலத்தை வேரறுக்கச் சிறுவன் எண்ணிப்
பதைப்பதைத்து விடைகேட்டான் தாயிடத்தில்!
அகமகிழ்ச்சி எனக் களிப்பாய் கண்ணே, என்றவ்
அஞ்சுகமும் விடைதந்தாள்; சிறுவன் சென்றான்!
மிகு வியப்பால் முருகியுந் தன் முகவாய் மீது
விரல் வைத்துப், பின் அவளை வாழ்த்திச் சென்றாள்!
அகங்களித்தார் இந் நிகழ்ச்சி யறிந்த மக்கள்!
அதைப் புலவர் சித்தரித்தார்; அறிவீர் நீரே.

"கெடுக சிந்தை; கடிதிவள் துணிவே!
மூதின் மகளிர் ஆதல் தகுமே!
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே!
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெரு நிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே!
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல் கைக்கொடுத்து வெளிது விரித் துடீஇப்,
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே!"

(புறம்.279. ஒக்கூர் மாசாத்தியார்)

***

## மறக்குடி மகளிர்

## III

*அவனை யீன்ற என் வயிறு*
*புலி தங்கிச் சென்ற குகைபோல!*

மாமலைகள் வானத்தை யளாவி நிற்கும்!
வளவயல்கள் மணிமுதிர்ந்து செந்நெல் காட்டும்!
காமரு நற் பூம்பொழிலும் நீர்நி லையும்
கண்கவரும் காட்சியதாய்க் களிப்பை யூட்டும்!
தேமதுரக்க கனித்தோப்பும் அகிலின் காடும்
செந்தமிழும் தலை நிமிர்ந்தே ஓங்கி நிற்கும்!
தோமறு நன் னீதியங்குக் குடியே கொண்டு
சுக வாழ்வை விளைவிக்கும்; இன்பஞ் சேர்க்கும்!

மக்களெலாம் வீரர்களே! அந்த நாட்டில்
மனச் சோர்வுக் கிடனில்லை! எழுச்சி யோடே
எக் கருமம் வேண்டிடினும் முடிப்போர்! தீய
ஈன செயற் கிடமில்லை! துயர் விளைத்தே

மிக்கதொரு வாழ்வழிக்கும் வறுமை யில்லை!
மேன்மையுற்ற அந்நாடெந் நாடோ வென்றால்,
தக்கதொரு நெறியறிந்து செங்கோ லோச்சித்
தரணிபுகழ் ஏற்றுவந்த சேர நாடே!

அக்குடியில் வந்த ஒரு சேர மன்னன்
அறங்காத்து நாட்டினையே ஆளுங் காலை
மிக்குள்ள பொறாமையினால் பகைவ ரானோர்
மேன்மையுற்ற அந்நாட்டைக் கவர எண்ணித்,
தக்க பெரும் படைதிரட்டி நாட்டைச் சூழ்ந்து
சமர் தொடுத்தார், அதையறிந்த சேர மன்னன்
கொக்கரித்தே தன் படையை ஏவித் தானும்
கொடுங்களத்தை நாடிப் போர்ச் செயல்மேற்கொண்டான்.

*வேறு*

விண்ணெலாம் புழுதி பாய்ந்து வெய்யவன் ஒளி மறைக்க,
மண்ணெலாங் குருதி பாய்ந்து வாய்ந்துள பிணக்கூட்டத்தைத்
தண்ணுலாம் ஆறு போலத் தாவியே செல்லா நிற்க,
எண்ணிலாப் போரின் வீரர் இருபுறஞ் சாய்ந்தா ரம்மா!

இவ்விதம் போர் நிலைதான் இருந்திட, ஊரி லுள்ளார்
எவ்விதம் ஆமோ இந்தப் போரென ஏங்க லுற்றார்!
அவ்விதம் ஓர் இல்லின்கண் அமைந்த நற்றூணைப் பற்றிச்
செவ்விசேர் பொன்னி என்பாள் சிந்தையே கலங்கி நின்றாள்!

மென்மயிர்க் கூந்தல் நீக்கி வெண்ணிற ஆடை பூண்டு
கொன்னுறும் அல்லியின் காய் உணவெனக் கொண்டு, நாதன்
தன்னையே எண்ணி ஏங்கித் தவித்திடும் விதவை போல,
அன்னவள் இருந்தாள் கண்ணீர் அருவிபோல் பெருக்கெடுக்க!

பொன்னியின் துயர மெல்லாம் போர்க்களம் நாடிச் சென்ற
தன்னொரு நாதன் எண்ணிச் சஞ்சலம் மிகுந்த தாம் ஆம்!
பன்னருங் கொடிய போரின் பான்மையை யறிந்தோர், ஆங்குச்
சென்ற தம் தமரை எண்ணித் தியங்குதல் இயல்பே யன்றோ?

அப்பொழு தங்கு வந்தாள் அண்டைவீட் டன்னம் என்பாள்,
'செப்பரும் போரின் சேதி தெரியுமோ அக்கா' என்றே
கப்பிய சோகத் தோடு கலங்குமப் பொன்னி கேட்டாள்
'அப்பெரும் போரின் சேதி அறிந்திடேன்' என்றாள் அன்னம்.

'போரிலே கவலை யற்றுப் பொழுதினைப் போக்குதல்தான்
நேரிதோ அக்கா? நாட்டில் நேர்ந்திடும் காரியத்தில்
நாரியர் நாட்ட மின்றி இருந்திடில் நன்மை யுண்டோ?
சீரிய உன்சேய் எங்கே? செப்புவாய்' என்றாள் பொன்னி.

அவ்வுரை கேட்ட அன்னம் அலட்சியச் சிரிப்புக் கொண்டே,
'செவ்விதுன் வார்த்தை தங்காய்; சிறிய தூண் பற்றி நின்று
வெவ்விய போரில் நாட்டம் வேண்டுமென் றுரைத்தாய்; மேலும்,
எவ்விடம் சென்றான் மைந்தன் என்றுமே கேட்க லானாய்!

நாட்டினில் நாட்ட முண்டு; நான் கொளும் நாட்ட மெல்லாம்,
வாட்டிடும் பகையை வாட்ட வளர்த்திடும் மைந்தருக்கே
ஊட்டிடும் பாலில் வீரம் ஊட்டுதல் ஆகும்; இன்றேல்,
ஆட்டிடும் பகைதான் நம்மை! அதை யறிந் திடுவாய் நீயே.

கூட்டினில் உயிர் தவிர்க்கக் கொடுங்களச் செய்தி நோக்கி,
வாட்டமே மிகவுங் கொண்டு வருந்திடு கின்றாய்! நீ கொள்
நாட்டமும் இதுவே யானால் நானதை விரும்பு வேனோ?
கோட்டையைக் காக்கும் வீரம் கொடுப்பதே எனது நாட்டம்!

என் மகன் எங்கே என்றாய்? எங்கவன் சென்றுள் ளானோ,
அன்னதை யறியேன் யானும். ஆயினும், அஞ்சா நெஞ்ச
வன் புலி தங்கிச் சென்ற மாமலைக் குகையே போல
அன்னவன் தன்னை யீன்ற அணிவயி றிதுவே யாகும்!

ஆதலால் என்றன் மைந்தன் அரும்பகை வீழ்த்துதற்கு,
மோதுறும் போர்க் களத்தில் முன்னணி நிற்பான்!" என்றே
ஓதினாள். இந்த வீரம் ஒண்டொடி மகளிர் பெற்றால்
ஏதினித் துன்ப மிங்கே? இன்பவாழ் வோங்கி டாதோ?

பழந்தமிழ் நாட்டுப் பெண்கள் பாலொடு வீரப் பாலைக்
குழந்தைகட் கூட்டி வந்தே கோதிலாப் புகழை ஏற்றார்!
அழிந்திடும் உள்ளங் கொண்ட அம்மைமார் இற்றை நாளில்
எழுந்ததால், நாட்டில் வீரம் 'என்ன சார் விலை' என் றாச்சு!

விழுமிய பெண்கள் கொள்ளும் வீரமே, நாட்டின் வீரம்!
அழிவதும் பெண்ணால் மற்றும் ஆவதும் பெண்ணா லன்றோ?
பழுதிலா வாழ்வு காக்கப் பாவைமார் முன்னே வந்தால்,
எழுந்திடும் வீரம்! அன்னம் எய்திய புகழைக் கேளீர்!

✤ ✤ ✤

**"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டுள னோவென வினவுதி; என் மகன்**
**யாண்டுள னாயினும் அறியேன். ஒரும்**
**புலி சேர்ந்து போகிய கல்லளை போல,**
**ஈன்ற வயிறோ இதுவே!**
**தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே!"**

*(புறம்.86 காவற்பெண்டின் பாட்டு)*

## அறிஞர் அண்ணாவின் புதுவைத் தோழர்

புரட்சிக் கவிஞரின் கவிதா மண்டலத்தில் உலவுபவர்களிலே தோழர் சிவப்பிரகாசம் ஒருவர். தோழர் புதுவைச் சிவம் தமிழ்மக்கட்குப் புதியவரல்லர். பலநூல்களைக் கவிதை வடிவில் எழுதி வெளியிட்டுத் தமிழ் மக்களின் மதிப்பைப் பெற்றுள்ளவர். நீண்ட நாள் சுயமரியாதை இயக்க அன்பர், பகுத்தறிவாளர், கவிஞர், புலவர், புத்வைத் தோழர் எஸ். சிவப்பிரகாசம் அவர்கள். இவருடைய பாடல்கள் எப்போதுமே சீர்திருத்தக் கருத்துக்களோடு கூடியவை.....

புரட்சிக் கவிஞர், புதுவைச் சிவம் போன்ற புதுக்கவிதையாளர்கள் அவ்வப்போது நமக்கு அனுப்பும் கவிதைகள் மாளிகை வாசிகள் தரும் பணத்தைவிட நமக்கு மகிழ்வூட்டுவன...

புதுவைத்தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய மறுமலர்ச்சி என்ற கவிதை நூல் ஒன்று எமது பார்வையைக் கவர்ந்தது. மறுமலர்ச்சி என்னும் இந்நூல் சீர்திருத்தத் துறையில் ஒரு தன்மதிப்பைப் பெறக்கூடிய முறையில் அமைந்துள்ளது என்று கூறின், அது மிகையன்று. மக்களின் அறிவுக்கு இட்ட வேலியை வெட்டி வீழ்த்தினாலன்றி, எந்த அரசியல் விடுதலையாலும் பயன்பெறமுடியாதென்ற உண்மையினைக் கவி, மிகவும் அழகாக, ஆணித்தரமாக எடுத்து விளக்கியிருக்கிறார். மற்றும், காதல், கற்பு, அன்பு, அறிவு, வறுமை, உரிமை, இனம், மொழி முதலிய துறைகள் ஒவ்வொன்றும் இந்நூலாசிரியரின் அறிவுத் திறனுக்கு அரண் செய்வதுபோல, பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. படிப்பவர் மனதைப் பக்குவப் படுத்தும் முறையில் அமைந்துள்ள இந்நூல் ஒவ்வொரு தமிழ் மக்கள் கையிலும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பேரறிஞர் அண்ணா

(திராவிட நாடு இதழ்களில்)

# தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்

**1945**

# முன்னுரை

என் நண்பர்களான எஸ். தர்மராஜன், எல். துரைராஜன், பொ.இராம லிங்கம் ஆகியோர், அவ்வப்போது சில மெட்டுக்களைச் சொல்லி அவற்றின்படி பாடல்கள் எழுதித்தரச் சொல்வார்கள். அவர்கள் விருப்பப்படி எழுதப்பட்ட பாடல்களின் தொகுதியே, "தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்" என்னும் இச்சிறு நூலாகும்.

இதிலுள்ள பாடல்களிற் சில, "புதுவைச் சிவம்" என்ற பெயரோடு, தன்மான இயக்கீப் பத்திரிகை பலவற்றுள் வெளிவந்துள்ளன. பல புதிதாக இயற்றப்பட்டவை.

இப்பாடல்கள், பெரும்பாலும் பொதுக் கூட்டங்களில் பாடுவதற்கென்றே அமைக்கப்பட்டனவாகும். நாடகமேடை, இசையரங்கு ஆகியவற்றில் பாடுவதற்கும் பொருந்தும்.

ஒரே மெட்டில் இரண்டு பாடல்கள் அமைந்தனவும் சில உள. அவை வெவ்வேறு கருத்தில் இருப்பதால், அவற்றையும் நீக்காது பிரசுரித்துள்ளேன்.

பாட்டு எழுதுவது பெரிதல்ல; பாடும் வல்லுநர்கள் அதனைப் பாடித், தமிழர்க்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டவேண்டும். அதுவே அவர்கள் பெருங் கடமையுமாகும்.

"ஞாயிறு நூற் பதிப்பக"த்தின் பேரால் இதனை வெளியிடுகின்றேன். தோழர்கள் ஆதரவு வேண்டும், அதனினின்றும் பல புதிய நூல்கள் புறப்பட!

இப்பாடல்கள், நூல் வடிவில் வெளிவருவதற்கு ஊக்கமளித்த தோழர்கட்கெல்லாம், என் வணக்கம் உரியதாகுக!

4-12-45.
புதுவை.

அன்பன்,
ச. சிவப்பிரகாசம்.

# தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்

## அ. நாட்டுப் பகுதி

### 1. பழந்தமிழ் நாடு

(கடையன் குறையைத் தீரும் சாமி எ. மெட்டு)

வடக்கில் வேங்கடம் தெற்கில் குமரி
வாய்ந்தது வே தமிழ் நாடு!–வாய்ந்தததுவே...
நடுக்கம் ஊட்டிடப் பகைவர்க் கரண்கள்
நாற்புறஞ் சூழ்ந்ததெம் நாடு!–நாற்புறஞ்...

அணிசேர் பாண்டியன் சேரன் சோழன்
ஆண்டது வே தமிழ் நாடு!–ஆண்டதுவே...
மணிநேர் கலைகள் வளர்த்தமுச் சங்கம்
வாய்ந்தது வே தமிழ் நாடு!–வாய்ந்ததுவே...

தமிழே மொழியாய் எங்கும் நிலவித்
தலைமை வகித்ததெம் நாடு!–தலைமை...
இமமலை மீதும் விற்புலி கெண்டை
இலச்சினை பொறித்த தெம் நாடு!–இலச்சினை...

உளத்திற் கினிமை ஊட்டும் அகப்பொருள்
ஓங்கிய தே தமிழ் நாடு!–ஓங்கியதே...
களத்திற் பகையை வீழ்த்தியே வெற்றி
கண்டதுவே தமிழ் நாடு!–கண்டதுவே...

இருளில் உலகம் இருந்திடும் போதறி
வொளியைப் பெற்றதெம் நாடு!–ஒளியைப்..
பொருளும் வளமும் பொன்றா நிலையிற்
பொருந்திய தே தமிழ் நாடு!–பொருந்தியதே...

உலகப் புகழை ஒருங்கே ஏற்றதோர்
உயர்நெறி கொண்டதெம் நாடு!–உயர்நெறி...
கலகம் பேதம் இன்றியே காதல்
வாழ்விற் களித்த தெம் நாடு!–வாழ்விற்... (வடக்கில்)

## 2. தமிழ் மொழி

(கதையொன்று சொல்லுவேன் கேள் எ. மெட்டு)

அமுதென்று சொல்வாரடி – கிளியே
ஆவியெனுந் தமிழ் மொழியை யாரும்! (அமு)

இமிழ் கடல் வரைப்பினில் முதல் முதல் தோன்றியே
இன்றளவு மழியாமல் கன்னிமொழி யான அதை (அமு)

தீங்கனிச் சாறென மொழிவார்!–சுவையாரும்
தித்திக்கும் நற் கற்கண்டெனத்
தேனெனப் புகல்வார் அந்தச்
செந்தமி ழன் றோ நமது செல்வம் அறிவாய் நீ!
சீரார் மடமானே–அதைப் பெறுவாய்! (செந்தமி)

ஆர்த்த நல் லின்ப முண் டாக்கும்!–வாழ்வினில்
அடிமை நிலைமையைப் போக்கும்!–அறிவுண்டாக்கும்! (அமு)

★★★

## 3. தமிழ்க் கொடி

(உனைக்–கண்டுமயங்காத பேர்களுண்டோ எ. மெட்டு)

உயர்–வானை யளாவியே பறக்குது பார்
அதி–மகிழ்வுடன் எழில் மிகுந் தமிழ்க்கொடி (வா)

தேனமுதாம்–நல்ல–தீந்தமிழே–இந்த
மானிலத்தில்–எங்கும்–ஓங்கிடவே–செய்ய (வா)

காதலகப்–பொருள்–பாதையிலே–நமைத்
தீதிலாமல்–அழைத்–தேகிடவே!–உயர் (வா)

அன்போங்கவே–நல்ல–பண்போங்கவே–செய்து
நன்றார்தமிழ்–மானம்–குன்றாமலே–செய்ய (வா)

நஞ்சனையார்–செயும்–வஞ்சனைகள்–எலாம்
பஞ்செனவே–ஓட–அஞ்சிடாமல்–உயர் (வா)

சாதிபல–மத–பேதம்பல–அவை
ஓதும்பல–கொடும்–தீதிலாமல்–செய்ய (வா)

ஏக்கத்திலே–நெடுந்–தூக்கத்திலே–யுள்ள
ஆக்கத்தமிழ்–மாந்தர்–ஊக்கம் பெற – வேண்டி (வா)

துன்பமெலாம்–இங்குத்–தீர்ந்திடவே–நல்ல
இன்பமெலாம்–மிக–ஓங்கிடவே–உயர் (வா)

### 4. சீரிழந்த தமிழகம்
(தாய்வளநாடு எ. மெட்டு)

தீந்தமி ழானசெந் தேன்மொழி நாடே!
தீமை வை தீகம் ஏனோ நீ ஏற்றாய்? (தீந்)

வாய்ந்தநற் காதல் அகப்பொரு ளிகழ்ந்தாய்!
வள்ளுவர் குறளைத் தள்ளியே மறந்தாய்!
வாய்மையும் தூய்மையும் இழந்தாய்! (தீந்)

சீரிலாப் பேத வாழ்வு கொண்டாயே!
தீதுறு மதத்தினால் தாழ்ந்து விட்டாயே!
ஆரிய சூழ்ச்சி வலையில் வீழ்ந் தாயே!
அந்தோ உன் எதிர் காலம் யாதோ! (தீந்)

### 5. தமிழ் நாடே, உன் புகழ் எங்கே?
(ஆதிபரஞ் சோதி எனை எ. மெட்டு)

ஒங்கு புகழ் வாய்ந்த தமிழ் நாடே!
ஒகோ ஈ தென்னசீர் கேடே!–நாடே! (ஓங்கு)

தாங்கும் புவிதனில் நீயே
தன்னிக ரற்று வாழ்ந் தாயே!
சஞ்சல மின்று கொண் டாயே!–நீயே (ஓங்கு)

ஆய்ந்த நல்ல கலைகளெல்லாம் எங்கே?
அஞ்சுக வாழ்வுதான் எங்கே?–எங்கே?

வாய்ந்த உன் வள்ளன்மை எங்கே?—எங்கே?
மாப்புகழ் யாவுமின் றெங்கே?
வண்டமிழ் வீரர்கள் எங்கே? எங்கே? எங்கே (ஓங்கு)

ஆரியர்கள் இங்குவந்த நாளாய்
ஆனவுன் கீர்த்தியும் போச்சே!—போச்சே
சீரற்ற அன்னவர் செய்த—சூழ்ச்சி,
தீர்த்ததே உன் தனி ஆட்சி!
பாரிலதை வீழ்த்தி டாமல்—உண்டோ—மீட்சி? (ஓங்கு)

கன்னல் போலே செந்நெல் விளை நாடே!
காதற் சு வை வாழ்வு கண்ட—நாடே!
உன்னிலை முன்போலும் ஆமோ?—ஆமோ?
உயர்தமிழ் ஆட்சியுண் டாமோ?
உள்ளங்க ளித்துவா ழோமோ?—யாமே—என்றும். (ஓங்கு)

❀❀❀

## *6. தமிழ் நாடே, ஏனிந்த நிலை?*

(வீர சுந்தரம் வேண்டி நின்றார் எ. மெட்டு)

மானில மங்கையின் வாண்முகம் போலே
வாய்ந்த என் தமிழ் நாடே!
வானுறு மதியில் தோன்றிடும் களங்கம்
போன்று நீ மாறியதேன்?

தேனினு மினிய செந்தமிழ் கண்ட
சீருறுந் தமிழ் நாடே!
ஏனிந்தக் கோலம்? யாவரும் தூற்ற
இழிநிலை ஏற்றுவிட்டாய்?

சோதர நேயம் வாய்ந்திருந்த என்றன்
சுடர்புகழ்த் தமிழ் நாடே!
சாதி பேதங்கள் சாத்திர மதங்கள்
ஏற்று நீ ஏன் தாழ்ந்தாய்?

தூயநல் வாழ்வில் சுவைபல கண்ட
சுதந்திரத் தமிழ் நாடே!
நாயெனும் அடிமை வாழ்வினில் நாளும்
நனிதுயர் ஏன் கொண்டாய்?

மானமே உயிராய்க் கொண்ட நன் மைந்தரை
ஈன்ற என் தமிழ் நாடே!
ஈனருக் கிங்கே இடமது தந்தே
இன்னலேன் ஏற்றுவிட்டாய்?

இன்பமாம் வாழ்வில் இனிதுடன் சுகித்த
என்னருந் தமிழ் நாடே!
பொன்பெறும் வாழ்வில் புதுமணங் காணப்
புரட்சி நீ தோற்றிடுவாய்! (மானில)

❋❋❋

## *7. தமிழ் நாட்டின் புகழ் வளர்ப்போம்*

(நமது ஜென்ம பூமி எ. மெட்டு)

தமிழர் வாழும் நாடு!
தமிழ் வளர்த்த நாடு
சகத்திற் சிறந்த நாடு!

அமுத வாழ்வுக் காக முன்னர்
அரிய காதல் வளர்த்ததே!
அறிவிற் சிறந்து புகழை ஏற்ற (தமிழர்)

பெருமை வாய்ந்த நாட்டில் தோன்றும்
பீடை யாவும் போக்குவோம்!
பேசும் உரிமை யாவும் பெறுவோம்! (தமிழர்)

சாதி பேதம் போக்கி வாழ்வோம்
சமத்துவம் நிலை நிறுத்துவோம்!
தரணி புகழை மீண்டும் ஏற்போம்! (தமிழர்)

# ஆ. சாதி பேதப் பகுதி

## *8. பேதம் விடுவாய்*

இராகம் : இந்துஸ்தான் காப்பி — தாளம் : ஆதி

பிறவியில் தாழ்வுயர் வேனோ–சொல்வாய்?
பிழையேன்? அதை விடுவாய்!–தமிழா (பிற)

உறவினர் போலே இருந்தார் நம் முன்னோர்
ஒருகுலம் அன்றிவே றுண்டோ இங்கே? (பிற)

சாதிகள் பேசிச் சமர்பல கொண்டாய்!
தமிழ்வாழ் வழிந்ததே பலனாய்க் கண்டாய்! (பிற)

ஆரியர் கொண்ட பேதமேன் உனக்கே?
அதைநீ ஏற்றதால் வாழ்வில் தாழ்ந்தாய்! (பிற)

மக்களெல் லோரும் சமமெனக் கொள்வாய்!
வாய்ந்திடும் இன்பமே வாழ்வில் என்றும்! (பிற)

▼▼▼

## *9. பேதம் போக்குவீர்!*

(நானேன் ஏவினேன் எ. மெட்டு)

பேதம் போக்குவீர்!–பிறவியிலே (பே)

நீதமிலா மத போதனை யால்மட
வாதமெ னோபழி தானே மிகுத்திடும்! (பே)

பிறவியி லுயர்வு தாழ்வுக ளேது?
பேதைமதியோர் கூறும் வாது–மிகவும்
பீடை யதனை ஓடச் செயவே (பே)

மக்களி லுயர்ந்தோர் உருவமும் வேறோ?
மற்றவர் உருவமும் வேறோ?–இந்த
மானி லத்தில் எங்கு மில்லாப் (பே)

மலத்தினுங் கேடாய் மதிப்பதோ சிலரை?
வாய்ந்த நல் அறிவென்ப தெங்கே?–மிக
மாசு கொண்ட மதங்கள் சொல்லும் (பே)

ஆதரங் கூறும் ஆத்திகம் போக்கி,
அடைவோம் சமமே துயர் நீக்கி!–நாளும்
ஆண்பெண் அடிமை யான மூடப் (பே)

❖❖❖

## *10. வீண் பேதம் விடுவாய்!*

(ஆதிபரம் பொருளை எ. மெட்டு)

சாதியும் பேதமும் வீணா குமே!
தாரணி மாந்தர்கள் யாவரும் சமமே! (சாதி)

நீதியில் பேதம் வகுத்திடல் எனோ?
நேர்மையி லாமத போதனை வீணே!
தீதுமிக விளைக்கும் உணர்வாய்!
சிறியவர் செயலது நீவிடு தமிழா! (சாதி)

ஆரிய போத மதுவருந் தாதே!
அறிவினை மாய்க்கும் அதைவிரும்பாதே!
வீர மறவாதே தமிழா!
விழிப்புடன் எழுந்திரு; நீயுறங் காதே! (சாதி)

✦✦✦

## *11. பேதம் விடுவாய்!*

(உயர்மிகு பிறவியில் எ. மெட்டு)

பிறவியில் மானிடர் யாவரும் சமமே!
பேதம் ஆண்பெண் அன்றிவே றுண்டோ?
யாவரும் சமமே! (பிறவியில்)

பறவை மிருகம் பற்பல இனமே!
பலவித பேதம் அவைகொண் டனவே!
பகர்வீ ரோமக்கள் அமைப்பினிற் பேதம்!
யாவரும் சமமே! (பிறவியில்)

மதங்கட வுள் அதை ஒப்பின என்பர்!
வஞ்சகர் அவர்மொழி நம்பிட வேண்டாம்!
இதம்பெற வேண்டிநீ வீடுவாய் பேதம்!
யாவரும் சமமே! (பிறவியில்)

***

## 12. ஆய்ந்து பார்ப்பீர்!

(சாந்தமூர்த்தியே சந்யாசி காந்தியே எ. மெட்டு)

ஆய்ந்து பார்ப்பீரே—என்
அன்புத் தோழரே!—நீர் (ஆய்ந்து)

தேர்ந்த ஞானம் பேசும் நாட்டில்
தீண்டாமைக் கிடம் ஏனோ சொல்வீர்?
வாய்ந்த புகழும் தேய்ந்த ததனால்!
வன்பு கொண்டே அன்பு கொன்றீர்! (ஆய்ந்து)

பேத மில்லாத் தமிழர் நாட்டில்
பேதங் கண்டீர்; ஏதங் கொண்டீர்!
தீது தரும்பல சாத்திர மேற்றீர்!
தேசம் நலிவதைக் காணீ ரோநீர்? (ஆய்ந்து)

வாய்மை யில்லாக் கொள்கையான
வைதீகத்தில் உழல்வ தேனோ?
தூய்மை யளிக்கும்—சுதந்தரந் தரும்
சுயமரி யாதைப் போதங் கொள்வீர்! (ஆய்ந்து)

***

## 13. தீண்டாமை ஒழிக!

(ஓடி விளையாடு பாப்பா எ. மெட்டு)

தீண்டாமை எனும்பழிச் சொல்லால்—இந்தத்
தேசம் உருக்குலைய லாமோ?
வேண்டாத செயலிது வாகும்!—அதை
விடுத்தே விழிப்புணர்ச்சி கொள்வீர்! (தீண்)

தேசத்தில் ஏழுகோடிப் பேரை—இந்தத்
தீமைக்குள் ஆழ்த்துதல் சரியோ?
நேச உணர்ச்சி யின்றி வாழ்தல்—மக்கள்
நேர்மைக் குணமோ? இது முறையோ? (தீண்)

நாய் பன்றி கழுதைகள் யாவும்—இந்த
நாட்டில் உரிமையோடு வாழும்!
வாய்மையு டைய ஆதி மக்கள்—அந்த
வகையிற் சிறுதுங்கூட் டிலையோ? (தீண்)

மக்களுட் பேதங்க ளேது?—பொல்லா
மதம் புகல் சாதிகள் தீது!
தக்கதோர் சமத்துவம் வேண்டி—நாம்
சந்ததம் உழைத்திடு வோமே! (தீண்)

***

## *14. நீ சூத்திரனா?*

(மாயா உலகை நீ மதியாதே எ. மெட்டு)

ஏனோ சூத்ரனென் றொப்புகின்றாய்?
இழிவுனக் கில்லையோ செப்பிடுவாய்?—நீ (ஏனோ)

மான உணர்வினை இழந்தனையோ?
மறத்தமி ழன்என்ப தறிந்திலையோ?
ஈனமுறும் பார்ப்பான் வேசிமகன் எனில்,
இளித்துப் பல் காட்டி யே 'சாமி' என்பதோ?

இந்த—நாட்டை யாண்ட நீ
இழி—நாய்க்குங் கேடானாய்!
மா—டோட்டியே பிழைத்திட
வந்தவர் உயர்ந்ததேன்?

இதையறி யாமல்நீயும் எதிர்ப்பதேன் தோழா?
இழித்திடும் பார்ப்பான் சொல்தான் இனிக்குதோ தேனாய்! (ஏனோ)

# இ. மாதர் பகுதி

## *15. எங்கள் நாட்டுப் பெண்கள்!*

(கொச்சிமலை குடகுமலை எ. மெட்டு)

எங்கள்நாட்டுப் பெண்களுக்கே ஒப்பாரிகள் தெரியும்!–நல்ல (ஒப்)
எடுப்புக் கேற்ப ஓசையூட்டி அழுவதற்கும் தெரியும்!
தங்குதடை யின்றியதில் குறைகள் சொல்லத் தெரியும்!–மாமி(குறை)
சத்தமிட்டே மார்படித்துச் சாய்ந்தழவும் தெரியும்!

சுவர்தனிலே கணக்குக்காகக் கோடிழுக்கத் தெரியும்!–கரிக் (கோடி)
சொல்லும்பல தெய்வங்களை வணங்கிடவும் தெரியும்!
கவர்ச்சியுள்ள வகையில் தம்மை அலங்கரிக்கத் தெரியும்!–நன்றே (அலங்)
கணவன்நிலை யறிந்திடாமல் தொந்தரிக்கத் தெரியும்!

வாரத்தினில் ஏழுநாட்கும் விரதமிருக்கத் தெரியும்!–பல (விரத)
வகுத்த அந்த விரதபலன் யாவும் சொல்லத் தெரியும்!
வீரத்திலோ, வீட்டைத்தேடிச் சிப்பாய் வந்து நின்றால்–ஒரு (சிப்)
மெய்விதிர்த்தே நடுநடுங்கி மிரண்டுவிழிக்கத் தெரியும்!

வீட்டினிலே வீதியிலே கோலம்போடத் தெரியும்!–நல்ல (கோ)
விதிவிதியென் றெதற்கும் கூறித் தடைகள் சொல்லத் தெரியும்!
மாட்டுச்சாணங் கொழித்துக்கொட்டி வறட்டிதட்டத் தெரியும்!–நன்கு(வ)
வாய்ந்த ஊரார் பேச்சில், கூடி வம்பளக்கத் தெரியும்!

கோணவாக்குச் சடையில் பூக்கள் கட்டாய் வைக்கத் தெரியும்!–
மிகக் (கட்)
கோழைப் பாலைக் குழந்தைக் கூட்டி வளர்த்திடவும் தெரியும்!
வீணுரைக்கும் இதிகாசக் கதைகள் சொல்லத் தெரியும்!–பல (கதை)
விளம்பும் பகுத் தறிவைக் கண்டால் சீறி யோடத் தெரியும்!

அடுப்பங்கரை மோட்சமென்றே அதிலொடுங்கிக் கிடப்பார்!–நாளும்(அதி)
ஆடவரைத் தெருவில்கண்டால் அறையிலோடி ஒளிப்பார்!
படிப்பறியா விடினும்பல கனவுப் பலன் அறிவார்!–பல (கன)
பாங்குடனே சங்கியற்றும் வகைகள் யாவும் மறவார்!

பொன்னுடைகள் பூஷணத்தில் ஆசைக்கெல்லையில்லை!–அவர்க்
(காசைக்)

பூண்பார் இன்னும் உரல் அமியும், பொன்னிறமா யில்லை!
தன்னந் தனி யாக வெளிச் செல்லுந் துணி வில்லை!–வெளிச்(செல்)
தன்மதிப்புக் கெடுவதேனும் சடங்கை விடுவ தில்லை!

இந்நிலையில் எங்கள் நாட்டுப் பெண்க ளிருக்கும் போது–நல்ல(பெண்)
என்ன குறை இந்த நாட்டில்! வாழ்வில் துன்பமேது?
செந்தமிழே சீர்நாடே இந்நிலைதான் சிறப்போ?–உமக் (கிந்நிலை)
சேயிழையார் தமைத் திருத்தா திருப்பதென்ன; வெறுப்போ? (எங்கள்)

❋❋❋

## *16. மாதர் நிலை*

(இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் எ. மெட்டு)

என்னருந் தாயார்காள், தோழியர்காள்!
இங்குள்ள உம்நிலை எண்ணிடுவீர்!
மன்னிய இப்புவி தன்னிற் பிற
மாதர்கள் வாழ்வதுங் கண்டிடுவீர்! (என்)

கல்வி யறிவினை நாளும் கற்றே
கடுமூட எண்ணத்தைச் சாடி விட்டே,
எல்லா உரிமையும் அன்னார் பெற்றே
இன்ப நல் வாழ்வினில் வாழுகின்றார்! (என்)

பட்டம் பதவியில் உத்யோகத்தில்
பற்பல முன்னேற்றம் காணுகின்றார்!
சட்டங்கள் செய்கின்றார்; விஞ்ஞானத்தில்
தாரணி போற்றிட வாழுகின்றனர்! (என்)

வீரரும் அஞ்சிட ஆண்மையுடன்
வெற்றிப் போர்ச் சேனைந டத்துகின்றார்!
தீரமாய் நெடியதோர் ஆழ்கடலில்
சீருடன் கப்பல்செ லுத்துகின்றார்! (என்)

விண்ணைய ளாவியே வேகமுடன்
வி மானம் செலுத்தியே பேரும் பெற்றோர்!

பெண்மையால் எல்லாமும் ஆகுமென்றே
பேசுதல் போலவர் வாழுகின்றார்! (என்)

புண்ணிய பூமியில் வாழ்மாதரே,
புகலுவீர் உம்புகழ் யாதெனவே!
கண்–கருத் தில்லாதான் செய்கை போலே,
கடுமூடச் செயல்கொண்டு வாழுவதேன்? (என்)

✡✡✡

## 17. தோழிக்கு உரைத்தல்

(ஆசைமுக மறந்து போச்சே எ. மெட்டு)

வீரத்தமிழ் மகளிர் இந்நாள்–தம்
மேன்மை நிலையிழக்க லானார்!
பாரில் அவர்பெருமை முன்னாள்–மிகப்
பாராட்டுக் குரியது தோழி!

நாட்டு நிலையில் பங்கு கொண்டார்–அவர்
நல்லாட்சிக் கென்றுந் துணை நின்றார்!
வீட்டி லடை பட்டார் இன்றோ!–இந்த
விபரீதம் ஏனோ சொல் தோழி?

ஆரியக் கொள்கையை ஏற்றே–வாழ்வில்
அடிமைக ளானது கண்டும்,
தீரமாய் அதையொழித் திடவே–தொண்டு
செய்யாம லிருப்பதேன் தோழி?

மானமில் லாதவர் என்றே–நம்மை
வைதிகம் ஆக்கிடல் நன்றோ?
ஈனஞ் சகிக்குங் கோழை யுள்ளம்–இன்று
ஏன் பெற்றார் தமிழ்ப் பெண்கள் தோழி?

அராவிடத் தாரியர் சூழ்ச்சி–நாட்டில்
அகன்றிடா வரையுண்டோ மீட்சி?
திராவிடப் போரினில் சேர்ந்தே–நல்ல
சீராட்சி பெறச் செய்வாய் தோழி!
ஆவதும் அழிவதும் பெண்ணால்!–அந்த

அமுத வாசகந்தனை இந்நாள்,
பூவிலுள் ளோர் உணர வேண்டி–இன்பப்
புதுவாழ்வு காணச் செய் தோழி! (வீரத்)

★★★

### *18. மாத ரடிமைக்கு மதமே காரணம்!*

(வந்தே மாதரம் என்ற இசைபோல்)

பொழிலிடம் நாடிக் களித்திடும் பறவை
புதுவாழ் வுனக் குணர்த்தும்!–நல்ல
எழிலிள மாதே நீயதை யறிந்தால்
ஏதுனக் கிங் கடிமை? (பொ)

உயிர்வாழ் இனத்தில் ஆண்பெண் இவற்றுள்
உயர்வும் தாழ்வு முண்டோ? (பொ)

கல்வியில் உலக அறிவில் தேர்ந்தே
கருந்தன மாகிடு வாய்!
செல்வமும் பக்தியும் உன்இழி வதனைத்
தீர்த்திடு மோ சொல்வாய்? சொல்...? சொல்...?

தீயதோர் மதமே மாதரை யடிமை
செய்ததென் றே யறிவாய்!
தூயநல் வாழ்வில் இன்பமே வேண்டின்
சுதந்திரம் நீ பெறுவாய்! (பொ)

✳✳✳

### *19. பழி ஏன்?*

(பஜனை செய்வோம் கண்ணன் நாமம் எ. மெட்டு)

பல்லவி

விதவை யெனும் பழி ஏனோ? வீணே (வித)

அனுபல்லவி

வேதனையால் அவர் தீதுகொண் டுழல்வதோ? (வித)
விடுதலை யே யிலை யோஇந் நாட்டில்?

சரணம்

நிதமும் வாழ்வில் நீள்துய ரளித்தே
நிந்தனை செய்வது மேனோ?
'விதி' யெனக் கூறி அன்னவர் வாழ்வை
வீணி லழித்தல் சரிதானோ? (வித)

வாய்ந்த நல்லிளமை எழின்மிகு மாதர்
மறுமணம் கொள்வது தீதோ?
மாய்ந்திடும் நிலையில் இருப்பினும் ஆண்கள்
மறுமணம் புரிவதும் நன்றோ? (வித)

அன்புகொண் டோமென அரற்றுகின் றோம் வீணே
அமங்கலையா ரிடம் எங்கே?
வன்பினி நீங்கி மறுமண உரிமை
மாதருக் களித்திடு வீரே! (வித)

***

## *20. பதில் சொல், தமிழா!*

('காதலென் றே முழங்கே' எ. மெட்டு)

அன்பு நீ கொண்ட தெங்கே?–தமிழா! (அன்)

மென்மலர் பறித்ததன் பயனறி யாமல்
வீண்படச் செய்திடும் சிறுவர்கள் போலே,
கன்மனங் கொண்டு நீ வைதவ்யப் பேரால்
கட்டழ கிளமை சேர் மாதரை வீணே
கதறிடச் செய்கின்றாய்!–அந்தோ! (அன்)

மகள்துயர் காணவே சகித்திடாத் தாயும்
வைதவ்ய நோய்க்கிரை யான தன் மகளின்
மிகுதுயர் போக்கிட மனமின்றி, மேலும்
வேதனை நெருப்பினில் நெய்விட்டு வளர்ப்பாள்!
விதியெனக் கூறிடுவாள்!–அறிந்தும் (அன்)

என்மதம் அன்பினைக் கொண்டதென் றுரைத்தாய்!
எழிலிள மாதர்கள் விதவைய ரானால்,
அன்னவர் நலனெலாம் அழித்துக்கண் ணீரில்

அனுதினம் மூழ்கிடச் செய்திடும் உன் மத
அருளிலாச் செயலறிந்தும்–தூய (அன்)

இயற்கையின் விதியினை மீறுதல் ஏனோ?
இதையறி யாதவன் தமிழன் ஆ வானோ?
கயற்கணாள் இளமையைப் பாழ்படச் செய்தே
காதலாம் கனவினில் வீழ்த்துதல் சரியோ?
கருதிட அறிவிலையோ?–சொல்வாய்! (அன்)

❊❊❊

## *21. காதல் மணம் ஓங்குக*

(எளியேனையாள் உலக நாயகி எ. மெட்டு)

இரா : கௌரி மனோகரி. தாளம் : ஆதி.

பல்லவி

காதல் மாமணம் ஓங்கச் செய்வீரே!
கருத்தொவ்வா மூட மணம் தள்வீரே! (கா)

அநுபல்லவி

பூதலந் தனில் வாழுமாந்த ரெல்லாம்
புனிதநல் வாழ்வை அடைந்திட வேண்டிக் (கா)

சரணங்கள்

அருங்குணச் செயல்கள் அன்புளத்தில் தோன்றும்!
அந்த வாழ்விலின்பம் என்றுந்தளிர்த் தோங்கும்!
திருவார்ந்திடும்! சிறப்பார்ந்திடும்!
தீமையில்லா வாழ்வு நமைச் சேர்ந்திடும்! (கா)

மதவாழ்வு, காதல் மாமண மழிக்கும்!
மதிபோக்கித் தீய துயர்வாழ் வளிக்கும்!
விதி சொல்லுவார், அதை நம்பாதீர்!
வெம்மை வாழ்வு தீர, நலனோங்கவே (காதல்)

### 22. மாதரைப் போற்று

(மாயா உலகை நீ மதியாதே எ. மெட்டு)

மாத ருலகினை இகழாதே!
வாய்ந்த உன் அடிமையும் ஒழியாதே!-நல்ல (மாத)
தீது புரிந்தனை ஆணுலகே!
சிறு செயல் அதையினி விடுவாயே!
கோதிலா மாதரின் அடிமையே தீர்ந்திடக்
கோரும் உரிமைதனைக் குலைக்காதே!

வீண்-வாது பேசாதே!
அது-வாய்மை யாகாதே!
உன் சூதுள்ளம் விடுவாய் நீ
சுதந்திரம் பொதுவன்றோ?

தூயநற் காதலின்பம் ஈருளச் சேர்க்கை!
சுதந்திர ஆண்பெண்ணால் தோன்றும் நல் வாழ்க்கை! (மாத)

❋❋❋

## ஈ. மதப் பகுதி

### 23. மதம் ஏன்?

(பூமியின் மானிட ஜென்ம மடைந்துமோர் எ. மெட்டு)

அன்பினைக் கொண்டதே மதமெனக் கூறுவார்
அது மிக மோசம் அறிந்திடுவாய்!
வன்பினைக் கொண்டது வே மதம் யாவுமே!
வரலா றறிந்து நீ திருந்திடுவாய்!

எம்மத மாயினும் அம்மதம் போற்றாரை
இம்சை செய் யாமல் இருந்ததுண்டோ?
நிம்மதி யாய்வாது முடிந்ததுண் டோ முன்னாள்?
நினைந்திடு வீர் தலை உருண்ட தெலாம்!

வாய்ந்த நல் அறிவது வளர்ந்திடாக் காலத்தில்
மதமெனக் கண்டனர் சீர்பெறவே!

தேய்ந்திடும் வாழ்வத னாலின்று கண்டபின்
திருந்திடா திருப்பதும் நேர்மையதோ?

ஆண்டவன் வாக்கெனக் கூறிடு வாரதை;
அறிவுல கம் இனிப் போற்றிடுமோ?
வேண்டாம்நற் சுதந்தர வாழ்வென மறுத்திடும்
வீண்மத போதனை ஏற்றிடுமோ?

மக்களுக் கே சம வாழ்வினைத் தந்ததோர்
மாமத முண்டோ செப்பிடுவீர்?
மிக்குள ஏழ்மையும் வறுமையுங் காத்துமே,
"விதி" எனப் புகல்மதம் ஒப்புவதேன்? (அன்)

▼▼▼

## *24. மதநோய் தவிர்வாய்!*

(மதனனே வா சிங்காரா எ. மெட்டு)

மதமெனும் நோய் பொல்லாதே!
மாந்தரின் சீர் அதனால் நில்லாதே! (மத)
விதவிதமான கொடுமைகள் விளைத்தே
வேதனை யேமிக அளிக்கும் அறிவீர்! (மத)
அன்பு கொன்றே வன்பினை வளர்க்கும்!
ஆர்ந்தநற் புகழழிக்கும்!–அதுவே (மத)
மக்கள் அறிவை மாய்த்திடும்; தீய
மாக்களென் றாக்கிவிடும்!–கொடிய (மத)
மானம் போக்கி ஈனமுண் டாக்கும்!
வறுமைவ ளர்த்து விடும்!–அதுதான் (மத)
ஆத லாலே விடுவீ ரதனை
அறநெறி சமதர்மமே!–யார்க்கும் (மத)

❄❄❄

## *25. மதம் விடுவீர்!*

(சிவக்ருபையால் எ. மெட்டு)

மதபோதனை போதும் வேண்டாம்–உயர்
வாழ்விழந்தோம் அதனால் நாமே! (மத)

இதம்பெறத் துணைசெயும் மதமுளதே?–நாம் (இதம்)
ஏனோ அதை வீணே சொலி
இனியும் துயரே அடைவது? (மத)

தூயதோர் சமத்துவ வாழ்வழித்தே
துயரினிலே நமையே நிதமழைத்தே,
தீயதோர் வறுமையை மிக வளிக்கும்
சிறுமை மதம் விடுவீ ரது
மறைந்தால் உயர்வோம் இனிதே! (மத)

## உ. கலைப்பகுதி

### *26. ஆய்ந்துபார் தமிழா!*

**(மானமெல்லாம் போன பின்னே எ. மெட்டு)**

வீழ்வதுவோ தமிழர் குலம்
மேனிலை யிழந்தே என் தோழா? உன்னால்.. (வீழ்வ...)
தாழ்வளிக்கும் கலைவளர்த்தே
தன்மதிப் பிழப்பதோ சொல்வாய்? வாய்ந்த... (தன்ம...)

வாழ்ந்த நம் முன்னோர் கலைவளர்த் தாரதில்
வாய்ந்ததோ உனக்கொரு தாழ்வு?
சூழ்ந்திடும் ஆரிய ஏடுகள் காத்தே
தொலைத்தனையே தமிழ் வாழ்வு! நீ– (தொலைத்)

கலையின் பேரால் ஆரியர்கள்
கடுவிஷ மூட்டினார் ஏற்றுவிட்டாய்!
நிலைகுலைந்தும் வாழ்விழந்தும்
நீயுண ராததேன் தோழா?
ஆரிய சூழ்ச்சி தமிழரின் வீழ்ச்சி
அது ரா மாயணம் அறிவாய்!
சீரிய நம்மை மூடரென் றாக்கச்
செய்தது வே புராணம் தெரிவாய்!
மானமி ழந்தே வாழ்வதோ தோழா,
வாய்ந்த உன் பகுத்தறி வெங்கே? (வீழ்வதுவோ)

## 27. புராணப் புரட்டு

(அன்னையும் தந்தையும் தானே எ. மெட்டு)

பொய்மிகும் புராணங்கள் ஏனோ?–மக்கள்
புலனழித் தேயறி யாமை புகுத்தும் (பொய்)

மெய்யென்ப தவைகளின் ஏது?–எங்கும்
விளைவுறா நிகழ்ச்சிகள் விளம்ப லல்லாது!
உய்யும் வழி யென்பார்; சூது!–அவை
உரைப்பன தீமையென் றோது! (பொய்)

மக்களின் அறிவினை மாய்க்கும்!–நல்ல
மான வுணர்ச்சியை இல்லாது தேய்க்கும்!
மிக்க துயர் வாழ்வு சேர்க்கும்!–பொல்லா
வெறியூட்டி அன்பினைத் தீர்க்கும்! (பொய்)

●●●

## 28. இராமாயணத்தில் நீதியா?

(இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் எ. மெட்டு)

பாலைவெ றுத்துநீ வேம்பின் சாற்றைப்
பருகிட எண்ணிய தேன் தமிழா?
ஞாலம் புகழ் தமிழ் நீதிவிட்டே
ராமாயண நீதி போற்றுவதேன்? (பாலை)
தாரணி யாண்டிட ஆவல் கொண்டே
தந்தையைச் சத்தியம் மீறிச் செய்தோன்,
நேரியன் ஆவனோ? மாநிலத்தோர்
நிந்தனை செய்வதை நீ மதித்தாய்! (பாலை)
மாற்றார் மனைவியும் "தாயார்" என்றே
மதித்திடும் தமிழ்நெறி நீ மறந்தே,
ஆற்றாவெம் பகையினால் தமிழ்மகளை
அவமானம் செய்தோரை நீ புகழ்ந்தாய்! (பாலை)
பெண்ணிடம் வீரத்தைக் காட்டியோனைப்
பெருவீர னிடம்பேடி யானவனை,
மண்ணிடை "வீர" னென் றேயுரைத்தாய்!
மதியெங்கே? உன் தமிழ் மார்க்க மெங்கே? (பாலை)

நம்விரல் கொண்டேநம் கண்ணைக் குத்தும்
நயவஞ்சர் போல் தமிழ்க் குலமழித்தோர்,
இம்மை மறுமைக்கும் தெய்வமாமோ?
ஏனோ உனக்கிந்தப் பாழறிவு? (பாலை)
சம்புகன் என்றொரு சூத்திரனும்
தவஞ் செய்தான் அதுகுற்றம் என்றுரைத்தே,
அம்புவி தூற்றிடத் தலையறுத்தான்!
அவதார புருஷனாம் ராமனென்பான்! (பாலை)
சீரிய செந்தமிழ் வாழ்வழித்தே
திண்டாடிச் சாக நமை விடுத்த,
ஆரிய நீதிதான் உனக்கினித்தால்
அந்தோ இனியும் நாம் வாழ்வ தெங்கே? (பாலை)

☆☆☆

## 29. திருந்துவாய் தமிழா

(களங்கமில்லா மதியின் ஒளிவிளங்கும் எ. மெட்டு)

கம்பரா மாயணத்தில் காதல்கொண்ட என்தமிழா,
வம்பளந்து பேசுவதேன் வாய்ந்தநிலை யறிந்ததுண்டா?

தொகையரா

நம்பகைவர் நமக்களித்த நஞ்சமுதை
நன்றென்றே நீ ஏற்றதால்,
செம்மையுறும் தமிழ்வாழ்வை நீ மறந்தே
சீரழியச் செய்ய லானாய்!

பாட்டு

அன்புடைய ராவணனை அரக்கனென்றே சாற்றுகின்றாய்!
வான்புமிகும் ராமனைநீ மனமுவந்தே போற்றுகின்றாய்!

தொகையரா

அன்னநடைச் சீதையினை அபகரித்தோன்
அறநெறிச் செயல் மறந்ததேன்?
கன்னல்மொழிச் சூர்ப்பனகை எழில் சிதைத்தோர்
கயமைமிகு செயல் சிறந்ததேன்?

பாட்டு

தமிழ்மகளைப் பங்கம்செய்த சண்டாள நீசர்களை
அமைந்த நாண் வெட்கமின்றி அவதார புருடரென்றாய்!

தொகையரா

சுமப்பரிய பழிச்சொல்லைச் சுமந்தாய் நீதான்
சுகவாழ்வு காண்ப தெங்கே?
நிமிர்ந்த தலை தொங்கவிட்டும் நீயதனை
நேர்மை யென்றாய்; உயவர்வ தெங்கே?

பாட்டு

உரம்பெற்ற வாலியினை ஒளிந்து கொன்ற பேடியினைப்
பெரும் புகழ் வீரனென்று பேசவும்நீ கூசவில்லை!

தொகையரா

பிரைபெற்ற பாலெனவே நீதிரிந்து
பிழைசெய்தாய் தமிழ் வாழ்வுக்கே!
குரங்கென்றும் அரக்கரென்றும் உன்மரபைக்
கூறுகின்றாய் அறிவிழந்தே!

பாட்டு

குலங்கெடுத்த கோடரியைக் கூசிடாமல் ஆழ்வாரென்றாய்!
மலையெடுத்த தோளனைநீ மதியிழந்தே தூற்றுகின்றாய்!

தொகையரா

நிலையிழிந்தாய் உன் சரிதை யறியாமல்!
நெருப்போடு நேசங் கொண்டாய்!
கலையென்றால் மானத்தை இழப்ப துண்டோ?
கடுமூட மதியை விடுவாய் (கம்ப)

✡✡✡

## *30. திருந்துவாய் தமிழா*

**(சிதம்பர நாதா எ. மெட்டு)**

பல்லவி

உலகில்விஞ் ஞானம் உயர்ந்திடக் கண்டே
உன்னுளம் திருந்திடுவாய்;
உயர் நல மது பெறத் தமி ழாநீ! (உலகில்)

அனுபல்லவி

பலபலவாம் அறிவுக் கலைகள்
பயனுற வளர்த்தே நலனடைந் தார் புவியோர்! (உல)

சரணங்கள்

மூடத்தன்மை வளர்க்கும்—நூல் தம்மை
மும்மைப் பயன்தரும் என்றுரைத் தாயே!
வாடும் வாழ்வு கொண்டாய்—அதன் பலனாய்!
வாதேன்? துயரது போதும்! என் தோழா, (உலகில்)

நல்ல றிவுக் கலைகள்—செய்வாய் நீ
நாளுநம் வாழ்வுமுன் ஓங்கிட வேண்டி!
பொல்லாச் சூழ்ச்சிப் புராணம்—இதிகாசம்
போதும்! இனி அவை வேண்டாம்! வேண்டாமே! (உலகில்)

## ஊ. மூட வழக்கப் பகுதி

### *31. சடங்கில் மோகமேன்?*

(தாயே எனக்கு விடை எ. மெட்டு)

மூடச் சடங்கில் மோகம் கொண்டதேன் தோழனே?
மோட்சக் கதையை நம்பி—அறிவிழந்தே (மூடச்)

தேடிய பொருளைத் தீர்த்திடும் அதுதான்!
திண்டாடச் செய்துவிடும்!—கடன்விளைக்கும்! (மூடச்)

வாடிடும் வாழ்வை யளித்திடும்! தீய
வறுமை புகுத்திவிடும்!—அதையறிந்தும் (மூடச்)

மானமழிக்கும்! மதியினைத் தொலைக்கும்!
ஈனமாம் வாழ்வளிக்கும்!—இடர்விளைக்கும்! (மூடச்)

சடங்குக ளாலே தவிர்ந்திடு மோதுயர்?
சமதர்மம் ஒன்றாலன்றிச்—சுகமுண்டாமோ? (மூடச்)

## *32. திருமணத்திற் சடங்கேன்?*

(கண்டதுண்டோ கலியுகத்தில் எ. மெட்டு)

மானிலத்தில் ஆணும் பெண்ணும் வாழ்வினி லின்பம்–வேண்டி
மாமணம் செய்வதிலே மூடச்சடங்கேன்?
தேனமுதத் தீந்தமிழைப் புறக்கணிப்பதேன்?–பொருள்
தெரியாவட மொழியை யதில் போற்றிடுவதேன்?

சிந்தைதனில் இருளடைந்த தீமையீ தன்றோ?–மிக்க
சீர்த்திதரும் பகுத்தறிவைச் சீறிடல் நன்றோ?
தீது கொண்டீர்! போதும் போதும்!

தீயதொரு புரோகிதத்தை ஒட்டிடுவீரே!–இன்பஞ்
சேர்ந்ததொரு மானவாழ்வை நாட்டிடுவீரே! இந்த–மானிலத்தில்

## *33. திதி செய்வதேன்?*

(ஆடு பாம்பே எ. மெட்டு)

மூடச்செய்கை!–இது–மூடச்செய்கை!
மோட்சம் பெறலா மென்ற மூடச் செய்கை!

வாடி வ ருந்திடும் ஏழைமக்களே–மிக
வறுமையி னால்சாகும் ஏழைமக்களே,
தேடிய பொருள் தனை ஏழைமக்களே–நீர்
திதிசெய் தழிப்பதேனோ ஏழைமக்களே?

பாடுபட்டீர்!–தினம்–பாடுபட்டீர்!
பலனென்றுங் காணாமலே கேடுகெட்டீர்!

மாண்டவர்க் கேபசி ஏழைமக்களே–மிக
வருந்திடு மோ சொல்வீர் ஏழைமக்களே?
ஈண்டவர் பூதவுடல் புதைத்தெரிக்கக்–கண்டும்
ஏனோநீர் அதைநம்பி உழலுகின்றீர்?

வேண்டாமையோ!–திதி–வேண்டாமையோ!
வீணிற் பொருளழித்தல் வேண்டாமையோ!

எத்தனை யோ ஜென்மம் என்றுரைத்தார்—அவர்!
எதற்குப் போய்ச் சேரும்நீர் கொடுப்பதெல்லாம்?
செத்தவர்க் கேயவை சேர்ந்ததென்றே—ஒரு
சேதிகிடைத்த துண்டோ பாழுமக்களே!

பித்தர்போலே—நீர்—பித்தர்போலே
பிதற்றித் திரிவதேனோ நித்த நித்தமே?

மான்பன்றி மீன் ஆமை மாடாடு—முதல்
மாம்ச ஊண் பார்ப்பனர்க் கேயளித்தால்,
வான்புகுந் தோர் மோட்சம் செல்வரென்றே—அந்த
மனுதர்ம சாத்திரம் கூறிடுதே!

ஏன்விடுத்தீர்?—அதை—ஏன்விடுத்தீர்?
ஏற்போருக் கேமதியை ஏன் கொடுத்தீர்?

பகுத்தறி வில்லையோ ஏழைமக்களே?—பொல்லாப்
பார்ப்பான் வயிறோ மோட்சம் ஏழைமக்களே?
மிகுத்திடும் அறியாமை கொண்டு வாழ்வதோ?—நம்மை
மேனாட்டு மாந்தரெலாம் கேலி செய்வதோ?

பகுத்தறிவீர்!—இனிப்—பகுத்தறிவீர்!
பாழும்பு ரோகித்தை உடைத்தெறிவீர்!

## *34. திதிப் புரட்டு*

(சத்வகுண போதன் எ. மெட்டு)

ஏனோ அறி யாமை கொண்டாய் என்தோழா!
இறந்தவர்க் கேதிதி செய்வதேன் சொல்வாய்? (ஏனோ)

ஊனுறும் உடல்விட்டு நீங்கிடும் உயிர்க்கே
உறுபசி தோன்றுமோ உரைத்திடு வாயே? (ஏனோ)

புள்முதல் விலங்குகள் புழுவரை சாகப்
புரோகிதன் அவற்றிற்குத் திதிசெய்வ துண்டோ? (ஏனோ)

மோட்ச ந ரகந்தனில் ஊனுடை இலையோ?
மோசப் பார்ப்பான் சொல்லை நீநம்பல் சரியோ? (ஏனோ)

திதி திவ ஷந்தனில் தந்திடும் யாவும்
தின்பவர் யார்? அதை நேரில் நீ கண்டும் (ஏனோ)

உயிரினுக்கே பசி உண்டெனில், காதல்
உற்றிடாதோ? அதற் கென் செய்தாய் சொல்வாய்! (ஏனோ)

வீணேநீ புரோகிதன் சொற்படி ஆடி,
வெந்துயர் வாழ்வுகொண் டுழல்வதேன்? உணர்வாய்! (ஏனோ)

▼▼▼

## *35. பண்டிகை ஏன்?*

(மானார் தொழும் தெய்வ எ. மெட்டு)

பண்டிகை ஏனுனக்குத் தோழனே?–பாழ்படுத்தும் (பண்)

திண்டாடிச் சாகுமொரு வாழ்வு பெற்றாய்!–மிகத்
தீமைவை தீகத்தால் தாழ்வு முற்றாய்!–இன்னும்
தீரா வறுமையேற்க வேண்டுமா?–சிந்தித்துப்பார்! (பண்)

ஆரியர் திராவிடரை மாய்த்த சூழ்ச்சி–அதை
அறிவித்தார் பண்டிகை என்றுனக்கே!–நீ
அறியாமல் அதனையொப்ப லாகுமா?–ஆராய்ந்துபார்! (பண்)

தமிழ்மானம் நீமறந்து வாழ்வதேனோ?–உன்
தன்மதிப்பி ழந்தால்தூய வாழ்வுண்டாமோ?–பொல்லாச்
சதிமிகுந்த புராணத்தை விடுவிடு!–உணர்வுபெறு! (பண்)

◆◆◆

## *36. நமது மூடநம்பிக்கை*

(மன்மத லீலையை எ. மெட்டு)

இத்தனைக் கடவுள்கள் ஏனோ சொல்வீர்?
என்னே இது மடமை!–இந்நாட்டினில் (இத்)

பித்தரைப் போலநாம் பிதற்றிட லாகுமோ?
இத்தரை மீதினில் எங்கிது போலுண்டு? (இத்)

மூவரென் றுரைத்தார் தேவர் என்றார்
மோசம் அவர் நடத்தை;—மற்றும்

மேவும்பல தெய்வங்கள் செயலெலாம்
விந்தை விளைந்திடுமே!

யாவும் அறியாமல் ஏதேதோ உரைக்கின்றீர்!
எல்லாம் பெரும் புளுகே!

தாவிடும் இன்ப வாழ்வினைத் தடுத்தல்
சரியோ உரைத்திடுவீர்?—நகைதரும் (இத்)

✳✳✳

## 37. மதி பெறுவாய்

(மனங்கனிந்தே சிவதானந் தந்தாள்வாய் எ. மெட்டு)

பல்லவி

விதியெனவே நீ சொல்வதேன் தோழா? (விதி)

அநுபல்லவி

மதிதுணை கெண்டோர் வாழ்வினைக் காண்பாய்;
வளமுறும் இன்ப நலமவர் கண்டார்! (விதி)

சரணம்

காரணம் எதற்கும்நீ காண்பதற் கின்றிக்
கண்மூடித் தனமாய் நம்புவதேனோ?
பேரிருள் வாழ்வுதான் உனைவிட் டகலுமோ?
பேதமை நீங்கிநல் அறிவுகொள் வாயே! (விதி)

✳✳✳

## 38. தீமை தொலைக!

(வளமார் எமது திராவிடநாடு எ. மெட்டு)

வீழ்க வீழ்கவே!
விதியும் மதியழித் திடும்பல கடவுளும் (வீழ்க)

வீழ்க ஆரியம் விளைத்திடும் சூழ்ச்சி!
வீழ்க புராணேதி காசத்தின் புளுகு!
விழ்க மூடவ ழக்கங்கள் யாவும்!
வீழ்க வெந்துயர் தரு மநுநீதி! (வீழ்க)

ஆய்ந்த அறிவுடைத் திராவிடர் தம்மை
அறியா மைதனில் மூழ்கிடவைத்தே,
தேய்ந்த வாழ்வினைத் தந்துவ ருத்தும்
சிறுமை நெறிபுகல் தீயம தங்கள் (வீழ்க)

சூழ்க சுதந்தர சமத்துவ உரிமை!
சுடரின் ஒளிபோல் பரவுக அறிவு!
வாழ்க திராவிடம்!வாழ்கநற் றமிழே!
மாய்க வறுமையோ டடிமையு மிடிமை! (வீழ்க)

தேனின் சுவையெனும் வாழ்வினி தோங்க!
சீர்த்திக் கலைபல செழித்து வளர்க!
மானின் விழியனார் அடிமை ஏக!
மக்கள் யாவரும் இன்புடன் வாழ்க!

OOO

## எ. தொழிலாளர் பகுதி

### *39. தொழிலாளர் நிலை*

(வாசங் கமகமென எ. மெட்டு)

தொழிலாளர் வேலையின்றித் துடிக்கின்றார்; பெண்டு பிள்ளை
சோகமே உருக்கொண்டு வாடுகின்றார்!–மனத்
தாபமே கொண்டு வீணில் மாளுகின்றார்!–முழத்

தொந்திச ரித்திட மற்றொரு கூட்டமும்
விந்தையாம் வாழ்வினில் ஆடிடும் ஆட்டமும்

சொல்லவே நாணும்! அவர் சுகபோகம்–அந்தோ,
கொல்லுதே ஏழையரைப் பரிதாபம்!

புவியின் பொதுப் பொருளைத் தமதென்றே எண்ணி உளம்
பொங்கியே கொள்ளை கொண்டார் முதலாளர்!–மனம்
வெம்பியே துயர் கொண்டார் தொழிலாளர்!–நிதம்

போதனை செய்திடும் வேத மதங்களும்
சாதனை யேசெயும் அன்னவர்க்கே!–அந்தச்

சூழ்ச்சியை யுடைத்தெறிவ தெக்காலம்?–மத
ஆட்சியை முறியடிப்ப தெக்காலம்?

கொடுமை தவிர்ந்தே இன்பம் கோரிடில் மக்கள் ஒன்று
கூடியே பேதநிலை போக்கவேண்டும்!–குறி
நாடியே சமதர்மம் நாட்ட வேண்டும்!–ஒரு

குற்றமி லாதநல் வாழ்வினைக் கண்டுநாம்
வெற்றியு டன்முழு விடுதலை பெற்றிடக்

கூறிடும் சுயமரி யாதை கீதம்–இந்தப்
பாரினில் ஏழையர்க்கோர் நற்போதம்! (தொழிலாளர்)

***

## *40. வாழ்வழிக்கும் நச்சு!*

(செந்தில் நாயகமே எ. மெட்டு)

பல்லவி

வாழ்விற் சுகமேது?–நண்பா,
வறுமை நமைத்தின மரித்திடும் (வாழ்)

அனுபல்லவி

தாழ்வுயர்வு சொல்லித் தரணியின் போகமதைத்
தமதென வேகொள்ளும் ஆரியம் உள்ளவரை (வாழ்)

சரணம்

சூழும்முத லாளர் செல்வ வான்கள் வேறு
சுரண்டு மிந்த நாட்டில் சுகமுண்டாமோ?
பாழுக் குழைப்பதோ? பகுத்தறிவாய்நீ!
பாட்டாளி சுகம்பெறச் சமதர்மம் ஒன்றன்றி (வாழ்)

## 41. துயர் தொலைவ தெந்நாள்?

(அன்னையே அன்புடன் எ. மெட்டு)

தோழனே உன்துயர் தொலைவ தெந்நாளோ?
தூயநல் வாழ்வினை அடைவதெந்நாளோ?—சுகம்
பெறுவ தெந்நாளோ?

ஏழைமை கொண்டே—நீ—ஏங்கிடலானாய்!
ஏனிந்த வாழ்வே!—உனக்—கிது பெருந் தாழ்வே!
எங்கும் யாரும் சமமே! இன்பம் யார்க்கும் பொதுவே!
இதைநீயறியாததேன்? (தோ)

இந்நில வுலகினில் நீயும் மனிதனே!
ஏழைமை உன் சொத்தோ? ஈதெலாம் விதியோ?
சொந்த மதி கொள்வாய்—நீ
சூழ்ச்சி யுரை தள்வாய்!
துன்பமே தந்திடும் வைதிகந் தொலைப்பாய்!
தோன்றிடும் இன்பமாம் வாழ்வதிற் களிப்பாய்! (தோ)

✦✦✦

## 42. காரணம் எது?

(மனமே கணமும் மறவா தே எ. மெட்டு)

விதியோ மதியின் குறையோ காரணம்
வெந்துயர் வாழ்வினுக்கே?—உன்றன் (விதியோ)

விதியே என்றிடில் வீண்மதி கொண்டாய்!
மேன்மை வாழ்வு சிலர்க்கேன்?
வெந்துயர் வாழ்வினுக்கே—உன்றன் (விதியோ)

இன்பவாழ்வு யாவர்க்கும் பொதுவே!
இதை யறி யாமல் இருப்பதேன் தோழா?
வன்புகொள் மத போதனை நீவிடுவாய்!
வெந்துயர் வாழ்வினுக்கே—உன்றன் (விதியே)

வீர ரஷிய நாட்டை நோக்கு!
மேல்கீழ் என்ற வாழ்வங்குண்டோ?
விதியை விட்டே மதிதுணை பெற்றார்! உயர்ந்தார்!
வெந்துயர் வாழ்வினுக்கே – உன்றன் (விதியோ)

## 43. சுகவாழ் வெங்கே?

(சொப்பன வாழ்வில் மகிழ்ந்தே எ. மெட்டு)

அற்ப சுகமென் றிகழ்வார்—இவ்வுலக வாழ்வை
அறிவிழந்தே—அந்தோ!
வெற்பெனுந் தோள்தமிழா—அதை நீநம்பி
வெந்துயர் கொள்வது வோ?

மறுமையிற் சுகவாழ்வோ?—அதையடைய
வாழ்வதோ நீயிங்கே?—அந்தோ,
இறந்த பின் யாரறிவார்—சுகமதனை?
ஏனிந்தப் பாழ் மதியே!

துன்பம் நிறைந்த தென்றாய்!—வைதிகவாழ்வில்,
தொல்லையல்லால் வேறுண்டோ?—என் தமிழா
இன்பம் ஒளிர வேண்டின்—உனது வாழ்வில்
ஏற்பாய்நற் சமதர்மமே! (அற்ப)

***

## 44. தோழனே, கேள்!

(செல்வமே யுனை தேவி காத்தல் வேண்டும் எ. மெட்டு)

இராகம் : கலாநிதி — தாளம் : தேசாதி.

பல்லவி

தோழனே கேளாய்! தூயவாழ் விழந்த (தோ)

அனுபல்லவி

ஏழைமை கொண்டாய் இன்னல் வாழ்வில் நாளும்
ஏங்கி வாடு கின்றாய் தாங்கமுடியாமல்! (தோ)

சரணம்

காரணம் எதற்கும் நீ கண்டது மில்லை;
கருதினாய் இதுவரை விதியெனும் சொல்லை!
தீரயோசிப் பாயே தீமைக்கெல்லாம் நீயே!
சிந்தனை யிழந்தாய் வந்த பயன் ஈதே! (தோ)

ஆசைவார்த்தை கூறும் வேசையன்னார் சொல்லில்
அறிவி ழந்தே நீயும் தமிழ்வாழ் வழித்தாய்!
மோசங் கண்டே உன்றன் மூடத்தன்மை போக்கு!
முற்றும் சமதர்ம வாழ்வினையுண் டாக்கு! (தோ)

***

## 45. மதத்தில் மோகமேன்?

(வள்ளிக் கணவன் பேரை எ. மெட்டு)

துன்பக் கடலில் நிதம் தொழிலாளர் தம்மை வீழ்த்தி
என்றும் வருந்திடுமோர் – மதத்தில்
ஏனோ மோகங் கொண்டாய்?

வர்க்க உணர்ச்சி என்றாய்; வாதுகள் பேசுகின்றாய்!
மிக்குள பேதமிங்கே–போமோ?
வீண்மதம் போற்றுவதேன்?

தொழிலாளர் தமக்காகத் தோன்றிய ஒருமதம்
பழகுமிப் பாரினிலே–நீதான்
பார்த்ததுண் டோ உரைப்பாய்?

பிறவிமு தலாளர் தமைப்பெருக் கிடும் மதம்
அறவே யொழிந்திடாமல்–தோழா,
அஞ்சுக வாழ்வுண்டாமோ?

பேதம் ஒழித்திடுவாய்! பீடை மதம் விடுவாய்!
ஓதும் சமதர்மமே–நாட்டில்
ஓங்கி வளர்ந்திடுமே! (துன்பக்)

***

## 46. கடவுள் புரட்டு

(இந்தியத்தாய் மக்களென்னும் பேருதான் எ. மெட்டு)

கண்ணி

கடவு ளென்ற சொல்லில் மோசம் போனோமே!–ஒரு
காத றுந்த ஊசி பலன் காணோமே.

முடுகு

கடவுள் கடவுள் என்றெ தற்கும் கழறுகின்ற நாட்டிலே,
கடுமை யான பசிப்பி ணியால் உயிரொடுங்கக் கூட்டிலே
நடைப் பிணமாய் வாழுகின்றோம்! வெயிலெரிக்கும் காட்டிலே
நாளு முழைத் தாலும்படி அரிசியில்லை வீட்டிலே!

கண்ணி

நன்று யோசிப் பீரே என்றன் தோழரே!—நம்
நலிவு தீர மார்க்க முண்டோ தோழரே?

தொகையரா

அவனன்றி ஓரணுவும் அசையாதென் றுரைத்திட்ட
அசடு மொழியை நம்பிச்
சிவனென்றும் அரியென்றும் சில்லறைகள் பலவென்றும்
ஜெகத்தில் சொன்ன (கடவு)

கண்ணி

கண்ட கண்ட கோயிலெங்கும் சென்றோமே!—நம்
கைப்பொரு ளெலாமிழந்து நின்றோமே!

முடுகு

காட்டில் வாழும் முனிகள் பேய்கள் காத்தான் வீரன் இருளனும்,
காளி கூளி மாரி யாயி கன்னி வீரி சூரியும்,
வீட்டுத் தெய்வம் நாட்டுத் தெய்வம் வீதி தெய்வம் யாவையும்
வேண்டி வேண்டிப் பூசையிட்டும் மேன்மை கொண்டோ மில்லையே!

கண்ணி

மேலும் மேலும் வாடுகின்றோம் தோழரே!—நம்
விதியிதுவோ கூறிடுவீர் தோழரே!

தொகையரா

நாறுகின்ற வைதீக மதஊழல் வாதத்தால்
நாட்டு நலங் கெடுத்து வந்தார்!
வீறுகொண்ட அறிவாளர் நற்போதம் இகழ்ந்தவரை
வீணாக மாய்த்து வந்தார்! (கடவு)

கண்ணி

மடமையான போதம் நம்பி வாழ்ந்தோமே!—பொல்லா
வைதிகத்தின் சூழ்ச்சிக்கேஏ மாந்தோமே!

முடுகு

மாமலைகள் மரம்செடிகள் மண்ணும் விண்ணும் கடவுளென்றார்!
மக்களுள்ளே ஒரு சிலரும் மதிரவியும் கடவுளென்றார்!
ஆமைபன்றி கழுகு காக்கை அரவுமச்சம் கடவுளென்றார்!
அந்தோ கண்ணில் கண்டதெல்லாம் அறைந்தார் காக்கும் கடவுளென்றே!

கண்ணி

அவற்றிற் கொல்லாம் பூசைபோடா திருந்தோமா?—நாம்
அதன்பலனாய் என்ன கண்டோம்; சிறந்தோமா?

தொகையரா

சிந்தைமிகத் துடிதுடித்தே வாழ்கின்றோம் நம்குறையைத்
தீர்க்க ஒரு கடவுளில்லை!
நந்தம்செய லல்லாது வேறுண்டோ? சமதர்மம்
நாட்டுவீர் இன்றேல் தொல்லை! (கடவு)

☆☆☆

## *47. திராவிடத் தொழிலாளர்க்கு!*

(பூமியில் மானிட எ. மெட்டு)

சீர்மிகுந் திராவிட நாட்டில்வாழ் தோழரே,
சிந்தனை செய்குவீர் உம் நிலையை!
பேர்பெறும் சமதர்மம் நமதுநோக்கம் உண்மை!
பெறும்வழி யாதெனக் கூறிடுவீர்?

மேலைநாட் டார்வர்க்கப் பேதமொன் றல்லாமல்
மேல்கீழ் பிறவியில் கொண்ட துண்டோ?
ஞாலத்தி லில்லாத பேதங்கள் நாம்கொண்டோம்!
நாலாயி ரம்சாதி எங்குண்டு?

பிறவியில் சமமெனக் கொண்டவர் வர்க்கமாம்
பேதத்தை ஒழித்திட முயலுகின்றார்!

நிறைந்திடு பேதத்தை நீர்வளர்த் தேவர்க்கம்
நிர்த்தூளி செய்வோ மெனில் அறிவாமோ?

எழுத்தறி யாதவன் இலக்கியம் படித்திட
எண்ணிடின் உலகினர் சிரியாரோ?
இழித்திடும் பேதங்கள் ஏகிடச் செய்யாமல்
இயம்பிடில் சமதர்மம் சரியாமோ?

அறிவினை மாய்த்திடும் சாத்திர மதமெலாம்
அகற்றிடுந் துணிவுநீர் பெற்றதுண்டோ?
சிறுமைவி ளைத்திடும் சடங்குவ ழக்கங்கள்
செய்வதை விட்டிடத் துணிந்த துண்டோ?

சாதியை மதந்தனைக் காத்திடும் பார்ப்பனர்
சமதர்மம் பேசினால் நம்புகின்றீர்!
தீரினைப் போக்குவோர் அறிவுரை கூறினால்,
தேசத்து ரோகியெனச் செப்புகின்றீர்!

பலபல பூசல்கள் பிணக்குகள் வளர்த்துமே
பகுத்தறி வைமறுத் திடும் நீங்கள்,
'உலகினில் வாழ்தொழி லாளரே நீரெலாம்
ஒன்றுசே ருங்க' ளென்றால், நகையாரோ?

வாய்ந்திடும் பேதவி ரோதம் வளர்த்திடும்
வைதிகம் முதன்முதல் தீர்த்திடுவீர்!
சூழ்த்திடும் சமத்துவம்; யாவரும் கூடியே
சுலபமாய்ச் சமதர்மம் அமைத்திடலாம்!

திராவிட நாட்டினில் வாழ்தொழி லாளரே,
சேர்த்திடுவீர் ஒன்று மதம் விடுத்தே!
இராவிடம் இல்லை யிவ் வுலகினில் நம்புகழ்
என்ற நிலைதனை விதித்திடுவோம்!

✪✪✪

## 50. மீட்சிக் குழைப்பாய் தோழா!
(என்ற னிடதுதோளும் எ. மெட்டு)

உன்றன் நாட்டிலே பேதம் ஒழித்திட மறுத்து நீ
உலகினை ஒன்றுபடச் சொல் வதேன் தோழா?
நன்றோ இதனைச் சிந்தி யாமல் இருப்பதென்னே?
நலந்தரும் பாதைவிட்டுச் செல் வதேன் தோழா?

பிறவியில் பேதங்கொண்டு வாழ்வோர் பொதுவுடைமை
பெற்றதைக் கண்டதுண்டோ சொல் சொல் சொல் தோழா?
அறிவை யடகுவைத்தே ஆத்திகம் போற்றுகின்றாய்!
அகல்வதுண் டோ துயர் சொல் சொல் சொல் தோழா?

பேதம் வளர்க்கும் மத சாதி சாத்திரங் காத்துப்
பீடைவாழ் வேற்றாயதைக் கண்டும் ஏன் தோழா?
போதம் வெறுத்தே காலம் போக்குகின்றாயே வீணில்!
போலிகள் வார்த்தையினில் நாட் டம் ஏன் தோழா?

கோட்டையில் குத்தும் வெட்டும் நடக்கையில் மாற்றானிடம்
கொள்வதுண் டோ வெற்றி சொல் சொல் சொல் தோழா?
வேட்டை யாடுவோர்க்கிரை யாவதோ உன்றன் விதி?
மீட்சிக் குழைத்திடமுன் வா ராய் நீ தோழா?

✧✧✧

## 51. இன்ப வாழ்வு பெறுவோம்!
(ஞானப் பண்டித மோதிலால் எ. மெட்டு)

வாழ்வினில் இன்பம் பெறுவோம்!
வளம் நிறைந்து (வாழ்)

தாழ்வுயர் வகன்றே சமத்துவம் பெறுவோம்!
சகந்தனில் மேன்மை யுறுவோம்!–சஞ்சலம் ஏக (வாழ்)

தொகையரா
பாழான முதலாளர் செல்வர்கள் கொண்டிடும்
பாழ் எண்ணந் தனைத் தொலைத்தே

பாட்டாளி மக்களைப் படுத்திடுங் கொடுமையைப்
பாரினில் ஏக விடுத்தே,
தாழ்வான எண்ணமே கொண்டுநமை வாட்டிடும்
சர்வாதி காரம் ஒழித்தே
சமமுடன் யாவரும் இன்பமாய் வாழ்ந்திடச்
சமதர்ம ஆட்சி யமைத்தே,

பாட்டு

சீரிய வாழ்வினிலே சிறந்துவி ளங்கிடுவோம்!
தீயதாம் மதம் ஒழித்தே—சிறுமை யில்லா (வாழ்)

★★★

## எ. வேண்டுகோட் பகுதி

### *52. தமிழா, ஏன் இந்நிலை?*

**(மனமே நீ ஈசன் நாமத்தை எ. மெட்டு)**

தமிழா நீ ஏனோ வாழ்வினில்
தாழ்ந்தனை? மிகத் தாழ்ந்தனை?
அமுதெனும் வாழ்வில் அகங்களித் திருந்தார்!
ஆர்ந்த நற் கீர்த்தியில் வாழ்ந்தநம் முன்னோர்! (தமிழா)

அந்த வாழ்வுதனை அறியவு மறந்தாய்!
அடிமை நிலையிலுன் மிடிமை யோங்கிடவே,
அதிசோகஞ் சகியாமல் வறுமை யோடே
அனுதினமும் கசிந்துருகி மனமுடைந்தாய்! (தமிழா)

ஆரியர் வருமுன் நேர்ந்ததோ துன்பம்?
அவர்வர வாலே தீர்ந்ததே இன்பம்!
பூரிய ரன்னார் புளுகினை நம்பிப்
பூண்டாயிக் கோலம் துயரினால் வெம்பி! (தமிழா)

கொடுமத பேதம் போக்கிடுவாயே!
குறையெலா மேக முனைந்துழைப் பாயே!
சுடுநெருப் பன்னார் சூழ்ச்சிகள் மாயச்,
சுயமாரியாதை நீ பெறுவாயே! (தமிழா)

## 53. சிந்தித்த துண்டா?

(பூதலம் போற்றும் எ. மெட்டு)

தோய்ந்தநல் இன்பம் வாய்ந்தநம் நாடு
தூய்மை நெறியினின்றும் மாறிட லாச்சே!
ஆய்ந்த நற் கலைகள், அருந்தமிழ், வீரம்,
அன்புசேர் சுகவாழ்வும் அழிந்திட லாச்சே!

தொகையரா

சாய்ந்ததே நீதியந்தோ! சகமது தந்த கீர்த்தி,
சமத்துவம் யாவும் போச்சே!
வாய்ந்ததே தீமையிங்கு வறுமையும் சிறுமை பேதம்
வஞ்சமும் நிறைய லாச்சே! (தோ)

பாட்டு

சீருற்ற நாடு பேரற்றுப் போன
காரணம் யாதெனச் சிந்தித்த துண்டோ?
ஆரியர் வருமுன் நேர்ந்தஇக் குறைகள்
அருந்தமிழ் நாட்டினில் நீ கண்ட துண்டோ?

தொகையரா

வீரமே சிறிதுமில்லா வெங்குணத் தாரியங்கள்
விதித்ததை நம்பிக் கெட்டாய்!
போரா சழிவதற்கும் பேதங்கள் வளர்வதற்கும்
பீடைச் சாத்திரம் தொட்டாய்! (தோ)

பாட்டு

ஏனிந்த வாழ்வு? என்தமிழ்த் தோழா,
இசைபெற்ற தமிழரின் சந்ததி நீயா?
மானமே தமிழர் மாண்பென அறிவாய்!
ஈனநிலை போக்க இன்றேநீ முயல்வாய்!

தொகையரா

நானிலந் திகைக்கும் வண்ணம் நற்றொண்டே புரிந்துயர்ந்த
நமதுயிரன்ன பெரியார்,
தேன்மொழித் திராவிடம் திராவிடர்க் கென உரைத்தார்
சேவையே புரிய வாராய்! (தோ)

## 54. திருந்துவாய் தமிழா!

(உளியிட்ட கற்களெல்லாம் எ. மெட்டு)

இராகம் : இந்துஸ்தான் தாளம் : ஆதி

புகழினால் உனது முன்னோர் – இந்தப்
புலியினைச் சிறுக வைத்தார்!–தமிழா!
இகழினால் நீ சிறுத்தாய்–எலிபோல்!
ஏனோ இக் குறைமதியே?–என்தமிழர்!

தொகையரா

சுகவாழ்வி லின்புற்றார் பண்டைத்தமிழ் அறிவாளர்!
சுதந்தர மாக வாழ்ந்தார்!
இக வாழ்வை நீ இகழ்ந்து, பரவாழ்வில் ஆசைகொண்டே
எல்லோர்க்கும் அடிமை யானாய்!

பாட்டு

நாயென வாழுகின்றாய்–இந்த
நானிலம் சிரித்திடவே–தமிழா!
'சீ' என வேரழித்தார்–பகையைச்
செந்தமிழ் வீர ரந்நாள்–என் தமிழா!

தொகையரா

தூயநல் அறிவிழந்தாய்! சுதந்தர உணர்விழந்தாய்!
தொல்லைமேல் தொல்லை கண்டாய்!
தீயதோர் சாதிபேதம் தீண்டாமை மூடக் கொள்கை
தேசத்தில் நிலைக்க வைத்தாய்!

பாட்டு

பண்டைய தமிழர்களை–நீதான்
பகைவராய்க் கருதி விட்டாய்!–உன்றன்
சிண்டினைப் பிடித்தாட்டும்–பகையைத்
தெய்வமாய்க் கருதிவிட்டாய்–என்தமிழா!

தொகையரா

எண்டிசையும் விளைந்த புகழ் நீயழித்தாய் மதங்கொண்டே!
இன்னும் தோள் தட்ட லாமோ?
திண்டாடிச் சாகும்நிலை நீ கண்ட பலனன்றோ?
திருந்துவாய் திருந்துவாயே! (புகழினால்)

***

## 55. பிடிவாதம் ஏன்?

(கண்டதுண்டோ கலியுகத்தில் எ. மெட்டு)

பகுத்தறிவீர் என்றுரைத்தால் சீறுவதேனோ? – வீணே
பாழும்மூடத் தனத்தில் வாழ்தல் சிறந்தது தானோ?
மிகுந்த அறி யாமைகொண்டு வாழ்ந்தவ ரெல்லாம்–இந்நாள்
மேன்மையுடன் வாழக்கண்டும் திருந்திடா தேனோ?

வகுத்தபழஞ் சாத்திரத்தில் வாழ்வின்ப முண்டோ?–துயர்
மாவறுமை ஈனநிலை தானே நாம் கொண்டோம்!
வம்பேன் சொல்வீர்? நம்பும் உண்மை!
வாழ்வுதனில் பேதங்கொண்டால் வாய்க்குமோ இன்பம்?–நலம்
வாய்ந்த சம தர்மவாழ்வில் ஏதொரு துன்பம்? நன்கு–பகுத்தறிவீர்

☆☆☆

## 56. உண்மைக் குயிர் கொடுப்போம்!

(நாடகமே உலகம் எ. மெட்டு)

பூதல மீதினிலே–உண்மை
பொய்க்குமோ உரைத்திடுவீர்?–இந்தப் (பூதல)

தீதாகிய எண்ணம் கொண்டுவன் னெஞ்சர்
தீவினை புரிந்திட முனையினும், அதனால்
மேதையோர் அறிவினில் தோன்றிடும் உண்மை
வீழ்ச்சிய டையுமோ விளம்பிடு வீரே? (பூதல)

அறிவை யடக்குகின்ற அநீதியாம் செய்கை
ஆர்பார்ட்டம் செய்தாலும் அழிவது நிசமே!
நிறைமதி யோர்பலர் பகைவரால் மாண்டும்,
நிலவுதல் கண்டோம் நாம் அவர் புகல் உண்மை! (பூதல)

திராவிடர் தமக்கொரு நிகரின்றி முன்னாள்
சீருட னேமிக வாழ்ந்தனர்! இந்நாள்,
அராவிடத் தாரியர் அளந்ததோர் பொய்யால்
அடிமையும் மிடிமையும் ஏற்றுமே நொந்தார்! (பூதல)

வானின்கீழ் இருந்துநாம் இடிக்குப் பயந்தால்,
வாழ்வினி லே சுகம் தோன்றுமோ சொல்வீர்?
மானவாழ் வன்றோ நம் உயிரினும் பெரிது!
மார்க்கமின் றேலது சாதலே இனிது!

***

## 57. அறிவு பெறுக!

(ஈ எறும்போடு எ. மெட்டு)

போனது போகட்டும் இனியா கிலும்நீ
புத்தியா யிருந்திடுவாய்!–தமிழா!
ஆனஉன் சீர்மை மறந்து வெம் பகைக்கே
அடிமையாய் ஆகாதே!

தொகையரா

கானெரிக்கும் நிலைவுபோல் காலத்தைக் கடத்திவிட்டாய்
கடுமூட மதியினாலே!
மானிலம் சிரிக்கக் கண்டும் மான உணர்வதை யிழந்தாய்
மணமருள் கொண்ட தாலே!

பாட்டு

சீரிலா வைதிகப் போதையால் உன் புகழ்
தேய்ந்ததை நீ மறந்தாய்!–தமிழா
வீரரின் வழியில் வந்தவ னென்பதும்
வீண்மதத் தால் மறந்தாய்!

தொகையரா

பாரினில் புகழ்விளைத்த பழந்தமிழ் வீரர் தம்மைப்
படுத்திய சூழ்ச்சி யாவும்
நேரிலா முறையி லந்த ஆரியர் சொல்லி வைத்தார்;
நீயதை விழாச் செய்கின்றாய்!

பாட்டு

ஆய்ந்திடின் அறிவினுக் கொவ்வாத சடங்குகள்
ஆயிரம் நீ கொண்டாய்!—தமிழா
தேய்ந்த உன் மதியால் திதி திவஷம் யாவும்
சிறப்புற நடத்துகின்றாய்!

தொகையரா

வாய்ந்தஉன் மூடத்தன்மை மாய்ந்திட—உண்மைகாண
வளர் பகுத் தறிவு கொள்வாய்!
தோய்ந்தநல் இன்ப வாழ்விற் சுகித்திட என்றும் நீதான்
சுயமரி யாதை கொள்வாய்! (போனது)

## *58. தொண்டு செய்ய வாராய்!*

(ஆதர வற்றுவருக் கெல்லாம் எ. மெட்டு)

தூயநல் வாழ்வுதனைக் காண—நாம்
தொண்டு புரிவோம் வாராய் தோழா!
தீயதோர் வைதிக வாழ்வால்—நாம்
சீரற்ற பாழ்நிலை கொண்டோம்!

மானிலம் போற்றிடும் பாதை—அது
மாண்புறும் சுயமரி யாதை!
தேனெனும் வாழ்வை யுண் டாக்கும்!—நல்ல
திராவிட நாட்டினைச் சேர்க்கும்!—காக்கும்! (தூய)

## *59. வைதிகந் தள்வீர்!*

(அன்னையுந் தந்தையுந் தானே எ. மெட்டு)

ஏனிந்த வைதிக வாழ்வு?—நமக்
கிதுதகு மோஎனில், ஏனோ வீண் வாது! (ஏனிந்)

மானமி ழந்திட லாமோ?—தமிழ்
மறவர்நாம் சூத்திரர் என்றொப்ப லேனோ?
ஈனமொ ழிக்கத்தொண்டு செய்வீர்!—புவி
ஏற்றிடா வழக்கத்தைத் தள்வீர்! (ஏனிந்)

சாதியும் பேதமும் வீணே!-இங்குச்
சாற்றிடும் சாத்திர மதங்களும் வீணே!
கோதிலா வாழ்வினைக் கொள்வீர்!-குறை
கொண்டஇவ் வைதிகந் தள்வீர்! (ஏனிந்)

உலகமே உயர்ந்திடும் போது-நாம்
உன்மத்த ரெனும்படி இருத்தல்த காது!
நலந்தரும் சுயமரி யாதைக்க-கொள்கை
நாடெங்கும் பரவிடச் செய்வீர்! (ஏனிந்)

☆☆☆

# ஏ. திராவிடப் பகுதி

## *60. திராவிடக் கொடி*

(ஐயா சிறுபெண் என்ற இசைபோல)

உலகமெலாம் உயர்கவென உயர்ந்தநற் கொடியே!-எம்
உயிரனைய திராவிடத்தை உயர்த்திடுங் கொடியே!-பகை (உலக)
பெயர்த்திடுங் கொடியே!

நலம்பெருகும் வாழ்வினையே நாட்டிடுங் கொடியே!-விஞ்
ஞானமெனும் தேனமுதை யூட்டிடுங் கொடியே!-கொடும்
நஞ்சனைய பேதவாழ்வை ஒட்டிடுங் கொடியே!-துயர்
வீட்டிடுங் கொடியே! (உலக)

ஆந்திரமலை யாளந் துளு கன்னடத் தமிழே-உன்
அங்கமென விளங்க நிமிர்ந் தாடிடுங் கொடியே!-நல்
அன்புமிகுந் திராவிடரைக் காத்திடுங் கொடியே!-புகழ்
சேர்த்திடுங் கொடியே! (உலக)

வீரமுறும் எம்பெரியார் வேண்டிடுங் கொடியே!-அவர்
வீறு கொள்கை ஏந்திவிளை யாடிடுங் கொடியே!-பொல்லா
வீணர்புறங் காண அதிர்ந் தாடிடுங் கொடியே!-யாம்
பாடிடுங் கொடியே! (உலக)

❋❋❋

## 61. திராவிடநாடு காண்பீர்

(வெட்கங்கெட்ட வெள்ளைக் கொக்குகளா எ. மெட்டு)

சீரார்தி ராவிடம் பிரிந்திடவே
சேர்ந்துழைப்பீர் என்றன் தோழர்களே!—ஒன்று (சேர்ந்)
பேரார்ந்த நல்வாழ்வு நாமடையப்,
பிரிவினை ஒன்றேநல் மருந்தாகுமே!—நாட்டுப் (பிரிவி)

நம்நாட்டில் நாமஞ்சி வாழ்வதுவோ?
நாய்பூனை நமைஏய்க்கக் காண்பதுவோ?—நத்தும் (நாய்)
செந்தமிழ் நாடுற்ற மானமெங்கே?
சீர்சால்தி ராவிடம் கோரிடுவீர்!—நல்ல (சீர்சால்)

அட்டைபோல் ஆரியம் தமிழகத்தின்
ஆவிகுடித் துயிர் வாழக் கண்டோம்!—நாட்டின் (ஆவி)
கட்டைபோல் ஆக்கிற்றே நம்குலத்தைக்!
கதிவேண்டித் திராவிடம் காணுவிரே!—உயர் (கதி)

செல்வமெல்லாம் சூறை ஆகக்கண்டோம்!
திக்கற்றோர் தொகைநாளும் ஓங்கக்கண்டோம்!—இங்குத் (திக்)
நல்வள வாழ்விழந் தேழ்மை கொண்டோம்!
நம்மக்கள் நாட்டைவிட் டோடக் கண்டோம்!—வாழ்ந்த (நம்)

துன்பம் நம் வாழ்வினை அரிந்திடுதே!
தொல்லை மேன்மேல் சூழ்ந்து நெருங்கிடுதே!—பல (தொல்)
இன்னும் நாம் வாளா விருப்பதுவோ?
இன்றே தொடங்குவீர் போர்ப் பணியை!—நீர் (இன்றே)

OOO

## 62. திராவிடத்தின் அவசியம்

(விடுதலை விடுதலை விடுதலை எ. மெட்டு)

திராவிடம்! திராவிடம்! திராவிடம்!
அராவிடத்த ஆரியர்தம் சூழ்ச்சி தன்னில் சிக்கியே
அவதிகொள்ளும் மக்கட்கெல்லாம் பாதுகாப் பளிப்பது, (திரா)

சாதிபேத மின்றி மக்கள் சரிநிகர்ச மானமாய்த்
தன்மதிப் புடனே வாழத் தக்கபயன் செய்வது, (திரா)

மாற்றாரிங்கே ஏய்த்துவாழும் மார்க்கமெல்லாம் தீர்ப்பதும்
வேற்றாராட்சி வெங்கொடுமை வீழ்த்திப் பாதுகாப்பதும், (திரா)

சேர்கஒன்று திராவிடரே, திராவிடத்தைக் காணுவோம்!
சேர்கஇன்றேல் ஈனவாழ்வு தீர்ந்திடா தறிகுவீர்!

❄❄❄

## 63. பெறுவோம் திராவிடநாடு

(ஆடுவோம் பாடுவோம் தோழியரே எ. மெட்டு)

சிந்தனை ஏனினித் தோழர்களே!
சீர்த்திரா விடந்தனை நாம் பெறுவோம்!–வீண் (சிந்)

சொந்த நாட்டினில் நிந்தை ஏற்று நாம்
நொந்த வாழ்வுகொண் டஞ்சி வாழ்வதோ? (சிந்)

ஓடிவந்தவர் நம்மை ஏய்ப்பதோ?
பேடிபோல நாம் வாடிக் கிடப்பதோ? (சிந்)

❀❀❀

## 64. வாழ்க திராவிடம்

(களிமயி லாடக் கண்டேன் கண்டேன் எ. மெட்டு)

பல்லவி

திராவிடம் வாழ்கெனச் சொல்வோம்! சொல்வோம்!–சீர்த் (தி)

அனுபல்லவி

அராவிடம் எனப்புகல் ஆரியத் தொடர்பற்ற (தி)

சரணம்

பெரும்புகழ் வாய்ந்த தமிழ்வளம் தீர்த்த
பிழைபடும் வைதிகம் போக்கி,
அருநெறி கண்டே அமைவுறும் வாழ்வில்
அனுதினம் நமைமுன் னோங்கிட வைக்கும் (தி)

சாதிகள் பேதம் சாத்திரம் மூடச்
சடங்குகள் யாவையும் தீர்த்தே,
நீதிஎல் லோர்க்கும் சமமுற வழங்கி
நேரிய முறையில் நட்பினை வளர்க்கும் (தி)

வறுமையில் நமையே உழன்றிட வைத்தே
மதியையும் ஏகிடச் செய்தே,
சிறுமையை யளித்த தீமதம் வீழ்த்திச்
சீருறும் இனிய சமதர்ம மளிக்கும் (தி)

❀❀❀

# உ. பெரியார் பகுதி

## *65. வாழ்வு காக்கும் பெரியார்!*

**(வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் எ. மெட்டு)**

தோழி : போனநம் மானம் மீண்டிடச் செய்யும்
புனிதரார் சொல்வாயடா?
தோழன் : ஈனமாம் வாழ்வை எதிர்த்திடும் பெரியார்
ஈ.வே.ரா. என்பாரடி!–பெரியார் (ஈ.வே.ரா..)

தோழி : சாதிகள் பேத வாழ்வினை இங்கே
தவிர்ப்போர்யார் சொல்வாயடா?
தோழன்: ஏதமில் வாழிவிங் கமைத்திடும் பெரியார்
ஈ.வே.ரா. என்பாரடி!–பெரியார் (ஈ.வே.ரா...)

தோழி : ஆரிய சூழ்ச்சி யழித்திடும் வன்மை
ஆர்பெற்றார் சொல்வாயடா?
தோழன்: நேரிய உள்ளம் நிறைந்தநற் பெரியார்
ஈ.வே.ரா. என்பாரடி! பெரியார் (ஈ.வே.ரா...)

தோழி : தீயதோர் துன்ப வாழ்வழித்துக் காக்கும்
தீரர்யார் சொல்வாயடா?
தோழன்: ஏய அவ் வீரர் சமதர்மப் பெரியார்
ஈ.வே.ரா. என்பாராடி!–பெரியார் (ஈ.வே.ரா...)

## 66. பெரியார் தொண்டு

(சோதரி யாய் செய்த மோசம் எ. மெட்டு)

தன்மான வாழ்வு பெறச் செய்தார்!–மிகச்
சலியாஉ ழைப்பால் எம் பெரியார்!
முன்னைய நாளில்
மூண்டதோர் கேட்டால்,
மோசநி லைமிகவே கண்டார்–அதை
மொய்ம்புட னே எதிர்த்து நின்றார்! (தன்)

வாடிடும் வாழ்வுதந்து மேலும்–நமை
வருத்திய கொடுமை மதம் யாவும்,
ஓடிடக் கண்டார்!
உயர்நெறி கொண்டார்!
உல்லாச ஆரியத்தின் சூழ்ச்சி–இதோ
ஒரு நொடி யில் மறையும் காட்சி! (தன்)

எந்நாட்டில் இப்பெரியார் போலே–பல
எதிர்ப்புத் தொண் டாற்றிவந்தார் யாரே?
இந்நாட்டுப் பேதம்
எந்நாட்டி லுண்டு?
எம்பெரி யார்செய்யும் தொண்டு–வாழ்வில்
இன்பம எிக்கும் விருந்து! (தன்)

❊❊❊

## 67. பெரியார் புகழ் ஓங்குக!

(கோபுரத்தின் மேலே கோத்தமல்லி போலே எ. மெட்டு)

திராவிடரின் வாழ்வைச் சீருறவே செய்யும்
செம்மல் ஈ.வே.ராமசாமி சீர்த்திப் புகழ் ஓங்க! (திரா)

இருள்புகுத்தி வாழ்வழித் திடுமோர்–தீய
இன்னல் தரும் மதமொழிய,
என்றும் இளைய வீரர் போலே
எழுச்சி கொண்டே தொண்டு செய்வார்! (திரா)

மானமிகும் உணர்வு தந்து நாளும்–மிக
வாய்ந்தபகுத் தறிவை யூட்டி, மேலும்
ஈனநிலை யாவுந் தீர்த்துமே,
இன்பமிகும் வாழ்வை யாரும் கொள்ள வேண்டித் (திரா)

### 68. பெரியார் புகழ் ஓங்குக!

(வளமார் எமது திராவிடநாடு எ. மெட்டு)

ஓங்க ஓங்கவே!
உயர்குணச் செயலுறும் எம்பெரி யார்புகழ் (ஓங்க)

தீங்குறும் ஆரியம் திராவிடர் வாழ்வைச்
சீரழித் தேவரும் செயலினை யறிந்தே,
ஆங்குறை யாவையும் போக்கிட வேண்டி
ஆரியம் அலறிடப் போர்தெடுத் திட்டார்! (ஓங்க)

பேரொளி வாழ்வினில் பெருகிய இன்பம்
பீடைம தத்தினால் அழிந்தது கண்டோம்!
காரிருள் நோக்கியே நமையழைத் திடுமோர்
கடுமத பேதங்கள் வீழப்போர் தொடுத்தார்! (ஓங்க)

தூயநல் வாழ்வினில் யாவரும் ஒன்றாய்ச்
சுகித்திட வேண்டிப்பே ரறிவினை நல்கி,
ஏயமு றையினில் சமதர்மம் காண
இன்பத்தி ராவிடம் திராவிடர்க் கென்றார்! (ஓங்க)

### 69. குழந்தை தாலாட்டு

(உன்னையே அன்புடன் எ. மெட்டு)

செல்வமே நீமிகத் தேம்பி யழுவதேன்?
சிந்தையில் கொண்டுள எண்ணந்தான் யாதோ?
நீ ஏனழுகின்றாய்?
கல்லுமுருக–நீ–கதறுவதேனோ?
கண்மணி வேண்டாம்!–மணிக்–கண்ணுறங்கிடுவாய்!

கதியிழந்த தமிழர் நிலையறிந்தே நீயும்
கலக்கம் நீ கொண்டனையோ? (செல்வமே)

அஞ்சிடேல் தமிழர்கள் அடிமையை யுணர்ந்தார்!
ஆரியம் செய்திடும் தீதினை யறிந்தார்!
அன்புருவப் பெரியார் அறப்போர் தொடுக்க லானார்!
அழுகையேன்? பகையிதோ அழிந்தது பாராய்!
ஆர்வமாய்த் தமிழர் விழித் தெழுந்தனர் சீராய்!—துயர்
ஒழிந்தது பாராய்! (செல்வமே)



# திராவிடப் பண்

**1946**

# பதிப்புரை

"தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்" என்னும் நூலை, 1945 நவம்பர் மாதம் ஞாயிறு நூற்பதிப்பகத்தின் சார்பில் வெளியிட்டேன். அது, சில மாதத்திற்குள்ளேயே முற்றும் செலவாகிவிட்டது. மீண்டும் இரண்டாம் பதிப்பு வெளியிட எண்ணினேன். வேறு நூல்கள் வெளிவர இருப்பதாலும், தாள் நெருக்கடியின் காரணத்தாலும் அவ்வெண்ணம் தடைப்பட நேரிட்டது.

ஆயினும், சிறிய அளவிலாவது வேறு பாடல்கள் வெளியிட எண்ணினேன். அதுவே இத் "திராவிடப்பண்" தோழர்கள் ஆதரிப்பாராக.

அன்பன்,

I-7-1946 ச. சிவப்பிரகாசம்.

அரிதாகக் கிடைத்த இந்நூல் மிகவும் சிதைந்த நிலையிருப்பதால் இதிலுள்ள பாடல்களை வெளியிட இயலவில்லை.

# காதலும்—கற்பும்

# 1946

# முன்னுரை

"காதலும்-கற்பும்" என்னும் பெயரிய இச்சிறு நூல், சங்க இலக்கியத் தொகை நூற்களுள் ஒன்றான 'கலித்தொகை' (பாலைக்கலி) 9-ம் செய்யுளின் விளக்கமாகும். அப்பாலைக்கலியைப் பாடினோர் சேரமான் பெருங்கடுங்கோ என்பர். அவர் மட்டுமல்லர், பலர் எனக் கருதுவோரும் உண்டு. செய்யுட்பொருள் நிலையும் இதனை மெய்ப்பிக்கும்.

காதல் விளைவால் நிகழும் உடன் போக்கில் தலைவியைத் தாயரும் தமரும் தேடிச் செல்வதும், பின் மீட்டுக் கொணர்ந்து திருமண முடித்து வைத்தலும் இலக்கண அமைதி யுடையனவே. அன்றியும், அவ்வுடன் போக்கைக் குற்றமாகவோ பழிவிளைப்பதாகவோ கருதித், தலைவிக்கு இன்னல் சூழ்வதும் இன்று, ஆனால், அந்நிலை மாறி உடன்போக்கைக் குற்றமெனக் கருதப்பட்டபின், அத்தவறான கருத்தைப் போக்கி உண்மை யுணர்த்த எழுந்ததே, இங்கு எடுத்துக் கொண்ட செய்யுள் என்பது ஆராய்வோருக்குப் புலனகாமற்போகாது.

காதல் வாழ்வு கரைபுரண்டோடிய இத்தமிழகத்தில், அது குற்றமுடையதாகக் கருதப்பட்டதேன்? அப்படிக் கருதியதாலேற்படும் தீமையையுணர்ந்த தமிழ்ப் புலவரொருவர், அப்பழிப்பைப் போக்கத் தம் கருத்தை அந்தணர் வாயிலாகக் கூறியதேன்? இதனைச் சிந்தித்தல் வேண்டும் இன்றைய தமிழுலகம்.

ஆரியர் இந்நாட்டில் குடி புகுந்து தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டபோது, பல எதிர்ப்புக்கள் நேர்ந்ததுண்டு. அவற்றைச் சமாளிக்க முடியாத அவர்கள், சூழ்ச்சியைக் கையாளத் தொடங்கினர். தமிழர்களின் ஒற்றுமை, வீரம், உயர்வு ஆகியவற்றிற்கு அடிப்படையாக இருப்பது, அவர்கள் வாழ்வில் அமைந்துள்ள இயற்கையோடியைந்த காதல் முறை என்பதறிந்து, அதனைப் போக்கக் 'கற்பு' என்ற மறநெறி யொன்றைக் கடவுளின் பெயரால் புகுத்தினர். இதனை யொப்பிய தமிழர் சமுதாயம் வீழ்ந்தது; ஆரியர் தம் நோக்கத்தில் வெற்றி கண்டனர்!

அக்காலத்தில் தமிழர்களிடையே கற்பு நெறி இருந்ததில்லையா எனின், காதல் பற்றிய 'களவு' 'கற்பு' என்ற இரண்டைத் தவிர, வேறு 'கற்பு' என்று -அதுவும் பெண்கள் மட்டும் பின்பற்றியொழுக வேண்டுமென்ற மறநெறியொன்று, இருந்ததில்லை.

ஒருத்தி பலரை மணப்பதும், பலர்மீது இச்சை கொள்வதும் கற்பு நெறியல்ல எனக்கூறும் ஒரு நூல்; மற்றொன்று அவர்களைக் கற்பரசிகள் என்னும். இவ்விதம் அறிவுக் கொவ்வாத ஆபாச முறைகள் பல அமைந்ததே ஆரியக் கற்பு நெறியாகும்.

இம் மறச் செயற்கற்பைத் தமிழர்கள் மதிமயக்கங் கொண்டு ஏற்றகாலை, அவர்களின் சீரிய வாழ்வு, சிதைவுறத் தொடங்கிற்று. இதனையுணர்ந்த புலவர், (பெயர் இன்னாரெனத் துணிதற்கில்லை; ஆயினும், ஆரிய ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்பட்டபோது இருந்தவர் என்பதே பொருந்தும்) இத்தமிழகத்தின்கண் ஆரியப் பிராமணர் என்போர் அறநெறிப் போதகராக ஆகி மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருப்பதையறிந்து தம் கூற்றைத் தமிழ் அந்தணர் வாயிலாகத் தமிழருக்கு அறிவுறுத்தியுள்ளார் என்பதே, அச்செய்யுள் பற்றிய என் சொந்தக் கருத்தாகும்.

இனியேனும் தமிழர்கள், அறிவுக் கொவ்வாத கற்பு நெறியைக் கைவிட்டுக், காதலின் உயர்வையும் கற்பின் உண்மையையும் உணர்ந்து, வாழ்வில் வளம் பெற்று உயர்நிலையடைய வேண்டும் என்ற எண்ணத்துடனேயே, இச்சிறு நூலை ஞாயிறு நூற் பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுகின்றேன். தமிழர்கள் - தோழர்கள் ஆதரிப்பாராக.

இதற்குச் சிறப்புரை எழுதியுதவிய புலவர் நா.மு. மாணிக்கனார் அவர்கட்கும், தம் அரிய நேரத்தையும் சிரமத்தையும் கருதாது முகப்புப் படம் எழுதியுதவிய நண்பர் வி. ஜெகநாதன் அவர்கட்கும் என் நன்றி.

புதுச்சேரி அன்பன்
4-7-46. ச. சிவப்பிரகாசம்.

# காதலும் - கற்பும்

தண்ணொளி இருளை நீக்கும் தன்மைபோல் தமிழ கந்தான்
ஒண் சுடரறிவி னாலே உயர்வுறுங் கொள்கை கண்டு,
மண்ணுள நாடு கொண்ட வாழ்விருள் யாவும் போக்கிக்
கண்ணென விளங்கக் கண்டோம் காசினி புகழை ஏற்றே!

பாரது வியக்கும் வண்ணம் படைத்த அப் பழங்கீர்த் திக்குக்
காரணம் என்ன வென்றே கருதிடின், அக்காலத்தோர்
ஈருளம் ஒன்று கின்ற இயற்கையாம் காதல் வாழ்வைச்
சீரிய முறையிற் கண்ட திறத்தினால் என்பர் ஆய்ந்தோர்!

காதல்சேர் வாழ்வு தன்னிற் கருதிடும் இன்ப முண்டு!
தீதிலா நெறியும் நல்ல சிந்தையின் உணர்வும் ஓங்கி,
மேதைய ராகி மக்கள் மேன்மையாம் வாழ்வு கொள்வர்!
ஆதலா லந்த வாழ்வை யடைந்தவர் சிறந்தா ரன்றோ?

அத்தகைக் காதல் வாழ்வில் ஆர்ந்தநல் லறிவு பெற்றுச்
சித்தமே களித்து வாழ்ந்தார் சீர்பெறுந் தமிழ ரந்நாள்!
எத்தலத் தோரும் அந்த இன்றமிழ் வாழ்வ றிந்தே,
மெத்தவே வியந்து போற்றி மேன்மையந் நெறிமேற் கொண்டார்!

உதயமாம் சூரியன் பேர் ஒளியுடன் விளங்கிப் பின்னர்க்
கதிரொளி மறைய நிற்கும் கதியெனத், தமிழர் நாடு
மதித்துணை பெற்ற தாலே மாநிலம் யாவும் போற்ற
அதிபுக ழொளி வீ சிப்பின் ஆரிருள் அடைந்த தந்தோ!

இந்நிலை நேர்ந்த தற்குக் காரணம்: இசைபெற் றோங்கும்
செந்நெறித் தமிழர் வாழ்வில் சேர்ந்துள மூடக் கொள்கை
பொய்ந்நெறி வழக்கம் சாதி புன்மதம் என்பர் ஆய்ந்தோர்
அந்நெறி விளைத்தோர் கேட்பின், ஆரிய மாந்த ராவர்!

மாட்டினை ஆட்டை யோட்டி வளநிலம் தேடி இந்த
நாட்டினிற் பிழைக்க வந்த நரிக்குணம் வாய்ந்த அன்னார்,
கேட்டினில் நம்மை வீழ்த்திக் கீழ்நிலைப் படுத்தித், தாமே
மேட்டிமை யான வாழ்வில் விளங்கிட முயல லானார்!

ஆரியக் கூத்தில் அந்நாள் அரசுகள் மதிம யங்கிச்,
சீரிய தமிழர் வாழ்வைச் சிறிதுமே எண்ணா தாகிப்,
பூரிய அன்னார் கொள்கை போற்றியே இந்த நாட்டின்
நேரிய முறைய ழித்து நெளிந்தன அவர்பா தத்தில்!

கற்பென ஒன்று சொன்னார் காதலை அழிக்க அன்னார்!
வெற்பெனுந் தோள ரெல்லாம் விதியற்றுச் சிரமே தாழ்ந்தார்!
கற்பனைப் புலவர் சில்லோர் கருத்திழந் ததனை ஏற்றார்!
பொற்புறும் மாதர் அந்தக் கற்பினை அணியாய்ப் பூண்டார்!

வீழ்ந்தது தமிழர் வாழ்வு! வெற்றி ஆரியர்கள் கண்டார்!
வாழ்ந்தது பொய்ம்மைக் கற்பு வளமுறுங் காதல் வீழ்த்தி!
சூழ்ந்தது துன்ப மெல்லாம் சுதந்தரம் வாய்ந்த நாட்டில்!
ஆழ்ந்தன புகழ்நல் வீரம் அன்புடன் இன்பம் யாவும்!

இந்நிலை யறிந்து நாட்டின் இழிநிலைக் கிரங்கி மிக்க
செந்நெறி வாய்ந்த ஓர்நற் சீரிய புலவர், அந்தப்
பொய்ந்நெறி யாளர் பொய்யைப் போக்கிடக் காதல் கற்பின்
மெய்ந்நெறி யுணர்த்த லானார்; விளக்குவேன் அதனை யீங்கே.

மண்ணினி லுதய மான மதியமோ என்னத் தக்க
பண்ணிசைக் குயிலாள் இன்பப் பாகெனு மொழியாள் ஓர்சீர்ப்
பெண்ணினல் லாட்கும், மிக்க பேரெழில் ஆற்றல் வாய்ந்த
அண்ணலாம் ஒருவ னுக்கும் அரியநற் காதல் தோன்றச்

சீரிய தமிழர் முன்னாள் செப்பிய களவு வாழ்வில்
ஈருள மொன்றி யன்னார் யாவரு மறியா வண்ணம்
பேரெழிற் சோலை தன்னிற் பெரிதுவந் தொன்று கூடிப்,
பாருளோர் புகழ்ந்து கூறும் பயனுறும் இன்பந் துய்த்தார்!

இன்னணம் இவர்கள் சின்னாள் இனிதுவந் திருக்க, அந்தப்
பொன்னுறு மேனி யாளின் பொலிவினில் மாற்றங் கண்டே
அன்னையாம் செவிலி மிக்க ஐயமும் அச்ச முங்கொண்
டின்னறுஞ் சோலை போக்க மனமிலா * திற்செ றித்தாள்!

காதலால் ஒன்று பட்டுக் கனியிதழ் பறிமா றிப்பின்
தீதிலா இன்பந் துய்த்துத் திகழ்ந்திடும் போழ்தி லந்த
மாதவன் உயிர் பிரிக்கும் வன் செயல் போலே தாயும்
காதலன் தனைப் பிரித்தால் கடுந்துயர் மிகுந்தி டாதோ?

'அன்புறு வாழ்வு தன்னில் அளவிலா இன்ப முண்டாம்'
என்றுரைத் திட்ட முன்னோர் இயல்பினை யறிந்தே அன்னாள்,
தன்னுடை வாழ்வி னுக்குத் தக்கதோர் ஆளன் தேர்ந்தால்,
அன்னவன் தனைப் பிரித்தல் அவள் துயர் வளர்ப்ப தன்றோ?

அதுமுதல் தலைவி, அன்புத் தலைவனை யறிதற் கின்றி
நிதியிழந் தாரின் மிக்க நீள்துயர் கொள்ள லானாள்!
இதையறிந் திட்ட தோழி ஆற்றுதற் கியலா தாகி,
மதிமிகும் தலைவற் சார்ந்தே வழுத்தினாள் நிகழ்ச்சி யாவும்

தலைவியைக் கண்ணு றாமல் தவித்த அத் தலைவன் றானும்,
நிலைகுலைந் துள்ளஞ் சோர்ந்தான் நிகழ்ந்தஅச் செய்தி கேட்டு!
"மலைவிதிற் சிறிதும் வேண்டாம் மணம்புரிந் தவளைக் காப்பீர்!
இலையெனில் உயிர் தரித்தே இரா" ளெனத் தோழி சொன்னாள்

அவ்வுரை கேட்டான்; ஆழ்ந்த சிந்தனை செய்த பின்னர்ச்,
"செவ்விய நலத்தி னாளைச் சீர்மணம் பேசு தற்கே
ஒவ்விடு வாரோ அன்னாள் பெற்றவர்? ஒவ்வா ராயின்,
எவ்விதம் அவளை யானும் அடைகுவேன்?" என்று நைந்தான்!

அவன் துயர் கண்ட தோழி, "ஐய, உம் குறையி னோடு
குவளையும் நாணுங் கண்ணாள் குறையதும் தீர வேண்டின்,
கவியிருள் தன்னில் வாரும் கன்னியை யொப்பு விப்பேன்!
அவளைநீர் உடன்கொண் டேகி அன்புடன் மணப்பீர்!" என்றாள்.

* இற் செறித்தல்=வீட்டிற்குள்ளேயே தங்கவைத்தல்.

தோழியின் உதவி கேட்டான்; சொல்லொணா மகிழ்ச்சி யெய்தி,
“வாழிய தோழி! உன்றன் வார்த்தையின் படியே யானும்
தாழிருங் கூந்த லாளைத் தனிக்கொடு செல்வேன்” என்றான்.
தோழியும் அவர்கள் வேற்றூர் சென்றிடத் துணைசெய் திட்டாள்!

விடிந்தது; “தலைவி காணோம்” என்றுமே வீட்டா ருக்கு,
நடுங்கிய பாவ னையில் நவின்றனள் தோழி! உள்ளங்
குடைந்திடும் மொழியைக் கேட்டுக் கொக்கரித் தெழுந்த பெற்றோர்,
நடந்தனர் நாலா பக்கம் நங்கையைத் தேடு தற்கே!

ஊர்ப்புற மெங்குஞ் சுற்றி ஓய்ந்து பின் வீடு சேர்ந்தார்;
சீர்க்குண வதியி னாளைத் தேடியே, கொணரா விட்டால்,
பார்ப்பவ ரெல்லாம் நம்மைப் பழிப்பரே’ என்று நெஞ்சம்
வேர்த்திடப் பக்கத் தூர்க்கு விரைந்தனள் செவிலித் தாயும்.

வழியினில் காடு தோன்ற வாய்ந்த அக் காட்டி லெங்கும்
விழியெலாம் செலுத்திச் சென்றாள்; மெய்ம்மையாம் அறமு ணர்த்திப்
பழிதரும் செயல் விலக்கும் பண்புடை அந்த ணாளர்
வழியெதிர் வருதல் கண்டு வணங்கியே அவர்க்குச் சொல்வாள்:

“மக்களின் வாழ்வு தன்னில் வாய்ந்திடும் தீமை போக்கித்
தக்கநல் அறிவு ணர்த்தும் தனிப் பெரும் அந்தணர்காள்!
மிக்கெழில் வாய்ந்த என்றன் மெல்லியல், ஒருவனோடே
இக்கொடு வழியிற் செல்லக் கண்டிரோ?” என்று கேட்டாள்.

அந்தணர் தலைவன் சொல்வான்: “அம்மணி, உளப்பி ணிப்பால்
இந்தவெங் கானில் அன்னார் ஏகிடக் கண்டோம்; ஆனால்
சிந்தையில் கவலை மிக்குச் சென்றிடும் உம்மைப் பார்த்தால்,
சுந்தர வதனங் கொண்ட தோகையின் தாயர் போலும்!

அன்னவர் தம்மைத் தேடி அலைகிறீர்! அவர்கள் செய்கை
நன்றென உணர்ந்தீ ரில்லை! நவிலுவேன் ஒன்று கேட்பீர்.
கன்மலை மீது தோன்றும் சந்தனம், கடலின் முத்துப்,
பன்னிடும் யாழின் ஓசை இவைகளின் பயன்தான் என்ன?

விரும்பிடும் பிறர்க்கே யன்றி, விளைந்திடும் இடத்தி னுக்கே
ஒரு பயன் அவற்றா லுண்டோ? உம்மகள் அவையே போல்வாள்!
திருநல மிகக் கொண் டாளின் சிறந்த நற் பயனை அந்தப்
பெருங்குணத் தோன்றல் பெற்றான்! பிழையிதி லென்ன கண்டீர்?

அன்புடைக் காதல் வாழ்வே அறநெறி! அதனைக் கொள்ளத்
தன்மனக் கினிய ரோடு சார்வதே உண்மைக் கற்பு!
வன்புரை பேசும் மாக்கள் வழுவென இதனைச் சொல்வார்!
நன்றுடைத் தமிழர் வாழ்வை நசுக்கிடும் பகைவ ரன்னார்!

ஆதலா லுமது செல்வி அடாச் செயல் புரிந்தா ளென்றே
தீதுநீர் அவட்குச் செய்யச் சிறிதுமே எண்ண வேண்டாம்!
பூதலம் போற்று கின்ற புனிதவாழ் வவர்கள் பெற்றார்!
ஏதமோ இதிலொன் றில்லை! ஏகுவீர்" என்றான்; சென்றாள்.

அந்தணர் சொல்வ தேபோல் அறைந்தனர் புலவர்; அந்த
அந்தணர் என்போர் இங்கே ஆரியப் பார்ப்பா ரல்லர்
எந்த நல் உயிரி டத்தும் இரக்கமே கொண்டு, மக்கள்
செந்நலம் பெற உழைத்த சீரிய தமிழர் அன்னார்!

பல புகழ்த் தமிழ ருக்குப் பண்புடை வாழ்வ ளித்த
நலமுறுங் காதல் தன்னைத் தீதென நவிலும் புன்மை
நிலவிடும் வஞ்சர் சூழ்ச்சி நிலைபெறா தொழிய, அந்தப்
புலவர்சொல் உண்மைக் காதல் கற்பினைப் புகல்வேன் ஓர்வீர்!

☆☆☆

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறொரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை,
என்மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னா ரிவருவரைக் காணீரோ பெரும?
காணேம் அல்லேம், கண்டனம் கடத்திடை;

ஆணெழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறீர்.

பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் ஏன் செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என் செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

எனவாங்கு,
இறந்த கற்பினாட்(கு) எவ்வம் படரன்மின்!
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்,
அறந்தலைப் பிரியா ஆறு மற் றதுவே!"

*(பாலைக் கலி. செய்:9)*

## எனக்குத் தெரியும்...

சிவப்பிரகாசம் சிறு வயது முதல், நம் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுமிக்குடையார். அதனால் அவர் அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் உற்று வரும் இன்னல்-எதிர்ப்பு-பன்னற்கரியவை. சிவப்பிரகாசத்திற்கு, இயக்கம் வானுற ஓங்குதல் வேண்டும்; நாடு அதனால் நன்னுற வேண்டும்; இதுவே வெறி. சிவப்பிரகாசம் இலக்கிய இலக்கணம் முறையே படித்தவர். அவர் பழைய கவிதை நூற்களைப் பின்பற்றி எழுதுவதன் மூலம், தம்மை ஒரு படித்தவர் என்று விளம்பரப் படுத்திக் கொள்ளலாம். அந்த வீதியே சென்று, பிழைப்புக்கு வழி தேடலாம். ஆனால் அவர், அப்பக்கம் எட்டிப்பார்க்கவும் நினைப்பதில்லை. தமக்குப்பட்ட கருத்துக்களை-கொள்கையை ஏனையோர்க்கும் புலப்படுத்த வேண்டும் என்ற அவருடைய உயர் நோக்கத்தை அவர் எழுதியுள்ள கவிதைகளின் ஒவ்வொரு வரியும் நமக்குப் புலப்படுத்தும்.

கல்லார்க்கும் எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கச் செய்யுள் எழுதுவது பல்லார்க்கும் முடியுமானால் - இந்நாள் நம் தமிழ்நாடு உருப்பட்டிருக்குமே! சிவப்பிரகாசம் ஆற்றியது, சிறிய தொண்டு என்று கருதப்படலாம். ஆனால் அது, கற்றார்க்கே சுலபமல்லாத அரிய தொண்டு என்பது எனக்குத் தெரியும்.

பாவேந்தர் பாரதிதாசன்.
*(பெரியார் பெருந்தொண்டு நூலின் சிறப்புரையில்)*

# மறுமலர்ச்சிக் கவிதைகள்

1946

# ஆக்கியோன் முன்னுரை

தமிழ்நாட்டின் தனிப்பெருங் கவிஞரான உயர்திரு. கனக-சுப்புரத்தினம் அவர்களிடம் 1933-ம் ஆண்டில் அதாவது என் 25-ம் வயதில், தமிழ் கற்க வேண்டுமென்ற விருப்பினோடு சென்று பயின்றுவந்தேன். ஆனால், சில மாதங்களே எனக்கு அவ்வாய்ப்புக் கிடைத்தது. எனினும், தமிழ் இலக்கண இலக்கியங்களை எளிய முறையில் நன்கு போதிக்கும் திறன்பெற்ற கவிஞர் அவர்களின் அச் சில மாத போதனையே, எனக்குத் தமிழில் ஓரளவு பயிற்சியை உண்டுபண்ணிற்று. பிறகு, கவிஞர் அவர்களின் எளிய நடையைப் பின்பற்றி, யானும் பாக்கள் எழுதத் தொடங்கினேன். அவற்றைக் 'குடியரசு', 'பகுத்தறிவு', 'விடுதலை', 'நகரதூதன்', 'புது உலகம்', 'திராவிட நாடு', 'தொழிலாளர் மித்திரன்' போன்ற பத்திரிகைகள் அவ்வப்போது வெளியிட்டு, எனக்கு ஊக்கம் அளித்து வந்தன. அதற்காக, அத் தாளாசிரியர்கட்கு என் நன்றி.

மேற்கண்ட பத்திரிகைகளில் வெளிவந்த பாக்களிற் பலவும், வெளிவராத சிலவும் சேர்ந்ததே, "மறுமலர்ச்சிக் கவிதைகள்" என்னும் இச் சிறு நூலாகும். தாள் நெருக்கடி முதலிய காரணங்களை யுத்தேசித்து, எல்லாக் கவிதைகளையும் சேர்க்க முடியவில்லை.

கவிதைக்குரிய பல்விதச் சுவைகளையும், இதிலுள்ள பாக்கள் பெற்றில்லை என்பதை யான் நன்கு அறிவேன். பருவந் தவறிய-போதிய உரமுமற்ற பயிரிடம், நல்ல பலனை எதிர்பார்த்தல் எங்ஙனம் சாலும்? எனினும், தமிழினால் இயன்றது, சீர்திருத்தத்தை வலியுறுத்துவது என்ற காரணத்திற்காகவேனும், தமிழர்கள்-தோழர்கள் இதனை ஆதரிப்பார்களென்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆதலின், ஆதரிக்க வேண்டுகிறேன்.

என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய கவிஞர் அவர்கட்கும், தம் அரிய நேரத்தையும் உழைப்பையும் கருதாது இதற்கு முன்னுரை எழுதியுதவிய புலவர் மே.வீ. வேணுகோபாலர், தோழர் ஏ.பி. சனார்த்தனம் M.A., தோழியர் R. இராஜரத்தினம், M.A., L.T., ஆகியோருக்கும் என் நன்றி யுரியதாகுக.

புதுவை
18-10-46.

இங்ஙனம்
ச. சிவப்பிரகாசம்.

# மறுமலர்ச்சிக் கவிதைகள்

## தமிழக நிலை

### எங்கே?

யாதும் ஊரே; யாவருங் கேளிரென்
றோதிய தமிழர் உயர்நெறி எங்கே?
பிறவியில் யாவரும் சமமெனப் பேசிய
அறநெறி வள்ளுவன் அருளுரை எங்கே?
மதமோர் படுகுழி! மல்கிய சாத்திரம்
அதிபெருங் குப்பை! ஆதலால் விடுமினென்
றோதிய அறிஞரின் போதனை எங்கே?
முயற்சி யுடையார் இகழ்ச்சி யுறாரென
அயர்ச்சி நீக்கியோர் அருமொழி எங்கே?
அறிவும் ஆர்ந்த கல்வியும் கேள்வியும்
நிறைகவென் றுரைத்தோர் நேர்மொழி எங்கே?
தன்மதிப் பழியாத் தகைமை பெறுதலே
வன்றிறற் றமிழரின் வாழ்வின் சீரெனக்
கவரிமான் நிலையினை உவமையாய்க் கழறிய
மானத் தமிழரின் மாண்புரை எங்கே?
வெம்பகை காணின் வீரமோ டொழித்தலும்
தம்புகழ் பரவிடத் தகும்பணி யாற்றலும்
அன்பு பெருக்கலும் அறச்செயல் விளைத்தலும்
வன்பு தவிர்த்தலும் மறச்செயல் நீக்கலும்
இன்ப வாழ்வை இனிதுற அமைத்தலும்
துன்ப வாழ்வைத் தொலைத்தலும் தமிழரின்
கடமைஎன் றுரைத்தநற் கட்டளை யாவும்
எங்கே என் தமிழ் நாடே?
எங்கே உன்சீர்? ஏன் குறை பாடே?

## கூம்பிய மரை மலர்

வளநீர் மிக்க வாவியிற் றாமரை
இளமுகிழ் அரும்பி ஏழிலுடன் வளர்ந்தே
காரிருள் நீங்குங் கதிரோன் வரவுகண்
டாரெழில் மிக்குற அலர்ந்தது மகிழ்வாய்!
மலர்ந்த அம்மலர் கண்ட மாந்தர்
நலமுறு மதனெழில் நறுமணம் போற்றினர்!
இலையிதற் கீடென இனிதுடன் சாற்றினர்!
புலவர் போற்றிப் புகழ்மணம் பரப்பினர்.

காலை சென்றது; கடும்போ தேகிட,
மாலை வந்தது! வளமார் மலரின்
களிமுக மடங்கக் கதிரோன் மறைந்தனன்!
நளியிருட் படையும் நாற்றிசை சூழ்ந்தது!
பலர்புகழ் ஏற்றுப் பண்பொடு விளங்கிய
மலரோ, துன்புகொள் மாந்தர் அகமுகங்
கூம்புதல் போல வாடிக் குவிந்தது!
ஆம்புகழ் யாவும் அதனுள் மறைந்தது!

தண்டமிழ் நாடெனும் வண்டா மரைமலர்
நுண்ணிய அறிவெனும் ஒண்சுட ராலே
பெரும்புக ழென்னும் அருமணம் பரப்பி
உலகெலாம் வியக்க நிலவிய போழ்தில்,
ஆத்திக மென்னும் ஆரிருள் சூழ்ந்தே,
தீர்த்த ததன்புகழ் செவ்வி யாவையும்!

அந்தோ அந்தோ! அருந்தமிழ் நாடே,
எந்நாள் மீண்டும் இரவியின் ஒளியெனும்
பகுத்தறி வதனைப் பாங்குறப் பெற்று,
மிகுத்திடும் இருளெனும் வெம்மதம் போக்கிப்
புகழோடு விளங்குவாய்? என்றன்
அகமலர் பொலிவுற் றலர்ந்து மகிழவே!

## அன்று!

முப்புறமும் அலைகடலை – மற்றோர் பக்கம்
மொய்த்தபெருந் தொடர்மலையை அரணாய்க் கொண்டே,
எப்புறமும் பகையின்றி, எதிர்த்தோர் தம்மை
இனிநாடா வகைசெய்து வென்றி கண்டு,
செப்பரிய கலைவளர்த்து வாழ்வி லென்றும்
சீர்க்காதல் மிகப்போற்றி இன்பந் துய்த்தே,
ஒப்பின்றி வாழ்ந்திட்டார்; அறிவுக் கொள்கை
உலகத்துக் கீந்திட்டார் தமிழ ரந்நாள்!

அசையாத மலைபோன்று தமிழர் கூட்டம்
அந்நாளில் தனியினமாய் இருந்ததோடு,
வசையில்லாப் பெருநெறியில் உயர்ந்த நோக்கில்
மானமுடன் சிறந்தினிது வாழக் கண்டோம்!
பசையற்ற நிலையில்லை! அறிவைத் தீய்க்கும்
பாழ்மூடச் செயலில்லை! உலகம் போற்ற
இசைகொண்டு வாழ்ந்தவர்கள் முற்காலத்தில்
இருந்திட்டார் எனில், அவர்கள் தமிழ ரன்றோ!

## தமிழர் இனம்

உலகத்து வாழ்கின்ற மக்க ளெல்லாம்
உருவத்திற் பேதங்கொண் டில்லை யேனும்,
பலபலவாம் மொழிகொண்ட கார ணத்தால்
பகர்கின்ற வழக்கத்தால் ஆசா ரத்தால்
நிலவுமிந்தப் புவிதனிலே ஆங்காங் குள்ள
நிலத்தினிலே ஒருசேர வாழ்வ தால், பற்
பலவான இனமாகி வாழு கின்றார்!
பைந்தமிழர் அவர்களிலோர் இனமே யாவர்,

எவ்வினமும் தன்னினத்தில் உயர்வு தாழ்வை
ஏற்படுத்தி யிருப்பதில்லை பிறவி தன்னில்!
வெவ்வியதோர் குணம் படைத்த ஆரி யர்தாம்
மேல்கீழ்என் றுரைத்திட்டார் தம்மி னத்தில்!

செவ்வியுடன் வாழ்ந்த தமிழ் இனமோ அந்தத்
தீமையினைக் கொண்டதில்லை அந்த நாளில்!
ஒவ்வாத ஆரியரின் உறவால், இன்றோ
உயர் தமிழர் பலபேதங் கொண்டா ரந்தோ!

### *இன்றைய நிலை*

உலகம் விழியா முன்பே உண்மை
பலவும் அறிந்து பயன்பெற்று வாழ்ந்தோர்
தமிழர் என்றால் தடுப்பார் உண்டோ?
அமுதாம் அவர்கள் வழங்கு தமிழும்
இணையற்ற தென்றால் எதிர்ப்பா ருண்டோ?
மானங் காத்த மறத்தமி ழர்கள்
ஈனம் வெறுத்தார் என்றால் பொய்யோ?
வீர வாழ்க்கை வெற்றிச் செயல்கள்
தீர உள்ளம் செந்தமி ழர்க்கெனில்,
மறுப்போர் யாவர் மதிப்ப தல்லால்?
செப்பருஞ் சீர்த்தித் தமிழர் வாழ்வுதான்
அப்போ தந்நிலை என்றால்,
இப்போ தெப்படி என்தமிழ்த் தோழரே?

### *காரணம் யார்?*

உலகத்தைக் கடவுள்படைத் திட்டார் என்றார்!
ஒருசெயலும் அவனன்றி நடவா தென்றார்!
நிலவுகின்ற தாழ்வுயர்வு வறுமை மோசம்
நிர்ப்பந்தம் இன்னபிற தீமை யெல்லாம்
மலைமலையாய்ச் சமுகத்தில் தோன்றச் செய்து
மாந்தர்களின் உணர்வழித்துத் துயர்வளர்த்தே
விலங்கினமாய் ஆக்குபவர் யாவர்? அன்னார்
விளம்புகட வுள்தானா? அன்றி வேறா?

மக்களது வாழ்வினிலே மல்கி யுள்ள
மடமையெலாம் மாய்வதற்கு மார்க்கஞ் சொன்னால்,

குக்கலைப்போல் குலைத்தெதிர்க்கும் கடவுள் ஒன்றைக்
குவலயத்தில் நானெங்குங் கண்ட தில்லை!
மிக்கதுயர் விளைக்கு மதம் வேண்டா மென்றால்,
விதிகூறி ஏய்த்திடுவோர் கடவுள் தானா?
தக்க ஒரு நலவாழ்வை அமைப்போ மென்றால்,
சகவாழ்வு மாயமெனச் சொல்வோர் யாவர்?

படுமோசப் பார்ப்பனரின் வார்த்தை நம்பிப்
பாழ்பட்டுப் போய்விட்டார் இந்த நாட்டார்!
கெடுநிலையை யுணர்கின்றா ரேனும், அந்தக்
கேட்டிற்குக் காரணத்தை யறிவ தற்கே
நடுநடுங்கிச் சாகின்றார்! விதியைச் சொல்லி
நாற்பதினா யிரங் கடவுள் படைத்து விட்டார்!
மடமையினில் வளர்ந்த இந்தக் கடவுட் கூட்டம்
மாளாத வரையிங்கு மீட்சி யுண்டோ?

*சகுனத் தடை!*

கடன்காரக் குப்பனிடம் சென்று சென்று
காலோய்ந்த தால் ஓர்நாள் கந்த செட்டி
பிடிவாதஞ் செய்திடவே, வாய்ச்சொல் முற்றிப்
பெரும்போருக் கிடமாகும் நேரந் தன்னில்
நடுவுள்ளத் தார் பல்லோர் அங்கே கூடி
ஞாயங்கள் பலபேசி எட்டாம் நாளைக்
கெடுவாக வைத்திட்டார்; பிழை செய் வோர்க்குக்
கேடுவரின் துணையாகோம் என்று சொல்லி.

சரியென்றே இருவர்களும் ஒப்பி விட்டார்;
தகராறு தீர்ந்ததனால் சென்றார் மற்றோர்.
வருவதெப்போ எட்டாம்நாள் என்றே அந்த
வட்டியினால் கொழுக்கின்ற கந்த செட்டி
விரைந்திட்டான் தன்வீடு. குறித்த நாளும்
விரைந்திடவே கணக்கையெல்லாம் புள்ளி போட்டுச்
சரியாக வட்டியுடன் முந்நூ றென்றும்,
தந்தமுதல் நூறென்றும் குறித்துக் கொண்டான்.

குறிப்பிட்ட கெடுநாளின் விடியற்காலை,
குப்பன்ஊர் செல்வதற்குக் கந்த செட்டி
சுறுசுறுப்பாய்க் காலைசெயும் கடன்கள் தீர்த்துச்
சுந்தரியாம் மனைவியிடம் விடையே பெற்றுப்
புறப்பட்டான், குறடிழந்து வெளியே வந்தான்;
பூனையொன்று வெடுக்கென்று வீதி தன்னில்
குறுக்காக ஓடிடவே, கந்த செட்டி
குலைநடுங்கித் திரும்பி விரைந் திட்டான் வீடு!

தெருவாயிற் கதவருகே நின்று கொண்டு
செட்டியவன் செலும் அழகைப் பாத்தி ருந்த
உருவாய்ந்த சுந்தரியாள், கணவன் தன்னை
ஓடிவரக் காரணம் என்? என்று கேட்டாள்.
'சரியில்லை சகுனந்தான், பாழும் பூனை
சடக்கென்று குறுக்காகப் பாய்ந்த தேடி!
வருந்தொல்லை எதுவாமோ? போகா விட்டால்
வட்டியோடு முதலெல்லாம் போச்சே!' என்றான்.

"பணம் போச்சா!" என்றுதிகி லாக அந்தப்
பாவையுமே வாய்வயிற்றி லறைந்து கொண்டு
பிணம்போலே கீழ்வீழ்ந்து மூர்ச்சை யானாள்!
"பெருந்தொகையும் போச்சேடி! என்னசெய்வேன்;
உணவருந்திப் பார்த்தோமா? உடுத்தினோமா?
ஒருசுகமும் காணாமல் இழந்தோ" மென்றே
கணைபாய்ந்தான்போல் துடித்தே அழுதான் செட்டி!
கருத்திழந்த தமிழகத்தின் காட்சி காணீர்!

### *பல்லி விழுந்த பலன்!*

இளவேனிற் காலத்தே முழுநி லாவின்
எழில்கண்ட வீரன்தன் உள்ளம் மாறிக்,
களிவாழ்வை மேற்கொள்ள மனையா ளோடு
கட்டிலின் மேல் அமர்ந்தின்ப வார்த்தைபேசி
உளமகிழும் நேரத்தில், மேலி ருந்தே
ஓர்பல்லி அவன்உச்சந் தலையில் வீழ,

மளமளவென் றேயோடி மேசை மீது
வைத்திருந்த பஞ்சாங்கம் புரட்டிப் பார்த்தான்.

தலையில் விழுந் தால்பல்லி 'மரணம்' என்றே
சாற்றிடும் அப் பஞ்சாங்கப் பலனைக் கண்டு,
குலைநடுங்க மனையாள்முன் ஓடி வந்தே
'கோ'வெனவே கதறியழு திட்டான் வீரன்!
சிலைமேனி வாய்ந்திட்ட அன்னாள், உள்ளந்
திடுக்கிட்டு வாய்குழறி, 'என்ன?' என்றாள்.
'கலைநிறைந்த மதியாளே, சாக்காடென்னைக்
கடுகிவிட்ட தடிஎன்ன செய்வே' னென்றான்.

ஒருவிஷய மும்புரியா அந்த நங்கை
உரைத்த அவன் வார்த்தையினால் கதிக லங்கிப்
பெருங்குரலில், 'ஐயோஎன் மாமா, இந்தப்
பேதையினைக் கைவிடுத லாமா?" என்றே
விரைந்தோடி அவனுடலைத் தழுவிக் கொண்டாள்!
"விதியிதுவோ" என வீரன் ஓலமிட்டான்!
பெருநெறியே கொண்டதமிழ் நாடே, நீஇப்
பேதைமைக்கு நாணும் நாள் எந்த நாளோ?

## ஆய்ந்து பார்ப்பீர்!

தண்ணறாப் பாயும் தடஞ்சோலை நாடிநான்
பண்ணமைந்த பாவொன் றெழுதுதற்குச் சென்றிருந்தேன்
அங்கோர் மரத்தினிலே ஆரெழிற் புள்ளினங்கள்
தங்கி யிருந்து நலமுரைத்துச் சந்தோஷப்
பேரொலியே செய்து பெருமகிழ்வு கொண்டிருக்கும்
நேரத்தில் என்வருகை கண்டு திடுக்கிட்டுப்
பேச்சை நிறுத்தின; பின்பு சில நிமிடம்
மூச்சன்றி வேறு முணுமுணுப்பும் செய்யவில்லை.
என்னுளத்தை ஈர்த்த எழிலார்ந்த புள்ளினத்தின்
மென்மொழியைக் கேட்க அங்கு மேடையொன்றில் யானமர்ந்தேன்

நேரஞ் சிறிதுசெல நீண்டவாற் புள்மெள்ள
"யாரிவன்?" என்றோர் வினாவை யெழுப்பிற்று.
நாளெல்லாம் மக்களிடம் நன்கு பழகுகின்ற
நீளலகு காகம் நெடுநேரம் பார்த்தென்னை
"வில்லேந்தி நம்மையெலாம் வேட்டையிடும் வேடனல்ல;
கல்லுளந்தான் பெற்ற கயவனல்ல; கண்ணிவைத்துப்
பற்றிச் செலவந்த பாவியல்ல!" என்றுரைக்க,
"மற்றிவன்யார்?" என்றே ஓர் மைனாப்புள் கேட்டதுவே.
மாடப் புறாவொன்று வாய்திறந்து, "இன்னவன்,
மூடநம் பிக்கையில் மொய்ந்த தமிழ்நாட்டான்!
ஆயினுந் தன்னினத்தார்க் காறறிவுண் டென்றுரைத்து
நாயினைப்போல் சண்டையிட்டே நாசமுறுங் கூட்டத்தான்!"
என்றுரைக்க மற்றவை "ஈ ஈ ஈ! ஊ, ஊ, ஊ!"
என்றடக்க மாட்டாச் சிரிப்புச் சிரித்தே.
'இவனா? அவன் இவனா?" என்று முறையாக
அவமானம் பண்ணின! அச்சமயம் ஓர் சிட்டு,
'பேதம் நமக்கில்லை; பெண்ணடிமை கொள்வதில்லை
வாதிட்டு மக்களுக்குள் பேதம் பலவுரைத்தும்,
மாதர் தமையடிமை செய்திழித்தும் வாழ்வினிலே
தீதுற்று மாளும் சிறுசெயலோர் கூட்டத்தைச்
சேர்ந்தோன் இவன் "என்று செப்பிடவே, மற்றவைதாம்
ஆர்ந்த ஒலிச்சிரிப்பால் "ஆ, ஆ, ஆ!" வென்றனவே!
அவ்வமயம் அன்றிற் பறவைதான் முன்வந்தே,
"இவ்வுலக வாழ்வை இனிதென்றே எண்ணுகின்றோம்;
துன்பம் வெறுக்கின்றோம்; தூயநம் பெண்ணினத்தை
அன்பாய் நடத்தி அகமகிழ்ச்சி கொள்கின்றோம்;
ஆனால், மனிதர் அதைவெறுத்துக் கண்ணுக்குக்
காணாத ஒருலகைக் கற்பனையால் தோற்றுவித்தே,
இவ்வாழ்வு பொய்யென்றும் எல்லாமும் மாயையென்றும்
அவ்வுலக வாழ்வே அரும்பெறற் பேறென்றும்
சொல்லிச், சுகவழ்வைத் தோற்றுகின்ற காதலின்வேர்
கல்லி எறிந்தே கருத்தொவ்வா வாழ்வுதனில்
இன்பவழி காண இயலாமல் என்றென்றும்
துன்பத்தில் மூழ்கித் துயர்கொண்டழிகின்றார்!
அந்த மனிதராம் ஆறறிவுக் கூட்டத்தின்

சந்ததியில் வந்தோன் இவனொருவன்! ஆகையினால்,
இந்நிலைபெற் றுள்ள இவன்நமக்கு மேலேன்றே
எந்த அறிவால் இயம்புவது?" என்றுரைக்கச்,
"சீச்சி! இவன்நிலையைச் செப்பாதீர்; மானமற்ற
பேச்சால் மனிதர்கள் மேலேன்று பேசிடுவார்!"
என்றதொரு பேடன்னம். எல்லாமும் "வெட்கம்!" என்றே
விண்ணதிரக் கத்தின; வெட்கித் தலைகுனிந்தேன்!

பின்போர் மரங்கொத்தி பேச்சைத் தொடர்ந்தனவாய்த்,
"தன்முயற்சி யால்நாம் தரணியிலே வாழ்கின்றோம்;
தெய்வச் செயலன்றி நம்மால் சிறிதேனும்
உய்ய முடியாதென் றொப்பாரி வைத்துநிதம்
சோம்பிக் கிடப்போரைச் சூழ்ந்தோன் இவன்!" என்ன,
"ஆம் ஆம், இவர்கள் அசைவதும் நிற்பதும்,
உண்ப துறங்குவதும் ஊரைஏ மாற்றுவதும்,
அண்டை அயலோர் அழிகவென எண்ணுவதும்,
ஏமாந்தோர் சொத்துக் கெசமானர் ஆவதுவும்,
தீமைபல தன்னலத்தால் மென்மேலுஞ் செய்வதுவும்,
எல்லாம் அவன் செயலால்!" என்றோர் பசுங்கிளிதான்
சொல்லிற்றுக் கிண்டலாய். அவ்விடத்தில் சூழ்ந்திருந்த
புள்ளினங்க ளெல்லாம் பொழிலதிரத் தாம்சிரித்தே
எள்ளி, "இவனா" அவன் இவனா" என்றனவே.

இந்த மொழியெல்லாம் என்னுளத்தை வாட்டிமிகச்
சிந்தை தனைமாற்றிச் சீற்றத்தை யூட்டியன!
"கேவலப் பட்சிகள் கேலிஎனச் செய்குவதோ?
நாவை யடக்காமல் நான் சும்மா ஏகுவதோ?"
என்றெண்ணி யானும் பதில்தேடிச் சொல்வதற்கு
முன்வந்தேன்; ஆனால் முடியாமற் போயினவே!

ஐயறிவுப் புட்கள் அவமானம் பண்ணியதால்
மெய்குன்றிப் போனேன்நான்! மேன்மைப் பகுத்தறிவு
வாய்ந்த மனிதரின் வாழ்க்கையிலே ஊழல்கள்
தோய்ந்திருக்கு தென்றே சொலவந்த புள்ளினத்தைக்
கல்லால் எறிந்தேனும் காலொத்துக் கையொடித்துக்
கொல்ல நினைத்தேன். அதுசமயம் கோலமயில்,

“ஆர்ந்த பகுத்தறிவு வாய்ந்தவர்தாம்; ஆனாலும்,
தேர்ந்த அறிவால் செயலொன்றும் செய்ததில்லை!
பண்டை நிலைதன்னைப் பாராட்டிப் பேசிடுவார்;
இன்றோ அவர்நிலமை எள்ளற் குரிதாகும்!
அன்றியும் தந்நாட்டை அயலவர் ஆண்டிடக்
கண்டும் உணர்வின்றிக் கண்ணிலான்போல் வாழும்
அடிமையரைச் சேர்ந்தோன் இவன்” என்ன, “ஆகா!
கொடுமை இவன்நிலை! மிக்க கொடுமை யந்தோ!
நாட்டை யிழந்து நலனென்றுங் காணாமல்
கேட்டை யடைவோனைக் கேலியொன்றும் செய்யாதீர்!”
என்றிரா சாளி இயம்பிடவே, புள்ளினங்கள்
கண்ணீர் கசியப் “பரிதாபம்” என்றனவே!

என்னை மிகவே இழித்துரைத்துக் கேலிசெய்து,
பின்னர் இரக்கம் பெரிது கொண்ட புள்ளினத்தின்
பேச்சால், எனது பெருமையிழந் தேசிறிய
பூச்சாகி விட்டேன்! பொலிவார்ந்த என்வீட்டு
மாடியிலே தங்கிக் கவிதை வரையாமல்
நாடி இச் சோலையை நானெதற்கு வந்தடைந்தேன்?
என்று மிகவருந்தி என்றுமிலாச் சோர்வுடனே
என்னில்லம் நோக்கி எழுந்திருந்தேன் அச்சமயம்,
“மூடச் செயலெல்லாம் முற்றுந் தொலையாமுன்
நாடாது தன்னரசு” என்றதொரு நாகணப்புள்
அன்னதனைக் கேட்டே அதிவிரைவாய் என்வீடு
சென்றுவிட்டேன். என்நாட்டுச் செந்தமிழ வீரர்களே,
எள்ளி நகையாடி நம்மை இழித்துரைத்த
புள்ளினத்தின் பேச்செல்லாம் பொய்க்காமல் உம்மிடத்தே
கூறிவிட்டேன்; நீங்கள் கொடுக்கும் பதிலென்ன?
ஆறறிவால் ஆய்வீர் அமர்ந்து!

***

*சீர்திருத்தம் வேம்போ?*

உலகத்து வாழ்கின்ற மக்களெலாம்
உயர்நெறியைக் கண்டு மென்மேல்
இலகு புகழ்க் காளாகி வாழ்கின்றார்!
இந்நாட்டில் வாழு வோரோ,
நலமற்ற பழமையினில் நனிமூட
நம்பிக்கை கொண்டு நாளும்
குலைவுற்ற வாழ்வினிலே கொடுந்துன்பம்
மிகப்பெற்று வாடு கின்றார்!

சீர்திருந்தும் நினைவில்லை! திருத்தவரு
வோர்தமையும் சீறு கின்றார்!
யார் திருத்தம் சொன்னாலும் உண்மையதில்
கண்டொழுகும் எண்ண மில்லை!
பேர்வருத்தச் செயற்கெல்லாம் விதியென்றும்
கடவுள் செய லென்றும் பேசித்,
தீர்வற்ற வறுமையினுக் காளாகிச்
செயல்மறந்து மாளு கின்றார்!

மானவுணர் வினைமறந்தார்! மக்களிலே
பலபேதம் கொண்டு நொந்தார்!
ஈனமிகும் வாழ்வுற்றுச் சூத்திரனென்
றிழிவேற்று யாருந் தூற்ற
மானிலத்தில் உரிமையின்றி யுணர்வின்றி
வாழுகின்றார்! வளமை வாய்ந்த
தேனினிய வாழ்வுபெறச் சிறிதேனும்
முயற்சியதோ! செய்வ தில்லை!

இந்தவிதம் இந்நாட்டு மக்கள்நிலை
இருக்கின்ற போழ்தி லந்தோ,
எந்தவிதம் முன்னேற்ற வாழ்விங்கே
எய்துவிடும்? இதனை மாற்ற
வந்த ஒரு கடவுளுண்டோ? மதமுண்டோ?
அவதாரம் உண்டோ? மக்கள்
சிந்தனையே செய்வதென்றோ? நமக்கெல்லாம்
சீர்திருத்தம் கைக்கும் வேம்பா?

## மொழி நிலை

## எங்கள் தமிழ்!

(காடு களைந்தோம் என்ற பாரதிதாசன் பாடல் மெட்டு)

இன்பத் தமிழ்தான்–எங்கள்
இன்னுயிர் போற்றி வளர்த்திடுங் கண்டீர்!
கன்னித் தமிழ்தான்–எங்கள்
கதிதனை மென்மே லுயர்திடுங் கண்டீர்!
மென்மைத் தமிழ்தான்–எம்மை
மேனிலை தன்னிற் செலுத்திடுங் கண்டீர்!
தொன்மைத் தமிழ்தான்–இங்குத்
தூயசு தந்தர மளித்திடுங் கண்டீர்!

அன்பு பெருக்கும்–உயர்
அகப்பொருள் நூல்கள் எமக்குண்டு கண்டீர்!
இன்பம் விளைக்கும்–நல்ல
இன்னிசை யமுது மிகவுண்டு கண்டீர்!
நன்மை பயக்கும்–இந்த
ஞாலம்புகழ் நீதி நனியுண்டு கண்டீர்!
துன்ப மொழிக்கும்–வளஞ்
சூழும் நறுங்கவித் தேனுண்டு கண்டீர்!

ஆதலி னாலே–பிறர்
ஆட்சிக் கடிமைக ளாவது முண்டோ?
பேதங்கள் தீர்வோம்!–பல
பீடைநெறிகளை ஓடிடச் செய்வோம்!
காதலே கொள்வோம்–எந்தக்
காலுந் தெவிட்டாத கன்னித் தமிழ்மேல்!
தீதெலாம் மாயும்!–இங்குச்
செந்தமிழ் ஆட்சியில் நன்மையுண்டாகும்! (இன்பத்)

## கல்வி

கல்வியே உலக மக்கள் கருதிடும் உண்மைச் செல்வம்!
கல்வியை யறிந்தோர் அஃது கருந்தனம் என்றார்! மற்றச்

செல்வமோ அழிந்து போகும்! சிறுமையும் விளைக்கும்! ஆனால்,
கல்வியோ ஊற்று நீர்போல் தந்திடப் பெருகுங் கண்டீர்!

கல்வியின் பயனை மக்கள் கண்டிடு வாரே யானால்,
எல்லையில் ஊக்கங் கொண்டே இனிதுடன் நாளுங் கற்பர்!
நல்லறி வதனால் சேரும்; நனிதுயர் யாவுந் தீரும்!
புல்லறி வகலும்! உண்மைப் பொருளெலாம் விளங்கும் நன்றே!

பள்ளியை நாடிச் செல்வோர் படித்துமே உத்தி யோகங்
கொள்ளவே கற்ப தாலே குறைபல கற்கின் றார்கள்!
உள்ளமே விருத்தி யாகும் உற்றதோர் கல்வி யந்தப்
பள்ளியி லிருப்ப தில்லை; பகுத்தறி விங்குக் குற்றம்!

இத்தகைக் கல்வியாலே என்னதான் பலனைக் கண்டார்,
சித்தமே இழந்து மக்கள் சிறப்பெலாம் தீர்ந்த தன்றி?
மித்தையாம் மதத்தின் கல்வி மேலெனக் கருதும் இந்தப்
பித்தமே தெளிய வேண்டும்! பிழைமிக நீங்குங் கண்டீர்!

அறிவினை யூட்டுங் கல்வி அவிவேகம் போக்குங் கல்வி,
சிறப்பினைக் கொடுங்ககுங் கல்வி தெளிவான தர்க்கக் கல்வி,
நெறிமுறை வளர்க்குங் கல்வி நேர்மைவிஞ் ஞானக் கல்வி,
மறுவறு கல்வி யாலே மக்களுக் கறிவுண் டாகும்!

கல்வியில் ஊக்கம் வேண்டும்; கற்பதில் தெளிவு வேண்டும்
பல்விதத் தொழிலா ராய்ச்சி பண்ணலில் ஆசை வேண்டும்;
செல்வமும் அதுவே யாகும்! சீர்மையும் பெருகும் மக்கள்
நல்லதோர் இன்ப வாழ்வை நாடுவர்; கல்வி வாழி!

### *தமிழுக்குச் சதி!*

(ஆனந்தக் களிப்பு)

எங்கள் தமிழ்க்கிணை யுண்டோ?–அதன்
ஈடற்ற நற்புகழ் பேசுதற் குண்டோ?
பொங்கும் வளநாட்டு மன்னர்–நல்ல
புகழுற்ற வள்ளல்கள் பூவையர், மற்றும்

சங்கம் புரந்திட்ட தமிழைச்—சில
சண்டாளர் மாய்த்திட எண்ணுவ தெல்லாம்,
பங்க மடைவதற் கன்றி—அந்தப்
பகற்கொள்ளைக் கூட்டத்தார் வெற்றிகொள்வாரோ?

நல்ல கலைக ளில்லாத—சொல்லும்
நயமுறுங் காவியம் ஒன்றுமி லாத
வல்லுநர் யாவரும் போற்றும்—உயர்
வளம்பெறு மிலக்கணம் யாவுமிலாத
சொல்லாடச் சோர்வுறும் இந்தி—இங்கே
சுகந்தர வருகுதாம் என்னே மடமை!
வெல்லுந் தமிழ்நாட்டு மக்காள்,—நீங்கள்
வேடிக்கை பார்த்திட்டால் வந்திடும் மோசம்!

'இந்தி பொதுப்பாஷை' என்றே—நாட்டி
லெங்கணும் பேசியே ஏய்த்திடு மக்காள்,
எந்த இடத்திலெப் போது—கூடி
இந்தி பொதுவென்றே யாக்கினீர் சொல்வீர்?
சந்தத் தமிழ்மொழி வல்லோர்—மற்றும்
சார்ந்துள மொழியினில் தேர்ந்திட்ட நல்லோர்
வந்தே முடிவுசெய் தாரோ?—அட
வாயாடி வம்பரே வாய்மூடிப் போவீர்!

சோதரரே ஒன்று கேளீர்!—நல்ல
தூய்மைத் தமிழ்க்கொன்றுந் தீங்கிலை யென்றே
ஓதிடு வார் அந்த வஞ்சர்!—நம
துயர்வினைச் சிறிதேனுங் காப்பதிந் நாளில்
ஏதமி லாத்தமிழ் அன்றி—வேறே
ஏதுண்டோ சிந்தனை செய்திடு வீரே?
ஆதலி னால் தமிழ் காத்தே—பொல்லா
ஆரிய சூழ்ச்சியை ஓட்டிடுவீரே!

(எங்கள்)

## அன்னையின் அலமரல்

செந்தமிழ்ச் செல்வர்களே,—என்
சீருறும் மைந்தர்களே,
பைந்தமிழ் காத்திட வந்து பணிசெய்வீர்
பாவை நி கர்த்தவரே!

என்புகழ் கீர்த்தியெலாம்—புவி
எங்கும் நிறைந்தனவாம்!
அன்ன புகழினை மாய்த்திட வெண்ணியே
ஆரியர் வந்தடைந்தார்!

சூழ்ச்சி பல புரிந்தார்—கொடுந்
துன்ப மிழைத்துவந்தார்!
வாழ்க்கையின் வேரற இன்றவர் இந்தியாம்
வாளினை ஓங்கிவிட்டார்!

மானம் பறிபோகும்!—நம்
வாழ்வும் சிதைவாகும்!
ஈனம் சகிப்போரை ஈன்றதிலை நானும்
இப்புவி நாள்முதலாய்!

விண்பழி ஏற்காதீர்!—என்
மேன்மை குலைக்காதீர்!
ஆண்மையும் அஞ்சிடா நெஞ்சமும் தந்த உம்
அன்னைசொல் மீறாதீர்!

வீரம் அமைந்தவரே—இந்தி
வீழ்ந்திடப் போர்தொடுப்பீர்!
சாரத் தமிழெனும் என்னுயிர் காத்து நல்
சான்ற புகழளிப்பீர்!

## தமிழர் சீற்றம்!

எங்கும் மனக் கொதிப்பே—அடடா இன்பத் தமிழ் நாட்டில்!
பொங்கும் உணர்ச்சியெலாம்—திரண்டே புத்துயிர் பெற்றதடா!
தங்கும் உயர்தமிழைச்—சிதைக்கச் சண்டாளர் 'இந்தி' என்றார்!
சிங்கம்போல் வீறுகொண்டார்—தமிழர் செந்தமிழ் காப்பதற்கே!

"ஒன்று தமிழ்தழைய–வேண்டும் உற்றதோர் இந்நாட்டில்!
அன்றேல் தமிழ்களின்–ஆவி அழிந்திட வேண்டும்!"
என்ற முடிவடைந்தார்–தமிழர் இந்த உணர்ச்சியினைச்
சென்றழிப்ப தெதுவோ?–சூழ்ச்சி செல்லுமோ இங்கினிமேல்?

அலைகடல் பொங்கத்–தமிழை அழிக்க வந்திடினும்,
மலையெலாம் புரண்டே–தமிழை மாய்க்க வந்திடினும்,
பலமிகு மரசர்–தமிழைப் பழித்தழித்திடினும்,
சலித்திடு வாரோ–தமிழர் தாய்மொழி காப்பதற்கே?

## *தமிழ் காத்த தாய்மார்!*

தமிழர் நலங்காக்கத் தன்மதிப்புக் காக்க
அமுத மொழிகாக்க அன்னையீர் நீங்களெலாம்
வஞ்சனையா லிங்குவந்த இந்திதனை மாய்த்திடவே
வெஞ்சிறையை நாடி விருந்தானீர் என்றதொரு
செய்தியினைக் கண்டேன்! செயல்மறந்து வாழ்த்துரைத்தேன்!
உய்ந்த தினித்தமிழர் நாடென் றுளமகிழ்ந்தேன்!
பெண்கள் பிறவியிலே தாழ்ந்தவர்கள், பேதைகள்,
கண்ணுக் கினியநற் காட்சிதரும் பாவைகள்,
பிள்ளை பெறும்பொறிகள் என்றுபல பேசியே
எள்ளி நகையோடும் ஈனர் தலைகுனியப்,
பெண்களும் வீரம் படைத்தவர்காண்! மாந்தர்க்குக்
கண்ணிரண்டில் பேதம் கழறுவ தில்லையெனும்
உண்மை யறிவுறுத்தி ஊக்கம் மிகக்காட்டிப்,
பணடைத் தமிழ்ப்பெண்கள் பான்மையினை நன்கு
மனதிருத்தி, இக்காலப் பெண்குலத்தின் மாசை
நனிதுடைக்க முன்வந்த நங்கையீர், அன்னையீர்,
உங்கள் பெருங்குணத்தை ஒப்பில் தியாகத்தைப்
பொங்குதமிழ் நாடும் பிறநாடும் போற்றினவே!
பாழ்துயிலே கொண்டு பழியேற்றுப் பல்லாண்டாய்
வீழ்நிலையே பெற்றுவிட்ட மேன்மைத் தமிழகத்தில்,
தன்மதிப்பு மிக்க தனிப்பெரியார் பேரெதிர்ப்பின்
முன்நின்றே நல்லறிவை மூட்டிவிட்டார் மக்களிடம்!
உத்தமிகாள்! நீங்கள் உறுதுணையாய் ஒத்துழைத்தே
புத்துணர்ச்சி தந்தீர்! புகழ்தந்தீர்! போற்றுகின்றேன்.

மாதர் மனம்வைத்தால் மாமலையும் ஓர் கடுகாம்!
ஈதறியா மக்கள் இருப்பதுவும் விந்தையன்றோ!
இந்த நிலையை இனிதே யுணர்த்தவந்த
செந்தமிழ்ச் செல்விகாள், தாயர்காள், நீங்கள்
சிறைச்சாலை யேகவில்லை! தீமையெல்லாம் வீழ்த்த
அறச்சாலை தான்ஏகி னீர்!

*'தமிழ்த் தாயின் சிரிப்பு!*

வானைப் பிளக்குதடா–தமிழ்தான் வாழ்க வெனுங் கோஷம்!
கானுற்ற தீப்போலே–எங்கணும் கடுகிச் செல்லுதடா!
வீணர்கள் கொண்டுவரும்–இந்தி வீழ்க வெனுங் கோஷம்
நானிலம் யாவுங் கேட்டே–மிகவும் நாட்டமே கொள்ளுதடா!

மானவுணர் வடைந்தார்–தமிழர் வல்லமை மிக்குயர்ந்தார்!
ஈனநிலை கடந்தார்–தமிழர் ஏறுபோல் வீறுகொண்டார்!
தேனமுதத் தமிழின்–இனிய தீஞ்சுவை கண்டுவிட்டார்!
ஆனநரிச் சமுகம்–இனிமேல் அழிக்கக் கூடுவதோ?

சூரத்தன மிகுந்த–தமிழா, சூழ்ச்சியில் கைதேர்ந்த
ஆரியக் கூட்டமிந்த–நிலைக்கண் டஞ்சி நடுங்குதடா!
"வீரர்க ளாகி விட்டார்–மைந்தர்கள் வெற்றி இனி" எனவே,
சீருற்ற நம் தமிழ்த்தாய்–அதோபார் சிரிப்புக் கொள்ளுகின்றாள்!

*பெண்ணுலகு*

*கூண்டுக் கிளி!*

வானிடையே உரிமையுடன் பறந்துசென்று
மரக்கிளையில் தங்கிமகிழ் வாகப் பாடித்
தேனிகர்த்த தீங்கனிக ளருந்தி நாளும்
சேர்ந்ததுணை பிரியாமல் இனிதாய் வாழும்
கானகத்துக் கிளிதன்னைப் பிடித்துவந்தே
காப்பமைந்த கூண்டுதனில் அடைத்து மக்கள்
பால் பழங்கள் அளித்திடுவர்; பேச்ச ளித்துப்
பரவசமே யடைவர்! அது கிளிக்கு முண்டோ!

அவ்வாறே வாழ்வுதனில் துணையை வேண்டி
அழகியநன் மாதர்களை விலைக்கு வாங்கிச்,
செவ்வியுறும் அணியாடை உணவு தந்தே
சிந்தையெழும் அறிவூற்றை அடைத்து நாளும்

வெவ்வியதாம் இருட்டறையில்–சமையற் கூட்டில்
விளையாட விட்டுவைத்தே மகிழ்வர் ஆண்கள்!
கொவ்வையிதழ் மாதர்களின் இந்த வாழ்வு
கூண்டிலுறும் கிளிவாழ்வுக் குயர்ந்த தாமோ?

வாழ்வென்றால் இவ்வளவே என்று சொல்லி
மதங்கூறிச் சாத்திரத்தின் விதியைக் கூறிச்
சூழ்ந்துள்ள ஆண்மக்கள் ஆட்டு விக்கும்
சொற்படியே ஆடுபவர் உயர்ந்த கற்புக்
காழ்மணிகள் ஆகிடுவர்! தேவராலும்
கருதிவணங் கப்படுவர்! என உரைத்த
பாழ்விளைக்கும் போதனையை நம்பி நம்பிப்
பகர்கூண்டுக் கிளியானார் மாதர், அந்தோ!

## *உரிமை யற்றவள்!*

அழகு வாய்ந்தவள்தான்!–உயர் அணிகள் பூண்டவள்தான்!
பழகுங் காதலில் தன்னொரு நாதனைப் பணியச் செய்பவள் தான்!
மழலை கொண்டவள்தான்!–அன்பு வடிவம் ஆனவள்தான்!
கழறும் நற்குண நல்லறி வுமற்றும் கல்வியும் மிக்கவள் தான்!

என்ன இருந்தாலும்–அவள் இழிந்தவள் இங்கே!
சின்னம தியினள் என்றிடும் சாத்திரம்! செல்லா தவள் வார்த்தை!
என்ன குறையுடையாள்?–அவள் என்ன தவறுடையாள்?
மன்னுசொத் துரிமை ஒன்றிழந்தாள்! வந்த மானக்கே டீதன்றோ!

***

## *வைதிகப் பலன்*

வெண்ணிலவைப் பொழிகின்ற தண்மதிதான் வான
வீதியிலே தோன்றிடுமோர் நாளினிலே யானும்

எண்ணமிகப் பலப்பலவாய்த் தோன்றியதால் தூக்கம்
இன்றிமன வமைதிபெற மாடிக்குச் சென்றேன்.
தண்காற்று மெல்லெனவே வீசியினி தாக்கச்,
சந்திரனும் என்னுளத்தை மகிழ்வித்தான் மிகவே!
எண்ணமேலாம் ஒருநிலையில் வந்திட்ட நேரம்;
எல்லோருந் தூங்கிவிட்டார். இச்சமயம் தன்னில்,

தோட்டத்துப் பக்கமதாய் வந்ததொரு சத்தம்;
சோகந்தான் நிறைந்ததது! சுடுகின்ற தீப்போல்,
நாட்டமுடன் கேட்டிருந்த என் இதயந் தன்னில்
நனிமிகவே சுட்டததைக் கூறுகின்றேன் கேளிர்;–
“வாட்டுகின்ற துன்பத்தின் மீளும்வழி யில்லை!
வையத்தார் வகைசெய்த நீதிநெறி என்னே!
கேட்டிற்கே யாளாகும் பெண்குலந்தான் செய்த
கேடென்ன சொல்லிடுவாய் பாழுலகே நீதான்?

வாழ்வின்பம் யாவருக்கும் பொதுவாகு மன்றோ?
மாப்பெரியோர் இதையுணரா திருப்பதுவும் நன்றோ?
ஆழ்வுறுதே பெண்குலந்ததான் விதவையெனும் பேரால்
அநியாயம் இதனைப்போல் அவனியிலே உண்டோ?
சூழ்ந்துள்ள நெருப்பிடையே எமைவிட்டு நாளும்
துன்புறவே செய்துவரும் சூதறிவார் யாரே?
பாழ்நிலையில் வீழ்வதுவோ பெண்பிறவி? இங்குப்
பரிதாப உள்ளமெலாம் பறந்துவோ? ஐயோ!

என்தாயும் தந்தையரும் சிறுவயதி லென்னை
யாருக்கோ மணஞ்செய்தார்; இறந்தார்கள் பின்பு
நன்மாலை சூட்டிய அந் நாயகனும் மாண்டான்;
நங்கையென விதவை யென்றார்! அன்றுமுத லென்னைத்
துன்பமெனும் நெடுங்கடலில் ஆழ்த்தியது சுற்றம்!
தூயவொரு மங்கையெனும் நற்பருவந் தன்னில்,
பன்னலமும் யானிழந்தேன்! பாவியேனென் வாழ்வு
பாழான முடிவினுக்கே வந்ததுதான் கண்டேன்!

அண்ணாரும் அண்ணியரும் காதலிலே மூழ்கி
அன்றாடம் களித்திடுவர்! அருகிருப்பேன் யானும்!

எண்ணாது மெண்ணியெண்ணி என்னுளந்தான் தீயும்!
என் நிலையை யார்றிவார் என்போன்றா ரன்றி?
அண்ணார்க்கும் அண்ணியர்க்கும் அறிவிருந்தால் என்னை
அழகான நடுக்கூடத் தூணென்றே எண்ணார்!
திண்மையுறும் விதவையெனும் சித்ரவதை தாளேன்!
தீர்ந்திடுக என் ஆயுள்! தீர்ந்திடுக தீர்க!"

திடுக்கிட்டேன் ஓடோடித் தோட்டத்திற் சென்றேன்;
சிறுகிளையில் தொங்குகின்றாள் துடிதுடித்தென் தங்கை!
நடுக்குற்றேன்! உளம்வியர்த்தேன்! செயலற்றேன்! இந்த
நாட்டினிலே வைதிகத்தைப் புனிதமென வெண்ணிக்
கடைப்பிடித்த பயனிதுவோ? என்அருமைத் தங்கை
கருத்தழியச் சுகமழியக் கதறியழ விட்டே,
நடைப்பிணமாய்ச் செய்துயிரைப் போக்கிவிட்டேன் பாவி!
நவிலுமிந்த வைத்வ்யம் நாசமடை யாதோ!

☆☆☆

## *சிதைந்த உள்ளம்!*

மாசு படிந்த உடலுடனும், மங்கு நிலவின் முகத்துடனும்,
தூசி படிந்த உடையுடனும் சோகம் நிறைந்த உருவுடனும்
ஆசில் குணத்துக் காரிகையாள் ஆழகை யெல்லாம் பறிகொடுத்தே
வீசும் புயலால் உள்ளத்தில் வேத னையே கொண்டிருந்தாள்!

அந்த நங்கை ஒர்நாள், தன் அன்னை வெளியூர் சென்றதனால்,
முந்த வீட்டு வேலையெலாம் முடித்துத் தோட்டந் தனிலுள்ள
விந்தை மேவும் பூஞ்செடிக்கு வேண்டும் தண்ணீர் ஊற்றிடவே
வந்தாள்; நீரை ஊற்றியபின், மலரின் கூட்டம் பலகண்டாள்!

ஒடி மிக்க ஆவலுடன் ஒன்றைப் பறித்தாள் மணம் நுகர்ந்தாள்!
பீடு கொண்ட மனத்துடனே பின்னர் அதனைத் தன்தலையில்
சூட நினைத்தாள்; திடுக்கிட்டாள்! துன்ப வெள்ளம் பெருக்கெடுக்க,
நாடி யிழந்த நிலையினள் போல் நடுங்கி யுள்ளம் சோர்ந்திட்டாள்!

கையி லுள்ள மலர்மீது கண்ணீர்த் துளிகள் சிந்தியதும்
வெய்யில் தண்னிற் கிடந்ததுபோல் வெதும்பிற் றந்த வளமலரும்!

வைய நிலைய அவள் நினைத்தாள்; வருத்தத் திற்கோர் அளவில்லை!
மெய்யை நனைத்தும் நிற்கவில்லை; மேலும் பெருகிற்றவள் கண்ணீர்!

தன்னில் மூத்தோர், தன் தாயர் தலையில் மிகவே பூச்சூடி
அன்னாள் மனக்கண் முன்னுலவ, 'ஆ! வென் றலறிக் கீழ்விழ்ந்தாள்!
என்னே மடமை விதவை யென இந்த நாட்டில் மாதர்களைத்
துன்ப வாழ்வில் வீழ்த்தி நிதம் துடிக்கச் செய்யும் கொடுமை யந்தோ!

***

## *அன்பு நாட்டில் அமங்கலை!*

அன்புள்ளம் இல்லாத மனிதர் தம்மை
ஆர்ந்திட்ட நல்லறிவுப் பெரியோ ரெல்லாம்,
“என்புறுதோல் போர்த்திட்ட உடலம்” என்றே
இசைத்திட்டார்; ஈதறிந்தே உயிர்கள் மீது,
நன்மனங்கொண் டவற்றினுக்குத் தீமை யின்றி,
நலம்பலவும் செய்கின்றோம்! ஆனால் அந்தோ,
வன்புறுத்தும் மதம்பேசி மாதர் தம்மை
மாத்துயரில் ஆழ்த்துகின்றோம்; அறிந்தோமில்லை!

“பெண்ஜென்மம் பாவ” மெனப் பேசிப் பேசிப்
பேதைமையை வளர்த்துவிட்டார் சூழ்ச்சி மக்கள்!
கண்ணிரண்டில் பாவபுண்ணி யந்தான் செய்த
கண்ணுண்டோ? வாய்ந்துள்ள சமுகந்தன்னில்,
பெண் ஆணும் கண்போன்று விளங்குகின்ற
பெற்றியினை யறியாதார் மனிதர் தாமோ?
மண்ணுலகில் வேறெங்கு மிதுபோ லுண்டோ?
மதம்பேசும் மாந்தரிதை யுணரா ரேனோ?

மாதர்க்கு மணவுரிமை யளிப்ப தில்லை!
வாழ்விலவர் படுந்துயர்க்கோ மாற்றுமில்லை!
நாதனிழந் தாலவர்கள் மீண்டும் வேறோர்
நாயகனை மணப்பதுவும் பெரிய குற்றம்!
நீதியிலா முறையேனும் ஆண்கள் மட்டும்
நினைத்தபடி மறுமணமே செய்து கொள்வர்!
வேதமுதல் அன்னவர்க்குச் சான்று கூறும்!
விதவைநிலைக் கிரங்கிடுவார் யாருமில்லை!

படமுடியாத் துயர்க்கடலில் நீந்தும் அந்தப்
பதியிழந்தோர் கரையேற மார்க்கஞ் சொன்னால்
குடிமுழுகிப் போச்சென்றே வைதீ கத்தின்
குடுக்கையெலாம் ஆர்பாட்டம் செய்யு மிங்கே!
அடர்புதரில்—சாய்க்கடையில் நித்த நித்தம்
அனாதயைப்போல் சிசுவிறந்து கிடக்கு தென்றே
படிக்கின்றோம், பார்க்கின்றோம்! இதனால் "மானம்
பறப்பதில்லை" எனிலிதுவும் விந்தை யன்றோ!

"கடவுளரின் ஆணை" யெனில் விதவைத் தன்மை
கணவன்மார் மாண்டவுடன், காதல் அந்தச்
சுடர்க்கொடியாள் உளம்விட்டு மாய்த லின்றிச்
சுடுநெருப்பாய்த் தோன்றிஉடல் தீய்ப்ப தேனோ?
அடக்குமுறை யாலவர்கள் காதல் தீயை
அணைத்துவிட முயல்கின்றார்! ஆனால் அந்த
மடத்தனத்தால் 'விபரீதம்' விளையக் கண்டும்
மனந்திருந்தா திருப்பவர்கள் மனிதர் இங்கே!

"கன்னிகைதான் சிற்றின்பம் வேம்பென் றாலும்
கைக்கொள்வள் பக்குவத்தே" என்றார் முன்னோர்
மின்னொளிரும் இளமை யெழில் விதவை மங்கை
வேண்டாளோ சிற்றின்பம்? இயற்கை யன்றோ?
நன்னிலையே வேண்டிமிகத் தவஞ்செய் தோரும்
நனிகாதல் மிகக்கொண்டார் என்னக் கண்டும்,
பொன்னனைய மாதர்களைக் காதல் தீயில்
பொசுக்கி உயிர் வாட்டுவது தானோ அன்பு?

✧✧✧

## *பூவையர்க் கிரங்கும் புள்ளினம்!*

வண்ண மலர்ச்சோலை—தன்னில் வாய்த்த நாதருடன்
பண்கள் பலபாடித்—தினமும் பரவச மடைவோம்!
எண் ணும் இனியதொரு—வாழ்வில் என்றும் மகிழ்ந்திடுவோம்!
மண் ணில் வாழ் மாதர்களே—உம்போல் வாழ்வதை யாம் விரும்போம்!

புள்ளினம் என்றுரைப்பீர்–எம்மைப் புன்மொழி யாலிகழ்வீர்!
எள்ளிடும் வாழ்வெமக்கோ–உமக்கோ? எண்ணிடு வீர் சிறிதே!
குள்ளச் செயல்புரியோம்–இனத்தைக் கொடுமை செய்தறியோம்!
கள்ள உரை புகலோம்–நாங்கள் கற்ற தியற்கை நெறி!

ஆயும் அறிவுடையோம்–எனநீர் ஆணவம் பேசிடுவீர்!
தேயும் மதிபோல் உம்–மாண்பு தேய்வதை நீரறியீர்!
நாயும் விரும்பாத–அடிமை வாழ்வில் நாளெல்லாம்
ஒயுத லின்றி நீங்கள்–மிகவே உழைப்பதைக் காணீர்!

சந்தையில் மாடுவாங்கும்–ஒருவன் தரகு–விலை தந்து,
சொந்தமாய்க் கொண்டதன் பின்–அதனால் சுகம்பெறக் கண்டோம்!
அந்தவிதம் நீங்கள்–ஊனும் ஆடையும் பெற்றிடவே
சொந்த மதி யிழந்தீர்!–ஆண்கள் சுகப் பொறி யானீர்!

என்ன நலங் கண்டீர்?–உரிமை யாது பெற்றுள்ளீர்?
கன்னல் மொழியுடையீர்,–அதனைக் கழற முன் வருவீர்!
அன்னநடை நடப்பீர்–பலவாம் அணிகள் பூண்டிடுவீர்!
பின்னல் சடைமுடிப்பீர்–ஆனால் பேதைமை விட்டகலீர்!

விந்தையொன்று கேட்பீர்–உம்மை வீழ்ந்த பிறப் பென்றும்,
நிந்தைக்குரிய ரென்றும்–புகல்வார் நீரும் அதை யொப்புவீர்!
எந்த உலகினிலே–இதுபோல் ஏழை மதி கண்டீர்?
சுந்தர மாதர்களே–எமது சுதந்தரங் காணீர்!

ஆணுக்குப் பெண்ணடிமை–உண்டோ? அதைநீர் ஏற்றதனால்,
மாணுற்ற பெண்ணுலகுக்–கழியா மாசினை யுண்டுபண்ணீர்!
நாணம் மிகுந்தவரே–இதற்கு நாணுதல் ஏன் மறந்தீர்?
வீணுரை பேசுவதோ?–உமது வீழ்ச்சிநிலை யறிவீர்!

பக்தியினில் மிகுந்தீர்–சடங்கு பற்பல செய்கின்றீர்!
பக்தியும் செய்சடங்கும்–உமது பழிப்பை நீக்கிடுமோ?
மிக்க துயர்களைவீர்–தமிழர் மேன்மை நிலையறிவீர்!
தக்க பணிபுரிவீர்–உயிராம் தன்மானங் காத்திடுவீர்!

❀❀❀

## தொழிலாளர் மேன்மை

("கொச்சிமலை குடகுமலை" போன்ற இசை)

தொழிலாளர் மேன்மையினைச் சொல்வதுவு முண்டோ?
தூயவொரு வனப்புலகைத் தோற்றியவர் அன்னார்!
எழின்மாட மாளிகைகள் கோபுரமுண் டாக்கி
இருளுலகை ஒளிபெறவே செய்தவர்கள் அன்னார்!
அழகியநற் சோலைகுளம் ஏரிஆறு கண்டே
அரியதொரு விளைநிலங்கள் அமைத்தவர்கள் அன்னார்!
குழவிநிலை தனிலிருந்த நாகரிக வாழ்வைக்
கோடுயர்மா மலைபோலே உயர்த்தியவர் அன்னார்!

உயிர்வாழ்வோர்க் குணவுகளை விளைவிப்பவர் அன்னார்!
உடைகள்பல நவநவமாய் நெய்தளிப்போர் அன்னார்!
துயிலுதற்கும் வாழுதற்கும் காப்பமைந்த தான
சுகந்தருநல் வீடுபல அமைத்திடுவோர் அன்னார்!
பயம்விடுத்துப் பூமியினுள் சுரங்கம் வெட்டி யாங்கே
பல்விதஉ லோகவகை கண்டளிப்போர் அன்னார்!
அயர்வின்றி மனிதகுலம் வாழும்வகைக் கேற்ற
அரும்பொறிகள் வாகனங்கள் செய்பவரும் அன்னார்!

கன்மலையைப் பிளப்பவரும் கடல்முத்தெடுப் போரும்
காடுபல அழித்துநாடு காண்பவரும் அன்னார்!
இன்னும்பல் எழில்நலங்கள் உலகுபெற வேண்டி
இன்னுயிரைப் பொருட்படுத்தா துழைப்பவரும் அன்னார்!
பன்னுவதோ அத்தோழர் தோள்வலியின் மேன்மை?
பாருலகம் அதையறியா திருப்பதென்ன நேர்மை?
இன்னவிதம் உழைப்பவருக் கேழ்மைநிலை யென்றால்,
இவ்வுலகம் நன்னெறியில் ஏகுவதும் எந்நாள்?

✡✡✡

## புண்ணிய நாட்டில் ஏழைகள்!

புண்ணியநா டென்றுசொலும் இந்த நாட்டில்
புழுப்போலே துடிக்கின்றார் ஏழை மக்கள்!
கண்கொண்டு பார்ப்பதற்கோ சகிக்க வில்லை!
கதியற்றே நிதியற்றே வறுமை யுற்றே
புண்மனத்தால் வாடுகின்றார்! அந்தோ, இந்தப்
புவிதனிலே வேறெங்கு மிதுபோற் காணேன்!
எண்ணமெலாம் "என்செய்வோம்?" என்ப தாகும்;
இடிக்கின்றார் மனத்துயரால் நலிகின்றாரே!

பொன்விளையும் நாடென்றார்; ஆனா லிங்குப்
பொழுதெல்லாம் உழைத்தாலும் சோற்றுப் பஞ்சம்!
துன்பமிகத் தாளாமல் சொந்த நாட்டைத்
துறக்கின்றார் பெண்டுபிள்ளை உயிரைக் காக்க!
நன்செய்நில முப்போக விளைவு யாவும்
நனிகரம்பாய் விட்டனவோ? அந்தோ, அந்தோ!
கன்னெஞ்ச முதலாளர் செல்வர் என்னும்
கடுஞ்சூறை ஏழையரை மோதக் கண்டோம்!

நல்லின்பம் அனுபவிக்க வேண்டி, அன்னார்
நாட்டினது செல்வத்தைக் கொள்ளை கொண்டார்!
வல்லரசும் அவர்பக்கம் துணையாய் நின்றே
மக்களது துயர்நிலையை வளர்க்கக் கண்டோம்!
அல்லலுறும் ஏழையரின் நிலையை மாற்ற
அமைத்திடுவோம் சமதர்மம் என்று சொன்னால்,
புல்லுருவிக் கூட்டமெலாம் சீறிப் பாய்ந்தே
புலிவேஷம் போடுதிங்கே! மடமை என்னே!

***

## வறியோன் கண்ட வான்மதி!

நிலவே நிலவே, நெஞ்சங் கவருங்
கலையெலாம் நிறைந்த கவின்பெறு நிலவே,
திடமுடன் நீதான் சிந்தனையின்றி
மடமடவென்றே வானிற் செல்கிறாய்!

நானோ மிகவும் நல்கூர்ந் ததனால்
வாணுதல் மனைவி மக்களைப் பிரிந்து,
பிழைப்புத் தேடிப் பெரிதும் அலைந்தே
உழைப்பில் லாமல் உள்ளம் வாடக்,
கையைக் கொண்டே மெய்யைப் போர்த்தி
நடுக்கஞ் செய்யும் நனிகுளிர் தன்னில்
முடங்கிக் கிடந்து மூட உலகின்
சிறுசெய லெண்ணித் தியங்கிடும் நேரம்,
முறுவல் செய்தே முன்வந்து தோன்றினாய்!
என்நிலைக் கிரங்கி நீ இன்மையைப் போக்கிடச்
சென்றிடும் உலகில் சிறியதோர் வேலை
தேடித் தருவாய் என்ற மகிழ்வால்
வாடிக் கிடந்த தலையை நிமிர்த்தினேன்!
அந்தோ, அந்தோ, நீதான் என்றன்
ஆருயிர் மனைவியின் சீர்முகங் காட்டிக்
குழந்தையு மவளுங் கொண்ட உளத்தைப்
பழியுறு களங்க மதனில் காட்டி,
உடைந்தஎன் உளத்தை மேலும்
நடுங்கிடச் செய்தாய்! நானினி வாழ்வதோ?

❀❀❀

## *பசிநோய் போக்குவீர்!*

(ஏற்ற பண் இசைக்க)

மேனாட்டி லோர்மனிதன்–பசியால்
வீழ்ந்து மடிந்திடிலோ,
சேனா சமுத்திரம்போல்–மக்கள்
சேர்ந்து கிளர்ச்சிசெய்வர்!
கோனாட்சி யாயிடினும்–அஃதோர்
குடியாட்சி யாயிடினும்
தானாட்டங் கண்டுவிடும்!–குறையோ
தலைகாட்டா தோடிவிடும்!

இந்திய நாட்டினிலே–பசியால்
எண்ணற்ற மாந்தர் நிதம்
நொந்துமே மாளுகின்றார்–இதுபோல்
நூதனம் எங்குமில்லை!
இந்தநிலை யறிந்தும்–அதனை
இங்குளோர் போக்குதற்கே
சிந்தை துடிப்பதில்லை!–உணர்வோ
சிறிதுங் கொள்வதில்லை!

வேதன் விதித்தபடி–யாவும்
விளையும் என்றுசொல்லித்,
தீதினை ஓம்பிடுவார்!–அதுபெறின்
தெய்வத்தைக் கூவிடுவார்!
மேதையர் யாங்களென்பார்–முயற்சி
வீணெனக் கூறிடுவார்!
யாதுநலம் பெறுவார்?–இவர்கள்
எந்நலம் காத்திடுவார்?
ஏழ்மை யிருந்தவிடம் – உலகில்
இல்லாமல் ஆகிவரும்
போழ்தினி லிங்குமட்டும் – அதற்குப்
புகலிட மேனோ?
பாழ்மதி விட்டிடுவீர்! – வைதிகப்
பயித்தியந் தெளிவீர்!
வீழ்நிலை போக்கிடுவீர் – பசிநோய்
வீழ்த்திட முன்வருவீர்!

❊❊❊

## *இரு பெரிய குற்றவாளிகள்!*

புவிப்பொருளை வஞ்சத்தால் மிகவே பெற்றுப்
புலன்செல்லும் வழியெல்லாம் செலவு செய்தே,
அவிவேக வாழ்வுதனில் களியாட் டெய்தி,
அகங்களித்து வாழ்பவனோர் குற்ற வாளி!
குவிந்துள்ள பெருநிதியால் மேலும் மேலும்
கொள்ளைலா பம்பெருக்கி உழைப்போர்க் கீயா

துவகையுடன் அப்பொருளால் உல்லா சத்தில்
உழன்றிடுவோன் அவனைவிடக் குற்றவாளி!

இவ்விருவர் சமுகத்தின் நலனைத் தீய்க்கும்
எரிபோல்வர்! வாழ்வினிலே மக்கள் கொள்ளும்
வெவ்வியதோர் துயர்நிலையும் வறுமை யாவும்
மென்மேலும் ஓங்க "விதி" சொல்லி ஏய்ப்பர்!
செவ்வியுறும் சமவாழ்வு நேரா வண்ணம்
செங்கோலின் துணைபெற்று நசுக்கி வாழ்வர்!
எவ்வகையும் தந்நலத்தால் புவியை வாட்டும்
இக்கொடியர் பெருங்குற்ற வாள ரன்றோ!

## *தோற்றுவீர் சமதர்மம்!*

புதுவுலகம் போற்றியெதிர் கொண்ட ழைக்கும்
புனிதமிகு சமதர்ம ஆட்சி யாலே,
கதியற்றோர் நிதியற்றோர் வறுமை யுற்றோர்
காலமெலாம் உழைத்துழைத்து வலிமை யற்றோர்,
சதிசெய்யும் சாத்திரத்தால் மதத்தால் மற்றும்
சாதியெனுங் கொடுமையினால் நசுக்கப் பட்டோர்,
அதிவிரைவில் துயர்நீங்கி இன்பங் காண்பர்!
ஆதலினால் சமதர்மம் தோற்று வீரே!

ஒருசிலரே நாட்டினது செல்வந் தன்னை
உறிஞ்சிமிகக் கொழுக்கின்ற நிலமை மாறப்,
பெருமக்கள் உழைப்பின்றி உணவு மின்றிப்
பெருந்துயரில் வருந்துகின்ற கொடுமை யேகச்,
சரிசமமாய் மக்களெலாம் விளங்கி நாளும்
தன்மான வாழ்வினிலே இன்பங் காண,
அருநெறியாய் விளங்குகின்ற சமதர் மத்தின்
ஆட்சியை இந் நாட்டினிலே தோற்று வீரே!

*பத்தியம் தவறேல்!*

மக்கள் அடையும் உடல்நோயின் வருத்தங் காணச் சகியாதார்,
தக்க நல்ல மருந்து கண்டு தந்தார் புவிக்கே! அம்மருந்தால்,
மிக்க வாதை தவிர்கின்றார்! வீழ்த்தும் நோயை வீழ்த்துகின்றார்!
துக்க உள்ளம் மாறுகின்றார், துன்ப நோயைப் பெற்றவர்கள்.

மருந்துக் கேற்ற பத்தியங்கள் வகுத்தார் அதனைக் கண்டளித்தோர்;
வருந்து கின்ற நோயாளி மருந்தை யுண்டு, பத்தியத்தில்
திருந்தா உள்ளம் பெறுவானேல் தின்னும் மருந்தால் பயனுண்டோ?
இருந்த நோயும் தீராமல் இன்னும் பலநோய் விளையாதோ?

அதுபோல், உலக வாழ்வினிலே ஆர்ந்த வறுமை எனுநோயால்
கதியற் றேங்கும் மக்களது கவலை தீரக், காரல் மார்க்ஸ்
புதிய மருந்தொன் றாய்ந்து கண்டார்; பொதுவுடைமை அதன்பெய ர்தான்!
அதனைக் கொள்ளும் முன்பாக அமைந்த பத்யம் பலசொன்னார்.

"தூய உள்ளம் அன்பிரக்கம் தோன்ற வேண்டும்; இவையன்றித்
தீய சாதி பேதங்கள் சிறுமை விளைக்கும் வழக்கங்கள்
ஆய மதங்கள் சாத்திரங்கள் அறிவைப் போக்கும் விதியாவும்
மாய வேண்டும்; மக்களது மனத்தில் தெளிவு மிக வேண்டும்!"

பொதுவு டைமை மருந்தினுக்குப் புகன்ற பத்யம் இவையேயாம்.
கதியற் றிடுமோர் வாழ்வேகக் கருதி யுழைப்போர் இதையறிந்து,
மதியின் துணைகொண் டம்மருந்தை வகுத்த வாறே உட்கொண்டால்,
கதியே பெறுவர்; தவறிடிலோ, காண்பர் அந்தோ விபரீதம்!

✤✤✤

*திருந்துக!*

உலகில் தோன்றும் புரட்சிகள் யாவும் உறுபெரும் பசியினா லன்றோ?
இலகும் மாந்தர் அதையறிந் தும்,பின் ஏனதை வளர்த்திடு கின்றார்!

மனிதர் யார்க்கும் பசிப்பொது வாக மானில மீதினிற் சிலரே,
கனவி லும்பசி யறிந்திடா திருக்கக், கடும்பசி கொண்டவர் பலரே!

புவியிற் பிறப்போர் வாழ்வினுக் குரிய பொருள்களைக் கொண்ர்வது முண்டோ?
அவிவே கத்தால் ஒருசிலர் அவற்றை அபகரித் தின்புறல் நன்றோ?

உணவும் உடையும் வீடுமே யில்லார் உலகினி லிருந்திடு மட்டும்
தணிவும் உண்டோ? புரட்சிப் பெருந் தீத் தாவியே எரித்திடுங் கண்டீர்?

◆◆◆

## காதல்

### *காதல் மணத்தின் அவசியம்*

திரையாருங் கருங்கடலில் திசைகண்டு கலன்செலுத்தும்
புரையில்லா மனமுடைய புகழ்வாய்ந்த மாலுமிபோல்,
அறியாமை உலகத்தை அறிவுடைமை யாக்குதற்கு
முறையானே செயல்புரிந்து முனைந்துழைக்கும் தலைவரெல்லாம்
நிறைகாதற் றிருமணங்கள் நிலவுலகில் தழைகவென்றார்!

நாட்டினது நலனழித்து நம்மிடையே பிளவுறுத்தி
வாட்டுகின்ற கொடும்பேதம் வலிகுன்றி மாயாவோ?
மாட்சியுறு நற்காதல் மணம் புரிந்தால் தோழர்களே!

வேம்பெனவே கைக்கின்ற விதியமைந்த வாழ்க்கையினைத்
தேம்படுநற் கனிபோன்று தித்திக்கச் செய்யாவோ?
ஆம்புகழ்சேர் அருங்காதல் மணம்புரிந்தால் தோழர்களே!

அன்புடைய மனத்தினதாய் அயல்பிரியச் சகியாமல்
என்றென்றும் இனிதுவக்கும் அன்றில்போல் வாழீரோ?
நன்மைமிகு சீர்க்காதல் மணம்புரிந்தால் தோழர்களே!

எனவே நீர்,

இன்புற்று வாழ்வில் இனிது களிப்பதற்கு
அன்புடைக் காதல் மணமது புரிவீர்!
தீயன வெல்லாம் மாயும்!
தூய வாழ்வில் சுகமடை வீரே!

(இது தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்குறுப்புக்களால்
ஆகிய "நேரிசையொத்தாழிசைக்கலி".)

*காதற் குறி*

தாய் : தங்கச் சிலைநிகர்த்த தையலே இந்நேரம்
எங்குநீ சென்றுவந்தாய் என்னை யறியாமல்?

மகள் : அங்கம் கொளுத்தும் அனல்தாள மாட்டாமல்
பொங்கும் எழிற்சோலை போய்வந்தேன் அம்மாநான்.

தாய் : அந்திப் பொழுதிலுனக் கங்கம் எரிந்த தென்ன?
செந்தளிர்ச் சோலையதைத் தீர்த்ததுவும் விந்தையடி!

மகள் : என்னுடலிற் பாய்ந்த எரிவும்பொய் யாகுமோ?
தண்ணொளியைத் தந்தே மறைந்தானோ சூரியனும்?

தாய் : சோலைக்குச் சென்றுவந்தாய் ஆனாலும், உன்னுடைய
சேலை குலைந்திருக்கும் சேதியென்ன சொல்லிடுவாய்?

மகள் : பாவையர்க ளோடுநான் பந்தாடிக் கொண்டிருந்தேன்;
தாவிவிளை யாடுகையில் தன்னிலையிற் சோர்ந்ததம்மா.

தாய் : ஆர்ந்த கலையாளே, ஆயினுமுன் மேனியிலே
வாய்ந்த நகக்குறிபோல் வாய்த்திருக்குங் காரணமென்?

மகள் : பந்தும் அடர்புதரில் பாய்ந்ததனால் தேடுகையில்
இந்தவிதம் ஆயிற்று; இதைத் தவறாய்க் கொள்வதுவோ?

தாய் : நெற்றியிலே வட்டமாய் நீலச்சாந் திட்டவளே,
நெற்றிப்பொட் டேங்கேடி நிந்தனையா என்றனுக்கே?

மகள் : ஆர்வ முடையநல் அம்மாவே, பொட்டுதனை
வேர்வை யழித்தாலும் மெல்லியல் என் குற்றமதோ?

தாய் : ஆந்தை விழிபோல் அலமரும் கண்ணாளே,
கூந்தல்தான் சோர்ந்ததற்குக் கூறுவையோ காரணமும்?

மகள் : வாசமலர் பூண்டிருந்தேன் வண்டினங்கள் தேனருந்தத்
தேசுறுநற் கொண்டைதனைக் கிண்டியதால் சோர்ந்ததம்மா

தாய் : பண்ணமைந்த செஞ்சொற் பசுங்குயிலே, உன்றனிரு
கண்கள் சிவந்திருக்கக் காரணந்தான் என்னேடி?

மகள் : பீடுடைய சோலைப் பெருந்தடத்தே தோழியரோ
டாடியதால் கண்கள் சிவந்தனகாண் அம்மாவே.

தாய் : பாவையே உன்றன் பவள விதழ்தனிலே
மேவுகுறி யாது? விளம்பிடுவாய் என்றனுக்கே

மகள் : ஆவலுடன் என்கிளிக்கு முத்தமிட்டேன்? அக்கிளியும்
கோவைப் பழமென்று கொத்திற்றே என்னிதழை!

தாய் : காதற் குறிபலவும் காண்கின்றேன் உன்னிடத்தில்;
வாதுபல பேசி மறைப்பதுவோ என்னிடத்தில்?

மகள் : சூதற்றே உம்மிடத்தில் சொன்ன மொழியெல்லாம்
வாதாகும் என்றால்நான் வாய்திறக்கக் கூடுவதோ?

தாய் : உண்மை யொருநாளும் பொய்யாகா தாகையினால்,
கண்டோர் பழிச்சொல் கடுந்துன்பந் தந்திடுமே!

மகள் : நன்றே அதுவுந்தான் நான்விரும்பும் செம்மல்மேல்
சென்றால் சிறக்கும் மணம்!

❄❄❄

## *அவர்கள் வாழ்வு!*

மேனி திரைந்திளைத்து மீசை மயிர்நரைத்துக்
கூனி நடக்கும் பருவம் குறுகுகையில்,
ஆடுமயில் போன்றாள் அலங்காரம் மிக்குடையாள்
பாடுங் குயில்போல்நற் பண்ணிசைக்கும் பாவையினாள்
கட்டுடைய தேகம் கவரும் இளமையெழில்
மட்டுக் கடங்கா வளமுடையாள் ஓர்மாதைக்
கண்டான் ஒரு செல்வன்; காம வெறியினால்
பெண்டாகக் கொள்ளப் பெரும்பணத்தை வாரி
இறைத்தான், மணந்தான் இரண்டாவ தாக;
வெறித்த அவனுள்ளம் மிக்க மகிழ்ந்திடவே!
காட்சி வகையால் களிகொள்வ தன்றியின்ப
ஆட்சிக் கருகதை ஆகாத ஆக்கிழவோன்,
அன்றாடம் அன்னாள் அலங்காரம் கண்டுமிக
நன்றென்பான்! நங்கைக் கரசி எனப்புகழ்வான்!
நீயே உயிரென்பான்! நின்னையான் கொண்டதனால்,
ஆயும் பெருஞ்செல்வம் அத்தனையும் பெற்றெனென்பான்
சிந்தைக் கினிமைதரும் சிங்காரி என்றிடுவான்!
இந்த முறைப்படியே ஏகின சின்னாட்கள்.

ஓர்நாள்தன் நண்பன் உறவனையான் வேற்றூர்வாழ்
சீர்மிக்க வாலிபன் வந்தான்அச் செல்வனிடம்.
அன்னவனைக் கண்டதும் அக்கிழவன் ஆவலாய்த்
தன்னிரு கையால் தழுவி யமர்ந்தோர்பால்,
தத்தம் நலம்பேசிச் சந்தோஷம் கொள்கையிலே,
"இத்தரையில் யானெங்கும் கண்டதில்லை; கேட்டதில்லை!
மண்ணில் முளைத்த மதியமோ அன்னவள்தான்!
கெண்டை விழியும் கிளிமொழியும் என்சொல்வேன்!
ஆடலலங் காரத்தைக் கண்டால் அணிமயிலும்
ஓடி யொளிந்திடுமே ஒவ்வோம் இவட்கென்று!
பாட லிசைத்தால் பலவுயிரும் தான்மயங்கும்!
வாடு முயிரெல்லாம் மாமகிழ்ச்சி யால்வளரும்!
ஊட்டும் குளிர்ச்சி யொண்முகத்தைக் கண்டவுடன்
போட்டிக்கு வந்ததென்று போய்மறைவான் சந்திரனும்!
தேக வளந்தன்னைச் செப்பிடவுங் கூடுவதோ?
போகம் விரும்பாதார் பூவுலகில் யாருண்டு?
கண்டோர் மனங்கவரும் கட்டழகி! காதலமு
துண்போர்க் கவளோர் உயர்விருந்து! சிங்காரி!
என்றான் இளையோன். இமையாமல் வாய்பிளந்தே
நன்றுகேட் டிருந்த நரைமுதியோன் ஆசையுடன்,
"அன்னவளை நீஎங்குக் கண்டாய்? அவள் தான்யார்?
என்றனுக் கிவ்விஷயம் இட்சணமே சொல்" என்று,
கெஞ்சும் முறையினிலே கேட்டான். அதற்கிளையோன்,
"வஞ்சிஎந்த ஊரானோ? வாழும் இடமெதுவோ?
செஞ்சடையோன் கோயிலுக்குச் சென்றிருந்தேன் நேற்றுநான்
பஞ்சனைய பாதம் வருந்தஅப் பாவையினாள்
வந்தாள்; அவளெழிலைக் கண்டு மனமயங்கி
இங்குவந்தேன் உன்னிடத்தில் இச்சேதி சொல்ல" என்றான்!
அப்பொழுதே அந்த அழகியும் அங்குவந்தாள்!
மெய்ப்பாடு கொண்டு மிகுவியப்புக் கொண்டே
அன்னாள் தனையுறுத்திப் பார்த்தான் அயலூரான்!
இன்னது கண்ட கிழவன் "இவள் என்றன்
இல்லக்கிழத்தி" எனவுரைத்தான். இவ்வார்த்தை
சொல்லிடக் கேட்டுத் துணுக்குற்றே வாலிபன்
வாயுலர்ந்தாற் போல வழுத்தினான் மென்குரலில்,

“கோயிலிற் கண்ட குமரி இவ” ளென்று!
கேட்டான் கிழவன்; கிளர்ந்தெழுந்த கோபத்தைக்
காட்டமுடி யாமல் கவலையிலான் போலிருந்தான்.

தின்ன முடியாதான் தீங்கனியைப் பெற்றென்ன?
அன்னநிலை தன்பால் அரும்பியது கண்டயர்வோன்,
நண்பன் உரைத்த நயனிலா அம்மொழியால்
எண்ணம் பலவாகி இல்லாட்குச் சொல்வான்:–
‘குடும்பத்துப் பெண்ணுக்குக் கோணலலங் காரம்
அடுக்காது; அணிஆடை ஆளை மயக்குதற்கே!
நாகரிக நங்கையர்கள் வாழ்வினுக்கோர் நாராசம்!
ஆகையினால் உன்றன் அலங்காரம் விட்டி” டென்றான்.
தீதுமொழி கேட்டுத் திகைத்திட்டாள் நங்கையும்!
ஆதிக்கம் ஆணுக் கடங்காமல் என்செய்வாள்?
அன்றுமுதல் அன்னாள் அலங்காரம் கொள்ளவில்லை!
தன்னழகும் சீர்குன்றச் சஞ்சலமே கொண்டாள்!
கிழவனோ தன் முதுமை கிஞ்சிற்றும் தோன்றாது
அழகு முலாமிட் டகங்களித்து வந்தான்!
இதைக்கண்டாள் நங்கை; ‘எனக்குமட்டும் இந்த
விதியோ?’ எனச்சினந்து வெங்குணத்தான் தன்பால்
“எனக்குதவா தென்றே இயம்பினீர்; நீரோ,
தினத்தும் அலங்காரம் செய்கின்றீர்! ஏன்?” என்றாள்.
“என் விருப்பம் நீயதை ஏனென்று கேளாதே!
தன் கணவன் சொல்லைத் தடுத்துரைத்தல் பாப” மென்றான்.
இம்மொழியைக் கேட்டாள்; எதிர்த்தொன்றும் சொல்லவில்லை.
செம்மனத்தில் மூண்ட சினத்தையும் போக்கினாள்.

என்றாலும், அன்னாள் எதிர்த்துரைத்த வார்த்தையினால்–
ஒன்றா வயதுகண்டே உள்ளம் ஒடிந்ததனால்,
அன்றுமுதல் சந்தேகம் கொண்டுவிட்டான் அன்னாள்மேல்!
என்சொன்ன போதுமதில் சூழ்ச்சிக் கிடங்காண்பான்!
பின்விளைவு யாதாகும் என்ற பெருங்கவலை,
அன்னவனை மேலும் அலக்கழித்து வாட்டிற்று!
இளைத்தான், சலிப்புற்றான், என்செய்வே னென்றான்!
உளைந்த மனத்தால் உறக்கமும் விட்டொழித்தான்!
நோயும் இதனால் நொடியில் வளர்ந்தது!

வீயுநிலை கண்டுமனஞ் சோர்ந்தந்த மெல்லியலாள்,
நல்ல வயித்தியரை நானழைக்கின் றேனென்றாள்.
சொல்லும் அவளன்புச் சொற்களெலாம் அச்சம்
வளர்த்ததால் வைத்யர் வயோதிக ராக
விளங்கும் ஒருவரே வேண்டும் எனவுரைத்தான்!
அவ்விதமே வந்தான் அனுபவமில் லாஒருவன்;
வெவ்வியநோய் தீரவில்லை; வீழ்ச்சி நாள் கிட்டியது!

ஓரிரவு கண்ட கனவினிலே, "ஒவ்வாத
சீருளச் சேர்க்கை இழுக்" கென் றிளநண்பன்
சொன்னதைக் கேட்டுக் குளறித் துயுலொழிந்து,
'என்ன விபரீதம்!' என்றெண்ணி நோக்குகையில்,
சூதேது மின்றி அத் தோகையிடம் நண்பனும்
ஏதோ உரையாடிக் கொண்டிருந்தான்; இச்செயலைக்
கண்டான் வெகுண்டான்! "காதகிநீ வஞ்சித்தாய்!
உண்டோஇத் தீயசெயல்?" என்றான். ஒருகுறையும்
இல்லாத அந்நங்கை "இச்சொல் தகா" தென்றாள்.
"பொல்லா தவள்நீ! புகழ்மாய்க்க வந்தவளே,
வாளெடுத்தே உன்னுயிரை வாட்டுகின்றேன் பார்!" என்றான்.
"தாளைப் பணிகின்றேன் சந்தேகம் தீதெ" ன்றாள்.
தன்னிரு கையால் தலையினிலே மோதியடித்
"தென்னே அநியாயம்!" என்றலறிக் கூவியே,
துள்ளிக்கீழ் வீழ்ந்தான்; துடித்ததுடல் சின்னேரம்
மெள்ள அவனுயிரும் விண்ணிற் கலந்தது!
இறக்குமுன் சொன்னான்: "எனக்கிதுவும் வேண்டும்!
சிறப்பில் பொருந்தா மணம்விரும்பிச் செய்திட்டேன்!
தீரட்டும் என்றனுயிர்! செத்தபின் எக்கேடு
நேரினும் நேரட்டும்! நிந்தையினித் தாளே" னென்று.

எல்லாச் சடங்கும் முடிந்தது; இளைஞனும்,
நல்லாள் எதிர்வந்தான் நங்கையும் கண்டவனைச்,
"சந்தேகம் கொன்ற" தென்றாள். "ஆமெ"ன்று சாற்றினான்.
"அந்தோ அநியாயம்" ஈதென்றாள். "ஆம்" என்று
சொல்லவில்லை அன்னான். சுடர்க்கொடியாள் உள்ளத்தில்
எல்லையிலாத் துன்பம் இருப்பதனைக் கண்டயர்ந்தான்.
வாடா மலர்வாட வாலிபனும் தாளுவனோ?

நாடோறும் அந்நங்கை நல்லறிவு பெற்றிடவும்,
துன்பந் தொலைத்திடவும் சொல்லிவந்தான் தேற்றுமொழி,
பின்புசில நாள்செல்லப் பெண்ணணங்கு வாலிபனின்
நல்ல குணங்கண்டாள்; நல்லறிவுந் தான்பெற்றாள்!
வல்லமை வாய்ந்திட்ட காதல் அவர்மனத்தே
தங்கிவிளை யாடிற்றுத்! தாரணியோர் ஈதறிந்தே
“எங்கடுக்கும் இக்கொடிய அக்கிரமம்?” என்றார்,
“இதுபோலும் இன்ப விருந்துண்டோ?” என்றார்
மதிபெற்ற அன்னார் மகிழ்ந்து!

❄❄❄

## *உண்மைக் காதல்*

ஒருநாளின் மாலையிலே காற்றுக் காக
உலவியிருந் தான்குப்பன் கடலோ ரத்தில்,
திருநாளாய் அந்நாளும் இருந்த தாலே
திரளாக மக்கள் பலர் கூடி யங்கே
பெருங்களிப்போ டிருந்திட்டார்; குப்பன் வீட்டுப்
பெருந்தெருவில் மூன்றாவ தில்லில் வாழும்
உருவாய்ந்த சுந்தரியும் பெற்றா ரோடே
ஓர்பக்கம் அமர்ந்திருந்தாள் மகிழ்ச்சி யாக!

குப்பன் அந்தச் சுந்தரியைக் கண்டு விட்டான்;
கொள்ளைகொடுத் தான்உளத்தை! பார்வை தன்னை,
அப்புறமும் இப்புறமும் செலுத்தி டாமல்
அன்னவளின் அழகையெலாம் பருகு வான்போல்,
செப்புருவச் சிலையாகி நின்றி ருந்தான்!
சிறிதுபொழு தேகஅவன் தேக மெங்கும்
வெப்பமெனக் காதல்தீ பாய்ந்த தாலே,
வீட்டிற்குச் சென்றுவிட்டான் சகியா னாகி!

அன்றிரவு சிறிதேனும் தூங்க வில்லை!
அனற்புழுவே போல்துடித்துப் புரண்ட வண்ணம்
மின்னெழிலாள் நினைவாகி, மேலும் மேலும்
வெந்துயரம் மிகப்பெற்றான்; இளைத்தான் மேனி!

பின்பொருநன் முடிவினுக்கே வந்தோ னாகிப்,
“பேரழகே, உனைக்கண்டேன் காதல் கொண்டேன்!
என்இதயங் கவர்ந்திட்டாய்! உன்னை யின்றி
இனிவாழ முடியாத நிலையைப் பெற்றேன்!”

எத்தனையோ பெண்களைநான் காணு கின்றேன்;
என்னுளத்தை ஈர்த்தவர்கள் யாரு மில்லை!
சித்திரமே, நீயுன்றன் அழகால்—நல்ல
செந்தளிரின் வண்ணத்தால் என்ம னத்தை
மெத்தவுமே அபகரித்தாய்! ஆத லாலே,
விழைவுற்றே இக்கடிதம் எழுது கின்றேன்.
பித்தனைப்போல் உளறுகின்றேன் என்றெண் ணாமல்
பிழைபொறுத்தே அன்புசெய்வாய்!” என முடித்தான்.

விடிந்ததன்பின் அக்கடிதந் தன்னை வீட்டு
வேலைசெய்யும் பொன்னியிடம் காத லிக்குக்
கொடுத்திடுமா றுத்தரவு செய்தான் குப்பன்.
கொண்டவளும் பிறரறியா வண்ணம் சேர்த்தாள்!
கடிதத்தை வாங்கியதும் அந்தக் கன்னி
கருத்தறிய எண்ணியதைப் பிரித்துப் பார்த்தாள்.
துடிக்கின்ற உள்ளத்தான் எழுதி யுள்ள
சொற்களெலாம் வியப்பூட்டச் சிரிக்க லுற்றாள்!

பின்பொன்று பதிலாக எழுத லானாள்;—
“பேரன்பீர், உம்கடிதம் கிடைக்கப் பெற்றேன்.
என்மீது காதல்கொண்ட தாகச் சொன்னீர்;
எதுகருதி? அதையுரைப்பீர்” எனமு டித்தாள்.
பொன்னியதை வாங்கிவந்தே துடிப்புக் கொண்டு
புரண்டிடுவோ னிடந்தந்தாள் படித்துப் பார்த்த
அன்னவனும் பெருமகிழ்ச்சி யடைந்தே, அந்த
அழகியினுக் கொருகடிதம் எழுத லானான்:—

“அன்புடையாய், சிறுவயது முதலா யுன்னை
அறிந்திடுவேன்; ஐந்தாண்டாய்க் காண வில்லை.
இன்று கண்டேன் உன்எழிலை! அதனால் என்றன்
இதயத்தில் இடம்பெற்றாய்! கண்ட போதே

மின்னிவிட்ட இக்காதல் தெய்வீ கத்தால்
விளைந்ததென விளம்பிடுவார்! ஆத லாலே,
உன்னைமணம் புரிவதற்கே துடிக்கின் றேன்நான்;
ஒருவார்த்தை கூறிஎன்றன் உயிரைக் காப்பாய்!''

என எழுதிப் பொன்னியிடம் தந்தான் மீண்டும்.
எடுத்ததனைச் சென்றுகொடுத் திட்டாள் பொன்னி.
மனமுவந்தே அக்கடிதந் தன்னை வாங்கி
வரைந்துள்ள செய்தியினைப் படித்தாள் அன்னாள்
"கனவுலகில் வாழ்கின்றார் பாவம்!'' என்றே
கன்னியுந்தன் கருத்ததனை விளக்க எண்ணி,
"நனிசிறந்த அறிவுடையீர், கடிதம் பெற்றேன்;
நங்கையதைப் படித்திட்டேன், வியப்புங் கொண்டேன்!

கண்டவுடன் எழும்ஆசை காத லல்ல;
காமஇச்சை! இதுமாந்தர்க் கியல்பே யாகும்
விண்டிடுவார் இதனைத்தெய் வீக மென்றே!
விளையாட்டுப் பொம்மைகளாய் விளங்கு கின்ற
பெண்ணினமும் இதைநம்பும்; ஏமாந் தேபின்
பேதைமைக்கு மிகவருந்தித் துயரி லாழும்!
எண்டிசையும் இந்நிகழ்ச்சி, காதல் பேரால்
இருப்பதனைக் காண்கின்றோம்; இன்னுங் கேளீர்.

என்னழகைக் கண்டவுடன் காதல் கொண்டேன்
எனஉரைத்தீர்; எனக்கிதுவும் நிலைப்ப துண்டோ?
பின்என்றன் எழில்மாய்ந்தால், அதனால் வந்த
பெருங்காதல் உம்மிடத்தே பிழைத்தி டாதோ?
இன்னதனைச் சிந்திப்பீர்!'' எனமு டித்தாள்.
எடுத்தேகும் பொன்னியதை எடுத்துச் சென்றாள்.
துன்புறூஉம் உள்ளத்தான் அதனைப் பார்த்தே
துயருற்று விடைதன்னை எழுத லுற்றான் :

"சித்திரத்தின் மிக்கவளே, கடிதங் கண்டேன்;
சிந்தையினில் மிகவருத்தம் அதனால் கொண்டேன்!
இத்தரையில் இதுபோன்ற காத லன்றி,
இயம்புவரோ தெய்வீகக் காதல் வேறே?

அத்தகைய காதலினைக் குறைசொல் கின்றாய்!
அன்புடையாய், உனையானு மறப்ப துண்டோ?
செத்தபின்னும் நிகழாத செயலை நீயும்
செப்புவதேன்?'' எனமுடித்தே அனுப்பி வைத்தான்.

பொற்றெடியாள் அதைக்கண்டாள்; எழுதுகின்றாள்:-
“புவிதனிலே நான்தனித்து வாழ்வ தில்லை
பற்றுக்கோ டாகஒரு நாதன் தன்னைப்
பாவையுமே மணந்தாக வேண்டும் உண்மை.
வற்புறுத்து கின்றீர்நீர்; காத லென்றால்,
வாழ்க்கையதன் குறிக்கோளில் உள்ளம்ஒன்றி
நற்றோழ மைகொள்ளல், ஆத லாலே,
நானுமது குறிக்கோளை யறிய வேண்டும்.

நாட்டினிலே மலிந்துள்ள மூடச் செய்கை
நனிபேத வழக்கங்கள் சாத்தி ரங்கள்,
வாட்டுகின்ற பெண்ணடிமை யாவும் வீழ்த்தி
வளமுற்ற சமவாழ்வைச் சமுதா யத்தில்
நாட்டிடவே வேண்டுமெனுங் கொள்கை யோடு
நானுள்ளேன். ஈதுமக்குப் பிடித்த மாமோ?
தீட்டிடுவீர் உம்கருத்தை!'' எனமுடித்தாள்.
சீக்கிரமாய்ப் பொன்னியதைக் கொண்டு சேர்த்தாள்.

கடிதத்தை அன்னவனும் படிக்க லானாள்;
கருத்துக்கு மாறாக இருக்கக் கண்டு,
“மடமயிலே, நீ என்னைச் சோதிக் கின்றாய்!
மாப்பெரியோர் முறையெல்லாம் குறைசொல் கின்றாய்!
கடவுளரின் வெறுப்புக்கே ஆளா கின்ற
கருத்தினிலே என்வாழ்க்கை சென்றி டாது!
படிபோற்றும் பழமையினோர் முறைபின் பற்றிப்
பகர்மணமே புரிந்தின்ப வாழ்வு கொள்வோம்!''

என்றெழதித் தந்திட்டான்; வழக்கம் போலே
எடுத்ததனைச் சேர்த்திட்டாள் பொன்னி யாளும்.
அன்னவளும் அதைவாங்கிப் படித்துப் பார்த்தாள்.
ஆச்சரியங் கொள்ளவில்லை; எழுது கின்றாள்:-

"அன்புடையீர், உமையறிவேன் நன்றே யானும்;
ஆய்ந்தறிதல் தவிரமற்ற யாவுங் கற்றீர்!
என்உள்ளம், திருந்தாத மனிதர் தம்மை
ஏற்காது நிச்சயமாய்!" எனமு டித்தாள்.

பொன்னியதை வாங்கிச்சென் றளித்தாள்; உள்ளப்
பொலிவுடனே குப்பனதைப் பிரித்துப் பார்த்தான்.
"என்ன இது விபரீதம்!" என்றே அன்னான்
இடிவிழுந்தான் போலாகி எழுது கின்றான்:–
"அன்புடையாய், உன்முடிவு கண்டேன், நொந்தேன்
அறிவெனக்கு வேம்பில்லை! ஆனால், முன்னோர்
சொன்னபடி நடப்பதன்றோ நேர்மைச் செய்கை?
துயர்க்கடலில் எனைவீழ்த்த முனைவ தேனோ?

உனக்காகச் சீர்திருத்தம் ஒப்பு கின்றேன்
ஒண்டொடியே, புறக்கணிக்க வேண்டாம் என்னை!"
எனக்கடிதம் தீட்டிவிட்டான்; பொன்னி யாளும்
எடுத்தேகித் தந்திட்டாள். கன்னி கண்டு,
"மனக்குறையால் ஒப்புகின்றீர்; அதனை இந்த
மங்கையினாள் ஒப்புவதோ? நேரில் வந்தால்,
அனைத்தையுமே நாம்கலந்து பேச லாகும்.
அந்தியிலே சந்திப்பீர் வீட்டுத் தோட்டம்!"

என்றெழதிக் கொடுத்திட்டாள்; சேர்த்தாள் பொன்னி
இச்செய்தி யறிந்துமிகக் களிப்புக் கொண்டே,
சென்றிட்டான் அவர்தோட்டம் குறித்த வாறே.
"சீர்திருத்தம் அவசியமா?" என்னும் பேச்சோ
அன்னவரின் மத்தியிலே விவாத மாக,
அறிவுக்குப் பணிந்துவிட்டான் பின்னர்க் குப்பன்!
நன்றென்றே ஒப்பிநின்றார்; உண்மைக் காதல்
நனிசிறக்க, அச்சாரம் பெற்றார் முத்தம்!

***

## சோலை இன்பம்!

("ஆறுமுக வடி வேலவனே" என்ற இசை)

கண்ணைக் கவர்ந்திடும் வண்ண மலர்ச்சோலை
கண்டேன் உளமகிழ்ந்தேன்!–அங்குப்
பண்க ளமைத்துநற் புள்ளினம் பாடிடும்
பாட்டில் செவி குளிர்ந்தேன்!

தென்றல் நறுமணம் வீசுவ தால் எழில்
தேகம் நனிகுளிர்ந்தேன்! – அங்கு
மன்றல் புரிந்திடும் மாங்குயில் வேடிக்கை
காண மனமகிழ்ந்தேன்!

மாமயில் பன்னிறத் தோகை விரித்தாடும்
மாட்சி யுரைப்பதுவோ! – அங்குக்
கோமள வல்லியர் ஆடுதல் பாடுதல்
கோலம் உரைப்பதுவோ!

அந்திப்பொழுதெங்கும் பொன்னிறம் வீசிற்றே;
ஆகா அதனெழிலில் – மிகச்
சிந்தை தடுமாறிச் சீவனெலாங் காதல்
தீயில் எரிந்தனவே!

அன்னந்தன் பேட்டை அருகழைத் தேமிக
ஆர்வ மொடுகுலவும்! – அங்கே
இன்னன காட்சிகள் ஆயிரங் கண்டுநான்
என்னுளஞ் சோர்கையிலே,

பின்புற மாய்வந்தே என்னிரு கண்களை
யாரோ மறைத்துநின்றார்! – அவர்
என்னுயிர்க் காதலி என்றறிந் தேன்பின்னர்
இன்பம் உரைப்பதுவோ!

❀❀❀

## அறிவியக்க எழுச்சி!

எங்கெங்கு நோக்கிடினும் கிளர்ச்சி தோன்றி
எழுச்சிபெறக் காண்கின்றோம்! மக்கள் உள்ளம்,
வெங்கொடுமைத் துயர்வாழ்வை வெறுத்தே நாளும்
மென்மேலும் உயர்ந்திடவே முனைதல் கண்டோம்!
பொங்குகளி கொண்டிதுநாள் சுகித்து வாழ்ந்த
பொய்ம்மிகுந்த பழமையெலாம் மறையும் வண்ணம்,
செங்கதிரின் எழுச்சியைப்போல் அறிவுக் கொள்கை
சீருடனே தமிழ்நாட்டில் ஓங்கக் கண்டோம்!

புதுவாழ்வை மக்களெலாம் விரும்பு கின்றார்!
புலனழிந்தோர் அதையெதிர்த்துப் பழமை யொன்றே
இதந்தருமென் றுரைக்கின்றார்; அதனால் நேரும்
இன்னலினை ஒருசிறிதும் உணர்வ தில்லை!
அதிவருத்தங் கொண்டெருது துன்புற் றாலும்
அதற்கிரக்கங் கொள்ளாத காகம் போலச்,
சதிமிகுந்த வைதீகம் இந்த நாட்டில்
தமிழிரத்தம் உறிஞ்சிமிக வாழக் கண்டோம்!

துன்புறுவோர், வைதீகப் பழமை கண்டு
தோத்தரித்துப் போற்றுவரோ? அதுதான் மக்கட்
கின்பமிகும் வாழ்வளிக்க நினைத்த துண்டோ?
யாவருக்கும் சமத்துவத்தை யளித்த துண்டோ?
தன்னினத்திற் குரிமையெலாந் தந்து மற்றுத்
தமிழர்களை அமையினும் அடிமை யாக்கி
இன்னல்மிகும் வாழ்வளித்த தல்லால் வேறே
என்னநலன் செய்ததது? புகல்வா ருண்டோ?

பன்னெடுநாள் தமிழரிதை யுணரா வண்ணம்
பார்ப்பனரின் மயக்குகளில் ஆழ்ந்தி ருந்தார்!
இன்றறிந்தார் அச்சூதைப் பெரியா ராலே;
எழுச்சியுற்றார்! முன்னேற்ற வேகங் கொண்டார்!

“வன்செயல்சூழ் வைதீகம் தொலையா முன்னர்,
வாய்ப்பதுண்டோ விடுதலைதான் இந்த நாட்டில்?”
என்றுரைத்தே தொண்டாற்ற முனைந்துவிட்டார்!
எழுமறிவைத் தடைசெய்ய முடிவ துண்டோ?

## சீர்திருத்தமும் - மக்களும்

(‘கும்மி’ இசை)

நாட்டுக்கு நல்லது கூறவந்தால் – அதை
நாத்திகம் என்றிங்குக் கூறிடுவார்!
கேட்டுக்குப் பற்பல கட்டுரைத்தால் – மோட்சம்
கிட்டிடும் என்றதைப் போற்றிடுவார்!
வாட்டும் வறுமையால் மக்களெலாம் – இங்கே
மாளாத் துயர்கொண்டு மாளுகின்றார்!
கேட்டுவிட்டால் ‘விதி’ என்றிடுவார்! – மேலும்
கீழ்மொழி பேசி இகழ்ந்திடுவார்!

புத்தியினில் ஏழ்மை கொண்டதனால் – மக்கள்
புதுமையெனில் இங்குச் சீறுகின்றார்!
‘சித்தப்படி நாமும் செய்வதுண்டோ? – தெய்வம்
சீறிடுமே” என்று கூறுகின்றார்!
பித்த மதிஅதை விட்டிடுவீர் – என்றால்
பித்தன் திருவிளை யாடல் சொல்வார்!
மெத்ததுயர் நடை வாட்டுதென்றால் – விதி
விளையாட்டின் கோலத்தைப் பாருமென்பார்!

பண்டிதர் என்பவர் பாமரரை – விடப்
பாழுமதி கொண்ட காரணத்தால்,
விண்டிடும் நல்லுரை யாவையுமே – அவர்
வீணுரை என்றுமே கூறுகின்றார்!
தண்டமிழ் ஒன்றையே கற்றுவிட்டார் – அன்னார்
தாரணி போக்கினைக் கற்கவில்லை!
பண்டுநிலையினைப் போற்றிடுவார்! – இன்று
பாழ்நிலை ஏனெனில், தூற்றிடுவார்!

ஊர்ப்பணம் பெற்றிடப் பொய்ம்மை சொல்லி – நன்றே
    உண்டு கொழுத்துமே வாழ்ந்துவரும்
பார்ப்பனர் கையாளாய் உள்ளவர்தாம் – இங்குப்
    படித்தவர்; பண்டிதர்! ஆகையினால்,
சீர்திருத்த மெனிற் சீறுகின்றார் – மக்கள்
    சீற்றம் வளர்த்துமே ஏவுகின்றார்!
பார்த்திருத்தம் பெற்றால் அன்னவர்கள் – காணும்
    பாதகங்கள் யாதோ நாமறியோம்!

எவ்வளவோ பொருள் நேரமெலாம் – தந்தும்
    ஏறிட்டுப் பார்த்ததோ தெய்வம் நம்மை?
அவ்வளவும் வீணே என்றுரைத்தால் – கற்றோர்
    ஆயினும் சிற்றின மாய்விடுவார்!
எவ்வளவோ தொல்லை, எவ்வளவோ – துன்பம்;
    இத்தனைக்கும் விதி, தெய்வமன்றோ?
செவ்விய வாழ்வு குலைந்ததற்கும் – அந்தத்
    தீமைகளே எனிற் பொய்யுமுண்டோ?

❖❖❖

## *நோயறியா மருத்துவன்!*

“தமிழ்காப்போம் தமிழர்நலங் காப்போ” மென்று
    தறுக்குற்றுப் பேசவந்த புலவ, கேள் நீ!
தமிழழிக்கத் தமிழர்நல மழிக்க அன்று
    சதிகாரர் போதித்த போதைக் கொள்கை,
சுமைசுமையாய் உன்னுளத்தில் ஊற்றெ டுக்கச்
    சுடரறிவும் உனைக்கண்டு விலகி நிற்கத்,
தமிழ்காப்போம் தமிழர்நலங் காப்போ மென்றே
    சாற்றுவதிற் சிறிதேனும் பொருள்தானுண்டா?

உனையிந்நாள் ஒருதமிழன் எனவே சொல்லி
    உவப்பதற்குச் சங்கத்தார் கலைக ளன்றிப்,
பினர்வந்த புராணங்கள் இதிகா சங்கள்
    பேசிடுபல் சாத்திரங்கள் ஆவ துண்டோ?

நனியிழிவு தருமூடக் கொள்கை வாய்ந்த
நஞ்சனைய நூல்களைநீ யொழித்தி டாமல்,
வினைதரூஉம் புண்ணுக்குச் சீலை மூடி
மெருகிட்டுப் பேசுவதால் பயனுண் டாமோ?

நோய்கொண்டால் ஒருவனது துயர்கண் டன்னோன்
நோயறியா ததற்கேற்ற மருந்து மின்றி,
நோய்தீர்ப்பேன் எனமுயலும் மருத்து வன்றன்
நுண்ணறிவு கண்டுலகம் சிரித்தி டாதோ!
தூய்மையுடன் நலம் பலவும் வாய்ந்த மேனித்
தொல்தமிழ்த்தாய் சாக்காட்டு நிலையைக் கண்டே,
வாய்ந்த அன்னாள் பிணிதீர்ப்பேன் என்று சொல்லி
வாய்வீரம் பேசுகின்றாய் நோய்கா ணாமல்!

உன்தாயை ஆரியநச் சரவு தீண்ட
உடல்சோர்ந்து கீழ்வீழ்ந்தாள்; சாகும் நேரம்!
அன்னதனை யறியாமல் காய்ச்ச லுக்கே
அளித்திடுநன் மருந்தெடுத்துச் செல்லு கின்றாய்!
என்ன இது விந்தை! அவள் நோயைச் சொல்லி
ஏற்றதொரு மருந்துரைத்தால் கோப மேனோ?
பின்உன்றன் அறியாமைக் கிரக்கங் கொள்வாய்!
பெற்றவளின் உயிர்போகத் துணையா காதே!

ஆரியப்பாம் பளித்தவிஷம் தீர வேண்டின்,
அறிவென்னும் மாத்திரைமுன் தருக! பின்னர்ச்
சீரற்ற ஒழுக்கங்கள் வழக்கம் சாதி
தீயமத பேதங்கள் சாத்தி ரங்கள்
நேரற்ற புராணேதி காசம் என்னும்
நீள்துன்ப விஷவேகம் முற்றும் தீரப்,
பேருற்ற தொண்டென்னும் தைலம் பூசின்
பிழைத்திடுவாள்; இன்றேல்நீ பழியேற் பாயே!

❄❄❄

## பாம்புக்கு இரங்குவதா!

பன்னாளாய் ஆரியத்தின் சூழ்ச்சி யாலே
பாரினது புகழேற்ற திராவி டந்தான்,
சின்னாபின் னப்பட்டுச் சீர ழிந்து
சிதைவுற்ற கொடுநிலையை மக்கள் கண்டே,
தன்மானம் பெறஎழுச்சி கொண்டா ரிந்நாள்!
தனிப்பெரியார் ஆணைவழிச் செல்லு கின்றார்!
"என்னாகும் இந்நிலை?" என் றேய்ப்புக் கூட்டம்
ஏக்கமுற்றே கதிகலங்கி யலறக் கண்டோம்!

உழையாமல் பிறருழைப்பின் பயனைக் கொண்டே
உல்லாச வாழ்வுபெற விதிகள் செய்து,
பிழைமிகுந்த அவற்றையெலாம் கடவுள் சொன்ன
பெருநூல்க ளெனவுரைத்துத் தமிழர் வாழ்வில்
நுழைவித்து நல்லறிவைத் தீய்த்துத் துன்ப
நோய்வளர்த்துச் சுகவாழ்வில் மிகக் களித்த
விழைவுடைய ஆரியந்தான் திராவி டர்தம்
விழிப்புணர்ச்சி யையறிந்தால் அலறி டாதோ?

இரக்கமென்ப தொருசிறிதும் இல்லாக் கூட்டம்,
எரிவீட்டில் பிடுங்கியது லாப மென்றே
உரைக்குமொரு பழமொழியின் படியே இந்த
உயர்நிலைய திராவிடத்தின் நலன் பறித்துப்,
பெருத்தஒதி போல்மேனி வளையா வண்ணம்
பெருவாழ்வு நடத்திவந்த நிலையி னின்றும்
சரிந்துவிழ நேர்வதனைக் காணும் போது
சஞ்சலமுற் றலறாமல் இருப்ப துண்டோ?

ஆரியத்தின் அவ்வலறல் கண்டி ரங்கி
அதற்குதவி செயஎண்ணும் இந்த நாட்டார்,
சீருற்ற தன்மானம் இழந்தோ ராகித்,
தீந்தமிழை மாய்த்திடவே முனைந்தோ ராகிப்,
பேருற்ற உயர்வாழ்வை வெறுத்தோ ராகிப்,
பேதைமையைத் துணைக்கொண்டு வாழ்வோ ராகிப்,
பாரிலுள்ள பழிச்சொற்கள் யாவும் பெற்றுப்
பாதகராய் விளங்காமல் இருப்ப துண்டோ?

நெஞ்சிரக்கங் கொள்வதெவர் பொருட்டுத்? தாழ்ந்த,
நிலையினிலே துன்புறுவோர் தமக்கே யன்றோ?
அஞ்சுகஞ்சேர் நல்வாழ்வை அவர்கள் காண
அனுதினமும் உழைப்பதன்றோ நேர்மைத் தொண்டு?
விஞ்சியநல் வாழ்வடைந்த பார்ப்ப னர்கள்
மேலுமுயர்ந் திடுவதற்கே ஏணி யாவோர்,
தஞ்சொந்த நலனுக்கே மான வாழ்வு
தனைவிற்ற கோடரியாய் ஆகி டாரோ?

ஆதலினால் அருளுடையோர், திராவி டத்தை
ஆரியத்தின் பிடியினின்றும் மீளச் செய்க!
தீததனால் நேர்ந்திடினும் கவலல் வேண்டாம்;
சிறந்த தொன்றைச் செய்வதுவே மனிதர் மாண்பு!
நீதமிலா முறைவகுத்தே ஆளுங் கூட்டம்
நிச்சயமாய் வீழ்ச்சியுறும்! சரித முண்டு.
பாதகஞ்செய் பாம்பிற்கும் இரங்கு வாரோ?
பகுத்தறிக! உயர்மான வாழ்வு கொள்க!

***

## *"விடுதலை" ஆட்சி!*

அறிவுக்கு விடுதலை இல்லாவரை – எந்த
அரசியல் விடுதலை பெற்று மென்ன?
செறிந்துள தீமைகள் ஏகிடுமோ? – அங்குச்
சீர்திருத்தம் தலை காட்டிடுமோ?
மறச்செயல் ஒன்றையே நம்பிவாழுங் – கூட்டம்
மக்களறிவுக்கு வேலியிட்டே,
அறச்செயல் கைவிட்டுத் தீத்திறத்தால் – பற்றும்
ஆட்சியில் நன்மைக ளார்ந்திடுமோ?

அத்தகை ஆட்சியை "ராம ராஜ்யம்" – என்றோ
அல்லது "சிவநேசன்" ஆட்சி யென்றோ
மெத்தவே போற்றிப் புகழ்ந்திடினும் – அதை
"விடுதலை ஆட்சி" யென் றோதிடினும்,
எத்தனை நாள்அது நிலைத்துவிடும்? – மக்கள்
எத்தனை நாளைக்குத் தூங்கிடுவார்?
சித்தமி ழந்தஇந் நாட்டினர்கள் – ஒன்று
சேர்ந் தறிவு பெற்றால் என்னாகும்?

தக்கபடை பலங் கொண்டிருந்தும் – பொல்லாச்
சர்வாதிகாரம் செலுத்தி வந்தும்,
மக்களுணர்வினை மாய்த்து வந்தும் – கொடும்
வஞ்சச் செயல்பல செய்துவந்தும்,
எக்களிப்புக் கொண்டே நாட்டை யாண்டோர் – பலர்
என்னானார்? சரித்திரம் தேடிடுவீர்!
செக்குமாடாய் மக்கள் வாழ்ந்திடவே – செய்யும்
தீயர்களாட்சியும் நிலைத்திடுமோ?

❊❊❊

## *தமிழர் சுதந்திரப் போர்!*

எழுந்தது வீரம் தமிழர்கள் உளத்தில்
இனியதை யழித்திடப் படுமோ?
முழங்கின சங்கம் அதிர்ந்தன முரசம்
மொய்புலித் தமிழரினிடையே!

சீரிய உள்ளம் வாய்ந்தநற் றமிழர்
சிறந்திடு நன்னா ளிதுவே!
நேரிய முறையில் போர்வகுத் திட்டார்;
நிச்சயம் வெற்றியென் றறிவீர்!

வீரமே இல்லா ஆரியர் அன்று
வீண்மத ஜாதியைச் சொல்லித்,
தீரமே யின்றிச் சூழ்ச்சியால் தமிழர்
வாழ்வழித் தார்வேர் கல்லி!

இன்றதைப் போலே காங்கிரஸ் பேரால்
இழைத்திடும் சூழ்ச்சிகள் கண்டோம்!
வென்றிகொள் தமிழர் வீறுகொண்டார்! சதி
மேவிடுமோ இனி யிங் கே?

ஆயிர மாயிரந் தொண்டர்கள் தலைவர்கள்
ஆர்வமாய் முயற்சிமே ற் கொண்டார்!
தீயவர் செய்திடும் சிறுசெயல் யாவுமே
சிதைந்திடச் சீற்றமே கொண்டார்!

வாழ்க திராவிடம் தமிழெனுங் கூக்குரல்
வானினைப் பிளந்திடக் கண்டோம்!
சூழ்ந்துள தமிழரின் துடித்திடும் உளமதைச்,
சுதந்தர வேகத்தைக் கண்டோம்!

தீர்ந்தது வஞ்சக ஆரியர் சூழ்ச்சி!
தீர்ந்தது தமிழர்கள் பகையே!
ஆர்ந்துள வறுமையும் துன்பமும் பிறவும்
அழிந்தன இனியென் றுரைப்பீர்!

❀❀❀

## *வீரர் வேண்டும்!*

வாழ்வினுக்கே இலக்கணத்தை வகுத்த வீரம்
வாய்ந்திட்ட நற்றமிழர் கீர்த்தி யாவும்,
பாழ்பட்டுப் போனவிதம் கண்டோம்! நல்ல
பகுத்தறிவும் மாய்ந்திடவே கண்டோம்! இந்நாள்,
வீழ்ச்சியுற்ற தமிழ்நாட்டைத் தமிழ்நா டாக்க
வியன்வாழ்வில் தமிழரெலாம் ஒளிபெற் றோங்கச்
சூழ்ச்சியினர் சூழ்ச்சியெலாம் தொலைத்துக் கட்டத்,
தொண்டாற்றும் துணிவுள்ள வீரர் வேண்டும்!

மறத்தமிழர் வீரத்தைப் புகழை மற்றும்
வாழ்க்கையினை மாசுறுத்தி, இழிவுக் கொள்கை
அறமெனவே ஓதுகின்ற கலைக ளென்னும்
ஆர்ந்திட்ட புராணங்கள் இதிகா சங்கள்
புறக்கணித்தே அவற்றையெலாம் பொசுக்கித் தீர்த்துப்
புதுவாழ்வைத் தமிழகத்தில் தோற்று தற்கு,
முறைப்படியே வகுத்தஒரு தொண்டு செய்ய
முனைந்துழைக்கும் தீரமுள்ள வீரர் வேண்டும்!

திருமணத்தில் தமிழில்லை! வாழ்வில் மற்றும்
செய்சடங்கில் தமிழில்லை! தெய்வந் தன்னை
உரிமையுடன் வணங்குதற்கோ வழியு மில்லை!
உயர்தமிழை ஓதிடவும் முடிவ தில்லை!

பெருமைதனைப் பேசுகின்றோம்; வடசொல் ஏற்றே
பிறர்நகைக்க வாழ்கின்றோம்; மானம் விட்டோம்!
திருத்திடுவோம் இனிஎன்றால், சீறிப் பாயும்
சிறுமதியோர் அறிபெற வீரர் வேண்டும்!

தமிழரது நாகரிகம் வியப்ப தொன்றாம்!
தமிழறியார் இதையறியார்! ஆனா லின்றோ,
அமிழ்ந்திருந்த புதைபொருளின் ஆய்வு கண்டே
அவமதித்தோர் ஆச்சரியம் அடைய லானார்!
தமிழ்ர்க்குத் தமிழினிலே அவற்றை யெல்லாம்
தகுமுறையில் எடுத்துரைத்துத் தருக்குண் டாக்கி,
இமைப்பளவில் முன்னேற்றப் பாதை தன்னில்
ஏற்றுவிக்க முனைந்துழைக்கும் வீரர் வேண்டும்!

## *தொண்டாற்ற வாரீர்!*

நல்லதோர் வாழ்வு – நாளும்
நம்மருந் திராவிட நாட்டினில் தோன்ற,
வல்வினை செய்வோம்! – மிக்கு
வாருங்கள் தோழரே சேருங்கள் ஒன்றாய்!
புல்லரின் சூழ்ச்சி – ஆழப்
புதைத்தங்குச் சமதர்மக் கொடிதனை நாட்டி
எல்லோரும் நன்றே – நாம்
இனிதுற வாழ்ந்திட வகைசெயவோம் இன்றே! (நல்ல)

கொடுமைகள் யாவும் – மிகக்
குடிகொளும் மதவாழ்வைப் படிதனில் வீழ்த்தி,
மடமைகள் முற்றும் – இங்கே
மாய்ந்திட அறிவொளிக் கலைபல ஆக்கி,
உடைமைகள் எல்லாம் – நாட்டில்
ஒருவழி சேர்ந்திடும் மார்க்க மொழித்துக்,
கடமையே செய்வோம்! – நல்ல
கறுப்புடை யணிந்துதொண் டாற்றமுன் வாரீர்! (நல்ல)

### *வாழ்க தொண்டர் படை!*

தொண்டாற்ற எழுந்ததுபார், கறுப்புச் சட்டைத்
தொண்டர்படை திராவிடத்தின் மாசு போக்க!
தொண்டின்றேல் வாழ்வுநிலை தூய்மை யாமோ?
சுகம்அந்த வாழ்வினிலே மிளிர்வ தாமோ?
எண்டிசையும் உயர்ந்தின்று விளங்கு தற்கே
எழுச்சியுறும் தொண்டர்படைச் செயலே யன்றே?
வண்டமிழர் அதைமறந்தார்; வாழ்வி ழந்தார்!
வகுத்திட்டார் அப்படையைப் பெரியா ரின்றே!

முன்னாளில் இந்நாட்டு மக்கள் வாழ்வு
முற்போக்கில் அனுதினமும் செல்லக் கண்டோம்!
பின்னாளில் அந்நிலைதான் முற்றும் மாறிப்
பிற்போக்கில் பிலஞ்சேர்ந்தே யழுந்தக் கண்டோம்!
அன்னதற்குக் காரணந்தான் என்ன வென்றே
அறிதற்கும் முடியாத நிலையில் மக்கள்,
இன்றேங்கி யுழலுகின்றார்! இதனைப் போக்க
எழுச்சியுறும் தொண்டர்படை தேவை யன்றோ?

பகுத்தறிவு வளர்வதற்கும், மக்கள் கொண்ட
பாழன வழக்கங்கள் தொலைவ தற்கும்,
மிகத்துன்பம் தருகின்ற சாதி பேதம்
மேல்கீழ்என் றுரைக்குமத சாத்தி ரங்கள்
தகர்த்திந்தத் திராவிடத்தில் மக்கள் யாரும்
சமதர்ம வாழ்வின்பம் கொள்ளு தற்கும்,
வகுத்தஉயர் நெறிப்படியே தொண்டு செய்ய
வந்ததொரு தொண்டர்படை வாழ்க! வாழ்க!

★★★

### *மகிழ்ச்சிக் குரிய நாள்!*

மன்னும் புகழ்பெற்ற இந்நாட்டு மக்களெலாம்
துன்னுந் துயர்நீக்கித் தோமறுநன் நீதியுடன்

வாழ்ந்தார் வளம்பெற்றார் வானுயருங் கீர்த்தியுற்றார்;
சூழ்கின்ற பேதந் தொலைத்தார்; சுரண்டும்

கொழுத்த மதகுருக்கள் கோவில்கள் தீய
பழக்க வழக்கங்கள் பாழ்படுத்துந் தெய்வீகப்

பூசனைகள் பொல்லாப் புராணங்கள், சாத்திரஞ்சொல்
ஆசாரம் யாவும் அறவே யொழித்துவிட்டார்;

தோளயரும் வண்ணம் தொழில்செய்தும் ஏழையர்கள்
நாளெல்லாம் மிக்கபசி வாதையினால் நல்கூரும்

பாழும் நிலையொழித்தார்; பால்நிலவைத் தோற்கடிக்கும்
சூழொளிசேர் நல்வதன மாதர்கள் ாச் சூதால்

அடிமைப் படுத்தியுள்ள அக்கிரமந் தன்னை
நொடியில் தகர்த்தெறிந்தார்; நு ணறிவில் மேம்பட்டார்;

வஞ்சப் பகையற்றார்; வாய்மையுற்றார்; இந்நாட்டுச்
செஞ்சொற் சிறுவரெலாம் சிங்கங்க ளாகிவிட்டார்;

அஞ்சிக் கிடக்கும் அணங்குகள் முற்கால
வஞ்சியர்போல் வீரம் படைத்தார், வலுப்பெற்றார்;

நித்தம் மனவருத்தி நெஞ்சயரச் செய்திடுமோர்
நத்தும் செயலடிமை நாட்டினின்றுந் தீர்த்தார்;

எழுத்தறியா மக்களிங் கில்லையென் றாகி
ஒழுக்கஞ் சிறந்தார், உணர்வுற்றார்; நாடெங்கும்

கல்விபயில் சாலை கணக்கற்ற சங்கங்கள்
நல்ல தொழிற்சாலை நன்மருந்துச் சாலைகளும்

மிக்க படைத்துவிட்டார்; மேனாட்டார் கண்டயிர்த்தார்;
தக்க படைவலிமை கொண்டார், தமிழ் வளர்த்தார்;;

என்றஓர் நன்னிலையை என்தமிழர் ஆக்குவரேல்,
நன்று மகிழேனோ? நாவார வாழ்த்தேனோ?

சொந்தத் தமிழ்நாடு தூய நிலைபெற்ற
அந்தப் பெருநாள் அறிந்து!

✧✧✧

# திருமண வாழ்த்து

## *மன்றல் வாழ்த்து*

மணமகள் : திருவாளன் மணமகள் : திருவாட்டி

சீர்மிகுந்த செந்தமிழர் வழியில் வந்தே
சிறந்ததொரு வாழ்வுகொளும் என்றன்தோழ
பேர்மிகுத்த தமிழகத்தின் பிரிய மைந்த
பெற்றிமிகுந் திருவாள, நீதான் இன்று
பார்மதிக்கப் பகுத்தறிவின் வழிபின் பற்றிப்
பைந்தமிழர் கீர்த்திநிலை நாட்டு தற்கே,
ஏர்மிகுந்த திருவாட்டி என்னும் மாதை
இனிதுடனே மணந்திட்டாய்; வாழ்க வாழ்க!

கன்னலெனும் சுவையுடைய உலக மெங்கும்
கருதுபுகழ் மிகவுடைய தமிழைக் கற்றோய்,
உன்னுடைய மணங்கண்டு பெரியோ ரெல்லாம்
உவகையுடன் சூழ்ந்திங்கு வாழ்த்துச் சொன்னார்!
அன்னதனை யறிந்துமிக மகிழ்ச்சி கொண்டேன்;
அவ்விதமே என்னுளத்தில் மோதி வந்த
அன்புரையொன் றீங்குரைப்பேன்; அன்ப நீதான்,
அதையறிந்துன் வாழ்வினிலே இன்பங் கொள்க!

மானிடராய்ப் பிறந்தபயன் வாழ்வின் பத்தை
வகையுடனே பெற்றிடுதல் வேண்டும் என்றே
நானிலமும் புகழ்பெற்ற தமிழ ரந்நாள்
நற்காதல் இல்லறத்தை வகுத்துச் சொன்னார்!
தேனினிக்கும் அவ்வினிய வாழ்விற் பின்னோர்
சீரற்ற வைதிகத்தைப் புகுத்தி, மக்கள்
மேனிலையைக் குலைத்துவிட்டார்! அதனை விட்டே
மேலான பகுத்தறிவின் வழிமேற் கொள்க!

பெண்ணடிமை பேசுபவர் மக்க ளுள்ளே
பேதநிலை போற்றுபவர் யாவ ரேனும்,
கண்ணியஞ்சேர் வளமிக்க இன்ப வாழ்வைக்
காணுவரோ கனவினிலும்? இந்த நாட்டில்

பெண்ணடிமை பேதநிலை பேசிப் பேசிப்
பேர்பெற்ற தமிழ்வாழ்வை அழித்த தாலே
திண்மையுறும் புலித்தமிழர் பூனை யாகிச்
சீரின்றி அடிமைநிலை ஏற்க லானர்!

மாதர்குலம் இன்றுள்ள நிலையில் வீர
மைந்தர்களை ஈனவில்லை! பண்டை நாளில்,
கோதற்ற பாலினொடு வீரஞ் சேர்த்துக்
குழந்தைகளுக் கார்வமுடன் தாய்மார் ஊட்டிப்
பூதலத்தோர் நடுநடுங்கத் தீர ராக்கிப்
புகழ்பெற்றார்! பெண்ணடிமை அந்நா ளில்லை!
ஆதலினால் உன்வாழ்க்கைத் துணைவிக் கேநல்
அறிவளித்துச் சமமளிப்பாய்; பொன்வாழ் வுண்டாம்!

மணமகளுக் கொருவார்த்தை; அழகு மட்டும்
மாதர்குலப் பெருமையினை வளர்த்தி டாது!
குணவழகு பெற்றறிவு மிக்குள் ளோரே,
குவலயத்திற் புகழ்பெறுவர்! அதையு ணர்ந்தே
பிணையனையாய், உன்வாழ்க்கைத் துணைவ னோடு
பேதநிலை தவிர்ந்தறிவுச் செயல்மேற் கொண்டே,
அணிபெற்ற நன்மாதர் உலகி னுக்கோர்
அருமணியாய் விளங்கிடுக புகழ்மிக் கார்ந்தே!

இருகண்ணும் ஒருபொருளை நோக்கும்; அந்த
இயல்புடைய வாழ்வினிலே இன்பமுண்டு!
பெருமையுறும் மணமக்காள்! நீவிர் அந்தப்
பெற்றியினை அறிந்தன்பாய் மலர் மணம்போல்,
ஒருமனங்கொண் டுயர்தமிழும் தமிழர் வாழ்வும்,
உயர்ந்திடநல் அறிவார்ந்த மக்கட் பெற்றே,
இருநிலத்தார் போற்றிடப்பல் வளஞ்சேர்வாழ்வில்
எந்நாளும் சிறந்தினிது வாழ்க! வாழ்க!

★★★

## சீர்திருத்தத் திருமண வாழ்த்து

திருவார்ந்தும் செந்நெல்வய லார்ந்தும் மிக்க
செந்தமிழும் ஆர்ந்துள்ள தமிழ கத்தில்,
பெருமைமிக ஆர்ந்துள்ள உள்ளம் என்னும்
பெயருடைய எம்தோழ, நீதான் இன்றே,
உருவார்ந்த உயர்குணங்க ளார்ந்த நல்ல
உணர்வென்னும் மங்கையினைச் சீர்தி ருத்தத்
திருமணமே புரிந்திட்டாய்! அதனைக் கண்டே
சிந்தைதனில் பெருமகிழ்ச்சி கொண்டோம் வாழ்க!

கீர்த்தியுறும் பழந்தமிழர் வாழ்வில் முன்னாள்
கீழ்நோக்கம் இருந்ததில்லை; பேத மில்லை!
பாழ்த்தமதத் தத்துவங்கள் இருந்த தில்லை!
பயனற்ற வீண்சடங்கு நிகழ்ந்த தில்லை!
நேர்த்தியுறு சமதர்ம நோக்கும், நல்ல
நீடுபுகழ்த் திருவாழ்வும் அறிவும் பெற்றே
சீர்த்தியுடன் வாழ்ந்திட்டார்! அதனைக் கண்டே
சீர்திருத்த மணம்புரிந்த செம்மால் வாழ்க!

ஒருமனிதன் ஒருத்தியோடு கூடிவாழ
ஒப்பந்தம் செய்திடுவான்; அதுதான் சொல்லும்
திருமணமாம்! அதைநடத்தப் பார்ப்பான் வந்து,
தெய்வப்பேர் சொல்லிப்பல் சடங்கு காட்டிப்
பொருள்தன்னைப் பறித்திடவே, குழவி யம்மி
புதுப்பானை சால்கரகம் குட விளக்கம்
அரசாணிக் கால்வைத்துத்; "தேவர்" என்பான்!
அருந்ததியும் காட்டிடுவான்! ஏற்பார் மக்கள்!

இத்தகைய இழிசெயல்கள் யாவு மின்றி
எழிலுறுநற் சீர்மணமே புரிந்த தோழா,
மெத்தவும்யாம் போற்றுகின்றோம்! அறிவுச் செய்கை
மென்மேலும் மீக்கூர்ந்தே, துணையா ளோடு
புத்தழகு மலர்மணம்போல் உள்ளம் ஒன்றி
புலமிக்க மைந்தர்களை மிகவே பெற்று,
நித்தநித்தம் புதுவாழ்வில் இன்பந் துய்த்தே
நீடூழி வாழ்கவென வாழ்த்தி னோமே!

## காதல்மண வாழ்த்து

சீர்வளர்ந் தோங்கும் நண்ப, செந்தமிழ் நாட்டு வீர!
பேர்வளர் தமிழன் என்னும் பெயரினோய்! எங்கள் தோழ!
ஆர்கலி யுலகந் தன்னில் அமைந்தநல் இன்பங் காண,
ஏர்மிகும் தமிழை இன்றே இனிதுடன் மணந்தாய்! வாழ்க!

காதலர் இருவர் கூடிக் கடிமணம் புரிவ தேதான்
தீதிலா வாழ்வாம் என்று செப்பினர் ஆன்றோ ரெல்லாம்
ஆதலால் நீயும் அந்த அறத்தொடு செய்த மன்றல்,
பூதல அறிஞர் தம்மால் போற்றுதற் குரிய தாகும்!

வாழ்வினில் இன்பங் காண வகுத்தநற் றிருமணத்தில்,
சூழ்ந்துள மதபே தங்கள் தொல்லையே விளைக்கக் கண்டோம்!
வீழ்வுறும் தமிழர் நாட்டை வீழாது காக்குந் தோழ,
ஆழ்வுறச் செய்தாய் இன்றே அகந்தைசேர் மதபே தத்தை!

வலியுறுங் கோட்டை யென்னும் வைதிகம் இற்றை நாளில்
நிலையழிந் திருக்குங் கோலம் நேர்ந்தமை, உன்போலுள்ள
புலியுளத் தோழ ராலே என்பதிற் பொய்யு முண்டோ?
நலியுறா வாழ்வு காண நற்றொண்டு புரியுந் தோழ!

பூதல இன்ப வாழ்வைப் பொய்யெனப் புகன்று வஞ்சக்
காதகர் வீட்டுப் பேற்றைக் கற்பனை செய்து விட்டார்!
தீதுறும் அந்த வாழ்வைச் 'சீ' என ஒதுக்கி, நல்ல
மேதையர் பெரியார் சொன்ன மேன்மையாம் நெறிமேற்கொண் டாய்!

வாழ்கநீ உன்றன் காதல் மனையொடு மலர்ம ணம்போல்!
வாழ்கநீ புலமை சான்ற மக்களை மிகவே கொண்டு!
வாழ்கநீ தன்ம திப்பு மாநிலம் அடைய வேண்டி!
வாழ்கநீ என்றும் இன்ப வளமுறும் வாழ்வில் நன்றே!

❀❀❀

# தமிழிசைப் பாடல்கள்

1950

# முன்னுரை

தமிழ் மக்களுக்குத் தமிழிசையில் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் ஆர்வத்திற்கேற்பத் தமிழிசை கேட்க முடிவதில்லை. தமிழிசை வல்லுநரும், பிறமொழிக் கீர்த்தனைகளை இசையரங்கில் பாடுகின்றனரே யொழியத், தமிழிசை பாடுவது அரிதாகவேயிருக்கின்றது. அப்படிப்பாடும் ஒன்றிரண்டு பாடல்களும், காலத்திற்கேற்ற கருத்துக்களைக் கொண்டன வாக இல்லை. இது, பாடுவோர் குற்றமானது. அவர்களுக்குப் போதிய அளவு இன்னும், தமிழிசைப் பாடல்கள் கிடைக்க முடியாமலிருப்பதே யாகும்.

சீர்திருத்த ஆர்வமுடைய ஆர்மேர்னிய சங்கீத சரபம் தோழர் எம். மாணிக்கவேல் அவர்களும், இசை வல்லுநர் தோழர் பு.எ. நித்தியானந்தம் அவர்களும், இசையரங்குகளில் சீர்திருத்தப்பாடல்கள் பாடுவதற்கில்லை யென்றும், ஆதலால் சிலபாடல்கள் இயற்றித்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் தந்த இசைகளில் எழுதப்பட்ட பாடல்களைத் தொகுத்து, அவர்கள் விருப்பப்படியே ஒருசிறு நூலாக வெளியிட முன்வந்தோம். ஆங்காங்குள்ள இசைவல்லுநர்கள், இதிலுள்ள பாடல்களைப் பாடிச் சீர்திருத்த வேட்கை கொண்ட மக்களுக்கு இசைவிருந்து அளிக்க முன்வருவார்களாக!

1.9.1950
புதுவை.

இங்ஙனம்,
ஞாயிறு நூற்பதிப்பகத்தார்.

# தமிழிசைப் பாடல்

## *1. நாட்டுப் பகுதி*

இராகம் : பகுதாரி　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

எடுப்பு

வாழ்க வாழ்கவே புகழோ டென்றும்
வளமார்ந்த எம் திராவிடமே! (வாழ்)

துணை எடுப்பு

சூழ்புவியில் நீ, தொன்மை வாய்ந்தனை
சுடரறிவை, முதற் கண்டனை! (வாழ்)

அடிகள்

இடர்யாவும் போக்கி எழிலார்ந்த நல்
இயற்கை தவழ்பொன் வாழ்விலே,
படிபோற்றிட நின்றாய் முன்னாளே
பலவாம் கலை கொண்டாய் மென்மேலே! (வாழ்)

எமைக் காப்ப தெல்லாம் உன் கீர்த்தியே!
இதுநாள் மறந்தே வீழ்ந்தோமே!
சுமை யாரியச் சூழ்ச்சி தீர்ப் போமே!
சுவை வாழ்வினை மீண்டும் காப்போமே! (வாழ்)

## *பாட்டு - 2*

இராகம் : மோகனம்　　　　　　　　　　　　　　　　தாளம் : மிசிர ரூபகம்

தமிழ்நாடு தமிழ்நாடு தமிழ்நாடெம் நாடு!
அமுதான மொழிஎங்கள் தமிழென்றே பாடு!
கமழ்சோலை மலையோடு கடல்சூழ்ந்த நாடு!
கலையோங்கி வளமேவும் வயலார்ந்த நாடு!
அமைவான உயர்காதல் நலவாழ்வு தேக்கி
அரிதான செயல்யாவும் விளைத்திட்ட நாடு!
திமிர்கொண்ட பகைதன்னைப் புறங்காணச் செய்த
திறல்மிக்க தமிழ்மாந்தர் நிலைத்தோங்கும் நாடு! (த)

## பாட்டு - 3

இராகம் : தோடி தாளம் : திரிபுடை

எடுப்பு

சிந்தனை செய்து பார்ப்பிரே
திராவிடம் சிதைந்த தேன்? (சிந்)

துணை எடுப்பு

முந்தையோர் உயர் நிலையினிலே
மொய்ம்புடன் வாழ்ந்தார்! (சிந்)

அடிகள்

ஏனோஇவ் விழிநிலைமையே–எங்கு நோக்கினும்
ஏற்காத கொடுஞ் செயலே!
மானமே பெரி தாய் மதித்தோர்
மரபில் வந்தோமே! (சிந்)

எல்லோரும் உயர்வடைந்தனர் – இந்நாளினிலே
இன்னும்நாம் துயில்கொள்வதோ?
நல்லதோ பகுத்தறி விழத்தல்?
நலிந்தே வாழ்வதோ? (சிந்)

## பாட்டு - 4

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

எடுப்பு

திராவிடம் எனப் புகல்வாய்
சீரோங்கவே நிதம்பணி செய்திடுவாய்! (தி)

துணை எடுப்பு

அராவிடம் என்ப்புகல் ஆரியம் போக்குவாய்
அறிவினைப் போற்றியே அடிமையை நீக்குவாய்! (தி)

அடிகள்

வடவரின் ஆதிக்க வெறிச்செயல் ஏகுமே
வறுமையும் துன்பமும் வலிகுன்றிப் போகுமே!
நொடிதனில் சுந்தர உரிமைகள் நேருமே
நோயெனும் சாதிபே தங்களும் தீருமே! (தி)

மாண்புறு செந்தமிழ்க் கலைசெழித் தோங்குமே
மானிலம் வியந்திடக் கீர்த்தியுண் டாகுமே!
மேனிலை வாழ்வெலாம் நமைவந்து நாடுமே
வேதனை யற்றதோர் இன்பவாழ் வாகுமே! (தி)

## பாட்டு - 5

இராகம் : ஜயந்த ஸ்ரீ                    தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

திராவிடமே நீ வேண்டுவாய்! (தி)

துணை எடுப்பு

திராவிட நாடு திராவிடர்க் கானால்
திகழும் நல் வாழ்வு இனிதாகவே! (தி)

அடி

பேத மனமெனும் பீடையாவுந் தீரும்
பேசும் நலனெலாம் பெருகிச் சேருமிங்கே!
காதல் வாழ்வு விளையும் நீதி நேர்மை நிலவும்
காணும் வேற்று நாட்டார் நம்மைப் போற்றுவார்கள்! (தி)

## பாட்டு - 6

இராகம் : மஞ்சரி                    தாளம் : ஆதி

எடுப்பு

ஆடுங் கொடியைப் பாரீர் – திராவிட
நாடு பெறுவோ மென்றே! (ஆ)

துணை எடுப்பு

வாடிடும் மாந்தர் மனதினில் மகிழ்ச்சி
நாடச் செய்யவே பறந்துயர் வானில் (ஆ)

அடிகள்

சொந்த நம் நாட்டில் பிறர்செயு மாதிக்கம்
துளியும் இருந்திடல் பெரும்பழி யென்றே
சிந்தை யிழந்த மாந்தருக் குணர்த்திச்
சீர்மை வாழ்ந்தநல் வாழ்வு காத்திட (ஆ)

மக்களில் பேதம் வளர்த்துமே இங்குள
வளமார் வாழ்வினை நலிவுறச் செய்தே,
எக்களிப் புடனே வாழ்ந்திடும் ஆரிய
ஏதம் போக்கியே நீதம் காத்திட (ஆ)

# 2. தமிழ்மொழிப் பகுதி

## பாட்டு - 7

இராகம் : கம்பீர நாட்டை
தாளம் : ஆதி

எடுப்பு

சீரிய செந்தமிழே, உயிரே,
சீர்பெறவே எந்நாளும் செய்திடுவோம் உனையே—எம் (சீ)

துணை எடுப்பு

பேரருள் வாய்ந்திடுமோர் பெருநலங் கண்டோம்
பீடுடனே எம்மையே காத்ததுங் கண்டோம் (சீ)

அடி

தாரணி தனில்முதல் தோன்றிய மொழியே
சார்ந்துள நாட்டிருளைத் தீர்த்தநல் ஒளியே!
வீர மறவரையே விளைத்தசெம் மொழியே—நலம்
மிகுந்திடப் பகுத்தறிவு தந்தாய்!
எழில் தந்தாய்! புகழ்மிகத் தந்தாய்!—எம் (சீ)

***

## பாட்டு - 8

இராகம் : சரசுவதி
தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

பாரில் முதல் தோன்றி வளர்ந்தநல்
பான்மை சேர்மொழி தமிழ்மொழியன்றோ? (பா)

துணை எடுப்பு

சீருலாவு முயர் சங்கங் கண்டு போற்றிச்
செம்மையே கொள்ளக் காத்தனர் புலவர் (பா)

அடி

பகையுள்ளங் கொண்டே இகழ்ந்தாரை நோக்கிப்
படையேவச் செய்தே வெற்றிகண்ட மாட்சி,
தகைமைசேர் தமிழ்க் கல்லாமல் வேறு
சாற்ற உண்டோ சொல்வீர்? அறிஞர் போற்றும் இப் (பா)

*பாட்டு - 9*

இராகமாலிகை　　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ரூபகம்

கண்ணிகள்

*செஞ்சுருட்டி*

இன்பச் சுவையே நல்கும் எங்கள் கன்னித் தமிழ்க்கே
ஈடுரைத் திட ஒன்று பாரினில் வேறுண்டோ?
கன்னலென் றுரைப்பார்கள் – அதையறிந்தோர்
இன்னமு தென்பார்கள்!

*நாதநாமக் கிரியை*

ஆய துயர் விலக்கி ஆர்வம் உண்டாக்கியே
நேயம் பெருகச் செய்யும் நெறிபுகல் செம்மொழி!
தூயநல் வாழ்வளிக்கும் – சீரமைந்த
ஏயநல் வாழ்வளிக்கும்!

*சிந்துபைரவி*

ஆரிருள் போக்கியே அறவொளி சேர்க்குமே
அன்புடைக் காதல்சேர்த் தின்பம் விளைக்குமே!
பேரருள் கூட்டிடுமே – பகையெனில்
வீரமுண் டாக்கிடுமே!

❄❄❄

## 3. சிந்தனைப் பகுதி

*பாட்டு - 10*

இராகம் : சங்கராபரணம்　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

எடுப்பு

பார்ப்பவர் பரவசம் அடைந்திட வாழ்ந்தனர்
பழைய தமிழ் மாந்தரே!　　　　　　　　　　　　(பார்ப்)

துணை எடுப்பு

சீரும் சிறப்பு மிகவே வாழ்வில் புதுமணமே
சேர்த்து நற் றமிழினைக் காத்தத னாலவர்　　　　　(பார்ப்)

அடி

உள்ளத்திலே எழுந்த உணர்வின் நிலையறிந்தே
உன்னதமாம் காதல் தன்னைவகுத் தளித்தார்.
வெள்ளம்போ லன்புநீரே பாய்ந்தது வாழ்வினில்
மேன்மை யனைத்தும் வளர்ந் தோங்கப், புகழ் வளர
வீரராய்ப் புவிதனில் தீரராய் விளங்கினர்!　　　　　　(பார்ப்)

## பாட்டு - 11

இராகம் : இந்துஸ்தான் பியாக் — தாளம் : ஆதி

எடுப்பு

என்றுமே உயர்வில் வாழ்ந்தார் முன்னோரே
இழிந்தாய் ஏன் தமிழா? (என்)

துணை எடுப்பு

நன்றறி யாமல் தீவினை நாடி
நாயினுங் கேடென ஆயினை வாடி! (என்)

தொகையரா

வென்றியே கண்டார்கள் பகைதன்னைச் சாடி!
வீரராய் விளங்கியே வாழ்ந்தனர் கூடி!
மேன்மையுடன் உயர்காதலே நாடி!

பாட்டு

சரியோ உன்நிலையே உணர்வாய் நீ சிறிதே!
தமிழர்தம் மாண்பையே மறப்பதுவோ? (என்)

▼▼▼

## பாட்டு - 12

இராகம் : பிரதாபவராளி — தாளம் : ஆதி

எடுப்பு

இழிவான சடங்கு செய்வதேன்
இன்னல் கண்ட பின்பும்? (இ)

துணை எடுப்பு

பழியார்ந்திட வாழ்வதோ சொல்லுவீர்?
பகுத்தறிவை மறந்துமே!

அடி

முன்னாள் தமிழ் வாழ்வி லில்லா
மூடச்செய லார்ந்ததேன்?
இந்நாள் நமது பெருமை ஏகவே
ஏதம் மிகு சடங்குகள் காப்பதோ?
கன்னல் தமிழ் வெறுப்பது வோ அதில்?
கருது மான மிலையோ? (இ)

## பாட்டு - 13

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

எடுப்பு

'இந்து'வென் றுன்னையே இயம்புவ தேனையோ!
இழிபெய ரதுவென அறியாயோ? (இந்)

துணை எடுப்பு

நிந்தையை ஏற்றிட நீமனம் துணிந்தாய்!
சிந்தை யிழந்து வாழ்தல் சரியாமோ? (இந்)

அடிகள்

கள்ளர் கொள்ளையர் என்ப ததன்பொருள்
கழறனா ரன்னியர் வடவர் சிலர்தமையே!
தெள்ளு தமிழறிஞர் அதனை ஏற்பரோ?
சித்தங் கெட்டதுண்டோ? பித்த நிறைவாமோ? (இந்)

வாழ்ந்த திராவிடர் கீர்த்தி மறப்பதோ?
வஞ்சக ஆரியர் வலையில்நீ வீழ்வதோ?
சூழ்ச்சி யுரைய்றிவாய் தேசியப் பேரினால்
சொன்ன போதும்வேண்டாம் மானம்போக்கும் பேரே! (இந்)

## பாட்டு - 14

இராகம் : பந்துவராளி தாளம் : ஆதி

எடுப்பு

விதி விதி விதி என்ப தேனோ?

துணை எடுப்பு

எதற்கெடுத் தாலுமே அறிவிழந் தேநீ? (வி)

அடிகள்

கதியி ழந்தோர் வாழ்வினை நீயே
கண்டபின்பும் ஏனோ கருத்திழக் கின்றாய்?
அதிபெரும் பாலோர் ஏழ்மையில் வாட
அவனியி லொருசிலர் சுகமுற, இதனை (வி)

மதிதுணை கொண்ட நாட்டினி லிதுபோல்
வழுத்துவ துண்டோ விதியெனும் சொல்லை?
சதிச்செயல் புரிந்துமே ஏய்த்துவாழ்ந் திடுவோர்
சாற்றிடு மொழி நம்பி நீதுயர்கொண்டே (வி)

## பாட்டு - 15

இராகம் : பந்துவராளி

தாளம் : ஆதி

எடுப்பு

பேதைமதி தகுமா – உனக்கே
ஏழைமதி தகுமா? – தமிழா! (பே)

துணை எடுப்பு

சூது நிறைந்திடும் தீய மதமென்னும்
போதை மிகுந்தேநீ வாது புரிகின்றாய்! (பே)

அடி

கானில் மிருகமென்ன மான உணர்வில்லாமல்
கண்ட கண்ட படியொழுகித் துயர்கொண்டு மாள்கின்றாய்!
ஈனஞ் சகிப்பதோ இந்நாள் தமிழன் நீ?
இன்றே விழித்தெழு! நன்றே விளைத்திடு! (பே)

❁❁❁

## பாட்டு - 16

இராகம் : பைரவி

தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

ஏழை மக்கள் பால் இரங்குவீரே – என்றும்
ஏங்கியே சோர்வுடன் எளிய வாழ்வில் வாடிடும் (ஏ)

துணை எடுப்பு

பாழும் இந் நாட்டினில் பேதம் ஒன்றோ?
பகர்ந்திடல் அரிதரிதாகும்; அதன் பலன்
பரம தரித்திரமே பெருகி வளரக் கண்டோம்! (ஏ)

அடி

கொண்டாட வாழ்வினிலே மூழ்கி மூழ்கி – நாளும்
கும்மாளம் போடுகின்றார் செல்வர்களே! – வாழ்வில்
திண்டாட்டம் கொள்ளுகிறார் உழைப்பவரே!
தீராத் துயர்மிகு வறுமையில், இனியவர்
மாளா திருந்திட வழிபுரிந் திடுவீர்! (ஏ)

❁❁❁

# 4. சாதிபேதப் பகுதி

## பாட்டு - 17

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

எடுப்பு

மயிலே உனைப் பார்ப்பவர் மாமதி பெறவேண்டி
மகிழ்வாய் நடித் தாடுவாய்! (ம)

துணை எடுப்பு

பயில்வார் பலவேகலை பாழ்மதி நீங்கிடார்!
பயனே யில்லாப் பொருளை உயர்வாய் நினைவார் மிக (ம)

அடிகள்

மாந்தரின் பிறவியில் பேதமே கூறுவார்
மதியிலாச் செயலெனில் வெறியர்போல் சீறுவாய்!
தீந்தமிழ் வாழ்வெனும் செந்நெறி நாடிடார்
தீமையைப் போற்றிஎந் நாளுமே வாடுவார்! (ம)

உன்னிடம் பொருந்திய வண்ணங்க ளோபல
உயர்ந்தது தாழ்ந்ததென் றோதுவ துண்டோநீ?
தன்மதிப் பிழந்த தண்டமி ழர்,தம்மில்
தாழ்வுயர் வோதியே சீரழிந் திடுகின்றார்! (ம)

## பாட்டு - 18

இராகம் : கேதாரம் தாளம் : ஆதி

எடுப்பு

பேத வாழ்வேன் இனியும்
நேர்ந்த துன்பம் போதாதோ?

துணை எடுப்பு

நீதி யென உரைத்தார்
நிந்தை கொண்டோம் ஏற்றே! (பே)

அடிகள்

பூதலந்தனில் எங்குண்டு
புகல்விரே பேதம் பிறவியில்?
வாது பேசினால் தீதுபோகுமோ?
மாண்பினைப் போக்கி வீழ்த்தும் (பே)

யாவரு மிங்குச் சோதரர்
என உரைப்போம் நாம் இனிதுடன்!
மேவு மின்பமே வாழ்வில் சீர்மிக!
மேதினி போற்ற வாழ்வோம்! (பே)

❋❋❋

## பாட்டு - 19

இராகம் : அடாணா தாளம் :சதுசிர திரிபுடை

எடுப்பு

சாதியும் பேதமும் விடுவாயே – உயர்
சமமே விரும்புவாய் நீயே – தீய (சா)

துணை எடுப்பு

தீதினை ஒம்பியே சீரழிந்தாய் நிதம்
தேடரு கீர்த்தியை நீயிழந்தாய்!–தீய (சா)

அடி

பூதல மீதினில் உயர்வடைந்தே பிறர்
பொன்வாழ்வு தனிலின்பம் அடைகின்றார்!
வாதுசெய் தேநிதமும் உயர்வான – நல்
வாழ்வினையே மறுத் தோதுவதேன்? – தீய (சா)

★★★

## பாட்டு - 20

இராகம் : ஜிங்கள தாளம் : ஆதி

எடுப்பு

எல்லோரும் சமமே என்றுரைப்பீர்! (எல்)

துணை எடுப்பு

எல்லோரும் சமமே இலையொரு பேதமே
இதைமறுப் போர்அறி விலாத ஜென்மமே! (எல்)

சுரத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| பிறவியில் | உயர்ந்தவர் | எனஉரைத் | திடுமவரே |
| பபபஸ | ஸநிநித | பஸநித | மகரிகஸா |
| பெறுமரிய | தேகம்வே | றுடையரோ? | |
| மகரிஸரி | ஸாரிமா | சாரிஸா | |

| | | | |
|---|---|---|---|
| சிறுமதி | இதுவலால் | வேறென | உரைப்பிரே? |
| பஸநித | நிஸரிக | ஸமகரி | ஸநிதநி |
| திருவடரவர்! | மனிதர்நலம் | உறுஞ்சுபவர் | |
| கரிஸநித | ரிஸநிதப | ஸநிதபம | |

அடி

பொல்லாத தீண்டாமை யொன்றையும்
புகன்றா ரிந்த நாட்டில்!
நில்லாத வாதம்! நிறைபுவி யிகழும்!
நீசச் செயலிதை விடுவீ ரிப்போதே! (எல்)

❖❖❖

## பாட்டு - 21

இராகம் : தோடி தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

பிறப்பில் மேல்கீழ் பேசாதிரு தோழா!
பிழையாம் அதனை விடுவாய் முன்னேறுவாய்! (பி)

துணை எடுப்பு

சிறப்பிலா வாழ்வும் துயரமுமே ஓங்கச்
சிறுமையிலே நீ உழன்றிடல் சரியோ? – இனிமேல் (பி)

அடி

புவியே புகழ்ந்தேத்திட அறிவில் முதிர்ந்தவராய்ப்
போரில் வெற்றிகண்டுமே வாழ்ந்தார் தமிழ ரந்நாள்!
அவிவேகமே விடுவாய்; நகையாடுதே உலகம்!
அறிவால் சமம்பெறுவாய் இலையேல் அழிந்திடுவாய்! (பி)

# 5. காதல் மணப் பகுதி

## பாட்டு - 22

இராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

எடுப்பு

காதல் மாமணம் தீதென் றுரைப்பதுவோ?
காரணங்க ளின்றியே – நாமே (கா)

துணை எடுப்பு

ஏதம் இதிலென்ன விளைந்திடும் கண்டீர்?
ஈருளம் பொருந்திடா வாழ்வுநன் றாமோ? (கா)

அடிகள்

தனித்ததோ, ஆண் பெண் சார்ந்ததோ வாழ்வு?
தரைமீதினில் நமைப் போல்,
மனத்தினில் ஒருமை நாடிடாமல்
வாழ்வு தன்னிற்புக நினைவுகொள்வா ருண்டோ? (கா)

இருகண் களுமே ஒரு பொருள் நோக்கிடும்
இயல் புடையதே வாழ்வு!
திருமணம் புரிதல் தீவினைக்கோ?
சேரும் காதல் உள்ளம் தன்னிலன்றோ இன்பம்! (கா)

✳✳✳

## பாட்டு 23

இராகம் – காமவர்த்தினி தாளம் – ரூபகம்

எடுப்பு

காதலில்லா வாழ்வுதனிலே கருதுமின்ப மேவுமோ? (கா)

துணை எடுப்பு

கருத்தொவ்வா ஈருள்ளம் ஒன்றிக்
கலந்து வாழ்ந்திடுமோ?
கறையாகும் வாழ்வு தன்னைக்
காத்தே இன்னல் அடைதல் சரியோ? (கா)

அடி

ஓதுமிரண்டு விழிகள்போல ஒன்றிநோக்கும் அன்பு வாழ்வில்
ஒன்றாஉள்ளந் தன்னைப்பிணைத்தல் சரியோ? முறையோ?
தீதுகொண்ட வாழ்விலே இன்பமுண்டோ கூறுவீரே?
செம்மைக்காதல் வளரச்செய்வீர் சேர்ந்திடும் இன்பமே வாழ்வில் ! (கா)

✳✳✳

## பாட்டு 24

இராகம் : அம்சாநந்தி தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

காதலி னாலுயரும் நம் வாழ்வின் சீரே! (கா)

துணை எடுப்பு

தீததில் ஏது சிறப்பலால் ஓது?
சிறுமையும் விளையுமோ நலனேயல்லாது? (கா)

அடிகள்

பேதமும் போமே பெருநல மாமே
சாதியு மாயுமே சாந்தியுண் டாமே! (கா)

அன்புமே லோங்கும் அடிமையும் நீங்கும்
வன்பெலாம் ஏகும் மாசுக மாகும்! (கா)

துன்பமே வாழ்வென் றுரைத்திடல் ஏனோ?
இன்பமே வாழ்வென இசைத்திடு வோமே! (கா)

✣✣✣

## 6. திருக்குறட் பகுதி

### *பாட்டு - 25*

இராகம் : ஆந்தாளி தாளம் : தேசாதி

எடுப்பு

சீர்மிகு செந்தமிழ் வாழ்வினைக் காக்கும்
திருக்குறள் போற்றிடுவோம்! (சீர்)

துணை எடுப்பு

போர்மிக வாழ்த்து வந்தோம்
தேய்ந்தோம் பிறைபோல் இன்றே! (சீர்)

அடிகள்

ஆர்கலி யுலகினில் அறிவினில் மாண்பினில்
தேர்ந்த நாம் வீழ்ந்தோம்
திருக்குறள் மறந்ததன் பயனாய்! (சீர்)

வாய்ந்தபே ரொழுக்கமே வகுத்த நன் னூலது!
தேர்ந்தவர் யாவரும்
திருவெனப் போற்றிடும் கலையது! (சீர்)

மானில மீதினில் உயர்நெறி மானமே
தேனெனும் வாழ்வைத்
திருக்குறள் தந்திடும் அறிவீர்! (சீர்)

✣✣✣

## பாட்டு - 26

இராகம் : கரகரப்பிரியா தாயம் : ஆதி

எடுப்பு

மாட்சி என்ன சொல்லுவேன் – மக்கள்
மாண்புறு வாழ்வைக் கூறிடும் திருக்குறள் (மா)

துணை எடுப்பு

ஆட்சிமுறை நல்ல மீட்சிமுறை – பொருளை
ஈட்டும் முறை காதல் வாழ்க்கைமுறை கூறும் (மா)

அடி

வாழ்வினிலே நேர்மை மாய்த்தே ஏய்த்துவரும்
வஞ்சகர் சூழ்ச்சியை வெளிப்படுத்தி,
தாழ்வு போக்கியே மேன்மையாம் பாதை
தனைநன்றே யுரைத்திடும்; உலகு முன்னாலே
சற்குணராய் ஆகச் செய்யும் மென்மேலே!

சாதியை மாய்த்திடுமே – பலபலவாம்
பேதமே தேய்த்திடுமே! – சமமெனுமே! (மா)

✪✪✪

## பாட்டு - 27

இராகம்:தோடி தாளம் :சதுசிரதிரிபுடை

எடுப்பு

சிறக்கும் சீர்மிகு வாழ்வு பெருகிடும்
திருக்குறள் நெறி போற்றுவீர் தோழரே! (சி)

துணை எடுப்பு

பிறப்பில் பேதமே கூறுதல் சரியோ?
பிழைதனை ஏற்பது தமிழ் நெறியோ? (சி)

அடி

ஏய்த்து வாழ்ந்திடும் ஆரியக் கூட்டமே
இன்னல் தந்திடும் வைதிகம் சேர்த்துமே,
மாய்த்ததே தமிழ் மாண்புறு வாழ்வினை;
வாழ்த்தியே தோற்றுவோம் குறளின் போதனை! (சி)

### பாட்டு - 28

இராகம் : தோடி தாளம் : மிசிரஜாதி ஜம்பை

எடுப்பு

இந்த மானிலம் நன்று போற்றிடும் திருக்குறள்
எங்கள் சீர்த்தமிழ் பெற்றதோர் மாநிதி! (இந்)

துணை எடுப்பு

செந்நெறி கண்டோம் பழந்தமிழ்ப் பண்புடனே
சீரார் வள்ளுவனார் தந்த நன் னூலினால்! (இந்)

அடி

நீதியார்க்கும் ஒன்றே பேதமும் பிறவியில் இல்லை
நேர்மை எங்குமே வாய்ந்திடக் கூறுமே!
போதமார் கொள்கை பொதிந்தநற் பேழையாம்
பொற்சுவ டியைநாம் போற்றியே காப்போம்! (இந்)

❋❋❋

## கடமைப் பகுதி

### பாட்டு - 29

இராகம் : அம்சானந்தி தாளம் : திசிரசாபு

சீருலவு செந்தமிழை எம்முயிராய்க் காப்போம்!
திராவிடத்தின் மேனிலையை நாளுமுயர் விப்போம்!
பேருலவு பழந்தமிழ்நூல் பெருமையுடன் காப்போம்!
பீடுதரும் நல்லறிவுக் கலைகளெல்லாம் சேர்ப்போம்!
ஏருலவு மாதர்களின் இன்னுரிமை காப்போம்!
இசை வாழ்வில் காதல்மிக இனிதுநலஞ் சேர்ப்போம்!
பாருலகில் எமதுதமிழ் நாட்டிற்கிணை ஏது?
பண்புமிகும் புதுவாழ்வு தோற்றுவமிப்போது! (சீ)

❋❋❋

### பாட்டு - 30

இராகம் : நவரச கன்னட தாளம் : தேசாதி

எடுப்பு

அரிய எண்ணமே ஒளிரச் செய்குவோம்
அறியா மையிருள் தீர – நாமே! (அ)

துணை எடுப்பு

கருகும் வண்ணம் செய்தார் தமிழ்வாழ்வு தன்னைக்
கரவு நெஞ்சர் அந்நாள் மதத்தின் பேரைச்சொல்லி (அ)

அடி

பகுத்தறி வெங்கும் வளரச் செய்குவோம்;
பரவும் நற்புகழ்! இழிவேகுமே!
மிகுத்த மூடச்செய்கை வீழ்ச்சிகொள்ளும் நாளே
மேன்மை வாய்ந்த நன்னாள்!
ஆர்ந்த இன்பப் பொன்னாள்! (அ)

❀❀❀

## பாட்டு - 31

இராகம் : சுத்த சீமந்தனி
தாளம் : ஆதி

எடுப்பு

வாழ்விலே புதுமை தோன்றச் செய்வோம் நாமே
வாரீர் அருமைத் தோழரே நீர்! (வாழ்)

துணை எடுப்பு

தாழ்வுயர்வு தனையொழித்தே – மேன்மைச்
சமத்துவ மெங்கும் விளைத்தே – தூய (வாழ்)

அடிகள்

வீணில் செலவழித்தோம் நமதருங் காலம்
வீதிமேல் பாரத்தைச் சுமத்தி மென்மேலும்!
நாணச் செய்தார் பிற நாட்டினர் நம்மை!
நாளும் உயர்வில் திராவிடம் ஓங்கிடவே (வாழ்)

நல்ல கலைகளையே பெருக்கிடு வோமே
நாட்டில் விஞ்ஞானம் வளர்த்திடு வோமே!
வெல்லும்நற் கருவிகள் விளைத்திடு வோமே!
வீர மிகுந்த திராவிடம் சீர் பெறவே! (வாழ்)

✤✤✤

## பாட்டு - 32

இராகம் : பியாக்
தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

தேடும் கலைகளிலே – நல்ல
சீர் ஞானம் அமைத்திடுவோம்! (தே)

துணை எடுப்பு

நாடும் உயர்பொருள் நாட்டில் குவித்துமே
பீடு நிலைபெறப் பெருமகிழ் வாகவே! (தே)

அடி

வானில் தரையினில் ஓடியே பாய்ந்திடும்
வாகனம் யாவுமே நாம்படைப் போமினி!
மானில வாழ்வு தன்னில்
வளம்பல மிகச் செய்வோம்! (தே)

***

## பாட்டு - 33

இராகம் : காப்பி தாளம் : ஆதி

எடுப்பு

பயமென்ப தினிநமிக் கேது – பகுத்தறிவுப்
பாதைதனைக் கண்டபோது (பய)

துணை எடுப்பு

கயமை இருளார் வழியில் நொந்துமே
கடுஞ்சுரமும் தாண்டி வந்திட்டபோது (பய)

அடிகள்

சொலமுடி யாத்துயர் கொண்டனம் நாமே
தூய் தமிழ் வாழ்வினை மறந்தத னாலே;
நலம்பெறச் சகித்திடா நஞ்செனும் ஆரிய
நனியிருட் பாதை தனைத் தாண்டினோம்! (பய)

அறிவிலதாம் செயல் ஆழ்ந்தது பாரீர்!
அடிமையும் பேதமும் மாய்ந்தது காணீர்!
செறிந்துள சாதிகள் சாத்திரம் யாவுமே
சிதைந்தன; இன்பம் இனி யோங்குமே! (பய)

✦✦✦

## பாட்டு - 34

இராகம் : பியாகடை தாளம் : ரூபகம்

எடுப்பு

மலையாதே என் தோழனே – மூடச் செய்கைகள்
நிலையாவென் றுணர்வாய் நீயே! (ம)

துணை எடுப்பு

பல நூல்கள் படித்தாய் நீ என்ன பயன் கண்டாய்?
பகுத்தறி வைவென்று மடமை சிறவாதே! (ம)

அடி

விளைவினை யறியாமல் விதியென் றெதற்கும் சொல்லி
வீணே மூடநம்பிக்கை கொண்டுமே துயரேற்றாய்!
களைவாயே வைதீகம் கடுமூடச் செயல் ஓடும்!
கருதும் நலவாழ்வு காணுமே; உயர்வாய் நீ! (ம)

❀❀❀

## பாட்டு - 35

இராகம் : மணிரங்கு
தாளம் : ஆதி

எடுப்பு

இந்த வாழ்விலே இன்பங் காணலாம்
எங்கோ உண்டென்பார்கள் இல்லை இல்லை பொய்யே! (இந்)

துணை எடுப்பு

சிந்திப்பீர்களே உண்மை தன்னையே
தீமை முற்றுங் கொண்ட துண்டோ வாழ்வு சொல்வீர்? (இந்)

அடி

வழிவேறு கொண்டு சென்றால் நலமாய்
வகுத்தஇ டத்தினை அடைவோமோ?
சுழியார் புளுகுரை விட்டே தாண்டுவீர்
சுவைசேர் இன்பவாழ்வு தோன்றும் பாரீர்! (இந்)

❋❋❋

## பாட்டு - 36

இராகம் : சாவேரி
*தாளம் : திசிரசாப்பு, ஆதி

உரிமை பெறுவோம் இதுவே நமது
கடமை எனவேஉணர்வாயே!
உலகில் இதனை இழந்தோர் மிருக
நிலையே சதமாய் அடைவாரே!
பெருமை யுடைய தமிழர் வழியில்
பிறந்த மகனும் அலவோ நீ?
பிழையை யுணர்ந்தே பழியை விலக்கப்
பெரிது முயல்வாய் தமிழா நீ! (உ)

வடவர் உனையே அடிமைப் படுத்தி
வளத்தைச் சுரண்டிக் கொழுக்கின்றார்!
வளரும் அறிவைக் கெடுக்க நிதமும்
மடமை வளர்க்கத் துடிக்கின்றார்!
கடமை யறிந்தே வறுமை தொலைய
இடரும் விலக முயல்வாய் நீ!
கருத்தில் தெளிவு பெறுவாய் எதிர்ப்பைக்
கடக்கத் துணிவே அடைவாயே! (உ)

எதிர்த்துத் தமிழை அடக்க நினைந்தோர்
அடைந்த கதியை நினைவாயே!
இதுநாள் முனைந்தார் பகைவர் எனினும்
எழுச்சி யடையா திருக்கின்றாய்!
கொதித்த உளத்தில் வரட்சி மிகுந்து
குழப்ப நிலையே யடைந்தாயோ!
கொடுமை தவிர்க்க இனிதே முயல்வாய்
குதித்தே எழுவாய் தமிழா நீ! (உ)

* *குறிப்பு : ஒவ்வோரடியையும் மேற்படி இரண்டு தாளத்திலும் சேர்த்துப் பாடவேண்டும்.*

❄❄❄

## *பாட்டு - 37*

இராகம் : அமீர்கல்யாணி தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

ஏனிந்த வாழ்வு தமிழ்த் தோழனே? – உனக் (கேனிந்த)

துணை எடுப்பு

மானில மீதினிலே மேம்பாட்டுடன்
வாழ்ந்தவரே தமிழர் சரிதம் நீ யறிவாய்! (ஏ)

அடிகள்

கானத னில்நில வொளியெனப் பயனின்றிக்
காலமெல்லாம் உழைத் தோய்ந்துமே வாடினை!
மான வாழ்வுதனை நீமறந்தாயே!
வஞ்சகத்தைத் தழுவியே இழிவேற்றாயே! (ஏ)

மாயிருள் தீர்த்திடும் அறிவாளி போற்றுவாய்!
வாழ்வினைத் தேய்த்திடும் வைதிகம் வீழ்த்துவாய்!
நேய வாழ்வுதனை நீயமைப்பாயே!
நீடுலகு தனிற்புகழ் விளைத்திடு வாயே! (ஏ)

❋❋❋

## பாட்டு - 38

இராகம் : மாண்டு தாளம் : சதுசிர திரிபுடை

மானமே மேலாய் வாழ்ந்தவர் தமிழர்
மறுப்பவர் இல்லையடா! – புவியில் (மறுப்)
ஈனமே யறியார் இளிவரின் வாழார்
இசையொடு வாழ்ந்தாரடா! – தமிழர் (இசை)

காதலால் வாழ்வைக் கவின்பெறச் செய்தே
கலைவளம் செய்தாரடா! – தமிழர் (கலை)
பேதமும் சாதிப் பீடையும் அறியார்;
பெருங்குணம் வாய்ந்தாரடா! – தமிழர் (பெருங்)

எதிர்த்தவர் மாண்டார், இணையடி தொழுதோர்
இன்னுயிர் பெற்றரடா! – அந்நாள் (இன்)
மதியற்ற வடவர் வாய்மதம் அடக்கி
வண்புகழ் ஏற்றாரடா! – தமிழர் (வண்)

வழிவழி வந்த மாண்புசேர் வீரம்
மறையுமோ இந்நாளில்! – வீரம் (மறை)
இழிகுணப் பகைவர் இயற்றிடும் சூழ்ச்சி
இனிமேல் நிலைப்ப துண்டோ? – நாட்டில் (இனி)

❖❖❖

## பாட்டு - 39

இராகம் : பிலகரி தாளம் : ஆதி

எடுப்பு

வீண்கர்வம் ஏன் உனக்கே – பகையே! (வீண்)

துணை எடுப்பு

ஆண்டனை இதுவரை அறிவை மாய்த்துமே
அடிமையாய் இன்னும் வாழ்ந்திடாரே தமிழர்! (வீண்)

அடி

வீரமில் லாதிருந்தும் வெற்றிகொண்டாயே
வேணப் புளுகுரையால் சூழ்ச்சியால் நீயே!
ஆரிய மேயினி ஏகு வாயே!
அறிவொளி சேர்ந்தது! சுடர்விழி யார்ந்தது! (வீண்)

## பாட்டு - 40

இராம் : சரசுவதி மனோகரி தாளம் : தேசாதி

எடுப்பு

பேத வாழ்விலே நன்றேதுசொல்?
பீடையல்லாமல் என்தோழனே! (பே)

துணை எடுப்பு

ஆதலால் சம தர்மம் வேண்டுவாய்!
அந்த ஆட்சியில் நன்மை வாய்த்திடும்! (பே)

அடி

நீதியார்க்கும் ஒன்றாய் ஆகும் வாழ்விலே
நேர்மையு மன்பும் நிலவிச் சூழுமே!
ஏதமே தரும் ஆண்டானடிமையை
இன்றே நீக்குவாய்; இன்ப வாழ்வு தோன்றும்! (பே)

✧✧✧

## பாட்டு - 41

இராகம் : வாசஸ்பதி* தாளம் : ஆதி

எடுப்பு

புத்துலகம் ஒன்று காண்போம் – நாமே
போதம் நிறைந்த அன்பு வாழ்வு மிகவமைந்த (புத்)

துணை எடுப்பு

இத்தரையில் வாழ்ந்திடுவோர் எவரும் போற்றவே தூய
இன்பச்சுவை மிகுந்த நன்னெறியே மலர்ந்தோங்கும் (புத்)

அடி

எத்தனையோ காலம் இடர்மிகு வாழ்வினிலே
இருந்து நாம் துயருற்றோம்; போதுமோ! நாமினிமேல்,
ஒத்த உளங் கொண்டு பேதம் ஒழித்தே யாவருமிங்கே
உன்னதமாம் அரிய வாழ்விலென்றும் சுகித்தோங்க (புத்)

* பிலகரி இசையிலும் பாடலாம்.

## பாட்டு - 42

இராகம் : ஹிந்தோளம் தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

இனிதாய் வாழ்வோமே – யாவரும்
இனிதாய் வாழ்வோமே! (இனி)

துணை எடுப்பு

மனமே தாவும் சமதர்ம வாழ்வில்
மகிழ்வாய் நாளும் அதிபுக ழோடே (இனி)

அடி

ஆரிய சூழ்ச்சி ஏகவே செய்வோம்!
ஆண்பெண் அடிமை தவிர்த்தே உய்வோம்!
பேரன்பு வாழ்வில் மாந்தர்கள் பேதப்
பிழைபா டின்றி உயர்வாய் நன்றே (இனி)

***

## பாட்டு - 43

இராகம் : சௌராஷ்டரம் தாளம் : சதுசிர திரிபுடை

எடுப்பு

வாழ்வோங்கி யாரும் இனிது
வாழ்க மிக வாழ்கவே! (வாழ்)

துணை எடுப்பு

தாழ்வான நிலையை நீக்கிப்
பாழான பேதம் விடுத்தே (வாழ்)

அடிகள்

பாரில் நம் உயர்வைக் காட்டிப்
பைந் தமிழை நிலை நாட்டி (வாழ்)

காதல் சீர் மிகுந்த வாழ்வில்
காணு முயர் நல னெய்தி (வாழ்)

தீதான வறுமை போக்கி
யாவருமே சிறப் பெய்தி (வாழ்)

# தன்மதிப்புப் பாடல்

**1951**

# பதிப்புரை

ஓர் கருத்தை மக்களிடம் உணர்ச்சியுடன் ஊட்டக் கூடியவைகளுள், பாட்டும் ஒன்று. மெட்டுக்கள், அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றுகின்றன. அப் புதிய மெட்டுக்களில் தம் கருத்துக்கிசைந்த பாடல்களைப் பாடுவதில், பாடகர்களுக்கும் பெரு விருப்பம். ஆகவே, சமீபத்தில் வெளிவந்த சினிமாப் படங்களிலுள்ள இனிய மெட்டுக்களில், இயக்கக் கருத்துள்ள பாடல்களைத் தொகுத்துத், 'தன்மதிப்புப் பாடல்' வரிசையின் இரண்டாம் புத்தகமாக வெளியிட்டுள்ளோம். தோழர்கள் ஆதரிப்பாராக.

21.12.1951 இங்ஙனம்,
புதுவை. ஞாயிறு நூற்பதிப்பகத்தார்.

# தன் மதிப்புப் பாடல்

## (இரண்டாம் புத்தகம்)

### பாட்டு: 1.

'ஓர் இரவு' படத்தில் 'எங்க நாடு' எ. மெட்டு

எங்கள் நாடு – இது
எங்கள் நாடு
இல்லை யிதற் கெங்கும் ஈடு! – புகழ்
தங்கும் நாடு! – இந்தத்
தரணிக்கெல்லாம் சிறந்த
திராவிட நாடு! (எங்கள்)

பொங்கும் வளமே சூழ்ந்தோங்கும்
புகலரும் நன்செயே
பொலிவு பெற்றே விளங்கும் தூய
பொன்னாரும் நற் கனி நாடு! (எங்கள்)

மான வாழ்வு தனை வளர்த்த தமிழ்நாடு – மிக்க
மாண்பு நெறி காத்துயர்ந்த வண்டமிழ் நாடு!
ஆன நல்ல அகப் பொருளைத் தந்த நன்னாடு!
அடிமை யின்றிப் பேத மின்றி
அமுத வாழ்வு கண்ட நாடு! (எங்கள்)

இனிமை வாய்ந்த தமிழ் வளர்த்த
எங்கள் சீர் நாடு – பின்னர்
இங்கு வந்த ஆரிய ராலே
இன்னலே ஏற்ற நாடு! (எங்கள்)

★★★

### பாட்டு: 2.

'கஞ்சன்''படத்தில்''இந்த உலகினில்' 'எ. மெட்டு'

இராகமாலிகை — தாளம் : ஆதி

தேஷ்
தெற்கில் குமரியும் வடக்கில் வேங்கடம்
திகழ் மலையுந் தமிழ் நாடு! – மிகத் (திகழ்)

வெற்புத் தோளராய்ப் பகையை வீழ்த்திய
வீரமறவரே தமிழர்! – உயர் (வீர)

கீர்வாணி

அன்பு பாய்ச்சிடும் அக நூல் பற் பல
ஆர்ந்திடும் நாடெங்கள் நாடு! – கலை (ஆர்ந்)
இன்பம் பெருக்கியே துன்பெலாம் போக்கிய
எழிலார் செந் தமிழ் நாடு – மிக (எழி)

செஞ்சுருட்டி

இந்த மானிலம் தன்னி லேது சொல்
எம் அருங்கீர்த்திக் குறள்போல்? – மிகு
நிந்தை ஏகவே அறிவு காத்த நல்
நேர்மை வள்ளுவன் தமிழன்!

விஜய நாகரி

பழமைக் கீர்த்திபோல் புதுமை போற்றியே
பாருளோர் புகழ்ந்திட வாழ்வோம்! – நாம் (பாரு)
எழிலமைந்திடும் திராவிடங் கண்டுமே
இன்பம் பெருக்கியே வாழ்வோம்! – நாம் (இன்)

★★★

## பாட்டு: 3.

('விடுதலை விடுதலை விடுதலை' என்ற பாரதியார் பாட்டின் மெட்டு)

ஏற்றுவோம்! ஏற்றுவோம்! ஏற்றுவோம்!
எங்கும் நமது திராவிட முன்
னேற்றக் கழகக் கொடியினை (ஏற்)

ஆற்றல் மிக்க திராவிடத்தின்
ஆட்சி காண வேண்டியே,
போற்றும் செம்மை கருமை வாய்ந்த
பொற் கொடியை வானிலே (ஏற்)

வடவர் நம்மை ஏய்த்து வாழும்
வஞ்ச மெல்லாம் வீழவே
திடமாய் ஒன்று சேர்ந்தெல்லோரும்
திராவிடக் கொடி வானிலே (ஏற்)

சாதி பேதக் கொடுமை வீழ்த்திச்
சமத்துவம் நிலை நாட்டவே,
பூத லத்தில் அறிஞர் போற்றும்
புதிய வாழ்வு தோற்றவே (ஏற்)

வறுமை கொண்டு துன்ப வாழ்வில்
வதையும் ஏழை மக்களின்
சிறுமை தீர்த்துச் சமதர் மத்தின்
செம்மை வாழ்வு காத்திட (ஏற்)

இன்ப துன்பம் யாவ ருக்கும்
என்ற நிலை யுண்டாக்குவோம்!
குன்றா வண்மைத் திராவிடத்தின்
கொடியை எங்கும் நாட்டுவோம்! (ஏற்)

★★★

*பாட்டு: 4.*

'ஆதித்தன் கனவு' படத்தில் 'மதுர மான ருசியுளதே' என்ற மெட்டு

உயர்ந்து வானில் பறந்திடுதே!
உளமகிழ்வே தந்திடும் வண்ணம் – இந்நாட்டில்
உண்மை யொளிர நலனோங்க – நம்கொடியே! (உ)

அயர்வுறும் வாழ்வினை யகற்ற – உயர்
ஆட்சிநிலவ மத மொழிக்க – மிகச்
செயிர்தந் திடுமோ ரடிமையே
தீர்த்தெழிலுறத் திராவிடந்தனைக்
காத்திடவே இனிதாக – நம் கொடியே! (உ)

வடவரின் ஆதிக்கம் தகர்க்க – நமை
வாட்டும் வறுமையினை விரட்டச் – சாதி
மடமை வழக்க மழித்திட,
மானஞ் செறிந்த வாழ்வு தனிலே
மாண்புடனே நாம்வாழ – நம்கொடியே!
நம் கொடியே! நம் கொடியே! (உ)

## பாட்டு: 5.

'திகம்பர சாமியார்' படத்தில் 'சன்மார்க்கந் தியாகம்' 'என்ற மெட்டு'

தொகையரா

பேதமேன் சாதிப் பிணக்குக ளேனோ
பேதமை யாகு மன்றோ?
நீதியில் லாத செயல்களை விடுப்பீர்;
நேசராய் வாழுவோமே!

பாட்டு

பூதல மாந்தர் சோதரர் என்றே
புகல்வோம் நாளுமே! – புவி
மேதையர் யாரும் கூறிடும் உண்மை
இதுவே யாகுமே! (பூதல)

எடுப்பு

வாழ்வினில் உயர்ந்தோர் தாழ்ந்தவர் என்றே
வகுத்தல் ஞாயமோ? – நலம்
சூழ்ந்திடச் செய்தே யாவரும் சமமாய்ச்
சுகித்தல் தீமையோ? (பூதல)

பொன்னுறு வாழ்விற் புதுமணம் வீசப்
புது நெறி காண்போமே! – மிக்க
இன்பமு மோங்கும் யாவரும் நன்றே
இனிதாய் வாழ்வோமே! (பூதல)

***

## பாட்டு: 6.

'நிரபாரதி' படத்தில் 'லாலி லாலி கண்ணே தாலேலோ' என்ற மெட்டு

வாராய் வாராய் – அன்புத் தோழனே
வாராய் வாராய்! (வாராய்)
சீருறுந் திராவிட வாழ்வினைக் காப்போம்!
திகழுறு செந்தமிழ் மானத்தை மீட்போம்!
திறந்து வாழவே வைதீகம் மாய்ப்போம்!
தீதெலாம் போமே!
பேர் நல மாமே!
தேசத்தில் நம்நிலை ஓங்கிடுமே! (வாராய்)

சாதிபே தங்களை வீழ்த்துவோம் நாமே
சமமுடன் யாவரும் வாழ்ந்திடுவோமே!
நீதி மாற்றியே சமதர்மம் காண்போம்
நிந்தைகள் தீரும்!
வெந்துயர் மாறும்!
நேரிய வாழ்வினை நாமடைவோம்! (வாராய்)

## *பாட்டு: 7.*

'வேலைக்காரி' படத்தில் 'ஓரிடந் தனிலே' என்ற மெட்டு

எடுப்பு

யாவரு மறிவே பெற வேண்டு முலகினிலே
இழிவேகிடும் உயர்வாகிடும்
இனிய தாகும் வாழ்வே! (யாவரு)

உடனெடுப்பு

மேவும் மூடச் செயல் யா வையுமே
விளையா தாக்கிடுமே! – மிக (இழிவேகிடும்)

அடி

இன்பம் எங்கும் ஓங்கிடச் செய்யுமே!
இன்னலை ஓடி ஒளியச் செய்யுமே!
எழில் சேர் கலைகள் ஆக்கும்!
இதமாய் நலனே சேர்க்கும்!
ஏதமே செய்திடும் ஆரிய
சூழ்ச்சியை நீக்கும்! (யாவரு)

***

## *பாட்டு: 8.*

'மந்திரி குமாரி' படத்தில் 'காதல் பலியாகி நீயும்' என்ற மெட்டு

வாழ்வில் நலம் யாவுமின்றி வறுமையின் சின்னமாய்
வாடியே சோர்கின்றார் ஏழையராய் வாழுவோர்
தாழ்நிலை கொண்டுமே தன்மதிப் பின்றியே
தீநெறிச் செல்கின்றார் ஏழையராய் வாழுவோர்!
வாழ்வின்பம் யாவருக்கும் பொதுவாதல் தீமையோ?
மாளாத துன்பம் நாட்டில் வாய்வது மேன்மையோ?
பாழும் பேதமேன்? தீது போதுமே?
பாரினில் ஏழையர் பாழ்நிலையே போக்குவீர்! (வாழ்)

ஆர்ந்துள்ள பேதவாழ்வை ஆள்பவர் தீர்க்காமல்
ஆண்டவன் மீது பாரம் காட்டுதல் ஞாயமோ?
நேர்மை யாகுமோ? ஓது வீர்களே!
நீள் துய ரேகவே சமதர்மமே தோற்றுவீர்! (வாழ்)

### பாட்டு: 9.

'ஓர் இரவு' படத்தில் 'வசந்த முல்லையும்' என்ற மெட்டு

அடிமை வாழ்வொடு கொடுமையுமே
மகிழ்ந்தே யாடிடுதே! – மிக
மகிழ்ந்தே யாடிடுதே!
நொடிந்த வாழ்வுடன் ஏழ்மையுமே
களித் தாடுதே! – இங்குக்
களித் தாடுதே! (அடிமை)

உடைந்த உள்ளமே எங்கும் – மிக
உலவிடும் காட்சியே கண்டோம்! நாம் கண்டோம்! – மக்கள்
அடைந்த இத் தீமையைப் போக்க – மனம்
ஆளவந் தார்க்கிலை யந்தோ!
ஆர்ந்துள்ள துன்ப நிலையை நாம் போக்கவோம்
அன்புத் தோழரே
ஒன்று கூடுவீர்!
இன்ப வாழ்வுதான்
நன்று காணுவோம்! (அடிமை)

***

### பாட்டு: 10.

'மந்திரி குமாரி' படத்தில் 'பெண்களினால் உயர்வாகிடுமே' என்ற மெட்டு

பேதமெலாம் அழிந் தேகிடாமல் சுக
வாழ்வது தான் ஏது?
மாதர் தம்மைத் தூற்றிடும் நாடு
வளமே கொள்வ தேது? (பே)

ஆணும் பெண்ணும் சமமாகும்!
அறிவிழந்தே இங்கு வாதிடுவோர் – மிக
வீணராவ தல்லால் மேலும் – நலம்
வீழ்த்திடவே முனைவோர் ஆவார்! (பே)

நீதி வெவ்வே றெனச் சாற்றி
நிலை பெறுமோர்நிந்தை ஏற்றுவிட்டோம்! – இனிச்
சோதனையே வேண்டாம் போதும்! – சம
சொத்துரிமை அளிப்பீர் நன்றே! (பே)

### பாட்டு: 11.

'மங்கம்மா சபதம்' படத்தில் 'பாரில்நல் வழி காட்டி' என்ற மெ ட்டு

இராகம்: தோடி தாளம்: ஆதி

எடுப்பு

மாதரின் நலம் மாய்க்கும் – வாளும் வேலும்
மாக்கொடும் 'விதவை'யன்றோ! – எழிலார்ந்திடும் (மா)

உடனெடுப்பு

தீதெலாம் சூழ்ந்திடும் வாழ்வனலால் – இளஞ்
செந்தளிர் மாதரையே தீய்த்திடுதே! (மா)

அடி

இன்சுவைக் கனியினை வேம்பென்பதோ?
இதையொரு தேசம் உண்மை எனக்கொள்ளல் நன்றோ?
துன்ப வாழ்விலே தோகையர் மாளத்
தோன்றிய விதவையாம் கொடுமையே வீழ்க! (மா)

### பாட்டு: 12.

'பொன்முடி' படத்தில் 'இனி – ஏது செய்வேன்' என்ற மெட்டு

எடுப்பு

மிகு – மான வாழ்வையே உளம் நாடிடுதே!
உயர்வாம் – மாண்பு நெறியை என்று காண்போம்? (மிகு – மான)

உடனெடுப்பு

அதி – ஈனமிகும் வாழ்வால்நம் துயர் மிகுதே!
இங் – கேன்சொல்லுவீர் பேதம் தீர்த்திடுவீர்!
மோன முடனே வாழ்வதும் நேர்மையோ?
மூண்டுள தீமையெல்லாம் போக்கிடுவீர்! – வாழ்விலே (மிகு–மான)

அடி

உரிமைக ளின்றி உயிர்வாழ் வதுவோ?
உலகில் யார்தாம் இதைச் சகித் திடுவார்?
சரியிலை இன்றே விழித்தே எழுவீர்!
சமதர்மமே உயர்வு தருமினிதே! (மிகு – மான)

## பாட்டு: 13.

'ஓர் இரவு' படத்தில் 'பெண்ணாகப் பிறந்தாலே' என்ற மெட்டு

தொகையரா

உன்றன் வாழ்வினிலே
உணர்வின்றித் துயர்கொள்ளல் நன்றாமோ?

பாட்டு

முன்னேற்றம் விரும்பாமல் – தோழா
மூங்கைபோல் இருக்கின்றாய்! – வீண்
மூடச் சடங்கெல்லாம் போன்றுகின் றாய் ஏனோ?
தன்மதிப் போடு தரணியில் வாழ்ந்தோர்
மரபில் பிறந்தாயே!
புன்மை மதந்தனை நம்பிய தாலே
போதமே துறந்தாயே!

மாண்பை மறந்தே தாழ்ந்தவன் ஆகி
மானம் இழந்தாயே!
ஆண்மையும் வீரமும் எங்கே விடுத்தாய்?
அந்தோ நலிந்தாயே! – இனி
வாழ்ந்திட முனைவாயே! – உலகில்
தாழ்ந்தவன் இலைநீயே! (முன்)

❊❊❊

## பாட்டு: 14.

'வேலைக்காரி' படத்தில் 'உலகம் பலவிதம்' என்ற மெட்டு

இரா: மாண்டு

தாளம்: திசிரம்

எடுப்பு

துயர வாழ்வுதான் – இங்குத்
துயர வாழ்வுதான்! – துன்பந்
தொலையாத வாழ்வுதான்! (துயர)

உடனெடுப்பு

அயர்வு கொண்டு வாழும் மக்கள்
புவியில் பலபேர்!
அந்தோ அவரின் உழைப்பில் உண்டு
கொழுப்போர் சிலபேர்! (துயர)

அடிகள்

பட்ட பாட்டுக் கேற்ற கூலி
தந்திடா முதலாளி – கூலி
தந்திடா முதலாளி

பாடில் லாமல் கோடி கோடி
சேர்த்துள் ளானே பாரீர்! – செல்வம்
சேர்த்துள் ளானே பாரீர்!

எட்ட டுக்கு மாளி கையில்
இன்ப முடன் வாழ்வான் – அவன்
இன்ப முடன் வாழ்வான்!

இரக்க மற்ற ஆட்சித் துணையும்
அவனுக்கேதான் உண்டு! – துணை
அவனுக் கேதான் உண்டு! (துயர)

சாதி பேதங் கூறி நிற்கும்
சாத்திர முதலாளி – வேறு
சாத்திர முதலாளி

தந்தால் துட்டு மோட்ச மென்றே
தட்டிப் பறித்துச் செல்வான் – காசைத்
தட்டிப் பறித்துச் செல்வான்!

தீது மிக்க வாழ்வு தன்னில்
சீர் குலைவ தாமோ? – நாம்
சீர் குலைவ தாமோ?

சிறந்து வாழ வேண்டி நாமே
சமதர்மமே காண்போம் – நல்ல
சமதர்மமே காண்போம்! (துயர)

***

## *பாட்டு: 15.*

'தேவகி' படத்தில் 'நான் காண்பேனோ' என்ற மெட்டு

சீர் மேவிடும் திராவிட நாடு நாம் காண்பொமோ?
தீராமல் ஆசையே நாம் மாள்வொமோ?

பேர்வாய்ந் தோங்கும் வாழ்விலே நாம் வாழ்வோமோ?
பேதமெலாம் நீங்காத வாழ்வில்
சோர்வாகிச் சிந்தை நொந்து வீழ்வோமோ?
தோழர்களே நீர் கூறிடுவீர்! (சீர்)

நந்தம் நாட்டில் நாமெலாம் தாழ்வாகினோம்!
நாடோடிகள் மேலவர் ஆனார்!
அந்தோ நம் துன்பம் யாவும் மாயாதோ?
ஆசையெல்லாம் வீணாகிப் போமோ? (சீர்)

***

## பாட்டு: 16.

'ஓர் இரவு' படத்தில் 'அக்கம் பக்கம் யாரு மில்லே' என்ற மெட்டு

தொகையரா

வல்லவரின் ஆட்சியிலே வறுமை மிக ஓங்குதையோ
செல்லரித்த ஏடாய் நாடு சிதைந்தழிந்து போகுதையோ!

பாட்டு

நல்ல ஆட்சி என்று சொல்லி
நாட்டைச் சூறை யாடு கின்றார் ஆளவந்தார்!
நமது ஆளவந்தார்!

நாளும்—'இல்லை யில்லை' என்று சொல்லி
'இல்லாமை' வளர்க்கின் றாரே ஆளவந்தார்!
நமது ஆளவந்தார்!

நாட்டில்—நல்லன செய்யாது மேலும்
தொல்லை தந்தே வாழுகின்றார் ஆளவந்தார்!
நமது ஆளவந்தார்!

கருங்—கல்லு முருகும் மக்கள் நிலையைக்
காண நேர்ந்திட்டால்!
தினம்—கஞ்சி!கஞ்சி! என்று சொல்லிக்
கதறிச் சோர்கின்றார்!
மிக—அல்லல் கொண்டே பிண்ணாக்கோடு
தழையுந் தின்கின்றார்!—பல (தழை)

தம்–ஆவி காக்க வழியில்லாமல்
நொந்து வீழ்கின்றார்!–மிக
நொந்து வீழ்கின்றார்!
நல்–அன்பு பெருக்கும் மக்களை
ஐந்தாறு ரூபாய் என்றுமே கூறுகின்றார்! விலை–கூறுகின்றார்!
தாளாத்–துன்பஞ் சகியா நிலையில்
உள்ளமே துடிதுடித்து மாளுகின்றார்! மக்கள்–மாளுகின்றார்!
மிகத்–தந்நலத்தில் ஆசை கொண்ட
தரணி யாளுவோர்
தம்–தன்ம திப்பைக் கருதி டாமல்
பவனி வருகின்றார்!
கொடும்–இன்னல் வாழ்வைப் போக்கச் சிறிதும்
எண்ண மின்றியே,
'யாம்–என்ன செய்வோம்'என்று கையை
விரித்துக் காட்டுறார்!–அவர்
விரித்துக் காட்டுறார்!
பெருந்–துன்பக் கூச்சல் கேட்டும் கேளாக்
காதினர்போல் வாழுகின்றார் ஆளவந்தார்! நமது ஆளவந்தார்!
இந்தத்–தொல்லையெலாம் தீர்வதென்றோ தமிழா? –சமதர் மத்தின்
நல்–தூய ஆட்சி தனையே தோற்றியே வாழ்வ தென்றோ?

❊❊❊

*பாட்டு: 17.*

'மந்திரி குமாரி' படத்தில் 'அன்ன மிட்ட வீட்டிலே' என்ற மெட்டு

தொகையரா

வஞ்சனை செய்து வாழ்வோர்
வாழ்ந்திடும் போக வாழ்வு,
பஞ்சினில் வைத்த தீயாய்ப்
பாழ்பட்டு மாயுந் தானே!

பாட்டு

நெஞ்சில் உண்மை நாடியே
நேர்மைத் தொண்டு செய்வோரை
நஞ்சு கொண்ட உள்ளத்தார்
நாளும் வாட்டு கின்றாரே!

தொகையரா

மண்ணி லேழை மனிதரோ
வாழ்ந்திட மார்க்க மில்லை!
எண்ணிடும் உயர்ந்த வாழ்வோ–நமை
ஏய்ப்பவர்க் கல்லால் இல்லை!

பாட்டு

திண்மை வாய்ந்த செந்தமிழ்
சிறந்த இந் நாட்டிலே
உண்மை வாழ அஞ்சுதே!
உலுத்தர் வாழ்வு மிஞ்சுதே! (நெஞ்சில்)

OOO

## *பாட்டு: 18.*

'வாழ்க்கை' படத்தில் 'ஏழைக்கு ஏது இன்பம்' என்ற மெட்டு

பாழுக்கு வாழ்ந்தோ மிந்நாள்–தோழா,
பயனில் லாமல் வெறுமனே நாமே! (பாழுக்கு)
கூழு மின்றிச் சோறு மின்றிக்
கும்பி யொட்டி வாடும் வண்ணம்
கொடுமைக்கே ஆளாய் விட்டோம்!–நாம்
வீழுகின்ற நிலைய டைந்தும்
மீட்க ஒரு தெய்வ மின்றி
விதிநம்பி வாழ்ந்து கெட்டோம்!–பாரில் (பாழுக்கு)

நல்ல றிவைப் போற்றி டாமல்
நாளும் மத பேதம் நம்பி
அல்லல் மிகும் வாழ்வு பெற்றோம்!–பெருந்
தொல்லை யனைத்தும் தொலைக்கும்
சமதர்ம நெறி விட்டே
சுகவாழ்வை இழந்தோ மையோ!–நாம்
சுகவாழ்வை இழந்தோ மையோ! (பாழுக்கு)

## பாட்டு: 19

'வேலைக்காரி' படத்தில் 'உலகத்திலே உன்னதமாய்' என்ற மெட்டு

உழைப்பினையே நம்பி வாழ்வோர்
உழைத்து வாடு கின்றார்!–உண
வின்றி வாடு கின்றார்!–தினம்
உழையாதார் ஏய்த்து நம்மை
உண்டு கொழுக்கின்றார்! (உழைப்)

பிழைப்ப தற்கே இந்த நாட்டில்
பெரிதும் கஷ்ட மாச்சு!–நல்
உரிமை யற்றுப் போச்சு!–இங்குப்
பிழைக்க வந்த கூட்டத் திற்கே
கொழுப்பு மிகுந்து போச்சு மேலும்! (உழைப்)

கடும் வெயிலில் மண்ணெ டுத்தும்
கல்லும் உடைக்க லாச்சு!–வீணே
காலங் கழிக்க லாச்சு!–இங்குக்
கையை ஏந்தி வந்த வர்க்கே
வாழ்வு மிக்க வந்து போச்சு! (உழைப்)

ஏய்த்திடுவோர் சூழ்ச்சி யாவும்
என்றும் நிலைப்ப துண்டோ?–அது
எங்கும் நிலைப்ப துண்டோ?–நாட்டில்
ஏழை மக்கள் கண்வி ழித்தால்
என்ன வாகும் சிந்திப் பீரே! (உழைப்பினையே–நாளும்–உழைப்)

## பாட்டு: 20

'ஓர்இரவு' படத்தில் 'டிப் டாப்பா பொம்பளையை' என்ற

மெட்டு

வீணாகக் காலந் தள்ளி வாழ்வதோ?
விதியை நம்பித் துயரடைந்தே சாவதோ?
காணாத பொருளுக் காகக் கலங்குவதோ–நீங்கள்
கதிமோட்சம் என்ற பித்தால் நலங்குவதோ? –நிதமும்
முன்னேற்றத்தை நாடிச் செல்லா ததேனோ? –நமது வாழ்வில்(முன்)
மூடச் செய்கை விட்டொ ழித்தே பீடு கொள்ளாததேனோ?

முனைவீரே இதுநாளே!
அடைவீரே நலந்தானே! (வீணா)

★★★

## பாட்டு: 21.

'இதய கீதம்' படத்தில் 'ஆசைக் கிளியே அழைத்து வாராய்' என்ற மெட்டு

நாட்டில் உரிமை இழந்து வாழ்தல்
ஞாயமோ தோழரே?
வாட்டும் மேல்கீழ் பேதம் ஏற்றே
வாழ்வதோ தோழரே! (நாட்)

காட்டு வாழ்வின் நீதி இந்த
நாட்டில் தோன்ற லாகுமோ?
கேட்டை யளித்திடும் கொடுமை தன்னை
ஓட்டும் மார்க்கம் தேடுவீர்! (நாட்)

துயரே இலா தாக்க–இங்குத்
தூயதோர் ஆட்சி இலையிலையே!
அயர்வின்றி முயல் வோர்க்குத்–தடை
ஆயிரம் போடு கின்றனரே!
செயிரது தீர்ந்த ஆட்சியை நாமே
தேடிடு வோமே தோழரே!
உயர்வு நிலவும், வாழ்வில் இன்பம்
ஓங்குமே நலந் தேங்குமே! (நாட்)

## பாட்டு: 22.

'கிருஷ்ண பக்தி' படத்தில் 'சாரசம் வசீகரக் கண்கள்' என்ற மெட்டு

திராவிடம் இலையெனில் நமது வாழ்வுதான்
சிறப் பாமோ சொல்வாய்?
இராவிடம் அதன் புகழ் முன்னாள்
உண்டோ பாரிலே? (திரா)

யாரும் வியக்க இனிதுடன் வாழ்ந்தார்–முன்
ஏத மின்றி உயர் நிலையில்!

சீரிழந் தாயின்று திராவிடத் தோழா—நீ
சிந்தனை மறந்த தேனோ? (திரா)

தீது தருமோர் சிறுநெறி மதத்தால்—மிகத்
தேய்ந்த வாழ்வுதனில் நலிந்தே,
நீதியே இன்றியே தாழ்ந்தனை இங்கே—இது
நேர்மையோ திராவிடத் தோழா! (திரா)

மாண்பை மறந்தே வறுமையில் நெளிந்தே அதை
மாய்க்கும் சக்திதனை யிழந்தே,
தாண்டியே செல்கிறாய் நீபிற நாடு!—இது
தகுதியோ திராவிடத் தோழா! (திரா)

## பாட்டு: 23.

'லைலா மஜினு' படத்தில் 'வண்ணமானே' என்ற மெட்டு

ஏழை வாழ்வில் இன்பமு முண்டோ?
என்றுமே துய ரோங்கி—உள்ளம்
ஏங்கி ஏங்கி வாடு கின்றார் ஐயோ!

பாழும் செல்வர் சூழ்ச்சி யாலே
பாரி லேழ்மை ஓங்கக் கண்டோம்!
பாபம்! பாபம்! ஏழையானோர்நிலையே!

வஞ்ச வாழ்வினர் நெஞ்சகம் மேலும்
அஞ்சி டாப்பழி பாவங்கள் செய்யும்!
விஞ்சும் வாழ்வின்பம் அன்னார்க்கே
மேன்மேலும் ஓங்குதே பாரில்!
பாபம்! பாபம்! ஏழையானோர் நிலையே!

நேர்மை கொண்டவர் வாடிடு கின்றார்
நீதி யாகுமோ பூதலத்தோரே?
ஆர்ந்த பேதமேன் உரைப்பீரே?
அறிவுடன் சமம் கொள்வ தென்றோ?
அந்தோ, பாபம்! ஏழையானோர் நிலையே! (ஏழை)

## பாட்டு: 24.

'மந்திரி குமாரி' படத்தில் 'உலவும் தென்றல்' என்ற மெட்டு

வறுமை கொண்டே ஏழையர்கள்
வாழ்வினிலே நாள்முழுதும் வாடுகின்றாரே!
சிறுமை வாழ்வு தன்னிலே
சீர்குலைந்து மாண்பிழந்து தேங்குகின்றாரே!

புவியின் பொருளைச் சமமே செய்யும்
பொதுமை ஆட்சியே,
எவரும் எங்கும் இனிதே கொண்டால்,
இன்னல் ஏதுசொல்?

அறிவைப் போற்றி நீதி கூற
ஆட்சி இல்லையே!
செறிந்த பழிக்கு நாணுதல்
சிறிது மில்லையே!

துளக்கம் ஏனோ தீமை யொழிக்கத்
தோழமை கொள்ளுவீர்!
வளர்க்கும் கொடிய பேத வாழ்வை
மாற்றித் தள்ளுவீர்!

இனியு மஞ்சி வாழ்வினிலே
ஏதமெலாம் நாமடைதல் என்ன ஞாயமோ? (வறு)

***

## பாட்டு: 25

'சம்சாரம்' படத்தில் 'சல்ல நிஜ மாயகா' என்ற மெட்டு

ஆலை முதலாளிகள் ஆணவத்தால் நாளுமே
கோலா கல வாழ்விலே கும்மாளமே போடுறார்! (ஆலை)

ஓ!....காலையி லிருந்தே மாலை வரையும்
கஷ்ட வேலை வாங்குறார்!
இஷ்டம் போலே வாங்குறார்!

கடின உழைப்பின் பயனால் அவர்கள்
களிகொண் டென்றும் வாழ்கிறார்!
ஒளிகொண் டென்றும் வாழ்கிறார்! (ஆலை)

ஓ!...மாடியில் வாழ்ந்தே காரில் உலவி
மஞ்சம் நாடித் தூங்குறார்!
பஞ்சம் காணா வாழ்வினர்!
மடவார் நடனக் கலையில் திளைத்தே
மகிழ்வோ டென் றும் வாழ்கிறார்!
சுகபோ கத்தில் மூழ்குறார்! (ஆலை)

ஓ!...பாடுபட் டென்றும் பலன்கா ணாமல்
பாழும் நிலையில் ஏங்குறார்!
ஏழை யானோர் தேங்குறார்!
பதறிக் கதறும் அவர்கள் குரலை
மதியா முதலோர் வாழ்வுதான்
கதிமா றும்நாள் என்றோதான்? (ஆலை)

## பாட்டு: 26.

(இசைத்தட்டு) 'வாராயோ என் கண்ணனே' என்ற மெட்டு

எல்லோரும் வாழ் வோங்கியே
இன்பமாக வாழவே வேண்டுமே நாளுமே! (எல்)
இல்லார் உள்ளார் என்றிடும் இழிநிலை இன்றியே
எங்கும் சம மாகவே வாழ்ந்திடவே வேண்டுமே!
இதுவே நன்றாகுமே!–நாட்டிலே (எல்)

ஊரை ஏய்த்து வாழ்பவர் உயர்ந்தவர் என்கின்றார்!
உண்மை யறி வோங்கிடில் தாழ்ந்தவர்க ளேது சொல்?
காரிருள் நீக்குவோம்!–நாட்டிலே (எல்)

### பாட்டு: 27.

'பொன்முடி' படத்தில் 'நம்–ஜீவாதாரமே செல்வம் ஆகுமே' என்ற மெட்டு

நல்–வாழ்வு காணவே தொண்டு செய்குவோம்!–ஓ!
நனி–மகிழ்வுடன் நீரே வாரீர் தோழரே! வாரீர் தோழரே! (நல்–வாழ்வு)

தாழ்வெலாம் தீர்ந்தே சமத்துவம் நாடித்
தாரணி போற்ற வாழுவோம்!
தாரணி போற்ற வே!

சூழ்புவி மீதே அறிவுடன் நாமே
சுதந்தர மாக வாழுவோம்!
சுதந்தர மாக வே!

சாதிகள் பேதக் கொடுமை இன்றித்
தன்மான முடன் வாழ்வோம்!
தீதிலா வாழ்வு சமதர்ம மாகும்!
சீரோங்கி வாழ்வோம் நாம்! (நல்–வாழ்வு)

❖❖❖

### பாட்டு: 28.

'பாதாள பைரவி' படத்தில் 'ஆனந்தமே தரும் காவன மிதிலே' என்ற மெட்டு

வாழ்வினிலே உயர் வாகிய நெறியே
மலரும் நாளிதே!–ஆ ஆ
மலரும் நாளிதே!–ஆ ஆ (வாழ்)

தாழ்வுயர்வான தீநெறி யாவும்
சரிந்தன சடசட வெனவே!
பாழ்மதமே வலிமை தீர்ந்தது
பகுத்தறிவே வளரக் கண்டுமே! (வாழ்)

அறிவாளர் முனைந்தாரே–வாழ்வில்
ஆனந்தமே மிகுந் தோங்கவே,
நெறிகண்டார் மனிதர் யாவரும்
நிகரென்றே! அதனைப் போற்றுவோம்! (வாழ்)

துன்ப வாழ்வுதரும் சனாதனங்கெடத்
தோன்றிய நல்லறி வோங்கவே!
சுதந்தரமாய் உரிமை யார்ந்துமே
சுகவாழ்வே பெறுவோம் நாமெலாம்! (வாழ்)

✻✻✻

### பாட்டு: 29.

'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் 'மானும் மயிலும்' என்ற மெட்டு

வாழ்வில் வளமே நாடும் கூடும்
மாமத வாழ்வு மாய்ந்திடில் ஆ ஆ! (வாழ்)

மகிழ்வே யடைவோமே!—எந்நாளும்
மகிழ்வே யடைவோமே!
சூழ்ந்துள பேதத் தீமைகள் ஏகும்!
சுதந்தரம் நிலவும்! இதம்பல விளையும்!
துயரே தொலையும்! வாழ்வில் இன்பம்
தோய்ந்திடும் ஆ ஆ! இன்றே முனைவீர்!
மகிழ்வே யடைவோமே!—எந்நாளும்
மகிழ்வே யடைவோமே! (வாழ்வில்)

### பாட்டு: 30.

'வாழ்க்கை' படத்தில் 'செந்—தமிழும் சுவையும்' என்ற மெட்டு

நல்—வளமே மிகுமோர் வாழ்விலே எந் நாளுமே
அதி—மகிழ்வாய் வாழ்வோமே!
புல்—முளையும் வகையே செய்து நாம் மத வாழ்வையே
புது—உலகம் காண்போமே!

ஓ!........என் தோழரே,—நாம்
உயர்வையும் தாழ்வையும் போக்கி
ஒன்றாகச் சேர்ந்தினிதே வாழ்வோம்!
நன்றாகச் சேர்ந்தினிதே வாழ்வோம்!
தன்மானம் நிலவிடவே வாழ்வோம்!
எந்நாளும் சிறந்திடவே வாழ்வோம்!
ஓ!.......என் தோழரே,

உயர்–வோங்கிடுமோர் அந் நாளே,
ஓதிடில் நமக்கொரு நன்னாளே!
ஓதிடில் நமக்கொரு பொன்னாளே!
தன்மானம் சிறந்திடவே வாழ்வோம்!
எந்நாளும் சிறந்துமே நாம் வாழ்வோம்!

வறுமை கொடுமை அடிமை தவிர்த்தே
மகிழ்வாய் வாழ்வோம் நாம்!
அறிவும் திறனும் நலனும் விளங்க
அன்பாய் வாழ்வோம் நாம்! (நல்–வளமே)

***

## *பாட்டு: 31.*

'மகாமாயா' படத்தில் 'சிலையே நீ என்னுடன்' என்ற மெட்டு

எடுப்பு

மனமே நீ உண்மைக்கு மாறுகொள்வாயோ?
வஞ்சனைக் கேபயந்தே!–புவிதனில் (மன)

உடனெடுப்பு

கனவிலும் உறுதியைக் கைவிடுவாரோ
கற்று ணர்ந்த மேலோர் நீயுரைப்பாய்? உயர்வுறும் (மன)

அடி

மாண்புடன் வாழ்ந்திட நீ முனைந்தால்
மதம்பகை யாகிடுதே!–பொல்லா
மதம்பகை யாகிடுதே!
தாண்டுவாயே தடையாவுமே!
சமுகத்தின் கொடுமைக்கே–என்றும்
சமுகத்தின் கொடுமைக்கே–அஞ்சாதே! (மன)

❖❖❖

## *பாட்டு: 32.*

'ரத்தன்' படத்தில் 'அக்கியாமி லாகே' என்ற மெட்டு

அன்புமிகுந்தோழா இன்னுந்துயி லேனா?
உன்றன்நிலை காண நீ இன்றேஎழு வாயே!
பேர் அல்லல் களை வாயே! (அன்)

வன்புள்ள ஆட்சியாளர் வறுமையே ஓங்கச் செய்தார்
என்செய்வோம் என்றே நீயும் ஏங்கிட லாமோ சொல்வாய்? (அன்)

வாழ்வினில் பேதங் காத்து மடமையை வளர்க்கின்றாரே!
தாழ்நிலை கொண்டு நொந்தாய்! மேனிலை காண்பதென்றோ? (அன்)

பண்போங்கச் செய்வாய் நாளும் பகுத்தறி வோங்கச் செய்வாய்!
நண்போங்கி நாட்டில் யாரும் நலமுடன் வாழச் செய்வாய்! (அன்)

திராவிட நாடு பெற்றே சீர்சம தர்மங் காண்பாய்!
இராவிடம் அதன் கீர்த்தி இல்லையென் றோங்கச் செய்வாய்! (அன்)

✪✪✪

## *பாட்டு: 33.*

'பிச்சைக்காரி' படத்தில் 'ஜோராக உடுத்தேன் நானே' என்ற மெட்டு.

தூயதோர் இனிய வாழ்வே–எங்கும்
தோன்றிடச் செய்ய வாவா!–மிகத்
தோன்றிடச் செய்ய வாவா!
என் தோழா! தோழா! (தூய)

வீயு மதம் புகல் கொடுநிலை தனையே
வீழ்த்திட வாராய் தோழா!
வீழ்த்திட வாராய் தோழா!

ஏயுமோர் நலனார் சமதர்ம வாழ்வை
எங்கணும் நாட்டுவாய் தோழா!
எங்கணும் நாட்டுவாய் தோழா! (தூய)

உலகில் மனிதராய்ப் பிறந்தவர் எல்லாம்
ஒருசமம் என்றே சொல்வாய்!
ஒருசமம் என்றே சொல்வாய்!

இலகிடும் பேதம் அழிந்திடச் செய்வாய்!
எந் நாளுமே சுகம் பெறுவாய்!
எந் நாளுமே சுகம் பெறுவாய்! (தூய)

▲▲▲

### பாட்டு: 34.

'பொன்முடி' படத்தில் 'தேசமெங்கும் நல் வளஞ் சூழ' என்ற மெட் டு.

வாட்டங் கொண்டே ஏங்கிடுகின்றார் தொழிலாளர்—சுக
வாழ்வில் லாமல் நாளுமே துய ரோங்குவதாலே! (வாட்)

நாட்டினில் எங்கணும் வேலையின்றித்—தினம்
நனிதுயரே கொண்டுமிகச் சோருகின்றார்!
வீட்டினில் பெண்டுபிள்ளை பசியினாலே—வாட
மென்மேலும் சோர்ந்துளமே ஏங்கிடுகின்றார்!
நடைப்பிண மாகிப் பிழைப் பதற்கே—அவர்
நாட்டைவிட் டோடிவேறு நாடதனில்,
அடிமையென இழிதொழில் செய்துபிழைக்கின்றார்—இந்த
அவமானம் போக்கவோ யாருமில்லை!

ஆளுவோர்க் கிது பெருமை யாடுகிமோ?—நமது
அல்லல் களைந்திடவே மனமிலையோ?
நாளும் துயர வாழ்வோ ஏழையர்க்கே?—இந்த
நாசநிலை தீர்ப்பதற்கே நாமுழைப்போம்!

உரிமையற்ற அவல வாழ்வை வீழ்த்தி வாழ்வோம்!—இந்த
உலகமெலாம் போற்றிடவே ஓங்கி வாழ்வோம்!
சரிநிகர் சமான வாழ்வு போற்றி வாழ்வோம்!—தீமை
சரிந்துவீழச் சமதர்மம் நாட்டி வாழ்வோம்! (வாட்)

❖❖❖

### பாட்டு: 35.

'மதன மாலா' படத்தில் 'அன்றும் இன்றும் என்றும்' என்ற மெட்டு.

சீரும் சிறப்புங் கொண்ட திராவிடமே!
தீய சாதி மதங்கள் ஏனோ உரைப்பாய்?
பேரும் புகழும் வாய்ந்த திராவிடமே!
பேதம் அடிமை இந்நாள் ஏனோ உரைப்பாய்?
யாரும் வியக்க வாழ்ந்த திராவிடமே!
ஏழ்மை வறுமை யிங்கே ஏனோ உரைப்பாய்?
பாரில் இன்பங் கண்ட திராவிடமே!
பழியும் துயரும் ஏற்ற தேனோ உரைப்பாய்?
திராவிடமே! திராவிடமே! திராவிடமே!

### பாட்டு: 36.

'பொன்முடி' படத்தில் 'இன்பத்தின் எல்லை இதுதானா' என்ற மெட் டு.

தொகையரா

பொன்விளைந் தோங்கும் நாடென்றே புகழ்ந்தே கூறுவார்!
புவிதனி லிதற்கோர் இணையில்லை என்றே வியந்தோதுவார்!
கன்னல் போலவே செந்நெல் காட்டும் நாடெனக்களிப்பார்!
கதியற்றோர் நிலைகாணார்! குறை போக்கிடார்!

பாட்டு

நன்மக்கள் வாழும் புவி தானா?–இந்நாட்டிலே
நாளுமே துயர் தானா? நாம் வாழ்வோமா?
என்றுங் கொடுமைக் கிடந்தானா?–இந் நாட்டிலே
ஏழைநம் துயர்போமா? வீழ்ந் தழிவோமா? (நன்)

தொகையரா

துன்பந் தவிர்ந்தே நல்ல சுதந்தரங் காண்போமா?
இன்பமே மிகுந்த வாழ்வில் யாவரும் மகிழுவோமா?
பாட்டு மன்னும் உரிமையற்று நாமே–இந் நாட்டிலே
மாக்களாய் வாழலாமா? மாண்பிதுதானா? (நன்)

❊❊❊

### பாட்டு: 37.

'திகம்பர சாமியார்'படத்தில் 'ஊசி படாசே'என்ற மெட்டு

வாழ்வினில் நாமே மேனிலை கொண்டே
வாழ்வோ மேஎந்த நாளும் நாளும்!
சூழ்ந்திடும் சாதி பேதங்கள் வீழ்த்திச்
சோதர ராய்ஒன்று சேர்வோம் சேர்வோம்!
ஏழ்மையை நாட்டில் இல்லாது செய்வோம்
எந்நா ளுந்துன்பம் இன்றி வாழ்வோம்!

இடரே செய்யும் கொடுமத வாழ்வை
இல்லாமல் செய்தே வாழ்வோம்!
பேதங்கள் இல்லாச் சமதர்ம வாழ்வில்
பீடுடன் இனிதே உயர்வுற லாமே!

ஏதமே இல்லாச் சீர்நெறி கண்டே
என்றும் உயர்வுடன் வாழ்வோம் வாழ்வோம்!

நீதியின் பேரால் கூறும் நீதி
நிலவா மல்செய் வோமே நாமே!

வளமார்ந் தோங்கும் திராவிடங் கண்டே
மகிழ்வாக என்றும் வாழ்வோம்!
விளைபொருள் யாவும் மென்மேலும் குவித்தே
மேதினி போற்றச் சீர்வாழ்வு காண்போம்! (வாழ்வினில்)

### *பாட்டு: 38.*

'மந்திரி குமாரி' படத்தில் 'ஆஹா ஹா ஹா வாழ்விலே' என்ற மெட்டு

வாராய் தோழா நாமெலாம்
நல் வாழ்விலே – இனி
மகிழ்வே கொள்வோம் நாளுமே
இந் நாட்டிலே
மா பேதமே இல்லாமலே! (வா)

சீருடன் தோன்றுதே தீஞ்சுவை வாழ்வுதான்!
தீமையெலாம் ஓடிடுதே செல்வர் கொடுமைதீருதே!
பாராளுவோர் கொடுங்கோன்மை மாயுதே!

பாராயோ நீ என் தோழனே
உன் சோகமே தீர்வாயினி!

பழிவாய்ந்த நீதி நிலைமாறுதே!
பாசிசமே வீழ்ந் தேகுதே! (வா)

பேரறி வோங்குதே! சீர் நல மாகுதே!
பேரானந்த வாழ்வுதான் கூடுதே!

பாரோரெலாம் வாழ்வில் சமம்
உயர்ந்தோரில்லை தாழ்ந்தோரில்லை!

பலன்யாவும் யார்க்கும் பொதுவாகுதே!
பஞ்சமில்லா வாழ்வோங்குதே! (வா)

★★★

## பாட்டு: 39

'தேவகி' படத்தில் 'பேரின்பமே வாழ்விலே' என்ற மெட்டு

அஞ்சாமலே வாரீரென் தோழரே
அநியாய நீதியை நாம் போக்குவோம்!
கெஞ்சிடும் வாழ் வாகுமோ? – இப் பூவிலே
கீழாக வாழ்ந்திடும் நிலைமாற்றும்வோம்!

ஆ! – மிஞ்சும் பேதம் மாய்ந்திடுவோம்!
விளங்குமோர் ஏழ்மை வறுமை தீர்த்திடுவோம்!
ஆ! – மேலான தாம்ஓர் புதுநெறியில்
மேன்மை கொண்டுமே சீர்மை வாய்ந்துமே

எந்நாளுமே இன்ப வாழ்விலே
ஒன்று கூடி நாமெலாம்
உரிமையோடு வாழலாம்! (அஞ்)

✧✧✧

## பாட்டு: 40.

'வாழ்க்கை' படத்தில் 'எண்ணி எண்ணிப் பார்க்க மனம்' என்ற மெட்டு

தொல்லை தந்த பேத மெல்லாம்
கள்ளவழி நாடுதே!
தூய ஒரு வாழ்விற் சமம்
மெள்ள வந்து கூடுதே! (தொல்)

இல்லாமை ஏழ்மை சொல்லாமல் ஓடுதே!
செல்லாத காசாய் எல்லாமும் ஆகுதே! – இங்
கெல்லாமும் ஆகுதே! (தொல்)

அஞ்சி அஞ்சி வாழ்ந்த வர்கள்
அடிமையை ஓட்டுறார்!
அஞ்சா வொரு நெஞ்சத்துடன்
அக்ரமத்தை வாட்டுறார்!

விஞ்சி நின்ற மூடச் செயல்
வீழ்ந்தது பாரிதோ!
மேன்மையுறு வாழ்வி வின்பம்
தோன்றும் நன் னாளிதே! (தொல்)

## பாட்டு: 41.

'வேலைக்காரி' படத்தில் உலகத்திலே உன்னதமாய்' என்ற மெட்டு

சமதர்மமே யாவருக்கும்
தகுந்த நீதியாகும்! – உள்ள
சாதி பேதந் தீரும்! – மிகத்
தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்கள்
எனவே இன்றிப் போகும்!

அமைதி யுறும் பொதுமை வாழ்வின்
அருமை காண லாகும்! – உயர்
ஆட்சி தோன்ற லாகும்! – சூதால்
ஆளை ஏய்த்துப் பிழைக்கும் கூட்டம்
அற்றுப் போகும் முற்றும் நாட்டில்! (சம)

உரிமை யெலாம் நிலவும் வாழ்வில்
உழைப்போர் நன்மை காண்பார்! – மிக
ஊக்கங் கொண்டே வாழ்வார்! – யாரும்
ஒன்று கூடி உயர்ந்த வாழ்வில்
என்றும் நன்றே இன்பந் துய்ப்பார்! (சமதர்மமே – எங்கும் – சம)



பாவேந்தரும் புதுவைச் சிவமும் (1933)